
முத்துலட்சுமி ராகவன்
தியோரம்...
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நதியோரம்... ★ முத்துலட்சுமி ராகவன்
லட்சுமி பாலாஜி பதிப்பகம்



# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# நதியோரம்...

## 1

> நதியோரம் நடந்தபோது
> கண்டதென்ன.. ஒன்றா...? இரண்டா...?
> நெஞ்சினிலே உள்ளதையே
> தொடர்ந்து சொல்ல வேண்டாமா...?
> -நதியோரம்... நான் நடந்தபோது-

'டிங் டாங்..'

சுவர் கடிகாரத்தில் ஆறுமணியைக் குறிக்கும் மணியோசை ஒலித்தது... வித்யா கைக்கடிகாரத்தை ஒருதரம் பார்த்துக் கொண்டாள்.. என்னதான் சுவர் கடிகாரம் ஆறுமணியாகி விட்டதைச் சொன்னாலும் கைக்கடி காரத்திற்கு கண்கள் போகும் பழக்கத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லையே என்று நினைத்தவளுக்கு சிரிப்பு வந்தது...

அவளைச் சுற்றி ஆயிரம் மாற்றங்கள் வந்திருக்கின்றன.. வந்து கொண்டிருக்கின்றன.. இன்னமும் ஆயகுடியில் அவளுக்குள் இருந்த சில பழக்கங்கள் மாறாமல் அப்படியேதான் இருந்தன.. கம்யூட்டர் காலத்தில்.. பெருமாள் கோவிலின் மணியோசையைக்

காதில் கேட்கும் போது 'பெருமாளே..!' என்று கன்னத்தில் போட்டுக் கொள்வதை அவள் மாற்றிக் கொள்ளவில்லை... அது அவளின் ரத்தத்தில் ஊறியிருந்தது..

அலுப்பான சில கணங்களில்.. அயர்வான சில பொழுதுகளில்... உடலும்.. மனமும் சோர்ந்து போகும் போது... அவளையறியாமல் அவளின் வாய் 'பெருமாளே..' என்று அரற்றும்.. அந்தப் பழக்கமும் மாறவில்லை..

அவ்வளவு பெரிய பேக்டரியின் பெர்ஸனல் மேனேஜராக அவள் இருந்த போதும்... மாலையில் நரேந்திரனின் கையில் மல்லிகைப் பூவின் வாழையிலைப் பொட்டலம் இருக்கிறதா என்று அவளின் விழிகள் தேடும்.. அந்தப் பழக்கமும் மாறவில்லை...

அவள் கழுத்தில் அவன் கட்டிய தாலி இருந்தது... அவன் மனதில் அவள் மீதான வற்றாத காதல் இருந்தது... இருந்த போதும்.. ஏதேனும் ஒரு வேலையின் நினைவில் அவளைக் கவனிக்காமல் அவன் பதில் சொல்லி விட்டால்... அவள் முகம் பார்க்காமல் அவன் நடந்து விட்டால்... கைப்பொருள் நழுவிப் போவதைப் போல அவள் மனம் துடித்துப் போகிறதே.. அந்தப் பழக்கத்தையும் அவளால் மாற்றிக் கொள்ள முடியவில்லை...

பொன் அந்தி மாலைப் பொழுதில்.. நதியோரம் அவனுடன் நடக்கும் போது... அவன் முடி காற்றில் கலைந்து பறக்குமே.. அப்போது அவள் மனதில் கிறக்கம் ஏற்படும் பழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியவில்லை...

தோழியாக இருந்தவள் நாத்தனாராகி விட்டபோதும்.. தென்காசியிலிருந்து பூர்ணிமா வந்து இறங்கும் ஒவ்வொரு



முறையும்.. "வித்யா..." என்ற அவளின் அழைப்பிற்கு இரு கரத்தையும் நீட்டி.. பார்வையால் அவளை அழைத்து அணைத்துக் கொள்வாளே... அந்த வழக்கமும் இன்னும் மாறவில்லை..

"ஹாய்... டியர்.." அறைக்குள் நரேந்திரன் நுழைந்தான்.

என்னவோ... அன்றுதான் அவனை முதன்முதலாகப் பார்ப்பதைப் போல அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்த வித்யாவின் விழிகளில் தெரிந்த காதலில் அவன் மயங்கிப் போனான்...

"ஏய்ய்... நான் உன் புருசன்டி.." என்று கண் சிமிட்டினான்..

"வேற யாருக்கும் புருசன்னு சொல்லிப் பாருங்க... தெரியும்.." அவனை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தபடி வித்யா கூறினாள்...

"அட..! நீ மிரட்டக் கூடச் செய்வியா...?"

"பின்னே... மிரட்ட மாட்டாங்களா...?"

"ஏண்டி...? நான் உன்னோட அப்பாவி புருசன்டி..."

"அப்பாவியா...? நீங்களா...? குட் ஜோக்..."

வித்யா எழுந்து கொண்டாள்... மேஜையைச் சுற்றி அவனருகில் வந்தாள்... அவன் தோளில் மாலையாக கைகளைப் போட்டு வளைத்து... அவன் முகத்தை இழுத்தாள்...

"வித்யா..." கிறங்கிப் போனவனாக நரேந்திரன் ஆவலுடன் அவள் முகம் நோக்கிக் குனிந்தான்..

"மே ஐ கமின் சார்...." கேபின் கதவு ஒற்றை விரலால் தட்டப் பட்டது..

ஏமாற்றத்துடன் விலகிக் கொண்ட நரேந்திரன்..

"வந்து தொலை..." என்றான்...

அவனின் கோபத்தைக் கண்ட வித்யா வாய் மூடிக் களுக்கென்று சிரித்தாள்..

"உனக்குச் சிரிப்பு வருது...? ஊம்...?" அவளை முறைத்தான் நரேந்திரன்..

உள்ளே வந்த குகனுக்கு நரேந்திரனின் ஏமாற்றத்தையும்... கோபத்தையும் பற்றி என்ன தெரியும்...? அதனால் உற்சாக முகத்துடன்...

"ஒரு குட் நியுஸ் சார்..." என்றான்..

"குட் நியுஸ்...? சொல்லு... சொல்லு.." கடுப்புடன் சொன்னான் நரேந்திரன்..

"நம்ம பேக்டரியோட புது டீலிங் ஆர்டர் அசெப்ட் ஆகிருச்சு சார்..." குகனின் முகத்தில் பல்ப் எரிந்தது...

நரேந்திரனுக்கு அந்த விவரம் தெரியும்... முதலில் அவனிடம்தான் சம்பந்தப் பட்டவர்கள் அந்த விவரத்தைத் தெரியப்படுத்தியிருந்தார்கள்... அவனும் அப்போதே வித்யாவிடம் அதைச் சொல்லி விட்டிருந்தான்...

'இதற்காகத்தான் இவன் பூஜை வேளைக் கரடியைப் போல உள்ளே நுழைஞ்சானா...' நரேந்திரனுக்கு எரிச்சலான எரிச்சல்... குகனுக்கோ சந்தோசமான சந்தோசம்...

"இப்பத்தான் போன் வந்தது சார்..."



"ஓஹோ..."

"எனக்குத் தரையில கால் படவே இல்லை.."

"அப்படியா...?"

"வானத்தில பறக்கறதைப் போல இருந்தது..."

"தண்ணி... கிண்ணி... அடிச்சிருந்தியா...?"

"சார்...?"

"அப்பத்தானே வானத்தில் ரெக்கையில்லாமலே பறக்கலாம்...?"

நரேந்திரனின் குரலில் தெரிந்த கடுப்பை உணர்ந்தவன்... அது எதற்காக என்று புரியாத குழப்பத்துடன் வித்யாவின் முகம் பார்த்தான்... அதில் சிரிப்பிருந்தது...

"மேடம்...?"

"எங்களுக்கு மதியமே விசயம் தெரியும் குகன்..."

வித்யா சிரிக்க... குகனின் முகத்தில் குடம்.. குடமாய் அசடு வழிந்தது...

"நான் உங்களுக்கு விசயம் தெரியாதுன்னு சொல்ல வந்தேன்.." அவன் முகம் விழுந்து விட்டது..

"அதுக்கு எதுக்காக மூட்-அவுட் ஆகறிங்க...? சப்போஸ் எங்களுக்கு அது தெரியாம இருந்திருந்தா இது ஸ்வீட் நியுஸ்தானே..? தேங்க் யு குகன்.."

"எதுக்காக மேடம்...?"

"இந்த பேக்டரியின் வளர்ச்சியிலே நீங்க காட்டற உண்மையான ஈடுபாட்டுக்கு.. இதன் வெற்றியிலே நீங்க காட்ற உண்மையான சந்தோசத்துக்கு..."

மனதிலிருந்து சொன்னாள் வித்யா... அந்த வார்த்தைகளில் கூம்பில் போன குகனின் முகம் பூவாக மலர்ந்தது...

"தேங்க் யு மேடம்..." அவன் நன்றிக்கு நன்றி சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றான்...

மூடிய கேபின் கதவைப் பார்த்த நரேந்திரனின் முகத்தில் பாதியில் விட்டதைப் பிடிக்கும் எண்ணம் பிரதிபலித்தது... அவன் போதையுடன் வித்யாவைப் பார்த்தபடி அவளைத் தன் கை வளைவிற்குள் இழுத்தான்.. அவளும் மறுக்காமல் அவன் கைகளுக்குள் வந்தாள்.. அவனின் இடுப்பைச் சுற்றி அவள் கரங்கள் வளைத்ததில் நரேந்திரனின் போதை அதிகமானது.. அவளது தோள் தடவிய அவன் கைகள் உயர்ந்து அவள் முகம் தடவி.. அவள் முகத்தில் அழுந்தப் பதிந்தன... அவள் இதழ் நோக்கி ஆவலுடன் அவன் குனிந்தான்...

"மேடம்..." கேபினின் கதவ படபடவென்று தட்டப்பட்டது.

இருவரும் அவசரமாகப் பிரிந்து நின்றார்கள்...

"உள்ளே வாங்க..." வித்யா அழைத்தாள்.

கோபமான முகத்துடன் யூனியன் லீடர் ரங்கதுரை உள்ளே வந்தான்... அவனின் சிவந்த விழிகளும்... முறுக்கிய மீசையும்.. துடித்துக் கொண்டிருந்தன...

"போச்சுடா... கிளம்பற நேரத்தில இவன் என்ன வழக்கைக் கொண்டு வந்திருக்கானோ தெரியலையே..." நரேந்திரன் வித்யாவின் காதுகளில் முணுமுணுத்தான்...



வித்யாவிற்குத் தெரியும்... யூனியன் லீடர் கோபமாக வந்திருக்கும்போது... அவனை எதிரில் வைத்துக் கொண்டு.. பேக்டரியின் எம்.டியும்.. பெர்சனல் மேனேஜரும் ரகசியம் பேசினால் அவன் அதை ரசிக்க மாட்டான் என்பது...

அவனே எரிகிற நெருப்பாக வந்திருக்கிறான்.. அதில் எண்ணையை ஊற்றி விடும் செயலைச் செய்ய வேண்டுமா என்ற நினைவோடு... நரேந்திரனின் முகம் பார்க்காமல்... யூனியன் லீடரின் முகம் பார்த்தாள் அவள்...

"சொல்லுங்க சார்... என்ன பிரச்சனை...?"

"நாங்க மனுசங்களா... இல்ல.. மாடா மேடம்...?"

"வாட் இஸ் திஸ் சார்... பிரச்னை என்னன்னு கேட்டா.. நீங்க பிரச்னையைச் சொல்லாம அதைப் பெரிதாக்கறிங்க.. வாட் இஸ் யுவர் பிராப்ளம்...?"

"பேக்டரிக்கு புது ஆர்டர் வந்திருக்கா...?"

"ஆமாம்..."

"யாரைக் கேட்டு அதை ஒப்புக்கிட்டிங்க...?"

யாரைக் கேட்கனும் என்ற கேள்வி நரேந்திரனின் தொண்டை வரைக்கும் வந்து விட்டது.. அதே கேள்வி வித்யாவின் மனதில் எழுந்தது.. இருந்தும் இருவரும் அதை முகங்களில் பிரதிபலிக்கவில்லை.. அவர்களுக்குத் தெரியும்.. முதலாளிகள் சில நேரங்களில் வாயிருந்தும் ஊமைகளாக இருக்க வேண்டி வரும் என்பது...

நரேந்திரன் வித்யாவைப் பேச விட்டு அமைதி காத்தான்... இந்த இடத்தில் அவன் பேசக்கூடாது...

வந்திருக்கும் கேள்வி அவனுடைய சுய மரியாதையை ஆட்டிப் பார்ப்பது... அதற்கு கோபப்பட்டால் அது தொழிலாளரின் பிரச்னையாக உருவெடுத்துவிடும்... அதே சமயம் அதைக் கண்டு கொள்ளாமல் அவன் தன்மையாகப் பேசினால்.. அந்தக் கம்பெனிக்கு அவன்தான் முதலாளி என்பதற்கே அர்த்தமில்லாமல் போய்விடும்...

வித்யா அமைதியாகவே பேசினாள்... புயலை எதிர்நோக்கும் பூவாக அவள் நிலைமையை முகம் மாறாமல் எதிர் கொண்டாள்...

"நீங்க யூனியன் லீடர்... நீங்க பேசற ஒவ்வொரு வார்த்தையும் தொழிலாளர்களைத் தான் பாதிக்கும்... அதைப் புரிஞ்சுதான் பேசறிங்களா...?"

"நான் பேசறதே அவங்களுக்காகத்தானே மேடம்.. நீங்க பாட்டுக்கு புது ஆர்டரை ஒப்புக்கிட்டா வேலையை யாரு செய்யிறது...?"

"பொறுப்பான தொழிலாளிகளின் பிரதிநிதி நீங்க.. உங்க வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வரலாமா...? நம்ம வேலையை நாமதான் செய்யனும்... இதுக்குன்னு வெளியே இருந்தா ஆள் வருவாங்க...?"

"போட்டுருவீங்களா...? வெளி ஆளை வேலைக்குப் போட்டிருவீங்களா...? நாங்க விட்டிருவமா...? இதுதான் உங்க திட்டமா...? இப்பத்தானே புரியுது... நீங்க முதலாளியோட பெண்டாட்டிங்கிறதை காண்பிச்சுட்டிங்-களேம்மா... கல்யாணத்துக்கு முந்தியிருந்த பெர்சனல்



மேனேஜரம்மா வேற... இப்ப இருக்கிற மேனேஜரம்மா வேற... நீங்க எங்களுக்குச் சாதகமா பேசி ரொம்ப நாளாச்சும்மா.."

வித்யாவுக்கு ஆயாசமாக இருந்தது.. இந்த ரீதியான குற்றச்சாட்டுக்களை அவள் அடிக்கடி எதிர் நோக்க வேண்டியிருக்கிறது.. தொழிலாளர்கள் அவள் மேல் வைத்திருந்த நம்பிக்கை... எப்போது... எப்படி... அசைய ஆரம்பித்தது என்று அவளுக்கே புரியவில்லை...

அவள் எப்போதும் போல்தான் இருந்தாள்.. திருமணத்துக்கு முன்னால் மட்டும்... அவள் வேறு... நரேந்திரன் வேறு என்றா அவள் நினைத்தாள்...? அப்போதும் மனதளவில் அவன் மனைவியாகத்தானே அந்த பேக்டரியில் காலடி வைத்தாள்...?

இதை அவர்களுக்கு யார் சொல்வது...?

## 2



நதியோரம் நடந்த போது..
தொலைவினிலே ஒரு பாட்டு..
பாட்டுச் சத்தம் நீ கேட்டு.
பாடுவாயோ எதிர் பாட்டு..?
-நதியோரம் நான் நடந்த போது-

இப்போதெல்லாம் இது போன்ற வார்த்தைகளை அடிக்கடி வித்யா கேட்க நேரிடுகிறது.. எங்கே.. எப்போது.. எந்த வகையில் தொழிலாளர்களின் மனதில் இந்த விஷ விதை விழுந்தது என்று அவளால் அனுமானிக்க முடியவில்லை.. யாருக்காக அவள் மகேந்திரனை எதிர்த்துப் போராடினாளோ.. அந்தத் தொழிலாளர்களே அவளுக்கு எதிராக அணி திரண்டு நின்றார்கள்...

நரேந்திரன் பேச வாய் திறந்தான்.. வித்யா கண் சமிஞ்கையில் அவனை அமர்த்தினாள்.. அங்கே அந்த இடத்தில்.. அது போன்றதொரு சூழ்நிலையில்.. நரேந்திரனையும்.. தொழிலாளர்களையும் பேசவிடுவது புத்திசாலித்தனமல்ல என்பது அவளுடைய எண்ணம்.. ஒரு சிறு தீப்பொறிகூட பற்றி எரியும் காட்டுத்தீயாக மாறிவிடக் கூடும்.. எனவே அவளே பேச்சு வார்த்தையைத் தொடர்ந்தாள்..

"ஓகே சார்.. நீங்க யூனியன் லீடர்.. புது ஆர்டரை ஒப்புக்கொள்கிறதுக்கு முன்னாலே உங்ககிட்ட கலந்து பேசியிருக்கனும்னு நீங்க நினைக்கறீங்க.. ஆனா.. இது வரைக்கும் அப்படியொரு நிலைப்பாடை பேக்டரி நிர்வாகம் எடுத்ததில்லையே.. இதுக்கு முதலில் பல புது ஆர்டர்கள் வந்திருக்கு.. அப்போதெல்லாம் நிர்வாகம் தான் அதை முடிவு செஞ்சிருக்கு.. இப்போ மட்டும் புதுசா என்ன ரூல் சொல்றிங்க..?"

வித்யாவின் கிடுக்கிப் பிடியில் ரங்கதுரை திணறிப் போனான்.. அவளுடைய கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் தடுமாறிப் போனான்...



"அது அப்போம்மா..."

"எப்ப..? எழுபது வருசத்துக்கு முந்தியா...?"

"அப்பல்லாம் எந்த புது ஆர்டர் வந்தாலும் வேலை செய்கிற அளவுக்கு நம்மகிட்ட ஆள்கள் இருந்தாங்கம்மா.."

"இப்ப என்ன ஆள் குறைப்பா பண்ணியிருக்கோம்..? அதைவிட அதிகமான ஆள்களுக்கு வேலை கொடுத்திருக்கோம்.. சம்பளத்தை உயர்த்தியிருக்கோம்.. குடியிருக்க குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுத்திருக்கோம்.. பிள்ளைகள் படிக்க ஸ்கூல் தொடங்கியிருக்கோம்.. இவ்வளவு ஏன்..? உங்க ட்ரீட்மெண்டுக்காக ஹாஸ்பிடல் ஆரம்பிச்சிருக்கோமா இல்லையா..?"

"அது.. வந்து.."

"வந்து போயெல்லாம் வேண்டாம்.. உண்டா.. இல்லையா..? அதை மட்டும் சொல்லுங்க.."

"உண்டுதான்.."

"இத்தனையும் செய்ய அதிகப்படி வருமானம் வேண்டுமா.. வேண்டாமா..? உங்களை அதிகப்படியாய் உழைக்கச் சொல்லலை.. வேலை நேரத்துக்கு மேலே யாரும் ஒரு செகண்ட் கூட அதிகமா உழைக்க வேணாம்.. ஆனா.. வேலை நேரத்துக்குள் செய்கிறதை உண்மையா செய்யுங்க.. அவ்வளவுதான்.."

"அப்ப நாங்க வெட்டியா அரட்டையடிக்கிறோம்னா சொல்றீங்க..?"

"நான் அப்படிச் சொல்லலை.. தேவையில்லாத யோசனைகளை யோசிக்க ஆரம்பிச்சிருக்கீங்கன்னு சொல்றேன்.. குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்ட முடியாது..

அது எத்தனை நாளைக்கு நிலைக்கும்..? வானத்தைப் போல வாழ்க்கை பரந்து.. விரிந்திருக்கிறது.. அதில் சிறகடித்துப் பறந்தால்தான் நம்மால் வாழ முடியும்.. புரிஞ்சுக்கங்க... பறக்காமல் பறவைக்கு இரை கிடைக்காது.. அது தொழிலாளிகளுக்கான உங்களுக்கும் சரி.. முதலாளிகளான எங்களுக்கும் சரி.. அழகானதல்ல.."

"அழகா பேசறிங்கம்மா.. அற்புதமா மூளைச் சலவை செய்றீங்க.. படிச்சவங்க இல்ல.. பேசச் சொல்லியா கொடுக்கனும்..?"

"அதையேதான் நானும் கேட்கிறேன்.. நீங்க உழைப்பாளிக.. உழைக்க உங்களுக்கு சொல்லியா கொடுக்கனும்..?"

"எப்படியோ.. நீங்க தொழிலாளிக பக்கமிருந்து.. முதலாளிக பக்கம் போயிட்டிங்கன்னு உங்க வாயாலேயே ஒப்புக்கிட்டிங்க.. அந்த மட்டிலும்.. உங்க நேர்மைக்கு நன்றி.."

ரங்கதுரை சரியான இடத்தில் அடித்து விட்டான்.. வித்யாவின் முகம் மாறியது.. எவ்வளவோ யோசித்துச் செயல்பட்டும் தன்னையுமறியாமல் வாய் விட்டு விட்டோமே என்று அவள் மனம் வருந்தியது..

'உங்களில் ஒருத்தி..'

இதுதான் அவள் பெர்ஸனல் மேனேஜராக பொறுப் பேற்றுக் கொண்ட முதல் நாளில் தொழிலாளர்களின் மத்தியில் சொன்ன வார்த்தை..!

அது காற்றோடு போய் விட்டதா..?



என்று அவள் நரேந்திரனின் கையால் தாலி வாங்கி அவன் மனைவியானாளோ... அன்றிலிருந்தே தொழிலாளர்கள் அவளிடமிருந்து விலகி நிற்க ஆரம்பித்து விட்டார்கள்.. அதை வித்யாவும் உணர்ந்துதான் இருந்தாள்.. என்னதான் நான் எப்போதும் போலவே இருக்கிறேன்.. முதலாளியின் மனைவியாக ஆனதினால் எனது குணம் மாறிவிடவில்லை என்று அவள் திரும்பத் திரும்பச் சொன்னாலும்.. அவர்கள் காதுகளில் அவை ஏறவில்லை.. அவர்களுக்காக முதலாளிகளுடன் போராடிய பழைய வித்யாவை அவர்கள் எதிர்பார்த்தார்கள்.. அதில் தவறில்லைதான்.. ஆனால்.. பழைய நிர்வாகம் மாறி புதிய நிர்வாகம் வந்த பின்பு போராட்டத்திற்கே வேலையில்லாமல் போய் விட்டதே.. அதை அவர்களிடம் யார் சொல்வது..?

நரேந்திரனும்.. சுரேந்திரனும் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த பேக்டரியில் தொழிலாளர்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.. அதை எதிர்த்த மகேந்திரன் பேக்டரியில் உரிமையில்லாமல் வெளியேற்றப்பட்டு விட்டான்.. அவனுக்கும் யுகேந்திரனுக்கும் மில் கொடுக்கப்பட்டு விட்டதால்.. அவன் பேக்டரிக்கு வராமல் மில்லுக்கு போக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.. மகேந்திரனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

அவன் எதிர்பார்த்ததே வேறு.. பேக்டரி அவன் கைக்கு வரவேண்டும்.. அதில் அவன் எம்.டியாக பொறுப்பேற்று அந்த இருக்கையில் அமர வேண்டும்.. எதற்கெடுத்தாலும்

நரேந்திரனுக்கு ஜால்ரா போட்டுக் கொண்டிருக்கும் குகனை அடக்கி ஒடுக்கி.. பேக்டரியை விட்டு வெளியே துரத்த வேண்டும்.. முதலாளி அவனில்லையே என்ற நினைவில் ஆடிய தொழிலாளிகளுக்கு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும்.. அவன் யார் என்பதை காண்பிக்க வேண்டும்..

அவன் மனதில்.. அடுக்கடுக்கான ஆசைகள் பல புதைந்திருந்தன.. அத்தனையும் பேக்டரியின் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்வதிலேயே இருந்தன.. ஆனால்.. அந்த ஆசைகளையும்.. அவன் யார் என்பதையும் நரேந்திரன் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பான் என்று ஒர்நாளும் அவன் நினைத்தும் பார்த்ததில்லை...

"என்னங்க இப்படியாகிருச்சு..?"

கணவனுக்கு மில்லில் சரிபங்கு கிடைத்தும் மீனலோசனி அவனிடம் துக்கம் விசாரித்தாள்.. அதில் அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. குப்புற விழுந்து மண்ணைக் கவ்விக் கொண்டதை எந்த ஆண்மகன்தான் மனைவியிடம் ஒப்புக் கொள்வான்..? தன் மீசையில் மண் ஒட்டவில்லை என்றுதானே தட்டி விடுவான்..?

மகேந்திரனும் அதைத்தான் செய்தான்...

"என்ன இப்படியாகிருச்சுன்னு கேட்டு வைக்கிற..? எப்படி ஆகிருச்சு..?"

"பேக்டரி உங்க கையை விட்டுப் போயிருச்சே.."

"மில் கைக்கு வந்திருச்சே..."



"வந்தாலும்.. அதைக் கைப்பற்ற விட்டுட்டுத்தான் உங்க தம்பி வேற வேலை பார்ப்பார்.. போங்கத்தான்.. நீங்க வேற கடுப்பைக் கிளப்பாதீங்க.."

"விடாம என்ன செய்யப் போறான்..?"

"விட்டுட்டாலும்.. ம்ஹீம்.. எடுத்து வைத்தாலும்.. கொடுத்து வைக்கனும்கிறது இதுதான் போல..."

"என்ன மீனா.. வாய் நீளுது.."

"நீளாம என்ன செய்யும்..? நான்தான் நம்ம பக்கம் பேசறதுக்கு எங்க அப்பா வீட்டிலிருந்து அவங்க எல்லோரையும் வர வைச்சிருந்தேனில்ல...? அதை யூஸ் பண்ணிக்கிட்டு பேக்டரியைக் கைப் பற்றுகிறதை விட்டுட்டு.. அதைக் கோட்டை விட்டுட்டு வந்து நிற்கறிங்க..."

"பேக்டரிக்கு மில் என்ன குறைச்சலா..?"

"அதில குறைச்சல் இல்லை.. அங்க உங்க பார்ட்னரா யுகேந்திரன் உட்கார்ந்திருக்கார்.. அதுதான் குறைச்சல்.."

"ஏன் அவனுக்கென்னவாம்..? ஆக்சுவலாய்.. அண்ணனோ.. சுரேனோ பார்ட்னரா வாய்த்திருந்தால்தான் வம்பு.. அவங்ககூட மல்லுக்கட்டியே நம்ம காலம் ஓடிடும்.. அதுவே யுகேன்னா அனுசரித்துப் போவான்..."

"அதோட.. அனாமத்து கணக்கை எழுத விடாம கண்ணிலே விளக்கெண்ணையை ஊற்றிக்கிட்டுப் பார்ப்பார்.. அதுவே உங்க ஏமாளி அண்ணனா இருந்தா.. ஆமாம்.. அப்படித்தான்னு நெஞ்சை நிமிர்த்தி தைரியமா சொல்லிக்கிட்டு பணத்தைச் சுருட்டலாம்.. அது யுகேந்திரன் கிட்ட முடியுமா..?"

முடியாது தான்.. அதை வாய்விட்டு மீனலோசனியிடம் சொல்வது எப்படி..? வசதியான மௌனத்தை துணைக்கு அழைத்துக் கொண்டுத் தப்பித்தான் மகேந்திரன்..

"இப்ப பேச மாட்டிங்களே.. உங்க அண்ணனை விடுங்க.. சுரேந்திரன் பார்ட்னரா வந்திருந்தாலும்.. குறைவில்லைதான்.. அவன் பாட்டுக்கு வெளிநாட்டில் கிடப்பான்.. நீங்க பாட்டுக்கு பேக்டரியில ஏகபோக உரிமை கொண்டாடலாம்.. கேட்கிறதுக்கு யாரிருக்கப் போகிறாங்க..? இப்பப் பாருங்க.. யுகேந்திரன் நல்லா நல்லாக் கேட்பார்.. அவர் சும்மா இருந்தாலும் பிரபாவதி தூண்டி விடுவாள்.."

"அவளும் நீயும் ஒற்றுமையா இருக்கிறவங்களாச்சே மீனா..."

"நீங்களும் யுகேந்திரனும் கூடத்தான் ஒற்றுமையா இருப்பீங்க.. எப்ப..? மத்தவங்களை ஏமாத்திப் பணத்தை கொள்ளையடிக்கிறதில மட்டும்.. அதுவே நீங்க ரெண்டு பேரும் பார்ட்னருன்னா அந்த ஒற்றுமை நிலைத்திருக்குமா..?"

எப்படி நிலைத்திருக்கும்..? யுகேந்திரனின் நட்பான பாசம் கிடைக்க வேண்டும் என்பதற்காக.. அவன் மில்லைக் கொள்ளையடிப்பதை மகேந்திரன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா..?

"அந்த ஒற்றுமை நிலைத்திருக்கனும்னு நீ ஆசைப் பட்டால் அதை நிலைக்க வைச்சிட்டாப் போகுது..."



"எப்படி நிலைக்க வைப்பீங்க.. மில்லை அவருக்கு தாரை வார்த்துக் கொடுத்து நிலைக்க வைப்பீங்களா..?"

"தெரியுதில்ல.. அப்புறமும் ஏண்டி கிண்டிக் கிளருகிற..?"

"தாங்கலை.. மில்லில் கொள்ளையடிச்சு.. நீலாங்கரையில பங்களாக்களா வாங்கிப் போட்டிருக்கார்.. நீங்க கொஞ்சம் அசந்தாக் கூடப் போதும்.. மில்லை ஏப்பம் விட்டு உங்களுக்கு நாமத்தைப் போட்டு விடுவார்.. பேக்டரியில சொகுசா இருந்ததைப் போல மில்லிலயும் இருக்கனும்னு நினைச்சிராதீங்க.. பதினொரு மணிக்குப் போகிறது.. ஒரு மணிக்கு சாப்பிட வாரது.. திரும்பவும் மூணுமணிக்கு போகிறது.. ஐந்தடிச்சா வந்திடறதுன்னு இருந்த காலத்தையெல்லாம் மறந்திருங்க.. அதை நீங்க மறக்கலைன்னா.. மில்லை மறந்திர வேண்டியதுதான்.."

மீனலோசனி எச்சரிக்கையுடன் கணவனை முடுக்கி விட்டாள்.. அதன் விளைவாக.. மகேந்திரன் இறக்கை இல்லாமலே பறக்க வேண்டியதாகி விட்டது...

# 3



நதியோரம் நடந்த போது..
சின்னதாக காதல் சொன்னேன்..
சொன்ன மொழி சிறியதுதான்..
என் காதல் பெரியதுதான்...
-நதியோரம் நான் நடந்த போது-

மகேந்திரனுக்கு ஓட்டம் பழக்கமான ஒன்றல்ல.. அவன் பிறர் உழைப்பில் வாழ்ந்து பழகிய உல்லாசி.. அவனுக்கு வேலை செய்யப் பிடிக்காது.. அந்த வேலையினால் வரும் லாபத்தைக் கொள்ளையடித்து அனுபவிக்கப் பிடிக்கும்...

அப்படிப்பட்டவன்.. விடிந்தும் விடியாதபோதே எழுந்து மில்லுக்கு கிளம்பி ஓட நேர்ந்தது.. அதில் கொடுமை என்னவென்றால்.. அவன் என்னதான் கோழி கூவுவதற்கு முன்னாலேயே அடித்துப் பிடித்துக் கொண்டு கிளம்பி மில்லிற்கு ஓடினாலும்.. அங்கே அவனுக்கு முன்னால் யுகேந்திரன் பிரசன்னமாகியிருப்பான்..

'இவன் தூங்கவே மாட்டானா..?' மகேந்திரனுக்குள் எரிச்சல் மண்டும்...

அவன் சாதாரணமாக செலவு கணக்கை எழுதினாலும் கூட யுகேந்திரன் அதை ஊன்றி.. ஊன்றி கவனித்து ஆயிரம்



கேள்விகளைக் கேட்டான்.. பதிலுக்கு.. அவன் காட்டிய கணக்கில் மகேந்திரனுக்கு சந்தேகம் தட்டுப்பட.. இவனும் ஆயிரம் கேள்விகளைக் கேட்டான்.. அவர்கள் ஒருவருக் கொருவர் போர்முரசு கொட்டிக் கொண்டார்கள்...

"இந்த மில்லுக்கு நீ மட்டும்தான் முதலாளியா..? இது உனக்கு மட்டும்தான் சொந்தமா..?"

நாள் தோறும் இதே கேள்வியை அவர்கள் மாறிமாறிக் கேட்டுக் கொண்டார்கள்.. அதிகாரப் போராட்டத்தில்.. யதேச்சதிகாரமாக.. சர்வாதிகாரியாய் இருந்தே பழக்கப் பட்டிருந்த மகேந்திரன் மண்டை காய்ந்து போனான்.. இதற்கெல்லாம் காரணமான நரேந்திரனையும்.. அவனை இப்படியாகப்பட்ட முடிவுகளை எடுக்க வைத்த வித்யாவையும் துவம்சம் செய்யும் வெறி அவனுக்குள் கிளர்ந்தது..

நல்லவர்கள்தான் திடிரென்று எதிரியுடன் கை கோர்க்கத் தயங்குவார்கள்.. கெட்டவர்களுக்கு அப்படியில்லை.. அவர்களுக்கென்ன கொள்கைப் பிடிப்பா இருக்கப் போகிறது..?

மகேந்திரன் ரங்கதுரையுடன் கை கோர்த்தான்..

"ஆயிரம்தான் இருந்தாலும் அது நான் வளர்த்த பேக்டரி ரங்கதுரை.. ராத்திரி பகல்ன்னு பார்க்காம உழைத்து உருவாக்கினது. ம்ஹீம் எங்கிருந்தோ வந்தவ என் அண்ணனை மயக்கி அதைத் தட்டிக்கிட்டுப் போயிட்டா..."

ரங்கதுரை முட்டாளல்ல... அந்த பேக்டரியை மகேந்திரன் வளர்த்த லட்சணம் அவனுக்கு நன்றாகவே தெரியும்.. அவன் இரவு.. பகல் பார்க்காமல் உழைத்த

லட்சணமும் தெரியும்.. இருந்தாலும்.. மகேந்திரன் சொன்னதில் இருந்த ஒரு உண்மை அவனை யோசிக்க வைத்தது..

"இப்பல்லாம் முதலாளியா ஆகனுமுன்னா.. முதலாளிக்கு மகனாப் பிறந்திருக்கனும்னு அவசியமில்லை ரங்கதுரை.. எவனாவது ஒரு இளிச்சவாயன் முதலாளியா இருக்கானான்னு பார்த்து அவனை மயக்கினாப் போதும்.. குப்பை மேட்டில் கிடக்கிற காகிதம் கூட.. கோபுரத்தின் உச்சிக்குப் பறந்து போய் ஒட்டிக்கிரும்..."

உண்மைதானே என்று நினைத்தான் ரங்கதுரை.. நேற்று வரை அவனைப் போல ஒரு தொழிலாளியாக இருந்து வந்த வித்யா.. இன்று முதலாளியாக மாறி நிற்கிறாளென்றால் அதற்கு எது காரணம்...? மகேந்திரன் சொல்வதுதானே காரணம்...?

இது மனித இயல்பு.. நேற்று வரை அவர்களுடன் பணியாற்றுகிறவர்கள்.. திடிரென்று பதவி உயர்வு பெற்றால் பொறாமை கொள்வது மனித இயல்புதானே..

ரங்கதுரைக்குள்ளும் அந்த பொறாமை துளிர் விட்டிருந்தது.. அதற்கேற்றார் போல.. வித்யா.. அடிக்கடி.. நாங்க முடிவு பண்ணியிருக்கோம்.. நாங்க யோசிக்கிறோம்.. என்ற ரீதியில் பேசி வைத்தது அவனது ஆத்திரத்தை அதிகப் படுத்தியது.. அந்த வார்த்தைகள் வித்யாவை முதலாளியாக அடையாளப் படுத்திக் காட்டியதில் அவன் வெகுண்டான்.. முதலாளியின் மனைவி முதலாளிதானே என்ற எண்ணம் அவனுக்கு வரவில்லை.. மாறாக நேற்று வரை இவளும் நம்மைப் போல சம்பளம் வாங்கிக்



கொண்டிருந்த தொழிலாளிதானே என்ற எண்ணம் மட்டுமே அவனுக்குள் தலை தூக்கியது..

அதன் விளைவாக அவன் எடுத்ததெற்கெல்லாம் வித்யாவுடன் மோத ஆரம்பித்தான்.. தொட்டதெற்-கெல்லாம் குற்றம் சொன்னான்.. சின்ன விவகாரத்திற்குக் கூட போர் கொடியை உயர்த்தினான்...

பொறுமையிழக்கும் தருணங்களை நரேந்திரனுக்கு அள்ளி வழங்கிக் கொண்டே இருந்தான்... நரேந்திரனை பேச விடாமல் வித்யா தடுத்துக் கொண்டே இருந்தாள்..

"இவங்க உங்க தொழிலாளிகள் நரேன்..."

"உனக்கும் இதில் உரிமையிருக்கு வித்யா..."

"எனக்கு உங்க மேல்தான் உரிமை..."

"ஏய்ய்.. யாரோ போலப் பேசாதேடி..."

நரேந்திரன் முறைத்துக் கொள்வான்... உரலுக்கு ஒரு பக்கம் இடியென்றால்... மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி.. வித்யாவுக்கோ திரும்பிய பக்கமெல்லாம் இடி...

பேக்டரியில் நான் தொழிலாளி என்று அவள் சொன்னால் நரேந்திரன் சண்டைக்கு வருவான்... முதலாளி என்று சொன்னால் ரங்கதுரை சண்டைக்கு வருவான் என்றால்.. அவள் பாவம் என்ன செய்வாள்..?

வாயைத் திறந்தால்தானே வம்பு என்று அவளால் மௌனம் காக்க முடியுமா...? ஒப்புக் கொண்ட வேலையிலிருந்து விலகிக் கொள்ளத்தான் முடியுமா..? அதை நரேந்திரன் அனுமதிக்க மாட்டானே...

"வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கவா... ஆயகுடியை விட்டு நீ வெளியேறி.. போராடிப் படிச்ச...?"

"இருந்தாலும் நரேன்..."

"பேசாதே.. என்னால் உன் திறமை வீணாகி விட்டதுன்னு காலம் பூராவும் நான் வருத்தப்படனுமா..?"

நரேந்திரனின் கேள்வி அவளைப் பேசவிட்டாமல் செய்துவிடும்.. வித்யா கெட்டிக்காரிதான்... திறமையான நிர்வாகிதான்.. அவளால் தொழிலாளர்களின் நலன்கள் மேம்பட்டதேயொழிய குறையவில்லை... ஆனாலும் ரங்கதுரை அமைதியடையவில்லையே...

குறை அவனுடைய மனதில் இருந்தது.. அதனால் இல்லாத ஒன்றைக்கூட இருப்பதைப் போலக் கூறி தொழிலாளர்களின் மனதில் வேற்றுமையுணர்வை தூண்டி விட்டான்.. சின்ன விவசாரத்தைக் கூட ஊதிப் பெரிதாக்கினான்..

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க சார்.. புது ஆர்டரை ஏத்துக்கிட்டு வேலை செய்ய முடியுமா.. முடியாதா...?" மனதை திடப் படுத்திக் கொண்டு கடுமையாகக் கேட்டாள் வித்யா...

சிலசமயம் சாட்டையை கையில் எடுத்துத்தான் ஆக வேண்டியிருக்கிறது.. அதைப் பிரயோகிக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை.. ஆனால்.. அது கையில் இருந்தால்தான் வேலை நடக்கும் என்றால் இது கொடுமை அல்லவா...?



வித்யாவிற்கு சாட்டையைக் கையிலெடுக்க விருப்பமே இல்லை.. எனினும் அவள் அதைத்தான் செய்ய வேண்டியிருந்தது.. அவளுக்காக இல்லாவிட்டாலும்.. நரேந்திரனின் மனைவி என்ற கௌரவத்தை காப்பாற்றிக் கொள்பதற்காகவாவது அவள் அதைச் செய்துதான் ஆகவேண்டும்...

"முடியாதுன்னா என்னம்மா செய்வீங்க...?" ரங்கதுரை முறைத்தான்..

"நோ அதர் வே.. போனஸ்ஸை குறைக்க வேண்டியது தான்.. சம்பளத்தை உயர்த்துவதைப் பற்றி யோசிக்க வேண்டியதுதான்.. ஆள் குறைப்பு செய்ய வேண்டியதுதான்..."

"செஞ்சிருவீங்களோ...? நாங்க விட்டுருவமோ..? ஸ்ட்ரைக் வெடிக்கும்மா..."

"வெடிக்கட்டும்.. பேக்டரியை இழுத்து மூடலாம்.. புது வேலைகளைச் செய்ய முடியாத பேக்டரியை வைத்துக்கிட்டு என்ன செய்ய...? பேசாம வேற தொழிலைத் தொடங்கிட்டுப் போக வேண்டியதுதான்... நஷ்டம் யாருக்கு...?"

"பணமிருக்கிற திமிராம்மா...?"

"ஊஹூம் வேலை நடக்காத தொழிலை விட்டுவிட்டு வேற தொழிலை ஆரம்பிக்கலாம்கிற புத்திசாலித்தனம்..."

"அப்ப... இத்தனை வருசமா வேலை பார்த்த தொழிலாளர்களின் கதி...?"

"அதை நீங்களும் யோசிக்கனும் சார்... யூனியன் லீட்ரா இருந்தால் தொழிலாளர்களின் நலனைப் பத்தி யோசிக்கனும்.. அதை விட்டுட்டு.. அவர்களின் வேலையைப் பிடுங்குவதைப் பற்றி யோசிக்கக் கூடாது.. வேலையைச் செய்ய மாட்டேன்.. சம்பளம் மட்டும் கூட வேண்டும்... போனஸ் வேண்டும்.. இன்னும் அதிகப்படி சலுகைகள் வேண்டும்ன்னு கேட்டால்.. கொடுக்கப் பணத்திற்கு எங்கே போவது..? எங்கேயாவது கொள்ளை அடிக்கப் போக வேண்டியதுதான்.."

"எங்களைச் சொல்றிங்களா...?"

"ஊஹூம் முதலாளிகளைச் சொல்கிறேன்..."

வித்யா கவனமாக 'எங்களை...' என்ற வார்த்தையைத் தவிர்த்தாள்.. ரங்கதுரையின் வேகம் கொஞ்சம் இறங்கியது.. அவன் யோசித்தான்.. வித்யா சொல்வதில் உள்ள உண்மைகள் அவனுக்கு பிடிபட்டன...

'நாமதான் எதுக்கெடுத்தாலும் குதிக்கிறோமோ...'

அவனுக்கு மனச்சாட்சி உறுத்தியது.. அவன் தணிந்து போக முடிவு செய்தான்... அதே சமயம் அதை முதலாளிகள் அறியாத வண்ணம் அவன் செய்தாக வேண்டும்...

"போனாப் போகுதுன்னு இந்த ஒரு முறை இந்த வேலையைச் செய்ய நாங்க ஒப்புக்கிறோம்.. நாங்க உழைப்பாளிகம்மா.. எங்களாலே முதலாளிக கொள்ளையடிக்கப் போக வேணாம்.. ஆனா இதையே சாக்கா வைச்சுக்கிட்டு தொடர்ந்து இதைப் போலவே



பண்ணினீங்கன்னா நாங்க சும்மாயிருக்க மாட்டோம்.. சொல்லிட்டேன்.."

அவன் வீறாப்பு குறையாமல் பேசிவிட்டு வெளியே போய் விட்டான்.. அதுவரை பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த நரேந்திரன் வெடித்தான்..

"இவனிடமெல்லாம் நீ இந்தளவுக்கு பேசியாகனுமா..?"

"ரிலாக்ஸ் நரேன்.. நீங்க ஏன் இதை பெர்ஸனல் மேனேஜரின் டியுட்டியாக நினைத்துப் பார்க்கக் கூடாது..?"

"ஐ நோ வித்யா... பட்... என் முன்னாலேயே அவன் மிரட்டறான்.. எனக்கு எந்த அளவுக்கு கோபம் வந்ததுன்னு உனக்குத் தெரியுமா...?"

"அதான் உங்க முகம் ஜொலிச்சதே.. அவன் பேசினதுக்கு நான் பயந்து போனேனா...? இல்லையே.. அப்படியிருந்தாத்தான் நீங்க கோபப்படனும்..."

"அதைச் சொல்லு... யாரு நீ...?"

மனநிலை மாறிப் போனவனாக நரேந்திரன் ஆசையுடன் வித்யாவை அணைத்துக் கொண்டான்.. அவன் தோள் வளைவில் முகம் புதைத்த வித்யா அவன் காதில்

"நான் நரேந்திரனின் பொண்டாட்டி.." என்றாள்... நரேந்திரனின் காதினில் தேன் பாய்ந்தது..

# 4



நதியோரம் நடந்த போது...
நதியாக என் வாழ்வில் வந்தாய்...
பொருள் வேண்டும் இவ்வுலகில்...
என் மனதை நீ கேட்டாய்...
-நதியோரம் நான் நடந்த போது-

பெருமாளையும்.. தாயாரையும் சேவித்து விட்டு... நதியோரமாக அவர்கள் நடந்தார்கள்... வழக்கமான படித்துறையில் அமர்ந்த பின்பும் வித்யா மௌனமாகவே இருந்தாள்.. நரேந்திரனின் புருவங்கள் சுருங்கின... அருகிலிருந்தவளின் கை பிடித்து இழுத்து... மார்போடு இறுக்கி முத்தம் பதித்தான்... வித்யாவின் உள்ளங்கை உணர்ந்த மீசையின் ரோமங்களின் உராய்வில் அவள் சிலிர்த்துப் போனாள்...

"வித்யா..."

"ம்ம்ம்..."

"ஐ லவ் யு..."

"இதை நான்தான் சொல்லனும்..."

"ஏன்.. நான் சொல்லக் கூடாதா...? நான் உன்னைக் காதலிக்கலையா...?"



"என்னளவுக்கு காதலிக்கலை..."

இதைக் கேட்ட நரேந்திரனின் முகம் சுருங்கி விட்டது.. அவளின் கையை அவன் விட்டு விட்டான்.. வித்யா அவன் முகம் பார்த்தாள்.. அவனின் மனச் சிணுங்கலைப் புரிந்தவளாக மெல்லச் சிரித்தபடி அவனை ஒட்டி அமர்ந்தாள்... அவனின் வலிமையான கையை எடுத்து.. தன் கன்னத்தில் பதித்துக் கொண்டாள்.. வித்யாவின் கன்னத்தின் மென்மையில் நரேந்திரனின் மனம் குழைந்தது..

"நரேன்..."

"சொல்லு..."

"நீங்க என்னைக் காதலிக்கறிங்கதான்.. ஆனா.. என்னைப் பார்க்காமலே நீங்க என்னைக் காதலிக்கலை.. நான் அப்படியில்லை... உங்களைப் பார்க்கிறதுக்கு முன்னாலேயே உருகி உருகி... உங்களைக் காதலிச்சவ.. அந்த அர்த்தத்தில் தான் சொன்னேன்..."

"அப்ப.. என் காதல் உயர்த்தியில்லையா...?"

"யார் சொன்னது...? ராஜா ராஜேந்திர பூபதியோட மூத்த மகன் ராஜா நரேந்திர பூபதி... ஒரு ஏழைப் பெண்ணுக்காக.. கூடப் பிறந்தவர்களையே எதிர்த்து நின்னார்... அவளையே கல்யாணமும் பண்ணிக்கிட்டு.. அவளின் காதலுக்கு மரியாதை கொடுத்தார்.. யார் இதைச் செய்வாங்க...? சொல்லுங்க..."

"உன் காதலன் செய்வான்..."

நரேந்திரன் முக மலர்ச்சியுடன் அவளை அணைத்துக் கொண்டான்.. அந்தி நேரம் முடிந்து கொண்டிருந்தது.. லேசான இருள் படலம் அவர்களைச் சுற்றிக் கவிய ஆரம்பித்திருந்தது... அமைதியாக ஓடிக் கொண்டிருந்த நதி நீர்... அவர்களை வாத்சல்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது...

"இந்த நதி என் சிநேகிதி..." பாசத்துடன் சொன்னாள் வித்யா..

"பூர்ணிமாவை விடவா...?" என்று கேட்டான் நரேந்திரன்..

"அவளைப் போலவே.." வரிசைப் பற்கள் தெரிய சிரித்தாள் வித்யா...

அவளின் அந்தச் சிரிப்பில் மயங்கிப் போனான் நரேந்திரன்..

"சிரிச்சே மயக்கறடி..." அவளை இழுத்துக் கொண்டான் அவன்..

அவனின் கரங்கள் அவள் மேல் படிந்த விதத்தில் வித்யா கிறங்கிப் போனாள்.. அவனின் நெருக்கத்தில் அவளின் பெண்மை தவித்து தத்தளித்தது... அவள் மேல் அவன் கொண்டிருக்கும் ஆசையின் அளவை அவன் கொடுத்த முத்தங்கள் உணர்த்த... எதிர்ப்பேயில்லாமல் அவன் கைகளுக்குள் ஒன்றிக் கிடந்தாள் வித்யா... அவளை அணுவணுவாக ரசித்து ஆக்ரமிக்க அவனுக்குப் பிடித்திருந்தது.. அவனையே அவளுக்குப் பிடித்திருந்தது..



அவளின் தேவைகளுக்கு இசைந்து கொடுப்பதிலிருந்த ஓர்வித சுகத்தை பரிபூரணமாக உணர்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தாள் வித்யா...

"உன் மேல கொண்ட ஆசை...
உத்தமியே மெத்தை உண்டு...
சத்தியமா சொல்லுறேண்டி தங்கரத்தினமே..
தாள முடியாது கண்ணே பொன்னு ரத்தினமே..."

அவளின் காதோடு அவன் பாடிய பாடலின் ஆசைத்தீ உணர்த்திய வெப்பத்தில் அவள் எரிய ஆரம்பித்தாள்.. அவனின் மூச்சுக்காற்று அவள் காதைச் சுட்டது.. நகர்ந்து கொண்டிருந்த மணித்துளிகள் அவனுக்கும்.. அவளுக்குமான ரகசிய அந்த மணித்துளிகளை பதிவு செய்து கொண்டிருந்த போது கோவிலின் மணி ஒலித்தது.. அந்த மணியோசையில் வித்யாவை நரேந்திரன் விடுவிக்க.. அவள் விலகி அமர்ந்தாள்..

அவள் முகம்... அவனின் அழுத்தமான முத்தங்களினால் கலங்கிச் சிவந்திருந்தது.. கலைந்திருந்த அவளின் தலைமுடி அவனின் ஆவேச அணுகுமுறையைச் சொன்னது.. மெல்லிய இருளில் தெரிந்த அவளின் வடிவம்.. முன்பு ஒருமுறை சென்னையில் பங்களாவின் மொட்டை மாடியில் நிலவின் ஒளியில் அவளைத் தனியாக சந்தித்த அந்தத் தருணத்தை நினைவு படுத்தியது...

அன்றும் இன்று போல ஒரு கோட்டுச் சித்திரத்தைப் பார்ப்பதைப் போலத்தான் அவளின் வடிவம் இருந்தது.. மெலிதான நிலவொளியில் தலையில் சூடிய மல்லிகையின்

நறுமணத்தோடு.. தேவதையின் அழகோடு அவன் அருகே நின்றாள் அவள்...

இன்று அந்த தேவதை அவனருகில்... அவனுக்கு மட்டும் உரிமையானவளாக.. அவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்தவளாக இருக்கிறாள்...

இது எப்படி நிகழ்ந்தது என்று பிரமித்துப் போனான் நரேந்திரன்...

“என்ன பேச்சையே காணோம்...?” வித்யா கேட்டாள்..

“பேசத்தான் இங்கே வந்தோமா...?” நரேந்திரனின் கைகள் மீண்டும் அவளைத் தேடின...

“ஊஹீம்.......? வேகம் அதிகமாக இருக்கே...”

“எதைச் சொல்கிற...?”

“நதியின் வேகத்தைச் சொல்றேன்.. நீங்க எதை நினைச்சீங்க..”

“உன் நாயகனின் வேகத்தைச் சொல்கிறாயோன்னு நினைச்சேன்...”

அவன் சொல்லிய விதத்தை ரசித்துச் சிரித்தாள் வித்யா.. அதில் தெறித்து விழுந்த அழகில் மயங்கிப் போனவனாக அவளது கைவிரல்களில் விரல் கோர்த்து விளையாடிக் கொண்டிருந்தான் நரேந்திரன்..

“வர வர... சினிமாடிக்கா பேச ஆரம்பிச்சிட்டிங்க நரேன்..”



“ஈஸ் இட்...? என்னமோ தெரியலை.. நீ பக்கத்தில் இருந்தாலே இப்படித்தான் எனக்குப் பேச வருது..”

“ஊஹீம்..? யாராவது கேட்டா நம்மை லவ்வர்ஸ்ன்னு நினைச்சுக்கப் போறாங்க...”

வித்யா சிரித்தபடி சொல்ல.. இருளில் தெரிந்த அவள் முகத்தை ஊன்றிப் பார்த்தான் நரேந்திரன்.. அவன் குரல் சூழ்ந்து ஒலித்தது..

“ஏன் வித்யா.. நாம லவ்வர்ஸ் இல்லையா...?”

இல்லையென்று அவள் எப்படிச் சொல்லுவாள்...? கணவன் மனைவியாக ஆனபின்பு காதலிக்கக் கூடாது என்று ஏதும் சட்டமிருக்கிறதா என்ன...? அவள் மீதான அவனின் காதலை ஒவ்வொரு நொடியிலும் அவள் உணர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறாளே.. அவன் மீதான அவளின் தேடலை அவனுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறாளே.. அப்படியிருக்கும்போது அவர்கள் காதலர்கள் இல்லையென்று அவளால் சொல்ல முடியுமா..?

“நரேன்...” அவள் கண்களில் ஈரம் தெரிந்தது..

“வித்யா...” அவன் பதறி அவள் முகத்தை கையில் ஏந்தினான்..

ஏந்திய அவன் கரத்தில்.. இரண்டு சொட்டுக் கண்ணீர் துளிகள் தெறித்து விழுந்தன..

“என்னடி ஆச்ச...?” நரேந்திரன் தவித்தான்...

"நான் உங்களைக் காதலிக்கிறேன் நரேன்..." வித்யா விம்மினாள்..

"அதான் எனக்குத் தெரியுமே.. இதுக்குப் போயா அழுகிற...? பைத்தியம்.. நான் என்னவோ.. ஏதோன்னு பயந்துட்டேன்..." நரேந்திரனின் குரலில் நிம்மதியிருந்தது..

"என் வாழ்க்கையில நான் எனக்குன்னு ஆசைப் பட்டது படிப்பை மட்டும்தான்... அப்படியிருந்தவ உங்க மேல ஆசைப் பட்டேன்.."

"வித்யா..."

"பூரணி சொல்லுவா.. தினமும் உங்களைப் பத்திப் பேசுவா.. அவ பேசப் பேச... என் நினைவுகளின் கதாநாயகனா நீங்க ஆனிங்க நரேன்.. கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே சொன்னீங்களே.. நீங்க என்னோட நாயகன்னு.. அது நூற்றுக்கு நூறு உண்மையான வார்த்தை.. என் நாயகனா உங்களை மனசுக்குள்ளே நான் வரிச்சேன்.."

"அந்தத் தகுதி எனக்கிருந்துச்சாடி...?"

"உங்களைத் தவிர யாருக்கு அந்த தகுதியிருக்கு..? சொல்லுங்க பார்ப்போம்... உங்களைப் பத்திக் கேட்டுக்கிட்டே இருந்தால் போதும்ன்னு எனக்குத் தோணும்.. சாப்பிடத் தோணாது.. உங்க போட்டோவைப் பார்த்துக்கிட்டே இருப்பேன்.. என்னைக்காவது ஒரு நாள் உங்களை நேரில் பார்க்க முடிந்தால் போதும்ன்னு மனசு கிடந்து அடிச்சுக்கும்.. அது நடக்குமா.. நடக்காதான்னு தெரியாது..."



வித்யாவின் கடந்த காலக் காதல் கதையின் கதாநாயகனான நரேந்திரன் அவள் சொன்னதை வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான்.. இந்த அளவுக்கு ஒருத்தி அவனை நேசித்துக் கொண்டிருக்க அதை அறியாதவனாக அவன் போதையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டிருந்ததை நினைத்துப் பார்த்தவனுக்கு அவன் மீதே வெறுப்பு வந்தது.. அவனுக்காக முழு நிலவு காத்துக் கொண்டிருக்க மின்மினிப் பூச்சிகளின் பின்னால் எதைத் தேடி அவன் ஓடினான்...?

"என் காதல் ஒரு தவம் மாதிரி நரேன்.. என் தவம் பலிச்சது.. ஒருநாள் உங்களை நேரே பார்த்தேன்.. நீங்க என்னையும் மதிச்சு உங்க மன உணர்வுகளைப் பகிர்ந்துக்கிட்டிங்க.. அந்த நிமிசம் போதும்ன்னு எனக்குத் தோணிப் போச்சு.. அதுக்குப் பின்னாலே நீங்க எதைக் கேட்டாலும் மறுக்க முடியாம உங்க பின்னாலேயே வந்து விட்டேன்.."

"நான் கொடுத்து வைத்தவன் வித்யா.. என் மனசு நிறைஞ்சிருக்குடி.. உனக்கு எதையாவது கொடுக்கணும்ன்னு எனக்குத் தோணுது.. கேளுடி... உனக்கு என்ன வேணும்ன்னு கேளு..."

நரேந்திரனின் மனம் தளும்ப உணர்வு பூர்வமாக இந்த வார்த்தைகளை அவன் சொன்னான்.. வித்யாவும் கேட்டாள்..

"எனக்கு உங்க மனசு வேணும் நரேன்..."

"வித்யா..."

"அதில எனக்கு மட்டும்தான் இடமிருக்கனும்.. எனக்கு மட்டும் சொந்தமானதாக.. எனக்கே எனக்குன்னு உங்க மனசு இருக்கனும் நரேன்.."

வித்யா இரு கைகளையும் நீட்டி இறைஞ்சினாள்.. நரேந்திரன் திக்பிரமை பிடித்தவன் போலானான்...

அவன் கோடிஸ்வரன்.. ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன்.. அவனிடம் அவனது காதல் மனைவி அன்புப் பரிசாக.. வைர நகைகளைக் கேட்கலாம்.. அவளுக்கே.. அவளுக்காக 'வசந்த மாளிகை...' ஒன்றைக் கட்டித் தரும்படிக் கேட்கலாம்.. அவன் பெயரில் உள்ள பேக்டரியின் நிர்வாகத்தைக் கேட்கலாம்.. இப்படி எத்தனையோ 'கேட்கலாம்'கள் இருக்க... அவள் அவன் மனதை மட்டும் கேட்டாள்...

'பொன்னை விரும்பும் பூமியிலே..
என்னை விரும்பும் ஓர் உயிரே...
புதையல் தேடி அலையும் உலகில்..
இதயம் தேடும் என்னுயிரே..!'

அவன் மனதில் அவனுக்குப் பிடித்த பாடல் ஒலித்தது..






நதியோரம் நடந்த போது...
சுடுமணலில் பாதம் பதித்தேன்...
இளைப்பாற நிழல் கேட்டால்..
கற்பகவிருட்சமாய் நீ வந்தாய்..
-நதியோரம் நான் நடந்தபோது-

"எனக்கு அது மட்டும் போதும் நரேன்.. வேறு எதுவும் வேண்டாம்... உங்க மனசு...! அது எனக்கு மட்டும் சொந்தமா இருக்கனும்.." வித்யாவின் குரலில் தீவிரம் இருந்தது...

"உனக்கு மட்டும்தாண்டி என் மனசு சொந்தம்..." நரேந்திரன் உறுதியான குரலில் சொன்னான்..

"ஒரு வேளை... அதில வேற யாராவது ஒருத்தரின் நினைவு வந்ததுன்னு வையுங்க..." வித்யாவின் குரலில் தீவிரம் அதிகரித்தது..

"யாருடி வரப் போகிறது..." நரேந்திரன் இலகுவாக அவளின் தீவிரத்தைப் புறக்கணித்து நகைத்தான்...

"இது சிரிக்கிற விசயமில்ல நரேன்.. சீரியஸா சொல்கிறேன்.. உங்க மனசு எனக்கு மட்டும்தான் சொந்தம்கிற நிச்சயம் எனக்கிருக்கும் வரைக்கும்தான்

நான் அமைதியாய் இருப்பேன்.. அதில் துளியளவு இடம் கூட மத்த யாருக்காவது நீங்க கொடுத்தீங்கன்னு வையுங்க.. அந்த நிமிசமே உங்களை விட்டுப் பிரிஞ்சுருவேன்..."

இதைச் சொல்லிய வித்யா நரேந்திரனின் கையால் அறை வாங்கினாள்.. அவளின் காதுகளில் கிர்சென்று ஒலி கேட்க.. கன்னத்தில் பலமாக வலித்தது...

"கொன்னுருவேண்டி..." நரேந்திரன் உறுமினான்..

"நரேன்..." வித்யா அதிர்ச்சியுடன் அழைத்தாள்..

"பேசாதே... உனக்கு அன்னைக்கே சொல்லியிருக்கேன்.. பிரிவைப் பத்திப் பேசாதேன்னு.. உன் வாழ்க்கை என்னோடதான்.. பிரிஞ்சு போயிருவியோ.. உன்னை விட்டு விட்டுத்தான் வேற வேலை பார்ப்பேன்.. கொன்னு இந்த நதிக்கரையிலேயே புதைச்சிர மாட்டேனா...?"

'நரேன்..."

'பேச வந்திட்டா.. என் மனசில உன்னைத் தவிர யாருக்குடி இடமிருக்கு..? உனக்காகத்தான் இத்தனை நாளா கல்யாணம் ஆகாம நான் காத்துக் கிடந்தேன்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன்.. இவ பினாத்தறா..."

"நரேன்.."

"இது ஒருவழிப் பாதைடி.. நீ திரும்பிப் போக முடியாது.."

திரும்பிப் போக வித்யா நினைப்பாளா...? எங்கே நரேந்திரன் இருக்கிறானோ.. அங்கேயே வித்யாவின் மனம்



நிலை கொண்டிருக்கும்.. இதை அவனால் புரிந்து கொள்ள முடியுமா...?

அவள் கண்களில் இருந்து நீர் துளி விழுந்தது.. நரேந்திரனின் மடிமீது அவள் தலை சாய்த்தாள்.. அவன் உக்கிரம் துணிந்தவளாக அவள் தலை முடியை வருடிக் கொடுத்தபடி மெல்லப் பாடினான்..

"ஆலம் விழுதுகள் போல்
உறவுகள் ஆயிரம் இருந்தும் என்ன..?
வேரென நீயிருந்தாய்...
அதில் நான் வீழ்ந்து விடாதிருந்தேன்..
உன் கண்ணில் நீர் வழிந்தால்...
என்நெஞ்சில் உதிரம் கொட்டுதடி..
என் கண்ணில் பாவையன்றோ..
கண்ணம்மா.. என்னுயிர் நின்னதன்றோ..."

அவன் மடிமீது தலை வைத்து வெகு நேரத்திற்கு வித்யா விசும்பிக் கொண்டேயிருந்தாள்.. அவளின் ஏக்கம்தான் என்ன..? நரேந்திரனுக்கு பிடிபடவில்லை.. அதைத் தீர்க்கும் வகையறியாதவனாக அவள் முடியை ஆதரவுடன் கோதிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.. முன்னிரவுப் பொழுதில் அழுகை அடங்கியவளாக வித்யா எழுந்து நின்றாள்.. கூட எழுந்து நடந்த நரேந்திரன் காருக்கு அருகே வந்ததும் கேட்டான்...

"ஏண்டி அப்படி அழுத...?"

"தெரியலை.." துக்கத்துடன் பதில் சொன்னாள் வித்யா.. அவளுக்குத் தெரியத்தான் இல்லை.. அவளால்

படிப்பிற்காக ஆயகுடியை துறக்க முடிந்தது... பூர்ணிமாவின் வேண்டுகோளுக்காக கல்லூரி விடுதியை துறக்க முடிந்தது.. நரேந்திரனின் விருப்பத்திற்காக பார்த்துக் கொண்டிருந்த வேலையையும்.. காத்துக் கொண்டிருந்த வேலையையும் துறக்க முடிந்தது.. ஆனால் எதற்காகவும் நரேந்திரனைத் துறக்க அவளால் முடியவே முடியாது...

இருந்தும் அந்த வார்த்தைகளை அவள் சொன்னாள்.. ஏன்...? அவள் மனதின் அடி ஆழத்தில் இருக்கும் பயம் தான் என்ன...? கைப் பொருளை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் சிறுமியாக ஏன் அவள் தத்தளிக்கிறாள்...?

"உனக்கு யோகம்டி.. கிரண்பூர் சமஸ்தான இளவரசி மட்டும் விட்டுக் கொடுக்கலைன்னா.. என் பெரியத்தானின் மனசில உனக்கு இடமேது...?"

கேட்டாளே ஒரு கேள்வி...! மீனலோசனி அருமையான கேள்வியொன்றைக் கேட்டு வைத்தாள்... நரேந்திரனுடன் மணமாகி.. மறுவீட்டுக்கு ஆயகுடி போய் வந்து.. பொறுப்புள்ள பெரியண்ணியாக பூர்ணிமாவின் திருமணத்திலும் நின்று முடித்த வித்யாவிடம் ஓர் நாள் இந்தக் கேள்வியை மீனலோசனி கேட்டாள்...

வித்யாவிற்குத் தெரியும்.. அவள் மனதை பலவீனமாக்கத்தான் அப்படிப்பட்ட கேள்வியினை மீனலோசனி கேட்கிறாள் என்று...

ஆனால்.. அந்தக் கேள்வியில் உண்மை இருக்கிறதல்லவா...? கார்த்திகாயினி தேவி மட்டும்



காதலனுக்காக காத்திருந்தால்.. நரேந்திரனின் வாழ்வில் வித்யாவிற்கு இடமில்லையே...

அன்றிலிருந்துதான் வித்யாவின் மனம் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.. அவளது நரேந்திரனை யாராவது அவளிடமிருந்து பிடுங்கிக் கொண்டுப் போய் விடுவார்களோ என்று அவள் பயந்தாள்.. எந்த இழப்பையும் அவளால் தாங்கிக் கொள்ள முடியும்.. நரேந்திரனை பிரிந்தால்.. அந்தப் பிரிவை அவளால் தாங்கிக் கொள்ள முடியாதே...

அதற்குப் பின்னால் அடிக்கடி அவள் இப்படிப் பேசி நரேந்திரனிடம் அறை வாங்கிக் கொள்வது வாடிக்கையான ஒன்றாக ஆகி விட்டிருந்தது...

காருக்குள் ஏறிய வித்யா.. கன்னத்தை தடவிக் கொண்டாள்.. நரேந்திரனின் கைவிரல் தடங்கள்... அவள் தொடுகைக்கு தட்டுப்பட்டன.. அவனின் கோபத்தின் வேகத்தில் அவள் மனம் நிம்மதி அடைந்தது...

"நீயாய் வாய் விட்டு கன்னத்தைப் புண்ணாக்கிக்கற.." நரேந்திரன் சங்கடப் பட்டான்..

"காரைக் கிளப்புங்க..." வித்யா அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்..

"உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலைடி..." நரேந்திரன் குற்றம் சாட்டியபடி காரைக் கிளப்பினான்..

சாலையில் வேகமெடுத்த காரின் முன்புறம் தெரிந்த மரங்களை வேடிக்கை பார்த்தபடி நரேந்திரனின் தோளில் சாய்ந்திருந்த வித்யா..

"பேக்டரியில ஒன்னைக் கவனிச்சீங்களா...?" என்று திடிரென்று கேட்டாள்..

"ஒன்னா...? ஓராயிரம்ன்னு சொல்லு..." நரேந்திரன் அலுத்துக் கொண்டான்...

"ரங்கதுரையின் பேச்சில மாற்றம் தெரியுது..."

"அது கொஞ்ச நாளாவே மாறிக் கிட்டுத்தான் இருக்குது..."

"அது தானாய் வந்த மாற்றம் போலத் தெரியலை.."

"புத்திசாலி..! கண்டுபிடிச்சிட்ட.. நீ சொல்கிறதும்.. சந்தேகப்படறதும் உண்மைதான்.. மகி... ரங்கதுரையை அடிக்கடி மீட் பண்றானாம்..."

"நினைச்சேன்..."

"ஆனா.. அதை என்கிட்டச் சொல்ல மாட்ட.. ஏன்னா அவன் என் தம்பி பாரு.. ஏண்டி இப்படி இருக்கிற...?"

"விடுங்க நரேன்.. அவர் குணம் தெரிந்ததுதானே.."

"அதுக்காக இந்த அளவுக்கு கீழே இறங்கறதா...? குகன்தான் அவனை வாட்ச் பண்ணிக்கிட்டு இருக்கான்.."

வித்யா நரேந்திரனின் காதல் மீதான தவிப்பை மறந்து பேக்டரியைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தாள்....

"வொர்க்கர்ஸ் பிராப்ளம் கிரியேட் ஆகிறது நிர்வாகத்திற்கு நல்லதில்லை நரேன்.."

"எனக்கும் புரியுது.. ஆனா இவங்களை எப்படி திருப்தி பண்றதுன்னு எனக்குத் தெரியலையே..."



"ரங்கதுரையைக் கூப்பிட்டுப் பேசிப் பாருங்களேன்.."

"நோ.. நோ... அந்த அளவுக்கு இறங்கக் கூடாது.. எனக்கொன்னும் டென்சனில்லை வித்யா... நீதான் அழகாய் பிராப்ளத்தை சால்வ் பண்றயே.."

"அதைச் செய்திரலாம்.. இருந்தாலும்.. ஒற்றுமையாய் இருந்த பேக்டரி.. லேபர்ஸ்... நிர்வாகம்ன்னு எதிரும் புதிருமா ஆகிறதா...?"

"இதைப் போல எத்தனையோ பிராப்ளத்தைப் பார்த்திருக்கேன்.. லீவ் இட் வித்யா.. பார்த்துக்கலாம்.."

வீடு வந்து விட்டதில் அவர்கள் பேச்சை நிறுத்தினார்கள்.. பிரம்மாண்ட வெளிப்புறக் கேட்டை காவலாள் திறந்து விட கார் உள்ளே நுழைந்தது.. வீட்டுக்குள் போனவர்களை குரோதப் பார்வையுடன் எதிர் கொண்டாள் மீனலோசனி...

"வீட்டைப் பார்த்துக்க மருமகள்கள் இருக்கணுமாம்.. எனக்கு மட்டும் இந்த நியாயமா அத்தை...?"

சௌதாமினியிடம் அவள் கேள்வி கேட்க.. அவள் அதற்குப் பதில் சொல்லாமல்.. அகலமான புன்னகையுடன்

"வா நரேன்... வாம்மா வித்யா..." என்று மகனையும் மருமகளையும் வரவேற்றாள்...

"ம்ஹீம்.. போட்ட சொக்குப் பொடியை... பெரிசு முதல் சிறிசு வரைக்கும் வீட்டில இருக்கிற அத்தனை ஜீவன்களுக்கும் போட்டாகி விட்டது.. என் பேச்சு காதில்

ஏறுமா...?" மீனலோசனி அடுத்த அம்பை எய்து கொண்டிருந்தபோது...

"அம்மா.." என்று வித்யாவிடம் தாவினான் அரவிந்தன்.. அவளும் அவனைத் தூக்கிக் கொண்டாள்..

மீனலோசனிக்குத் தாங்கவில்லை.. அவளுக்கும்.. வித்யாவுக்கும் பொதுவான மாமியாரையே அவள் காய்ச்சு.. காய்ச்சென்று காய்ச்சிக் கொண்டிருக்கும் போது அவள் பெற்ற பிள்ளை வித்யாவை 'அம்மா' என்று அழைத்து சொந்தம் கொண்டாடினால் அவளுக்கு எப்படியிருக்கும்...?

"யாருடா உனக்கு அம்மா...?" அவள் மகன்மீது பாய்ந்தாள்...

"ஏன் மீனா.. குழந்தையை கோபித்துக்கிற...? நான்தான் வித்யாவை அம்மான்னு கூப்பிடனும்னு சொல்லித் தந்தேன்.." சௌதாமினி அமைதியாகச் சொன்னாள்...

"இந்தம்மா என் மகனுக்கு அம்மாவா...?"

"இல்லைதான்.. உறவுப் பிரகாரம் வித்யாவை அவன் பெரியம்மான்னுதான் கூப்பிடனும்.. ஆனாப் பாரு மீனா.. உன்னை விட வயசில வித்யா ரொம்பவும் சின்னவ.. அதனால சித்தின்னுதான் அவன் கூப்பிட வேண்டியிருக்கும்.. அதனாலதான் இரண்டுக்கும் பொதுவா அம்மான்னு கூப்பிடச் சொன்னேன்..."

நீண்ட விளக்கத்தைத் தந்து மீனலோசனியின் மூக்கை உடைத்தாள் சௌதாமினி.. மாமியாரின்



விளக்கத்தைக் கூட மீனலோசனியால் பொறுத்துக் கொள்ள முடிந்தது.. அந்த விளக்கத்தை உள்ளேயிருந்து வந்த மகேந்திரனும்.. வித்யாவுடன் நின்று கொண்டிருந்த நரேந்திரனும் கேட்டு விட்டதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.. வித்யாவை விட அவள் வயதில் மூத்தவளென்று சௌதாமினி நினைவு படுத்தியதில் மீனலோசனி ஏதோ வேலையிருப்பதைப் போல வீட்டுக்குள் ஓடி விட்டாள்...

## 6



நதியோரம் நடந்தபோது
நிலாவெளியில் உலா வந்தோம்...
உலா வந்த அந்தப் பொழுதுகளை..
உற்றவளே..! நீ மறப்பாயா..?
-நதியோரம் நான் நடந்தபோது-

"இவங்களுக்குன்னு தான் அம்பா சமுத்திரத்தில பங்களாவை கொடுத்தாச்சே.. அப்புறமும் ஏன் நம்ம கூடவே இருந்து கடுப்பைக் கிளப்பறாங்க...?"

மாடியில் அவர்களுக்கான பிரத்யேக அறைக்குள் வந்த நரேந்திரன் எரிச்சல் பட்டான்... அவனருகே வந்த வித்யா அவனின் சட்டை பொத்தான்களை கழட்டியபடி..

"இதை அத்தையிடம் கேட்க வேண்டியதுதானே..?" என்று சிரித்தபடி கேட்டாள்...

பதிலுக்கு நரேந்திரன் சிரிக்கவில்லை.. அவளை முறைத்தான்...

"எப்படிக் கேட்பது...? என் கூடப் பிறந்த தம்பிகள்.. குடும்பத் தோடு ஏன் வீட்டை விட்டு வெளியேறலைன்னு அம்மாவிடம் என்னால் கேட்க முடியுமா..?"

"தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காக எரிச்சல் படறிங்க...?"

"அதில்லை வித்யா.. அவங்க இந்த வீட்டில் இருந்தால் இருந்துட்டுப் போகட்டும்.. அதில் எனக்கொன்னும் ஆட்சேபனை இல்லை.. ஆனா.. தினமும் உன்னையும்... என்னையும் ஜாடை பேசி வம்புக்கு இழுப்பதையே ஒரு வேலையாய் வைத்திருக்காங்களே.. அதனால்தான் எரிச்சல் வருது... பேக்டரிக்குள்ள மகி குழப்பம் பண்றான்.. வீட்டுக்குள்ளே அவன் பெண்டாட்டி எகத்தாளம் பேசறான்னா.. எப்படி பொறுத்துக்கிட்டுப் போகிறது வித்யா...? இந்த அவதிக்காகத்தானே நம்ம கல்யாணத்துக்கு முன்னாலேயே பாகம் பிரிவினை செய்தேன்...? இவங்க அதுக்கு அர்த்தமில்லாம ஆக்கிக்கிட்டு இருக்காங்களே..."

அதுதான் அவர்களின் நோக்கம்.. அது வித்யாவிற்குத் தெளிவாகப் புரிந்திருந்தது.. பேக்டரியையும்.. மணி முத்தாறு அரண்மனையையும் வித்யாவிற்கு விட்டுக் கொடுக்க.. அவனது தம்பிகளும்.. தம்பி மனைவிகளும்



தயாராக இல்லை.. பிரபாவதி பிரகாஷின் கோபத்திற்குப் பயந்து வெளிப்படையாக எதையும் பேசுவதில்லை.. மறைமுகமாய் காய் நகர்த்துவதோடு பேசாமல் இருந்து கொள்வாள்..

மீனலோசனி அப்படியிருப்பதில்லை.. வித்யா வீட்டிலிருக்கும் நேரங்களில் அந்த வீட்டிற்கு வித்யாவை உரிமையில்லாதவளாகவும்.. மீனலோசனியும்.. பிரபாவதியும் மட்டுமே உரிமைக்காரர்கள் என்றும் நிலை நாட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டாள்...

வித்யா வேலையாள்களிடம் வேலை சொன்னால் உடனே அதே வேலையாளிடம் மீனலோசனி வேலை சொல்வாள்.. யார் சொல்வதைக் கேட்பது என்று அவர்கள் தடுமாறி நிற்கும் போது வித்யா பெருந்தன்மையாக விட்டுக் கொடுத்து விடுவாள்...

"பரவாயில்லை சண்முகம்.. இதை அப்புறமாகச் செய்துக்கலாம்..." என்று சொல்லி விடுவாள்..

அந்த வார்த்தைகளைக் கேட்பதும் அந்த சண்முகத்தின் முகத்தில் பரவும் நிம்மதியில் வித்யாவின் மனம் வலிக்கும்...

சின்னச் சின்ன உரிமைப் பிரச்னைகளில் வீட்டு வேலையாள்கள் சிக்கித் திணருவதா...?

இதை நரேந்திரனிடம் அவளால் கொண்டு போக முடியாது.. அவன் கோபக்காரன்.. வித்யாவின் மேல் சிறு துரும்பு பட்டாலும் பொறுத்துக் கொள்ள மாட்டான்..

உடனடியாக தம்பிகளின் குடும்பங்களை வெளியேற்றி விட்டுத்தான் வேறு வேலையைப் பார்ப்பான்..

அதில் சௌதமினிக்கு உடன்பாடில்லை என்பதை வித்யா தெளிவாக கணித்து வைத்திருந்தாள்...

சௌதாமினியின் தாய் மனம் அதைத் தாங்காது.. அதிலும் அவள் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவள்.. சுற்றிலும் பலர் இருக்க.. கலகலப்பான சூழ்நிலையில் பிறந்து.. வளர்ந்து.. வாழ்க்கைப்பட்டு.. வாழ்ந்து பார்த்தவள்.. வீடு முழுவதும் வேலையாள்கள் 'ஜே ஜே' வென்று இருக்கலாம்.. அது பெற்ற பிள்ளைகளுக்கும்... மருமகள்களுக்கும்.. பேரக்குழந்தைகளுக்கும் ஈடாகுமா...?

அதிலும்.. மீனலோசனி சௌதாமினியின் கூடப் பிறந்த அண்ணனின் மகள்.. பிரபாவதியோ.. நரேந்திரனின் தந்தையான ராஜேந்திர பூபதியின் கூடப் பிறந்த தங்கையின் மகள்.. கூடுதலாக பூர்ணிமாவின் நாத்தனார் வேறு...

இந்த நிலையில் அந்த இரண்டு மருமகள்களையும் வீட்டை விட்டுத் தனிக்குடித்தனத்திற்கு அனுப்ப சௌதாமினியால் முடியுமா...?

மகேந்திரனின் குழந்தைகளான அரவிந்தனையும்.. பூஜாவையும்.. யுகேந்திரனின் குழந்தையான காமினியையும் தினமும் தூக்கி மடியில் போட்டுக் கொஞ்சாமலிருக்க அவளால் முடியுமா...?

அதனாலேயே சௌதாமினி மகன்களை தனியே அனுப்புவதைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை..



பேக்டரியையும்.. மில்லையும் அதைப் போலவே செய்துவிட வேண்டுமென்று மகேந்திரனும்.. யுகேந்திரனும் திட்டம் போட்டார்கள்.. அது நடக்கவில்லை....

பாகப் பிரிவினை நடந்து முடிந்த மறுநாளில் வழக்கம் போல மகேந்திரன் பேக்டரிக்குப் போன போது... அவனின் கேபின் கதவு மூடப்பட்டு பூட்டுத் தொங்கியது...

"குகன்..." கோபத்துடன் இரைந்தான் மகேந்திரன் குகன் மெதுவாக ஆடி அசைந்து வந்தான்...

"என்ன சார்...?"

"வாட் இஸ் திங்...?"

மூடப்பட்டக் கதவைக் காட்டி மகேந்திரன் கொந்தளித்தான்... குகன் நிதானமாக.. பூட்டைத் தூக்கிப் பார்த்து விட்டு...

"இது பூட்டு சார்..." என்று விளக்கம் சொன்னான்..

"ஏய்ய்...!" ஒற்றை விரலை உயர்த்தி மகேந்திரன் கர்ஜித்ததிற்கு குகன் அலட்டிக் கொள்ளவே இல்லை..

போடா.. நீயுமாச்சு.. உன் கோபமாச்சு.. என்ற ரீதியில் முகத்தில் சலனமில்லாமல் மகேந்திரனையே பார்த்துக் கொண்டிருந்தான்..

"இது யார் செய்த வேலை...?"

"நான் செய்த வேலையில்லை சார்... எம்.டி செய்த வேலை.."

"என்னது...?!"

கொதிப்புடன் அவன் நரேந்திரனைத் தேடிப் போன போது.. அவனும் சுரேந்திரனும் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்... சுரேந்திரனின் முகம் இறுகியிருந்தது..

"என் ரூமை யார் பூட்டியது..?" மகேந்திரன் கவனமாக 'அண்ணா' என்ற வார்த்தையைத் தவிர்த்து விட்டு மொட்டையாகக் கேட்டான்...

"ஏன்.. நான்தான் பூட்டினேன்...?" நிதானமாக பதில் சொன்னான் நரேந்திரன்..

"யாரைக் கேட்டுப் பூட்டினீங்க...?"

"யாரைக் கேட்கணும்..? சுரேந்திரனை மட்டும்தான் நான் கேட்கனும்.. அவன்தான் இந்த யோசனையையே சொன்னான்.."

"உனக்கு எவ்வளவு தைரியமிருந்தா இப்படியொரு வேலையைச் செய்ய யோசனை சொல்லியிருப்ப..?" மகேந்திரன் சுரேந்திரனின் மீது பாய்ந்தான்..

"சும்மா குதிக்காதீங்க அண்ணா.. முதலில் நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்க.. உங்களுக்கு பேக்டரியில என்ன வேலை...?" சுரேந்திரன் அழுத்தம் திருத்தமாக கேட்டான்...

"அது.. அது..." மகேந்திரனுக்கு பேச்சு வரவில்லை..

"என்ன.. அது அதுன்னு ராகம் போடறிங்க...? பேக்டரிக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்..? இது எனக்கும்.. பெரியண்ணனுக்கும் உரிமையானது.. இங்கே உங்களுக்கும் யுகே அண்ணனுக்கும் உரிமையில்லை..."



"டேய்.. நேற்று வரை இந்த பேக்டரியின் ஜெனரல் மேனேஜரா நான் இருந்தவண்டா.."

"அந்தக் கொடுமையைத்தான் இந்தக் கணக்கு வழக்கு சொல்லுதே.. ஏன்னா.. உங்களுக்கெல்லாம் மனச்சாட்சியே கிடையாதா...? இது நம்ம வீட்டு சொத்துக்கிற நினைப்பு உங்க மனசில இருந்திருந்தா.. இந்த அளவுக்கு நீங்க கொள்ளையடிச்சிருப்பீங்களா...? ஊரான் வீட்டுச் சொத்தை வாரிச்சுருட்டிக்கிட்டு ஓடுகிறவங்க செய்த வேலையைப் போலயில்ல செய்து வைத்திருக்கீங்க.. இதே நிலைமை கன்டினியூ ஆகியிருந்தா பேக்டரி திவாலாகியிருக்கும்..."

சுரேந்திரன் எதைக் கேட்டாலும் நேருக்கு நேராய்த்தான் கேட்பான்.. நரேந்திரனைப் போல முகத்தாட்சண்யம் பார்க்க மாட்டான்.. அவனின் அதிரடிக் கேள்விகளில் அரண்டு போன மகேந்திரன்..

"என்னை மட்டும் கேட்கறியே.. போய் மில்லை கொள்ளையடிச்சுக்கிட்டு இருக்கிற யுகேந்திரனைக் கேளு.." என்று சொல்லி விட்டான்...

"வெரி குட்.. ராஜா ராஜேந்திர பூபதியோட இரண்டு மகன்களும்.. அவர் கட்டிக் காப்பாத்தின சொத்துக்களை ஆளுக்கு பாதியாக பிரித்துக் கொண்டு கொள்ளையடிக்கிறாங்க.. இதை வெளியில் சொல்லி விடாதீங்க.. நம்ம வம்சப் பெருமை கொடிகட்டிப் பறந்திடும்.. ஆமாம்.. தெரியாமல்தான் கேட்கிறேன்.. உங்களுக்கும்.. யுகே அண்ணனுக்கும் உழைத்துப் பிழைப்பதில் விருப்பமே இல்லையா..? அடுத்தவர்களின்

உழைப்பைச் சுரண்டி.. சுருட்டி.. கொள்ளையடித்து.. அதில் உட்கார்ந்து சாப்பிடத்தான் விருப்பமா..? எப்படியண்ணா...? நாம ஆறு பேரும்.. ஒரே தாயின் வயிற்றில்தானே பிறந்தோம்..? எங்க உடம்பில் மட்டும் நேர்மையாய் உழைத்துப் பிழைக்கும் ரத்தம் ஓடுது.. உங்க இரண்டு பேரின் உடம்பில் மட்டும்.. ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் ரத்தம் ஓடுதுன்னா என்னால நம்பவே முடியலையே..."

"சுரேன்.. நீ அதிகமாய் பேசற.."

"நீங்க செய்து வைத்திருக்கிற வேலைகளுக்கு நான் பேசுவது ரொம்பவும் குறைச்சல்.. யுகே அண்ணனை நான் ஏன் கேள்வி கேட்கணும்..? அது உங்க சொத்து.. நீங்களும் அவரும்தான் மில்லுக்கு சொந்தக்காரங்க.. நீங்கதான் போய் கேள்வி கேட்கனும்.. இது எங்க பேக்டரி.. இதில எனக்கும்.. பெரிய அண்ணனுக்கும் மட்டும்தான் உரிமையிருக்கு.. இங்கே கேள்வி கேட்க நீங்க வராதீங்க.. கெட் அவுட்.."

நரேந்திரனே.. சுரேந்திரன் 'கெட் அவுட்' என்று மகேந்திரனைப் பார்த்துச் சொல்லுவான் என்பதை எதிர்பார்க்கவில்லை.. சூழ்ந்திருந்த தொழிலாளர்களின் மத்தியிலே அந்த வார்த்தையை சுரேந்திரன் சொல்லி விடவும் மகேந்திரனின் முகம் பேயறைந்ததைப் போல ஆகிவிட்டது.. அவன் அவமானத்தில் முகம் சிறுத்துப் போனவனாக பேக்டரியை விட்டு வெளியேறி விட்டான்...

"இந்த அளவுக்குப் பேசியிருக்கனுமா..?" நரேந்திரனுக்கு மனம் தாங்கவில்லை...



"கத்தியெடுக்காமல் ஆப்பரேசனை பண்ண முடியாதுண்ணா.." சுரேந்திரன் தெளிவான முகத்துடன் புன்னகைத்தான்...

## 7

நதியோரம் நடந்த போது...
நாணலாக நாணம் கொண்டாய்...
வளைத்துப் பார்க்க முடியாமல்
தென்னையாக நிமிர்ந்து நின்றாய்...
-நதியோரம் நான் நடந்த போது-

"இப்படிப் பேசலைன்னா அவர் எந்தக் காலத்திலயும் பேக்டரியை விட்டுப் போகமாட்டார்.. எனக்கு அவரைத் தெரியும்.." அழுத்தமான குரலில் சொன்னான் சுரேந்திரன்..

அதற்கு மேல் அதைப் பற்றி அவர்கள் இருவருமே பேசிக் கொள்ளவில்லை.. மாலையில் வீடு திரும்பிய போது.. எரிதணலாய் சுரேந்திரனை எதிர்கெண்டாள் மீனலோசனி..

"எப்படி என் ஹஸ்பெண்டைப் பார்த்து அப்படிப்பட்ட வார்த்தையை நீங்க பேசலாம்...?" அவள் சீறினாள்...

"நான் பேசுகிறதைப் போல அவர் ஏன் நடந்து கொண்டார்...? அதை முதலில் கேளுங்கண்ணி.." அலட்டிக் கொள்ளாமல் பதில் சொன்னான் சுரேந்திரன்..

"எப்படி நடந்துக்கிட்டார்...? இத்தனை நாளாய் அவர் கட்டிக் காப்பாற்றிய பேக்டரியின் மேல் இருக்கிற பாசத்தில அங்கே வந்தார்.. ஏன் அவர் அங்கே வரக் கூடாதா...? அவருக்கு அந்த உரிமை இல்லையா...?" கொதித்தாள் மீனலோசனி..

"கட்டிக் காப்பாற்றினாரா...? அவரா...? பேக்டரியையா...? சும்மாயிருங்க அண்ணி.. அப்புறம் ஏதாவது சொல்லிடப் போறேன்.." சுரேந்திரனுக்கு எரிச்சல் வந்து விட்டது..

"சொல்லுவீங்களோ.." எரிப்பதைப் போல பார்த்தாள் மீனலோசனி

"ஆமாம்.. சொல்லுவேன்..." சுரேந்திரன் வெடித்தான்..

"என்ன சொல்வீங்க...?" சவால் விட்டாள் மீனலோசனி..

"அவருக்கு பேக்டரியில் என்ன உரிமையிருக்கு...? அதுதான் பாகப் பிரிவினையை செய்தாகிவிட்டதே.. அந்த பாகப் பிரிவினையையும் அவர்தானே கேட்டார்...? கேட்டவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டு விலகி விட வேண்டும்தானே...?"

"எல்லாத்தையும் விட்டுக் கொடுத்திட்டு விலகிவிட அவர் என்ன உங்களைப் போல சொகுசாக வெளிநாட்டில் படித்துக் கொண்டிருந்தாரா...? பேக்டரியில் உழைத்துக் கொண்டிருந்தார்..."

"நான் சொகுசாய் படித்தது என் பங்கு வருமானத்தில்தான்... உங்க ஹஸ்பெண்டின் உழைப்பில்



வந்த வருமானத்தில் இல்லை.. நான் படிக்கத்தான் செய்தேன்.. அனாமத்து கணக்கை எழுதி நீலாங்கரையில் பங்களைக்களை வாங்கிப் போடலை.."

சரியான இடத்தில் சுரேந்திரன் அடித்து விட... மீனலோசனிக்கு பேச வாய் வரவில்லை.. அவளைப் பார்க்கப் பிடிக்காமல் சௌதாமைனியைப் பார்த்தான் சுரேந்திரன்..

"இதுக்கு என்னதாம்மா முடிவு...? பாகப் பிரிவினைன்னு ஆன பின்னாலே.. அவங்கவங்க அவங்கவங்க இடத்தில் இருந்தால்தான் வேலையும் நடக்கும்.. சொத்தும் நிலைக்கும்.."

சௌதாமினி எதையோ பேச வாய்திறக்க.. மீனலோசனி முந்திக் கொண்டாள்..

"நடந்த பாகப்பிரிவினை நியாயமாய் நடக்க வில்லையே அத்தை..."

"மில்லையும்.. பேக்டரியையும் சமமாக பிரித்துக் கொடுத்திருக்கிறார் பெரியண்ணா.. இதில் அநியாயம் எங்கிருந்தும்மா வந்தது...?"

"பேக்டரியில் என் ஹஸ்பெண்ட் உழைத்தார்.. மில்லில் சின்னவர் உழைத்தார்.. அவங்கவங்க உழைத்த இடத்தை அவங்களுக்கு கொடுப்பதுதான் நியாயம்ன்னு சொல்லுங்க அத்தை.."

"ஓ... கதை அப்படிப் போகிறதா...? அனாமத்தில் வாழ்ந்தவர்களுக்கு உழைத்துப் பிழைக்க எண்ணமில்லை போல.. அம்மா.. நீங்கள் பெற்றது நான்கு மகன்களையும்

இரண்டு மகள்களையும்.. அவங்க இரண்டு பேரை மட்டுமில்லை.. சொல்லி வையுங்கம்மா.. மில்லையும் பேக்டரியையும் ஒட்டு மொத்தமாக இவங்க இரண்டு பேருக்கும் தாரை வார்த்துக் கொடுத்துட்டு.. நானும் பெரியண்ணனும் உடுத்தியிருக்கிற உடையோடு வெளியேறி விட வேண்டுமா..? நீங்க அதைத்தான் எதிர்பார்க்கறிங்களாம்மா...?"

சுரேந்திரனுக்கு கண்கள் சிவந்து விட்டன... அன்று பேக்டரிக்கு போகாமல் வீட்டிலேயே தங்கி விட்ட வித்யா மாடியிலிருந்து அப்போதுதான் இறங்கி வந்தாள்.. எதற்காக சுரேந்திரன் அந்த அளவிற்கு கோபப்படுகிறான் என்ற புரியாதவளாய் நரேந்திரனின் முகம் பார்த்தாள்.. அவன் இமைமூடி அவளிடம் அப்புறம் சொல்வதாக கண்சமிக்ஞை செய்தான்...

"மீனா என்னம்மா இது...?" சௌதாமினி கைகளைப் பிசைந்தாள்...

"நடந்திருக்கிற பாகப் பிரிவினையிலே எங்களுக்கு உடன்பாடில்லை அத்தை..." மீனலோசனி புருவங்களை நெரித்தாள்...

"நரேன்..." சௌதாமினி பெரிய மகனை சரணடைந்தாள்..

அதுவரை பொறுமையாக நின்று கொண்டிருந்த நரேந்திரன் மனைவியை முடுக்கி விட்டுவிட்டு.. ஏதுமறியாதவனைப் போல அவள் பின்னால் மறைந்திருந்த மகேந்திரனைப் பார்த்தான் ..



வேடிக்கை பார்ப்பதைப் போல.. என்ன நிகழப் போகிறது என்ற எதிர்பார்ப்பை விழிகளில் தேக்கியபடி நின்றிருந்த பிரபாவதியையும் யுகேந்திரனையும் பார்த்தான்.. வளர்ந்து விட்ட மகன்களைக் கட்டுப்படுத்தும் வழியறியாதவளாய் கைகளைப் பிசைந்து கொண்டிருந்த தாயைப் பார்த்தான்..

"அவங்களுக்கு உடன்பாடு இருக்கிறதா.. இல்லையாங்கிறதைப் பற்றி எனக்குக் கவலையில்லைம்மா.. அப்பா என் பெயருக்கு பேக்டரியையும்.. மில்லையும் மாற்றியபோது அதை கிரயப்பத்திரமாகத்தான் மாற்றினார்.. இதை மத்தவங்க நினைவில் வைத்துக்கிறது நல்லது..."

"அப்படின்னா..?" வெகுண்டு முன்னே வந்தான் மகேந்திரன்..

மீனலோசனி நரேந்திரனிடம் பேச மாட்டாள் என்று இல்லை.. அவள் பேசத் தயங்குகிறவள் இல்லைதான்.. ஆனால்.. என்று அவள் மகேந்திரனின் மனைவியாக அந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தாளோ.. அன்றிலிருந்தே நரேந்திரன் அவள் முகத்தைக் கூட ஏறிட்டுப் பார்த்ததில்லை.. அவளுடன் அவன் பேசவே மாட்டான்.. அது மீனலோசனிக்கு பெருத்த அவமானமாக இருந்தது.. அதனாலேயே அவள் மகேந்திரனை தமையனுக்கு எதிராகச் செயல்படும்படி தூண்டி விட்டுக் கொண்டேயிருந்தாள்...

மனைவியின் பின்னாலிருந்து முன்னால் வந்த மகேந்திரனை இகழ்ச்சியாகப் பார்த்தான் நரேந்திரன்..

"அப்படின்னா.. மில்லை நான் உங்க இரண்டு பேருக்கும் தந்தது.. உங்களுக்கும் அதில உரிமையிருக்கிறது என்ற அர்த்தத்தில் இல்லை.. போனாப் போகுது.. கூடப் பிறந்து தொலைத்துட்டாங்களே.. அவங்களும் பிழைத்துப் போகட்டும் என்ற எண்ணத்தில்தான்னு அர்த்தம்..."

"அண்ணா..."

"கத்தாதே மகி.. உனக்கு வேணும்கிறதை கேட்டு வாங்க உனக்கு எந்த வித உரிமையுமில்லை.. நீ நினைக்கிறதைப் போல எங்களுக்கு எது வேணும்கிறதை முடிவு பண்ண எனக்கும் சுரேனுக்கும் உரிமையிருக்கு.. இன்னும் சொல்லப் போனா.. எங்களுக்குத்தான் அதிக உரிமையிருக்கு.."

"நீங்க உழைத்தாய் சொல்லிக்கிறிங்க.."

"சொல்லலை.. உழைத்தேன்.. அது இந்த உலகத்திற்கே தெரியும்.."

"ஓகே.. உழைத்தீங்கன்னே வைச்சுக்குவோம்.."

"வைத்துக்காதே.. உழைத்தேன்.. மில்லையும்.. பேக்டரியையும் கடனில் மூழ்கி விடாம காப்பாற்றினேன்.."

"இதையே எத்தனைதரம்தான் சொல்லுவீங்க...?"

"வாழ்க்கை முழுவதும் சொல்வேன்.. அப்படியாவது உன் தலையிலேயும்.. இங்கே இருக்கிற மத்தவங்க தலையிலேயும் அது ஏறுகிறதான்னு பார்ப்போம்.."

"காலம் பூராவும் இந்தப் பேச்சை நாங்க கேட்டுத்தான் ஆகனுமா..?"



"கேட்காதே.. வெளியே போய் விடு..."

"என்னது..? வெளியே போவதா..? எங்கே..?"

"உனக்குன்னு பாகம் பிரித்த உன் அம்பாசமுத்திர பங்களா இருக்கில்ல.. அங்கே போ.."

நரேந்திரன் பட்டென்று சொல்லி விட.. மகேந்திரன் ஆடிப்போய் விட்டான்.. யுகேந்திரன் எதையோ பேச வாயெடுத்தவன் அந்த வார்த்தைகளைக் கேட்டதும் வாயை இறுக மூடிக் கொண்டு விட்டான்.. மகேந்திரனும்.. யுகேந்திரனும்.. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

'இவன் வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருந்திருக்கலாம்..' யுகேந்திரனுக்கு கோபம் வந்தது..

அவனும்.. மகேந்திரனும்.. அவர்களுக்கென்று கொடுக்கப்பட்டிருந்த பங்களாக்களை வாடகைக்கு விட்டிருந்தார்கள்.. மகேந்திரனை மணி முத்தாறு வீட்டை விட்டுப் போகச் சொல்லி வார்த்தை வந்து விட்டது.. அந்த வார்த்தை யுகேந்திரனுக்கும் தானே...? மகேந்திரன் வீட்டை விட்டுப் போக வேண்டி வந்தால் யுகேந்திரனும் வெளியேறித்தானே ஆக வேண்டும்...?

"என்ன மகி.. பேசாம இருக்கிற...? பாகம் பிரித்துட்டால் மட்டும் போதாது.. அவங்கவங்க பங்கில இருந்து வாழப் பழகிக்கனும்.. இத்தனை நாளாய் நீயும்.. யுகேயும் உங்க வீடுகளுக்குத் தானாகவே குடித்தனம் போய் விடுவீங்கன்னு எதிர்பார்த்தேன்.. நீங்க செய்யலை..."

"பூர்ணிமாவின் கல்யாணம் வந்திருச்சுன்னு அம்மாதான் சொன்னாங்க.."

மகேந்திரன் சாமர்த்தியமாக சௌதாமினியின் பக்கமாக காயை நகர்த்தி விட்டான்.. பெற்றவளிடம் ஓங்கிப் பேச நரேந்திரன் யோசிப்பான் என்பது அவனுக்குத் தெரிந்ததுதானே... ஆனால் நரேந்திரன் சௌதாமினியின் பக்கம் திரும்பவே இல்லை.. அவன் புருவங்கள் மேலேற.. மகேந்திரனிடமே தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்..

"பூரணியின் கல்யாணத்திற்கும்.. நீங்க தனிக்குடித்தனம் போகிறதுக்கும் என்ன சம்பந்தம்..?"

"வீட்டுக்கு வருகிற உறவுக்காரங்க.. என்னையும்.. யுகேயையும் எங்கேன்று கேட்பாங்கன்னு அம்மா சொல்லிட்டாங்க..."

"கேட்டால் என்ன..? பாகப்பிரிவினை செய்தாகி விட்டது.. தனிக்குடித்தனம் போயாச்சுன்னு சொல்ல வேண்டியது தானே.."

"ராஜா ராஜேந்திர பூபதியோட வாரிசுகள் ஆளுக்கொரு பக்கமாய் சிதறிப் போயிட்டாங்கன்னு ஊர் சொல்லனுமான்னு அம்மா கேட்டாங்க.."

சௌதாமினி அப்படியெல்லாம் கேட்கவில்லை.. பெரிய மகனின் அமைதியை மட்டுமே அவள் நினைத்தாள்.. வேறு எதையும் நினைக்கவில்லை.. அவள் நினைக்காததை யெல்லாம் அப்போது நினைக்க வைத்து விட்டான் மகேந்திரன்.. கணவரின் பெயரைக் கேட்டதும் சௌதாமினியின் இமைகள் துடித்ததை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டான்..



அவனின் யுக்திகளில் நரேந்திரன் பல்லைக் கடித்தான்.. "அந்த ராஜா ராஜேந்திர பூபதியோட இரண்டு மகன்கள் தான் பாகப்பிரிவினைக்கு மாமனார் வீட்டை வரவழைத்திருந்தாங்கன்னு அம்மாவுக்குத் தெரியாதா...? அதை ஊர் பேசும்ன்னு அந்த இரண்டு மகன்களுக்குத்தான் தெரியாதா...?"

சௌதாமினியின் துடித்த இமைகள் சரியாகி விட.. மகேந்திரன் வெற்றிகரமாக தோல்வியைத் தழுவினான்.. 'என்னடா இது.. இவன் வீட்டை விட்டும் வெளியேற்றி விடுவான் போல இருக்கே...' கவலையுடன் மனைவியைப் பார்த்தான்..

அவள் முகத்தில் எள்ளும்.. கொள்ளும் வெடித்தன..

## 8

நதியோரம் நடந்த போது...
நதிநீரின் சுழல் கண்டேன்...
சிந்தா நதிச் சுழலிலே..
சிக்கிக் கொண்டேன்.. இனி என்ன ஆவேன்..?
-நதியோரம் நான் நடந்தபோது-

மீனலோசனிக்கும் சரி.. பிரபாவதிக்கும் சரி.. மணி முத்தாறு அரண்மனையை விட்டு வெளியேறு வதில் துளிக்கூட விருப்பமில்லை.. என்னதான்

அம்பாசமுத்திரத்தில் அவர்களுக்கென்று கொடுக்கப்பட்டிருந்த பங்களாக்கள் ஆடம்பரமானதாகவும், அழகாகவும் இருந்தாலும்.. அவை மணிமுத்தாறு அரண்மனையின் காம்பவுண்டு கேட்டிற்குப் பக்கத்தில் கூட நிற்க முடியாது என்பதை அவர்கள் நன்றாகவே அறிவார்கள்..

இவ்வளவு ஏன்...? மகேந்திரனும் சரி... யுகேந்திரனும் சரி.. சென்னையில் ஆளுக்கு இரண்டு பங்களாக்களை வளைத்துப் போட்டிருந்தார்கள்.. அங்கே குடியேறச் சொன்னாலும்.. அவர்களின் மனைவிகள் இசைந்து கொடுக்க மாட்டார்கள்..

மணி முத்தாறு அரண்மனையும் அதன் வாழ்க்கை முறையும் அவ்வளவு பிரசித்தி வாய்ந்தது..

பல ஏக்கர் பரப்பளவில்.. சுற்றிலும் பூங்காக்களும்.. நீச்சல் குளமும் அமைந்திருக்க.. நடுவில் வெண் பளிங்குக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்த அரண்மனை அது..

அங்கே வேலை செய்தவர்களுக்கு அந்த ராஜ குலத்தவரின் பரம்பரைப் பெருமையைப் பற்றி நன்றாகவே தெரியும்.. அவர்கள் அந்த அரண்மனையில் வேலை செய்வதில் பெருமைப்படுகிறவர்கள்..

சென்னையிலும்.. அம்பாசமுத்திரத்திலும்.. அந்தப் பரம்பரைப் பெருமையை எதிர்பார்த்து விட முடியாது...

"இந்தா பாரும்மே.. வேலைக்காரின்னா உனக்கு அம்புட்டு இளக்காரமா பூடுச்சா.. மரியாதையாய் பேசிப் பழகு.." என்று அவர்களுக்கே பழக்க வழக்கத்தைக் கற்றுக் கொடுத்து விடுவார்கள் சென்னை வாசி வேலையாள்கள்..

"உன் ஒரு விடுதான் அபூர்பமா..? வேலைக்கு ஆள் வேணும்னு தன்னாலே ஜனங்க அல்லாடிக்கிட்டு கிடக்குது.. இஷ்டம்ன்னா வேலைக்கு வரேன்.. இல்லேன்னா வேற வீட்டைப் பார்த்துக்கறேன்.. நீயும் வேற ஆளைப் பார்த்துக்க.." என்று அன்றே கணக்கை முடித்துக் கொண்டு இடத்தை காலி செய்து விடுவார்கள் அம்பாசமத்திர வேலையாள்கள்..



அவர்களிடம் மணி முத்தாறு அரண்மனையில் வேலை செய்யும் வேலையாள்கள் தரும் மரியாதையையும்.. பணிவையும் எதிர்பார்த்து விட முடியாது..

அரண்மனைக்கு ராணியாக.. பளிங்கு மாளிகையில் வாழ்வது எப்படி...? சாதாரண பங்களாவில் பத்தோடு பதினொன்றாக வாழ்வது எப்படி...?

அதற்காகவா.. மீனலோசனியும்.. பிரபாவதியும்.. தவமாய் தவமிருந்து.. மணி முத்தாறு அரண்மனையின் வாரிசுகளின் மனதில் இடம் பிடித்து... அந்த அரண்மனையின் மருமகள்களாக வந்தார்கள்...?

மீனலோசனி பல்லைக் கடித்தாள்.. பிரபாவதி புருவங்களை நெறித்தாள்.. மனைவிகளின் மௌன யுத்தத்தை தாங்க முடியாதவர்களாக.. மகேந்திரனும்.. யுகேந்திரனும்.. சௌதாமினியிடம் முறையிட்டார்கள்..

"என்னம்மா.. நீங்க நடக்கிறதையெல்லாம் பார்த்துக்கிட்டும்.. கேட்டுக்கிட்டும் பேசாம இருக்கீங்க..?"

"என்ன பேச மகி..? உன் அண்ணன் சொல்வதும் நியாயம்தானே...?"

"அந்த நியாயம் மகி அண்ணனுக்கு மட்டும்தானா அம்மா...? சுரேனுக்கு இல்லையா...?"

"அவனுக்கு கல்யாணம் ஆகவில்லை யுகே.. அதை நினைப்பில வைக்காம பேசினா எப்படி...?" சௌதாமினிக்கு சுர்ரென்று கோபம் வந்து விட்டது..

"தெரியும்மா.. உங்களுக்கு சின்ன மகன்தான் செல்லமகன்.. நானும்.. மகியண்ணாவும் தத்து மகன்கள்.. மகியண்ணா.. நீ உன் குடும்பத்துடன் கிளம்பு.. பிரபா.. நம்ம சாமான்களை பேக் பண்ணு.. நாமும் கிளம்புவோம்.. இது அப்பா வாழ்ந்த வீடு.. இந்த வீட்டில் அவர் பெற்ற பிள்ளைகளுக்கு மத்தியிலேயே பாரபட்சம் வந்து விட்டது.. அவர் வாழ்ந்த வீட்டிலேயே கடைசி வரைக்கும் நாமளும் வாழலாம்ன்னு நினைச்சோம் பர்ரு... அது நடக்காது போல.. நீ கிளம்பு.."

இதைச் சொன்ன யுகேந்திரனும் அசையவில்லை.. அதைக் கேட்டுக் கொண்டிருந்த மகேந்திரனும் அசையவில்லை.. அவர்களே அப்படியெனும் போது.. அவர்கள் தாலி கட்டிய மனைவிகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. யாருக்கு வந்த விருந்தோ என்பதைப் போல.. அவர்கள் கைவிரல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்..

சௌதாமினிக்கு மனம் தாளவில்லை.. அவள் பெற்ற பிள்ளைகள் தனிக்குடித்தனம் போவதா...? அதை அவள் பார்த்துக் கொண்டிருப்பதா...? மனம் துடிக்க பெரிய மகனை ஏறிட்டாள்..



"நரேன்..."

"அம்மா.."

"குருவிக் கூட்டைக் கலைச்சிராதேப்பா..."

நரேந்திரனுக்கு மனம் தாங்கவில்லை.. கடைசியில் எப்பேற்பட்ட வார்த்தைகளை அவனைப் பார்த்துச் சொல்லி விட்டாள் அவனைப் பெற்ற தாய்...

இதற்காகவா அவன் இத்தனை வருடமும் போராடினான்...?

"கூட்டைக் கலைச்சது நானில்லைம்மா.. அது தானாய் கலைஞ்சிருச்சு..."

"போனதை விடு நரேன்.. என் காலமிருக்கிற வரை என் பிள்ளைகள் என் கூடவே இருக்கனும்னு நான் ஆசைப்பட்றது தப்பாப்பா...?"

அது தப்பு என்று நரேந்திரனால் எப்படிச் சொல்ல முடியும்..? அவனுக்கு மட்டும்.. அவன் கூடப் பிறந்த தம்பிகளை குடும்பத்துடன் வெளியே துரத்த வேண்டுமென்ற ஆசையா...?

'ஆனால்...?' அவன் பார்வை வித்யாவின் மீது படிந்தது...

அவனின் காதல் மனைவியை அந்த வீட்டிற்கு உரிமையில்லாதவளாக மீனலோசனியும்.. பிரபாவதியும் ஆக்கி விடுவார்களே.. அதை அவனால் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா..?

‘முடியாது...’ ஒரு கணவனாக அவன் மனம் கடினமானது..

“அம்மா.. இது பாகப் பிரிவினையில் என் பங்குக்கு வந்த வீடில்லை.. அப்பா என் பெயருக்கு எழுதி வைத்தது.. இது பரம்பரை வீடாக இருக்கலாம்.. ஆனா.. ஒன்னை நீங்க எல்லோரும் நினைவில் வைத்துக்கங்க.. இந்த அரண்மனையின் பேரிலயும் பலகோடி கடன் இருந்தது..”

“நரேன்...” செளதாமினி அதிர்ச்சியாகி விட்டாள்..

“ஆமாம்மா.. இத்தனை நாளாய் இந்த உண்மையை நான் வெளியே சொல்லலை.. கடனை அடைத்து இந்த அரண்மனையை நான் மீட்டேன்.. இந்த அரண்மனையின் மேலே எனக்கு மட்டும்தான் பரிபூரணமான உரிமையிருக்கு.. குடியிருக்கிற அரண்மனை வாழ்க்கையில சொந்தம் கொண்டாடுகிறவங்க.. அந்த அரண்மனை ஒரு காலத்திலே கடனில் பறிபோக இருந்தது.. என்பதையும் தெரிஞ்சு வைச்சுக்கட்டும்.. இது என் அரண்மனை.. என்னைப் பெற்ற தாய்க்கும்.. கட்டின மனைவிக்கும்.. எனக்குப் பிறக்கப் போகிற பிள்ளைகளுக்கும் மட்டும் தான் காலம் பூராவும் இந்த அரண்மனையில் வாழ்கிற உரிமையிருக்கு... மத்தவங்க இருக்கலாம்.. அது விருந்தாளியாகத்தான்.. வீட்டுக்கு உரிமையானவங்களா இல்லை..” நரேந்திரன் முடிவாகக் கூறி விட்டான்..

சூடு.. சொரனை இருக்கிறவர்கள் என்றால் நரேந்திரனின் பேச்சைத் தாங்க முடியாமல் அந்த நொடியிலேயே வீட்டை விட்டுப் போயிருப்பார்கள்..



மீனலோசனியும்.. பிரபாவதியும்தான் அதை கிலோ என்ன விலை என்று கேட்பார்களே.. பிரபாவதி கூட கொஞ்சம் ரோசம் பார்ப்பாள்.. மீனலோசனி அசைந்தே கொடுக்க மாட்டாள்.. வெட்டி ரோசத்தை வைத்துக் கொண்டு வாழ்க்கையை ஒட்ட முடியுமா.. என்று கேட்பாள்.. அவளைப் பார்த்து பிரபாவதியும் வருகின்ற ரோசத்தை திருப்பி அனுப்பி விடுவாள்...

மகேந்திரனும்.. யுகேந்திரனும்.. ராஜா ராஜேந்திர பூபதியின் பிள்ளைகள்.. அவர்களுக்கு ‘சுரீர்’ என்றுதான் இருந்தது.. சொந்த வீடாக நேற்று வரை இருந்த வீட்டில்.. இன்று முதல் நீ விருந்தாளியாகத்தான் இருந்தாக வேண்டும் என்றால் எந்த மகன்தான் கேட்டுக் கொள்வான்..

‘கிளம்பு...’ என்று சொல்லத்தான் இருவரும் அவரவரின் மனைவிகளின் முகம் பார்த்தார்கள்.. அதில் தெரிந்த கடுமையில் சொல்ல நினைத்த வார்த்தை.. சொல்லாமலே தொண்டைக் குழிக்குள் நின்று போய் விட்டது..

“அப்படியே.. நாடகம் பார்ப்பதைப் போலவே இருக்கு..” சுரேந்திரன் தோள்களைக் குலுக்கினான்...

நரேந்திரனுக்கு சிரிப்பு வந்தது.. ஆனால் சிரிக்கவில்லை..

“உலகமே நாடக மேடைன்னு சும்மாவே அறிஞர் அண்ணா சொன்னார்...?” தாயைப் பார்த்துக் கேட்டான் சுரேந்திரன்..

நரேந்திரனைப் போல சௌதாமினியால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை.. அவள் வாய் விட்டுச் சிரித்தபடி இளைய மகனின் காதைப் பிடித்துத் திருகினாள்..

"இதையெல்லாம் எங்கேயிருந்துடா பிடிப்ப...?"

"படிச்சதில் இருந்து பிடித்ததுதான்.. எப்படியோ.. பாகப்பிரிவினையில் கிடைத்த வீட்டிற்கு இவங்க இரண்டு பேரும் குடித்தனம் போகப் போறதில்லை..."

"உன் கல்யாணம் இருக்குடா சுரேன்.."

"எங்கேம்மா.. இருக்கு.. வாசலிலா...?"

"போடா போக்கிரி.. உனக்குப் பெண் கொடுக்க வருகிறவங்க.. நம்ம அரண்மனையின் ஒற்றுமையைத்தான் பார்க்கணும்.."

"அது பொய்யான ஒற்றுமைம்மா.. எங்க மனதுக்குள்ள வேற்றுமை ஆரம்பித்து வெகு காலமாகி விட்டது.."

"யார் வீட்டில்தான் பிரச்னை இல்லை...? வீட்டுக்கு வீடு வாசல்படிதான் சுரேன்.."

"இது வீடில்லைம்மா.. அரண்மனை.."

"உன் கல்யாணம் முடிகிற வரை குடும்பம் உடைய வேண்டாம்.. சுரேன்.."

"அது குடும்பத்தோட நிற்கட்டும்.. பேக்டரிபக்கம் வந்துவிடக் கூடாது.. எனக்கென்ன போச்சு.. தினம்தினம் இந்த நாடகங்களைப் பார்க்க வேண்டிய தலைவிதி



எனக்கில்லை.. நான் அடுத்த வாரமே பாரினுக்குப் போறேன்.."

"எதுக்குடா....?"

"விட்ட படிப்பை முடிக்கத்தான்.. இங்கே என் சார்பா பெரியண்ணனும்.. பெரியண்ணியும் பேக்டரியைப் பார்த்துக்குவாங்க.. அதை மீறி பேக்டரியில் யாராவது கால் வைத்தாங்கன்னு வையுங்க.. சும்மாயிருக்க மாட்டேன்.. சொல்லிட்டேன்.. எனக்கு என் பங்கு சொத்து முக்கியம்.. நான் பெரியண்ணனைப் போல தியாகியில்லை.."

"என்னடா சுரேன் இப்படிப் போசற...?"

"இவங்க இரண்டு பேரும் தெளிவானவங்கம்மா.. பாகப்பிரிவினையில வந்த வீட்டை உடனடியா கைப்பற்றி வாடகைக்கும் விட்டுட்டாங்க.. ஆனா.. பெரியண்ணனின் பங்கான இந்த அரண்மனையை விட்டு வெளியே போக மாட்டேங்கிறாங்க.. இது என் பங்குக்கு வந்திருக்கணும்.. அப்போத் தெரியும்... இந்த சுரேந்திரன் யாருன்னு..."

# 9

நதியோரம் நடந்த போது
வாழ்க்கையைத்தான் நான் நினைத்தேன்..
நாடகமாய் வாழ்க்கை ஆனால்..
வாழ்வது எப்படியென்று யோசித்தேன்..
-நதியோரம் நான் நடந்த போது-

'நல்ல வேளை...!'

மீனலோசனி நினைத்துக் கொண்டாள்... சுரேந்திரனின் பங்குக்கு மட்டும் அரண்மனை வந்திருந்தால்...?

"நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்குது பிரபா.."

மறுநாள் விடியலில் பிரபாவதியிடம் சொன்னாள்..

"நினைக்காதீங்க.. அந்த அளவுக் கெல்லாம் எனக்குத் துணிச்சலில்லை.. அவன் கைக்கு அரண்மனை போயிருந்தால் அவ்வளவுதான்.. உங்களுக்கும்.. எனக்கும்.. இந்த மணிமுத்தாறு அரண்மனையில் வாழ்ந்த நாள்கள்.. மலரும் நினைவுகளாக ஆகியிருக்கும்..."

"அதைச் சொல்லு..."

"எந்தக் கடவுளின் புண்ணியமோ இது பெரியவரின் கைக்கு வந்தது..."



"நம்ம கைக்கு வரலியே..."

மீனலோசனி வயிறெரிந்தாள்.. உனக்கு அந்த ஆசை வேறு மனதில் இருக்கிறதா என்று பிரபாவதி மனதில் நினைத்துக் கொண்டாள்.. எது எப்படியோ.. சுரேந்திரன் என்னதான் நறுக்கென்று மனதில் தைக்கிறதைப் போலக் கேட்டாலும்.. வயதில் சின்னவன் இப்படிக் கேட்டு விட்டானேயென்று வீட்டை விட்டு வெளியில் கிளம்ப.. மீனலோசனியும்.. பிரபாவதியும் தயாராக இல்லை..

"இவனென்ன சொல்வது.. நாமென்ன கிளம்புவது.." என்று பிரபாவதியிடம் கேட்டாள் மீனலோசனி..

"அதானே..." என்ற பிரபாவதி அத்துடன் நிறுத்தாமல்

"இதை அவனிடமே சொல்லியிருக்கலாமேக்கா..." என்று வேறு சேர்த்து கேட்டு வைத்தாள்...

மீனலோசனிக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"ஆமாம் பிரபா.. இதை அவனிடம் கேட்டு விட்டு வாங்கிக் கட்டிக் கொள்ளத்தான் நான் பிறப்பெடுத்திருக்கிறேன்.. என்னை முன்னால் விட்டு.. பின்னால் குளிர் காய்த்தான் நீ பிறப்பெடுத்திருக்கிறாய்.." என்ற பதிலுக்கு கேட்டு விட்டாள்...

"என்னக்கா இப்படிக் கேட்டுட்டிங்க.. நாங்க என்ன பட்டுக்காமலா இருக்கோம்...?" பிரபாவதி போர் கொடியை உயர்த்தினாள்..

"பின்னே...? இல்லையா...?" ஒன்றை வார்த்தையில் பிரபாவதியின் போர்க் கொடியை கீழிறங்க வைத்தாள் மீனா.

"என்னதான் இருந்தாலும்... நீங்க விவரமானவங்க.. உங்க விவரம் எனக்குச் சுட்டுப் போட்டாலும் வருமாக்கா...?"

வினயத்துடன் பேசிய பிரபாவதியின் வார்த்தைகளில் ஏதும் மறைபொருள் மறைந்திருக்கிறதோ என்ற சந்தேகம் மீனலோசனிக்கு வந்தது..

பிரபாவதி அப்படிப் பேசுகிறவள்தான்... என்ன தான் மீனலோசனியுடன் பின்னிப் பிணைந்தாலும்.. நரேந்திரனை மணக்க இருந்து.. மகேந்திரனை கணக்குப் பண்ணி மணம் முடித்தவள்தானே என்று மீனலோசனியைப் பற்றி ஒரு எண்ணம் பிரபாவதியின் மனதில் என்றுமே உண்டு.. அந்தச் சாமர்த்தியத்தை வியக்காமல் இருக்க அவளால் முடிவதில்லை.. அதை வெளிப்படையாகச் செய்துவிட அவளால் முடியுமா..? அதனால் கிடைக்கும் வாய்ப்புகளில் மறைமுகமாக அதைப் புகழ்ந்து விடுவாள்... என்ன ஒன்று அந்த வஞ்சகப் புகழ்ச்சியை மீனலோசனி உடனே அறிந்து கொண்டு விடுவாள்.. அதைப் பற்றி பிரபாவதி அலட்டிக் கொள்வதே இல்லை..

'யாரு இவ...? இவளுக்குத் தெரியாமல் இருக்குமா...?'

மனதில் எள்ளளுடன் நினைத்துக் கொள்வாள்... அதை அவள் விழிகள் பிரதிபலித்தாலும்.. ஏதும் அறியாதவள் போல பவ்யமாக...



"என்னக்கா...?" என்று மீனலோசனியிடம் வினவ வேறு செய்வாள்...

அவள் என்னவென்று சொல்லுவாள்...? பிரபாவதியுடன் மோதவும் அவளால் முடியாது.. வித்யாவை வெளியே விரட்ட பிரபாவதியின் கூட்டணி தேவைப் படுகிறதே..

'ம்ஹீம்.. இரண்டு கைகள் நான்கானால் தான் எதையாவது செய்ய முடியும்.. இவளை முறைச்சுக்கிட்டு நம்மாலே இந்த அரண்மனையில் காலம் தள்ள முடியாது.. நமக்கு ஒரு சொந்தம்.. இவளுக்கு இவளோட அண்ணனுக்கு இந்த வீட்டில் பிறந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதால் இரண்டு சொந்தம்.. அசைக்க முடியாதவ.. இவளைப் பகைச்சுக்கிறது புத்திசாலித்தனமில்ல...'

மீனலோசனிதான் விவரமானவள் ஆயிற்றே.. அவள் பிரபாவதியின் கேலியை கண்டும் காணாததும் போலப் போனாள்.. அதெல்லாம் அவளால் முடிந்தது.. வித்யாவினால்தான் முடியாமல் போனது..

வித்யா எதையும் நேருக்கு நேராகப் பேசிப் பழகியவள்.. இரு பொருள்படப் பேசியறியாதவள்.. அவளால் மீனலோசனியும்.. பிரபாவதியும் பேசிய ஜாடைப் பேச்சுக்களை அவர்களின் பாணியிலேயே எதிர் கொள்ள முடியவில்லை.. ஆனால் அதைக் கண்டு கொள்ளாமல் போக முடிந்தது..

வித்யாவின் அருகே நரேந்திரன் இல்லாத சமயங்களில் மீனலோசனியின் ஜாடைப் பேச்சு கொடி கட்டிப் பறக்கும்.. பிரபாவதி பேச மாட்டாள்.. பேசினால் அது பிரகாஷின் காதுகளுக்குப் போய் விடுமோ என்ற பயம்.. அவனே அவளுக்கு ஒற்றை அண்ணன்.. அவனுடைய ஒற்றை மனைவியான பூர்ணிமாவோ வித்யாவின் உயிர் தோழி.. அதனால் அவள் பேசாமல் மீனலோசனியை பேச விட்டு சுவரஸ்யமாக வேடிக்கை பார்ப்பாள்..

"ஏன் பிரபா...?"

"என்னக்கா...?"

"உன் கல்யாணத்துக்கு போட்ட வைர அட்டிகையை எங்கே வாங்கினாங்களாம்..?"

"அது வாங்கியதில்லைக்கா..."

"பின்னே...?"

"செய்ததாம்..."

"அப்படின்னா...?"

"என்னக்கா.. தெரியாததைப் போல கேட்கறிங்க.. அது பரம்பரையாய் வந்த நகைக்கா... உங்ககிட்டயும் அப்படி நகைகள் இருக்கே..."

"இருக்குதுதான்..."

"அப்புறமும் எதுக்கக்கா இந்தச் சந்தேகம்...?"

"பரம்பரையாய் வைரநகைகளைக் கட்டிக் காப்பாத்தி பெத்த மகளுக்கு பூட்டி விடுகிற பரம்பரையில் நீயும் நானும்



பிறந்திருக்கோம்.. நமக்கு ராஜா ராஜேந்திர பூபதியோட பரம்பரையில மருமகள்களாக வருகிற தகுதியிருக்கு.. இது ஒன்னுமேயில்லாத ஜென்மங்களுக்கெல்லாம் என்ன தகுதியிருக்குன்னு இந்த அரண்மனையில சொந்தம் கொண்டாடறாங்க..?"

மீனலோசனியின் கேள்விக்கு பிரபாவதி சிரித்து வைக்க.. வித்யாவுக்கு பேசாமல் போக மனம் வரவில்லை.. நின்று திரும்பிப் பார்த்தவள் கழுத்தில் கிடந்த தாலியைத் தூக்கிக் காண்பித்தாள்...

"இந்தத் தகுதியிருக்கு..."

பட்டென்று சொல்லி விட்டு அவள் போய் விட மீனலோசனிக்கு வயிறு எரிந்தது...

"இவளை உள்ளே வரவிட்டது மகாப் பெரியதப்பு பிரபா..."

"என்னவோ.. நான்தான் அவளுக்கு வெற்றிலை.. பாக்கு வைத்து... ஆரத்தி எடுத்து வீட்டுக்குள்ள அழைத்ததைப் போல இல்ல பேசறிங்க.. உங்களையும் என்னையும் கேட்டா இந்தக் கல்யாணம் நடந்தது...?"

"பெரியவரும்... சின்னவனும் அடிச்சுக்குவாங்க.. இவ இரண்டு பேருக்குமே இல்லாம ஓடிப் போயிருவான்னு கணக்குப் போட்டா... என் கணக்கு தப்பாப் போச்சே பிரபா.."

"எப்பவுமே நீங்க போடற கணக்கே ஜெயிக்காதுக்கா.. சில சமயம் கணக்கு மாறிப் போவதும் நடக்கும்..."

பிரபாவதி வழக்கம் போல மறைபொருளில் தாக்கினாள்.. மீனலோசனி மனதிற்குள் வெகுண்டாலும் விடாமல் தன் தாக்குதலைத் தொடர்ந்தாள்...

"இது அரண்மனை.. இங்கே மருமகளாக வருகிறதுக்கும் ஒரு தகுதியிருக்கனும்..."

விடாமல் தகுதியை நினைவூட்ட அவள் முயன்ற போது வித்யா ஒருநாள் சரியாக திருப்பிக் கேட்டு விட்டாள்..

"ஒருத்தரை மனதில் நினைத்துக்கிட்டு.. அடுத்தவர்களுக்கு கழுத்தை நீட்டத் துணியாத தகுதியிருந்தால் போதாதா...?"

இதற்கு மீனலோசனி என்ன பதிலைச் சொல்லுவாள்...?

## 10



நதியோரம் நடந்த போது
தொலைவினிலே தொடுவானம்...
தொடுவான நிழல் கண்டு...
தொட்டுவிட மனதில் எண்ணம்...
நதியோரம் நான் நடந்த போது...



காலைப் பனியில் நனைந்த மலர்களைக் காணும் போது மனதில் புதுவிதமான உற்சாகம் பரவுவதை உணர்ந்தான் நரேந்திரன்.. மெலிதான விசிலுடன் பக்கத்தில் நடந்து வந்த வித்யாவை ஒரு மார்க்கமாகப் பார்த்தாள்.. அந்தப் பார்வையை இனம் கண்டு கொண்ட வித்யா முகம் சிவந்தாள்.. லேசான தடுமாற்றத்துடன் நிலம் பார்த்தவள்..

"என்ன...?" என்று கேட்டாள்...

"என்ன... என்ன...?" ஒன்றுமறியாதவனைப் போல அவன் கேட்டாள்..

'கள்ளன்...!'

அவன் குறும்பை ரசித்தாள் வித்யா.. முதன் முதலாக அவள் நேரடியாகப் பார்த்தபோது நரேந்திரன் அவளைப் பார்த்த பார்வைக்கும்.. இப்போது பார்க்கும் பார்வைக்கும் இடையிலிருந்த வித்தியாசத்தை நினைத்துப் பார்த்தவளுக்கு ஆச்சரியம் உண்டானது..

'இது எப்படி சாத்தியமானது..?'

அவளுக்குள் பிரமிப்பு எழுந்தது.. அவள் தொட்டுவிட முடியாத வானத்தைத் தொட்டு விட மனதில் ஆசை கொண்டாள்.. அவனோ ராஜகுமாரன்... ராஜா.. அந்த அரசனின் மீது ஆசைப்பட்ட அவள் ஒரு சாமானியப் பெண்.. தாயில்லாத ஏழை.. தகப்பனிருந்தும் அவளது பிறந்த வீட்டில் அகதியாக்கப் பட்டவள்.. இருக்க இடமில்லாத.. படிக்க வழியில்லாத அநாதை.. உழைத்துப் பிழைத்து படித்தவள்...

அவள் எட்டாக் கனியான அவன் மீது காதல் கொண்டாள்.. அவன் தொட்டு விட முடியாத இமயம் போன்றவன் என்பதை அறிந்திருந்தும் அவன் மேல் ஆசை கொண்டாள்.. அந்தக் காதலையும் ஆசையினையும் மனதில் பூட்டி வைத்திருந்த அந்த பேதைப் பெண்ணின் கனவு ஒருநாள் நனவானது.. நிழலாக அவள் மனதில் வந்தவன் நிஜமாக அவள் சொந்தமாக ஆனான்..

வித்யாவின் உடலில் பட்டு அழுந்திய தாலிச்செயினை அவளின் விரல் அன்புடன் பற்றி வருடியது.. இதைத் தந்தவன் அவள் மனதில் ஆராதித்த அவளுடைய நரேந்திரன் என்ற நினைவில் அவள் மனதில் பிரியம் பொங்கியது..

அவளது செய்கையைக் கவனித்துக் கொண்டிருந்த நரேந்திரனின் புருவங்கள் உயர்ந்தன.. அவளைத் துளைப்பதைப் போலப் பார்த்தவனின் பார்வை அவளின் மனதைப் படிக்க முயன்றது..

"என்னடி...?"

"ஒன்.. ஒன்னுமில்லையே..." வித்யா தடுமாறினாள்..

"ஒன்னுமில்லாததுக்கா இத்தனை தடுமாற்றம்...? ஊம்..?" அவன் உல்லாசமாகச் சிரித்தான்...

"ஒன்னுமில்லைன்னா.. ஒன்னுமில்லைதான்.." வித்யா அவன் முகம் பார்க்க முடியாமல் முகம் சிவந்தாள்..

நரேந்திரனின் மனதில் அவள்... மீதான காதல் பெருகியது.. அவனது ஒரு சிறு பார்வையில் மயங்கித் தலை



குனியும் அவளின் மயக்கம் அவன் மீதானது என்பதில் அவனுக்குள் கர்வம் உண்டானது.. அவளுடன் அவன் கூடியிருந்த பொழுதுகளை அவன் நினைத்துப் பார்த்தான்.. அவன் மீதான பிரியத்தை அவள் வெளிப்படுத்திய அந்தத் தருணங்களை நினைத்துப் பார்த்தான்.. அவளது பிரியத்தின் வேகத்தில் மூச்சுத்திணறிய போது அவன் உள்ளம் நிறைந்த வினாடிகளை நினைத்துப் பார்த்தான்..

'இது தான் காதல்...' அவனுக்குள் அவள் மீதான வாத்சல்யம் அதிகரித்தது..

"பார்த்த முதல் நாளே - உன்னைப்
பார்த்த முதல் நாளே..."

வித்யாவுக்கு பாட வேண்டும் போலத் தோன்றிவிட அவள் மெலிதான குரலில் பாடினாள்...

அன்றைய விடியல் அவளுக்குப் பிடித்தமானதாக அமைந்திருந்தது.. காலை நேர உலாவலுக்கு எழுந்தவளை எழுந்து கொள்ள முடியாமல் நரேந்திரன் கரம் இழுத்து அணைத்துக் கொண்டதில் அவளுக்குள் ரம்யம் உருவாகியிருந்தது.. குளித்த பின் தோட்டத்தில் நடக்கக் கிளம்பியவளுடன் கூடவே அவனும் நடக்க வந்ததில் அவள் மனதின் ரம்யம் அதிகமானது.. தோட்டத்து மலர்களின் பனியில் நனைந்த இதழ்கள் அதை மேலும் அதிகரிக்க வைத்தது.. போதாக் குறைக்கு அவளுடைய

நரேந்திரனின் ரகசியப் பார்வை அவளை எங்கோ அழைத்துச் சென்றது.. அவனை நேரடியாய் பார்த்த முதல் நாளை நினைத்தபடி அவள் மெல்லப் பாட ஆரம்பித்தாள்...

*"காட்சிப் பிழை போலவே - உணர்ந்தேன்*
*காட்சிப் பிழை போலவே..."*

நரேந்திரன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவளின் காதல் மழையில் நனைந்தவனால் அந்தப் பாடலின் பொருளுக்குள் புதைந்து கொள்ள முடிந்தது..

*"ஓர் அலையாய் மாறி*
*எனை அடித்தாய்...*
*கடலாய் மாறி*
*எனை இழுத்தாய்...*
*என் கனாவில் கூட உன் முகம்*
*உன் முகம்.. என்றும் மறையாதே..."*

'உண்மை தான்...' நரேந்திரன் நினைத்துக் கொண்டான்..

'இவளின் கனவிலும் நான்தான்.. இருப்பேன்...'

அந்த நிச்சயத்தில் அவனின் நெஞ்சம் நனைந்தது.. இப்படியொரு காதலை அவன்மேல் வைத்திருக்கும் வித்யாவினால் அவனைத் தவிர வேறு ஒருவனின் கரம் பிடிக்க முடிந்திருக்குமா...?

'முடியாது...' உறுதியுடன் அவன் மனதிற்குள் சொல்லிக் கொண்டான்..



அவனைத் தவிர வேறு ஒருவனை அவள் மனதாலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டாள்..

நரேந்திரனின் மனதில் கார்த்திகாயினி தேவியின் நினைவு வந்தது...

அவளும் அவனைக் காதலிப்பதாகத்தான் சொல்லிக் கொண்டாள்.. அதற்கு முன்னால் அவனும் அவளைப் போல ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன்தானா என்பதை உறுதி செய்து கொண்டாள்..

'ஒரு வேளை.. நான் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவனாக இல்லாமல் இருந்திருந்தால்...?'

நிச்சயமாக நரேந்திரனிடம் அவள் காதல் சொல்லியிருக்க மாட்டாள்.. இதை நரேந்திரன் அறிவான்..

கார்த்திகாயினியின் மனதில் வம்சப் பெருமை உண்டு.. அதைத் தாண்டி மற்ற எதையும் நினைத்துக் கூடப் பார்க்க மாட்டாள்.. நரேந்திரன் மணி முத்தாறு ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன்.. பார்க்க அழகாக.. கம்பீரமாக இருந்தான்.. வெளிநாட்டில் படித்தான்...

இந்தக் காரணங்களினால் மட்டுமே அவள் நரேந்திரனைக் காதல் சொல்லத் தகுந்தவனாகத் தேர்ந்தெடுத்தாள்.. இதில் ஒன்று குறைந்திருந்தாலும் அவள் அவனைத் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டாள்..

ஆனால் வித்யா அப்படியில்லை.. அதை நரேந்திரன் அறிந்திருந்தான்.. பூர்ணிமாவின் பின்புலத்தைப் பற்றி

பெரிதாக.. பிரமிப்பாக வித்யா பேசியதேயில்லையென்று பூர்ணிமா சொன்னது இன்னமும் அவன் நினைவில் நின்றது..

அவனிடமும் அவள் அப்படித்தானே இருந்தாள்..? நீ ராஜா மகனாய் இருந்தால் எனக்கென்ன வந்தது.. என் முன்னால் சிகரெட் பிடிக்காதே.. அப்படிப் பிடித்தபடி என்னுடன் பேச முயன்றால் நான் அதை அனுமதிக்க மாட்டேன்.. எழுந்து போய் விடுவேன் என்று சொன்னவள் அல்லவா அவள்..!

என்றுமே நரேந்திரனை நரேந்திரனாகத்தான் அவள் பார்த்திருக்கிறாள்.. மிகப் பெரும் கோடிஸ்வரன் என்றோ.. ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன் என்றோ நினைத்தும் பார்த்ததில்லை..

அவளுக்கு நரேந்திரன் என்றால் உயிர்... அந்த நரேந்திரனை அவனுக்காக மட்டுமே அவள் காதலித்தாள்.. அவனுக்காக அவளுடைய லட்சியத்தையும் மறந்தாள்.. வாழ்க்கைப் போராட்டத்தையும் மறந்தாள்.. அவளுடைய இன்னல்களை மறந்து.. அவனுடைய இன்னல்களை மட்டும் நினைவில் வைத்து அவனைப் பின் தொடர்ந்து மணி முத்தாறுக்கு வந்தாள்.. அவனை விட இளையவனான கவர்ச்சியான சுரேந்திரனின் மனைவியாகக் கூடிய வாய்ப்புக் கிடைத்தும் சுரேந்திரனின் முகம் பார்க்காமல் அதைத் தூக்கி எறிந்தாள்...



'வித்யா...!' அவன் மனம் நெகிழ்ந்தது.. அந்த நெகிழ்வில் அவன் உதடுகள் தன்னிச்சையாகப் பாடின..

*"காட்டிக் கொடுக்கிறதே - உன்*
*கண்கள் காட்டிக் கொடுக்கிறதே.."*

வித்யாவின் விழிகள் அவனை ஏறிட்டன.. அதில் தெரிந்த காதலில் நரேந்திரன் நெகிழ்ந்துருகினான்..

*"காதல் வழிகிறதே - உன் கண்ணில்*
*காதல் வழிகிறதே..."*

வித்யாவின் கைபிடித்து அவன் இழுத்த வேகத்தில் பூக்குவியலாய் அவன் மார்பில் சாய்ந்தாள் அவள்.. நரேந்திரனின் கரங்கள் அவளை வளைத்துக் கொள்ள அவளின் கரங்கள் அவன் முதுகில் பரவிப்படர்ந்தன.. அவளின் அணைப்பு தந்த நெருக்கத்தில் அவள் தோள் வளைவில் முகம் புதைத்து முத்தமிட்டான் அவன்..

*"உன் அலாதி அன்பினில்*
*நனைந்தபின்.. நனைந்த பின்...*
*நானும் மழையானேன்...."*

அவள் காதோடு அவன் பாடினான்...

## 11



நதியோரம் நடந்த போது
பூவாசம்தனை நுகர்ந்தேன்...
பூவைத் தேடிப் போனபோது...
பூவையவள் முகம் கண்டேன்..
-நதியோரம் நான் நடந்த போது-

**கா**தோரமாக ஒலித்த அவன் பாடலில் மூழ்கியவளாக விலக மறந்து வித்யா சிலையாக நின்றதை மாடியறையின் ஜன்னலில் இருந்து பார்த்த மீனலோசனியின் வயிறு எரிந்தது..

'ம் ஹீம்... காதலித்தேன் என்று தான் பெயர்.. ஒரு நாளாவது இந்த மனிதர் இப்படிக் கட்டித் தழுவியிருப்பாரா...? இதிலும் அந்த வித்யாதான் கொடுத்து வைத்தவள்...'

அவள் காதில் புகை வந்து கொண்டிருக்க அதை அறியாதவளாக மகேந்திரன் அவளை அழைத்தான்..

"மீனு.. ஏய்ய் மீனு..."

அவன் சும்மா 'மீனு...' என்று அழைத்ததோடு நிறுத்தியிருந்தாலாவது அவள் பேசாமல் இருந்திருப்பாள்..



கூடவே.. 'ஏய்ய் மீனு...' என்று அழைத்ததும் மகாக் கடுப்பாகிப் போனாள்...

"சும்மா மீன் பிடிக்கிறவனைப் போலவே பேசி வைக்காதீங்க.. சொல்லிட்டேன்..."

'என்ன இவ.. எப்பவும் போலத்தானே இவளை மீனுன்னு கூப்பிட்டேன்.. அதுக்கு எதுக்கு இந்த அளவுக்கு கோவிச்சுக்கிறா...?' மகேந்திரனுக்குப் புரியவில்லை..

"ஏண்டி.. உன்னைப் புதுசாவா மீனுன்னு கூப்பிடறேன்...? இப்படிக் கூப்பிட வேணாம்ன்னா வேற எப்படிக் கூப்பிடறது...? வேணும்னா லோசனின்னு கூப்பிடவா...?"

"சகிக்கலை.. என்னவோ லோசன்னு சொல்றதைப் போல இருக்கு..."

"வேற என்னதாண்டி செய்கிறது..? உனக்குப் புதுசா பெயர் வைச்சுக் கூப்பிடவா...?"

"ஏன்...? என் பெயருக்கு என்னவாம்...?"

"உனக்கு என்னதாண்டி பிரச்னை...?"

"என்னவோ பிரச்னை.. அதைத் தெரிஞ்சுக்கிட்டு என்ன செய்யப் போகிறீங்க...?"

"ஏண்டி... காலையிலேயே மனுசனை மூட் அவுட் ஆக்கற...? உனக்கு என்ன ஆச்சு...?"

மீனலோசனியிடம் கேட்டபடி ஜன்னலருகே வந்த மகேந்திரனும் தோட்டத்தைப் பார்த்து விட்டான்.. இப்போது நரேந்திரனும் வித்யாவும் விலகியிருந்தார்கள்.. ஆனாலும் கை கோர்த்தபடி ஆழ்ந்த குரலில் எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள்...

"ம்ம்ச்.. இது வேறயா...?" மகேந்திரன் அலுத்துக் கொண்டான்..

"உங்களுக்கெதுக்கு இத்தனை சலிப்பு...?" மீனலோசனி எரிச்சல் பட்டாள்...

"அதான் கல்யாணம் ஆகிருச்சே.. இன்னமும் காதல் ஜோடிகளைப் போல பின்னிப் பிணையனுமா...?" மகேந்திரன் கோபப் பட்டான்...

"கல்யாணம் முடிந்தால் காதல் காணாமல் போயிரனுமா...? ம்ஹீம்.. வித்யா கொடுத்து வைத்தவ.."

மீனலோசனியின் அனல் பெருமூச்சில் மகேந்திரனின் மனதில் நரேந்திரனின் மீது வன்மம் மூண்டது அந்த வன்மத்தை மேலும் அதிகமாக்கினாள் மீனலோசனி...

"இங்கேயும் காதல் பண்ணினோம்ன்னுதான் பேரு.."

"மீனா..."

"ஏன் கத்தறிங்க...? இல்லாததையா சொல்லிட்டேன்...?"

"உனக்கு என்னடி குறை வைத்தேன்...?"

"ம்ம்.. இதிலொன்னும் குறைச்சலில்ல..."



"வேற எதில்தான் குறை...? சொல்லித் தொலையேன்..."

"இது... இது... இதுதான் குறை... பெண்டாட்டி கிட்டப் பேசறது மாதிரியா பேசி வைக்கறிங்க...? என்னவோ எதிரிக்காரியிடம் பேசறதைப் போலப் பேசி வைத்தா என்னன்னு சொல்றது...?"

"நீ தானே அப்படிப் பேச வைக்கிற...?"

"எல்லாத்துக்கும் நான்தான் காரணமா...? கீழே தோட்டத்துப் பக்கம் எட்டிப் பாருங்க..."

"அதான் பார்த்தாச்சே..."

"அங்கே பெண்டாட்டி கிட்டக் கொஞ்சிக் குழாவுகிறாரே உங்க அண்ணன்.. அவருக்கு யார் சொல்லிக் கொடுத்தது...?"

"எதைடி...?"

"ம்ம்ம்...? அதையும் நான்தான் சொல்லனுமா...? பெண்டாட்டிகிட்டக் கொஞ்சறதை யார் சொல்லிக் கொடுத்தது...? அந்த வித்யாதான் சொல்லிக் கொடுத்தாளா...?"

மகேந்திரனால் மீனலோசனி நரேந்திரனைப் பற்றிப் பேசுவதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவன் மனதிற்குள் புகைச்சல் ஏற்பட்டாலும் அவனால் அதை வெளிக் காட்டிக் கொள்ளவும் முடியவில்லை.. அதனால்

வேறுவகையில் தனது கோபத்தை அவன் வெளிப் படுத்தினான்..

"நீ எதுக்கு அங்கே பார்த்த...?"

"எங்கே...?"

"தோட்டத்தை.. அதான் புருசனும் பெண்டாட்டியும் கொஞ்சிக் குழாவிக்கிறாங்கன்னு உனக்குத் தெரியுதில்ல...? அதுக்கப்புறமும் தோட்டத்தை பார்த்துக்கிட்டு நிற்கிறயே.. இது என்னடி பழக்கம்...?"

மீனலோசனிக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. அவள் ஒன்றைச் சொல்லப் போனால்.. அது வேறு மாதிரி திரிந்து விட்ட நிலையில் அவள் பேசமுடியாமல் மௌனியானாள்..

இது மகேந்திரன் கையாளும் யுக்திகளில் ஒன்று.. ஏதேனும் ஒரு விவகாரத்தில் அவன் சிக்கிக் கொள்ள நேர்ந்தால்.. வேறு ஒரு விவகாரத்தில் எதிராளியை நுழைத்து அவர்களை வாயடைத்துப் போகச் செய்யும் வித்தையில் அவன் கை தேர்ந்தவன்.. அவனால் அந்த வித்தையைப் பிரயோகிக்க முடியாது போனது நரேந்திரனிடமும் சுரேந்திரனிடமும் மட்டும்தான்.. அவர்கள் இருவருமே மகேந்திரனின் அந்த யுக்தியை தெளிவாக அறிந்தவர்கள்.. அதை முறியடிக்கும் வித்தையில் கை தேர்ந்தவர்கள்... இப்போது கூடுதலாக வித்யாவும் அந்த வரிசையில் சேர்ந்திருந்தாள்...



பேச முடியாமல் போன மீனலோசனி கணவன் மட்டம் தட்டி விட்ட கோபத்தில் ஜன்னலை விட்டு அகல முயன்றாள்... அந்த நேரம் பார்த்து சௌதாமினி தோட்டத்துப் பக்கம் போவது அவள் பார்வையில் பட்டுவிட்டது...

சற்று முன்னள்தான் கணவன் அவளை மட்டம் தட்டிப் பேசினான் என்பதை மறந்து போனவளாக..

"என்னங்க.. உங்க அம்மா..." என்றாள்...

"எங்கேடி...?" மகேந்திரன் எட்டிப் பார்த்தான்...

தோட்டத்தில் ரகசியம் பேசிக் கொண்டிருந்த நரேந்திரனும்... வித்யாவும் சௌதாமினியின் வருகையினால் விலகி நிற்பதைக் கவனித்த மகேந்திரன்...

"இதை முதலிலேயே செய்து தொலைத்-திருக்கலாம்.." என்று எரிச்சல் பட்டான்..

மீனலோசனிக்கு எதையாவது சொல்ல வேண்டும் போலப் பற்றிக் கொண்டு வந்தது.. ஆனால்.. அடுத்த மட்டம் தட்டலுக்கு ஆளாக விரும்பாதவளாக தோட்டத்தில் கவனத்தை செழுத்தினாள்.. சௌதாமினி அங்கே இருந்த சாய்வான சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொள்ள.. பக்கத்தில் நரேந்திரனும்.. வித்யாவும் அமர்ந்து பேச ஆரம்பித்ததைக் கவனித்தவளுக்கு ஆத்திரம் உண்டானது...

"இதென்னங்க அநியாயமா இருக்கு...? இது குடும்பமா.. இல்லை வேறு எதுவுமா...?"

"வாய் நீளுது மீனா... ஜாக்கிரதை..."

"இதுக்கு மட்டும் ரோசம் வந்துருமே.. இங்கே குத்துக்கல்லாட்டம் நீங்களும்.. நானும் இருக்கிறோம்.."

"யுகேயையும்.. பிரபாவையும் விட்டுட்டியே.."

"இதை மட்டும் சொல்லிருங்க.. அங்கே உங்க அண்ணனிடம் மட்டும் ரகசியம் பேசும் உங்க அம்மாவை எதுவும் கேட்டுகாதீங்க.."

"அவங்க என்ன பேசறாங்கன்னு தெரியாம நாமா ரகசியம்ன்னு முடிவு கட்டி விடக் கூடாது மீனா..."

"அங்கே பாருங்க.. அந்த மூணு பேரும் எப்படி வட்ட மேஜை மாநாடு போட்டுக்கிட்டு இருக்காங்கன்னு.. அது ரகசியம்ன்னு உங்களக்குத் தோணலையா...?"

"அப்படியா சொல்கிற...?"

மனைவியின் சொல்படி மகேந்திரன் தோட்டத்தை உற்றுப் பார்த்தான்.. உன்னிப்பாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த அந்த மூவரின் முகத்திலும் இருந்த தீவிரம் 'அப்படித்தான்...' என்றது...

"ஆமாம்டி மீனா.. அவங்க என்ன பேசிக்கிறாங்க...?"

இப்படிக் கேட்ட கணவனை எரிதணல் கொண்டு வரவா என்பதைப் போல அனல் பார்வை பார்த்தாள் மீனலோசனி..

"என்னைக் கேட்டா... எனக்கென்ன தெரியும்...? வேணும்னா குறி சொல்கிற குறத்தியை மணி முத்தாறு



மலையில இருந்து வரச் சொல்லி குறிகேட்டுச் சொல்லவா..?"

இப்போது வாய் மூடி மௌனியாவது மகேந்திரனின் முறையாகிவிட்டது.. மனைவியைப் பார்ப்பதற்குப் பதில் தோட்டத்தைப் பார்ப்பது உசிதம் என்று மனதிற்குத் தோன்றிவிட தோட்டத்துப் பக்கம் பார்வையைத் திருப்பினான்..

'இவ மூஞ்சியைப் பார்க்கிறதுக்கு பச்சைப் பசேல்ன்னு இருக்கிற செடி.. கொடியையாவது பார்க்கலாம்.. மனசுக்கு குளிர்ச்சியா இருக்கும்...'

ஆனால் மகேந்திரனின் பார்வை பசுமையான செடி கொடியின் மீது படியாமல் அதனருகே அமர்ந்திருந்த தாயின் மீதும்.. அண்ணனின் மீதுமே படிந்தது..

'அப்படி என்னதான் பேசிக்கிட்டு இருக்காங்க..'

அதையறியும் ஆவல் மனதில் குறுகுறுத்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஜன்னலை விட்டு அகன்று விட்டான்.. இல்லாவிட்டால் மீனலோசனி இன்னும் கொஞ்சம் குத்திக் காட்டிப் பேசிவிடுவாளே..

'என்னவா இருக்கும்...?'

அன்று முழுவதும் அந்த மர்மம் அவன் மண்டையைப் போட்டுக் குடைந்தது.. அன்றைய இரவில் அந்த மர்மத்தை உடைத்தாள் மீனலோசனி...

"உங்க சின்னத்தம்பி காதலிக்கிறாராம்.."

"யாரைடி சொல்கிற...? சுரேந்திரனையா சொல்கிற...?"

"பின்னே.. சின்னத்தம்பி பிரபுவையா சொல்வேன்..?"

இப்படிப் பேசின மனைவியை என்ன செய்வது என்ற யோசனையுடன் பற்களை நறநறத்தான் மகேந்திரன்...

## 12



நதியோரம் நடந்த போது
நான்கண்ட சொர்க்கம் நீதான்...
என் விரல் கோர்த்து கதைசொன்னாய்..
என் மன வீட்டில் குடி புகுந்தாய்..
-நதியோரம் நான் நடந்தபோது-

"சுரேந்திரனா...?"

சௌதாமினி சொன்ன செய்தியைக் கேட்டதும் நரேந்திரனும் இந்தக் கேள்வியைத்தான் கேட்டான்..

"நம்ம சுரேந்திரனேதான்.."

கலகலத்துச் சிரித்த சௌதாமினியின் முகத்தி விருந்த சந்தோச அலைகளைப் பார்த்த போது இவளுக்குத்தான் சுரேந்திரனின் மீது எவ்வளவு பாசம் என்ற எண்ணம் வித்யாவின் மனதில் எழுந்தது...



சௌதாமினி நரேந்திரனின் திருமணத்தின் போது சந்தோசப் பட்டாள்தான்.. ஆனால் இந்த அளவுக்கு அவள் சந்தோசப் படவில்லை என்பது ஏனோ அந்த நொடியில் வித்யாவின் ஞாபக அலையில் எழுந்தது..

மூத்த மகனின் திருமணத்தை மறந்து.. அவன் மீது கடமையை மட்டுமே சுமத்தி விட்டு அவன் நிழலில் மற்ற பிள்ளைகளை வாழ வைத்துக் கொண்டிருக்கும் தாய் என்று அவள்மீது வித்யா கூறிய குற்றச் சாட்டு மறைந்து விட்டது என்ற நிம்மதியை மட்டுமே சௌதாமினியின் முகம் அன்று பிரதிபலித்ததை வித்யா நினைத்துப் பார்த்தாள்...

அதன்பின் பூர்ணிமாவின் திருமணம் பிரபாவதியின் அண்ணனான பிரகாஷீடன் நடந்த போது.. சௌதாமினியின் முகத்தில் இதே ஆனந்தம் நிலவியது..

"கேட்டியா வித்யா..."

நரேந்திரனின் ,கேள்வியில் வித்யாவின் சிந்தனை அலைகள் அறுந்தன.. அவள் சிந்தனை கலைந்தவளாக நரேந்திரனின் முகத்தைப் பார்த்தாள்...

"என்ன சொன்னீங்க...?" இப்படிக் கேட்டவளை விசித்திரமாகப் பார்த்தான் நரேந்திரன்..

"என்ன யோசனையில் இருக்கிற வித்யா...? நம்ம சுரேன் காதல் செய்கிறானாம்..."

"ஓ.. அப்படியா...?" வரவழைத்துக் கொண்ட ஆச்சரியத்துடன் கேட்டாள் வித்யா...

"அப்படியேதான்..." உற்சாகமாக பதில் சொன்னான் நரேந்திரன்...

தங்கை.. தம்பிகளின் வாழ்வில் அவனுக்கிருக்கும் அக்கறை குறித்த பாராட்டு வித்யாவின் மனதில் எழுந்தது.. அவனது மனைவியாக அவனது அக்கறையில் பங்கேற்கும் பொறுப்பு அவளுக்கிருப்பதை உணர்ந்தவளாக வித்யா லேசாகச் சிரித்தாள்.. அதோடு சுரேந்திரன் நியாயமானவன் என்ற பிரியமும் அவளுக்குள் எழுந்தது..

சுரேந்திரனின் வாழ்வு சிறப்பானதாக அமைய வேண்டும் என்று மனப்பூர்வமாக நினைத்துக் கொண்டாள் வித்யா.. அந்த நினைவுடனே சுரேந்திரனின் காதலியைப் பற்றிய விவரங்களை அவள் விசாரித்தாள்...

"பெண் யாராம்...?"

அவளது கேள்விக்கு முகம் முழுவதும் பூரிப்புடன் சௌதாமினியே பதில் சொன்னாள்...

"மதன்பூர் சமஸ்தான இளவரசியாம்.. நான் நினைக்கவே இல்லை வித்யா.. எங்கள் ராஜ பரம்பரைக்கு ஏற்ற பெண்ணை சுரேந்திரன் தேர்வு செய்வான் என்று.."

சௌதாமினியின் பதிலில் வித்யாவின் மனதில் அடி விழுந்தது.. அவள் மனதில் சிறிய வெற்றிடம் உருவானது.. அந்தக் குடும்பத்தில் அவளுக்கு இடமில்லை என்பதைப் போல அவள் உணர்ந்தாள்.. அதை உணராதவளாக சௌதாமினி பேசிக் கொண்டே போனாள்...



"இந்த சுரேந்திரன் இருக்கானே.. இவன் சரியான விளையாட்டுப் பிள்ளை.. நிச்சயமாக இவன் நம் ராஜவம்சத்துப் பெண்களில் ஒருத்தியை கை நீட்ட மாட்டான் என்று நான் நினைத்தேன்.. அவனும் அப்படித்தான் இருப்பான்.. அதனால்தான் அவன் உன்னைச் சொல்லவும் எனக்கு பெரிதாக அதிர்ச்சி எதுவும் ஏற்படவில்லை..."

இப்போது எதற்காக இந்தப் பேச்சு என்ற நினைவில் வித்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. நரேந்திரனுக்கும் அதே எண்ணம்தான் என்பது அவன் முகச் சுருக்கத்திலிருந்து தெரிந்தது.. சௌதாமினியின் உற்சாகம் மற்றவர்களின் மனநிலையை உணராததாக இருந்தது.. அவள் பொழியும் மழையைப் போலப் பேச்சை நிறுத்தாமல் பேசிக் கொண்டேயிருந்தாள்..

"நரேந்திரன் வீட்டுக்கு மூத்தவன்.. படிக்கும் போதே கிரண்பூர் சமஸ்தான இளவரசியைக் காதலித்தவன்.. இவன்தான் எங்கள் பரம்பரைக்குப் பொருந்தத்தமாக ராஜ வம்சத்துப் பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்வான் என்று நினைத்தேன்.."

'அடி தாங்கா உள்ளமீது இடி தாங்குமா' என்று கவிஞர் சொன்னது இதைத்தானா என்று மனதிற்குள் அரற்றினாள் வித்யா...

அவளுடைய நரேந்திரனின் முதல் காதல் அவள் மீது ஏற்படவில்லை.. இந்த உண்மை அவள் மனதை வாள் கொண்டு அறுத்தது..

அவன்.. அவனுடைய ராஜ வம்சத்தைப் போலவே ராஜ வம்சத்தில் பிறந்த கிரண்பூர் சமஸ்தான இளவரசியான கார்த்திகாயினி தேவியைக் காதலித்தவன்.. சந்தர்ப்ப சூழ்நிலையால்.. விதி வசத்தால் காதலியுடன் சேர அவனால் முடியாமல் போய் விட்டது.. அதன் பின் வாழ்வின் போக்கில் ஓர் நாள் வித்யாவைச் சந்தித்தான்.. அவளுடைய காதலை ஏற்றுக் கொண்டான்..

ஒருவேளை.. அவனும் கார்த்திகாயினியும் பிரியாமல் இருந்திருந்தால்...?

நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்கினாள் வித்யா...

இந்த வாழ்வு கார்த்திகாயினி விட்டுக் கொடுத்த வாழ்வா...? அவளுடைய நரேந்திரன் அவளுக்கு மட்டுமே சொந்தமானவனாக இல்லையா...?

இடியை அவள் மனதில் இறக்கிய சௌதாமினி அதைப் புரிந்து கொள்ளாதவளாக பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்..

"கடைசியில் பார்த்தால் நரேந்திரன் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டான்.. சுரேந்திரனோ எங்களைப் போல ராஜ பரம்பரையைச் சேர்ந்த பெண்ணைத் தான் கல்யாணம் செய்து கொள்ளப்



போவதாக சொல்லுகிறான்.. இறைவனின் விளையாட்டை என்னவென்று சொல்வது..?"

எதுவும் சொல்ல முடியாதவளாக மௌனித்தாள் வித்யா..

"அந்தப் பெண் சுரேந்திரன் கூடப் படித்துக் கொண்டிருந்தாளா..?" நரேந்திரன் கேட்டான்...

"ஊஹீம்.. அப்படியில்லையாம்.. நானும் உன்னைப் போல்தான் முதலில் நினைத்தேன்.. என்னடா சின்னவனும்.. நரேந்திரனைப் போலக் கூடப் படித்த பெண்ணைக் காதலித்திருக்கிறானோ என்ற நினைவு வந்தது.. அப்புறம் பார்த்தால் சுரேந்திரன் அப்படியில்லை யென்கிறான்..."

சௌதாமினி நரேந்திரனின் முதல் காதலைப் பற்றிய நினைவுகளிலிருந்து வெளியே வரவே மாட்டாளா என்றிருந்தது வித்யாவிற்கு...

அவளுக்கு மனம் தாளவில்லை.. அவளும் மனுஷிதான்.. அவள் மனம் இரும்பால் செய்ததில்லை.. அதுமென்மையானது.. ஈரமானது.. அந்த மனதில் நரேந்திரனுக்கு மட்டுமே இடமிருந்தது.. அப்படிப் பட்டவளுக்கு நரேந்திரனின் முதல் காதலைப் பெறும் பாக்கியம் ஏன் இல்லாமல் போனது..?

"அவள் பெயர் நிவேதிதா தேவியாம்.. மதன்பூர்
மகாராஜாவின் இளைய மகளாம்.. பார்க்க அழகாக
இருப்பாளாம்.. பாரின் டூர் வந்திருந்தாளாம்.. வந்த
இடத்தில் யதேச்சையாக சுரேந்திரனைப் பார்த்திருக்
கிறாள்.. முதல் பார்வையிலேயே நம் சுரேனை அவளுக்குப்
பிடித்து விட்டதாம்.. நம் சுரேனை யாருக்குத்தான்
பிடிக்காது..?" சௌதாமினியின் வார்த்தைகளில் பெருமை
தொனித்தது...

"அதைச் சொல்லுங்க.. அப்ப.. அந்தப் பெண்தான்
சுரேனிடம் காதல் சொன்னாளா..?" நரேந்திரன் சிரித்தான்..

"அப்படித்தானாம்.. நம்ம ஆள் உடனே சரி கொடுக்க
வில்லையாம்..."

"இதைப் பாருடா..."

"உனக்கு என்மேல் காதல் வந்திருக்கலாம்...
ஆனா எனக்கும் உன்மேல அதைப் போல காதல்
வரணுமில்லையா..? அதனால கொஞ்சநாள் பழகிப்
பார்த்துவிட்டு முடிவு சொல்கிறேன்னு சொன்னானாம்..."

"இங்கே பாரு வித்யா.. இவன் பாரினுக்குப் போய்
பழகிப் பார்க்கலாமான்னு கேட்டிருக்கான்..."

நரேந்திரனின் பேச்சிற்கு வித்யா மெதுவாக சிரித்து
வைத்தாள்... தாய்க்கும்.. மகனுக்கும் இடையில் நடக்கும்



பேச்சில் அவளையும் இழுத்து விட நரேந்திரன் முயல்வது அவள் மனதிற்குப் புரிந்தது.. அவள் மீதான அவனின் கவனம் குறித்த இதம் அவள் மனதில் பரவியது.. அவள் மனதிலிருந்த தனிமையுணர்வு மறைய ஆரம்பித்தது.. நரேந்திரனுக்காக அவளும் பேச்சில் கலந்து கொண்டாள்...

"இதென்னங்க இப்படிக் கேட்டுட்டிங்க.. என்ன தான் பாரினுக்குப் படிக்கப் போனாலும்.. மண்வாசனை மறந்து போகுமா..? அதான் நம்ம வீட்டு சின்னவர்.. சூப்பர் ஸ்டார் ஸ்டைலில் பழகிப் பார்க்கலாம்ன்னு சொல்லியிருப்பார்..."

வித்யா கலகலப்பாக பதில் சொன்னதும் நரேந்திரனின் முகம் மலர்ந்தது.. அவனுக்கு அவளின் மனதைத் தெரியும்.. அதன் சுணக்கம் தெரியும்.. அவளின் முகம் லேசாக மாறினாலும்.. அதை வைத்து அவள் மனதை அவன் கண்டு பிடித்து விடுவான்...

## 13

நதியோரம் நடந்த போது..
நதிநீரில் முகம் பார்த்தேன்..
கலக்கமில்லா அந்தப் பால் முகத்தை..
வாழ்க்கையிலே எங்கே தொலைத்தேன்..?
-நதியோரம் நான் நடந்த போது-

சௌதாமினி கூறியதிலிருந்து வித்யா சுரேந்திரனின் காதலியைப் பற்றிய விவரங்களைக் கிரகித்துக் கொண்டாள்...

அவள் பெயர் நிவேதிதா தேவி.. மதன்பூர் ராஜாவின் இளைய மகள்.. அவளுக்கு மூத்த சகோதரனும்.. மூத்த சகோதரியும் இருக்கிறார்கள்.. அவர்கள் திருமணமானவர்கள்.. இவள் உலகத்தைச் சுற்றிப் பார்க்கப் போகிறேன் என்று வெளிநாட்டு சுற்றுலாவிற்கு கிளம்பிப் போயிருக்கிறாள்.. போன இடத்தில் சுரேந்திரனைக் கண்டிருக்கிறாள்.. கண்டதும் காதல் வந்து விட்டது.. சுரேந்திரனிடம் சொல்லியிருக்கிறாள்.. அவன் அவளை விசித்திரமாகப் பார்த்திருக்கிறான்...



பழகிப் பார்த்து விட்டுப் பதில் சொல்லுகிறேன் என்ற சுரேந்திரனின் நிபந்தனைக்கு அவள் சரியென்று சொல்லியிருக்கிறாள்.. பழகிப் பார்த்ததில் சுரேந்திரனுக்கும் அவள்மீது காதல் ஏற்பட்டிருக்கிறது.. அவன் அவளிடம் காதல் சொல்லி விட்டு.. மணி முத்தாறு வீட்டிற்கும் சொல்லி விட்டான்...

இதைச் சொல்லி முடிப்பதற்குள் சௌதாமினி எதையெதையோ பேசி முடித்து விட்டாள்.. அவள் பேச்சுப் போகும் திசைகளெல்லாம் கூடவே போய் பேசி அவளை மீண்டும் சுரேந்திரனின் காதலைப் பற்றிய பேச்சுக்குள் இழுத்துவிட நரேந்திரன் பற்பல பகீரதப் பிரயத்தனங்களை செய்ய வேண்டியிருந்தது...

வித்யாவிற்கு அவன் நிலையைக் கண்டு சிரிப்பு வந்தது... அவள் அதை மறைத்தாலும் அவளின் கண்கள் அதைக் காட்டிக் கொடுத்து விட அதை கண்டு கொண்ட நரேந்திரனின் கண்கள் மின்னின...

"என் நிலையைப் பார்த்தா உனக்கு சிரிப்பு வருதா..?" அவளுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தான்...

"சிரிச்சேனா..? நானா..? அபாண்டமா பேசாதீங்க.." அவள் கண்களில் சிரிப்பு அதிகரித்தது...

"நம்ம ரூமுக்கு வாடி.. உனக்கு இருக்கு..."

அவனின் எச்சரிக்கையில் அவள் முகம் சிவந்தது..

'இவனுக்கு இது ஒருசாக்கு..' கள்ளச் சிரிப்புடன் அவனைப் பார்த்தாள்..

அவளின் அந்த முகச் சிகப்பில் நரேந்திரனின் உல்லாசம் அதிகரித்தது.. அவளின் மஞ்சள் கலந்த சந்தனத்தைப் போன்ற நிறத்தில் மயங்கிப் போனவனாக...

'மஞ்சளழகி..' என்று நினைத்துக் கொண்டான்...

*"இஞ்சி இடுப்பழகி...*
*மஞ்சச் சிகப்பழகி...*
*கள்ளச் சிரிப்பழகி..*
*மறக்க மனம் கூடுதில்லையே..."*

மாடியறைக்கு வந்தபின் அவளை அவனுடைய கை வளைவிற்குள் வைத்தக் கொண்டு அவன் பாடியபோது தன்னை மறந்து அவன் மார்பில் முகம் புதைத்த வித்யா லேசாக விம்மி விட்டாள்...

"என்னடி..?" பதறிப் போனவனாக அவள் முகம் நிமிர்த்திப் பார்த்தான் நரேந்திரன்..

"மறந்திர மாட்டிங்கள்ல..?"

வித்யாவின் முகம் தவிப்பை பிரதிபலித்தது.. என்னவோ நள்ளிரவில் கூடிய சங்க காலத்து தலைவனைப்



பார்த்து தலைவி கேட்பதைப் போலக் கேட்டு வைத்தவளை என்ன செய்வது என்று தெரியாமல் ஆற்றாமையுடன் பார்த்தான் நரேந்திரன்...

"அறிவு கெட்டவளே..! நீ என் பெண்டாட்டிடி..."

"அதுக்காக.. காதல் சொல்லக் கூடாதா..?"

"வித்யா.. நான் உன்னைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டவன்..."

"அந்தக் காதல் என்றென்றும் நிலைத்திருக்குமா..?"

அவளின் விழிகள் நீரில் மிதந்தன.. நரேந்திரனின் மனதில் கருணை சுரந்தது...

அவனுக்கு வித்யாவைத் தெரியும்.. பரிபூரணமாக அவளை அறிந்தவன் அவன்...

வித்யா யாரிடமும் யாசித்ததில்லை.. அவள் யாசிக்க மாட்டாள்.. ஒரு வகையான நிமிர்வு அவளிடம் எப்போதும் குடி கொண்டிருக்கும்.. இதழை மடித்து அவள் சிந்தும் சிறு புன்னகையில் சுயமரியாதை கலந்த கர்வம் கலந்திருக்கும்..

அவள் வணங்காமுடி.. நெருங்கிய தோழியான பூர்ணிமாவுடன் ஒரே வீட்டில் வசிக்க நேர்ந்த போது தங்குவதற்கும்.. சாப்பிடுவதற்குமான கட்டணத்தை மாதா மாதம் கொடுத்து வந்தாள்...

அப்படிப்பட்ட வித்யா.. அவனிடம் இறைஞ்சுகிறாள்.. அவளின் அந்தக் காதலில் அவன் மனம் மெழுகாக உருகியது...

'இவளை மறந்து நான் உயிர் வாழ்வேனா..?'

நரேந்திரன் அவள் நெற்றியில் முத்தம் பதித்து அவளைத் தன் மார்போடு இறுக்கிக் கொண்டான்.. அவளின் மெல்லிய உடலின் நடுக்கத்தை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. அந்த நடுக்கம் அவனுக்காக என்பதில் அவன் மனதில் எல்லையற்ற திருப்தியும்.. கர்வமும் உண்டானது...

இந்த திருப்தியையும்.. கர்வத்தையும்.. கார்த்தி-காயினியால் ஒருபோதும் கொடுக்க முடியாது என்பதை இவள் அறிவாளா என்று அவன் மனதிற்குள் கேட்டுக் கொண்டான்...

"மறக்குமோ மாமன் எண்ணம்..?
மயக்குதே பஞ்சவர்ணம்..
மடியிலே ஊஞ்சல் கட்ட..
வா.. நீ...."

அவளை மடியில் ஊஞ்சல் கட்டச் சொல்லிவிட்டு அவன் மடியில் ஊஞ்சல் கட்டினான்.. அதில் சாய்ந்தவளின் கூந்தலில் முகம் புதைத்த போது.. இந்த சுகத்திற்கு ஈடு இணை உண்டா என்று அவன் மனம் கேட்டது...



"நரேன்.." வித்யா தவிப்புடன் அழைத்தாள்...

"சொல்லுடி.." அவள் முகம் நோக்கிக் குனிந்தான் அவன்...

"இந்தப் பிரியம் என்னைக்கும் நிலைத்திருக்குமா..?"

எவ்வளவு சொல்லியும் திரும்பத்திரும்ப அந்த ஒன்றிலேயே நிற்பவளின்மீது நரேந்திரனுக்கு கோபம் ஏற்பட்டது.. எதற்காக அவள் அப்படி மறுகுகிறாள் என்று அவனுக்குப் புரியவில்லை.. அவள் அவனுடைய மனைவி.. அவளைவிட்டு அவன் பிரிவானா..? இல்லை அவள்மீது பிரியம் காட்டாமல்தான் இருப்பானா..?

'இவள் ஏன் இப்படியே கேட்கிறாள்..?'

நரேந்திரன் முகம் மாறினான்.. அதைக் கண்ட வித்யாவின் மனம் பதறியது.. அவள் முகம் நோக்கிக் குனிந்தவனின் முகம் விலகப் போனதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

"நரேன்..."

வேகத்துடன் அவன் கழுத்தை அவள் கைகள் வளைத்தன.. அந்த வேகத்தில் அவன் திகைத்துப் போனான்.. அவள் முகம் நோக்கி இழுக்கப்பட்ட அவன் முகத்தில் அவள் முத்தங்களைப் பதித்தாள்.. அந்த ஆவேச முத்தங்களில் திணறிப் போனவன் அவளை

தன்னுடன் இருக்கிக் கொண்டான்.. அவளது மனதைக் குறித்த ஐயப்பாடு மறைந்து அவனுக்குள் மோகம் மூண்டது.. அந்த மோகத்துடன் அவள் மீது சரிந்தவனின் காதோரமாக வித்யா முணுமுணுத்தாள்...

"நீங்க எனக்கு மட்டும் தான் சொந்தம் நரேன்..."

"இல்லைன்னு யார் சொன்னது..?"

"எப்பவும் என் சொந்தமா மட்டும் இருப்பீங்களா..?"

"இல்லாமல் எங்கேடி போவேன்..?"

"எனக்கு உங்க சொத்து சுகம் வேண்டாம்..."

"எனக்கு அது தெரியுமே வித்யா.."

"உங்க ராஜ பரம்பரைங்கிற அந்தஸ்து வேணாம்.."

"இதை நீ சொல்லனுமா வித்யா..?"

"நீங்க மட்டும்தான் வேணும் நரேன்.. உங்க அன்பு மட்டும்தான் வேனும்.. உங்க காதலில் துளியளவு குறைந்தால் கூட நான் தாங்கிக் கொள்ள மாட்டேன்..."

இது என்ன வகையான பரிதவிப்பு என்று நரேந்திரன் தவித்துப் போனான்.. அவனால் வித்யாவின் தவிப்பினைக் காணச் சகிக்கவில்லை.. அவன் அவள் கைக்குள் தான் இருக்கிறான்.. மிக அந்தரங்கமாக அவர்கள்



இருக்கிறார்கள்.. அந்தத் தருணத்திலும் அவள் மனதில் பாதுகாப்பில்லாத உணர்வு ஏற்படுகிறதென்றால் அவள் எதனால் பாதிக்கப் பட்டிருக்கிறாள்..?

அதைக் கேட்க அது சரியான நேரமல்ல என்பதை நரேந்திரனின் மனம் அறிவுறுத்தியது..

அதைக் கேட்க வேண்டுமென்றால் அவளை விட்டு அவன் விலக வேண்டும்.. அவள் இருக்கும் மனநிலையில் அந்த விலகலே அவளது தவிப்பை அதிகரித்து விடாதா..?

நரேந்திரன் நெருக்கத்தை அதிகரித்தான்.. அவள் பக்கம் நெருங்கினான்.. அவள் காதோரமாக தாபத்துடன் பாடினான்...

"பேசாமல் வா...
என் பக்கம் நெருங்கு..
கேட்காமல் தா..
தேன் முத்தம் வழங்கு..."

மன்மதனின் மலர் அம்புகளைத் தாங்கிய அவன் பாடல் அவள் காதினில் பாய்ந்தது.. அவள் பேச்சிழந்தாள்.. அவள் நெருங்க வேண்டிய அவசியமில்லாமல் அவன் அவளை நெருங்கினான்.. அவளிடம் கேட்காமல் அவனே முத்தங்களை வாரி வழங்கினான்...

வாரி வழங்கிய கொடை வள்ளலிடம் தேவைக்கு அதிகமாகவே பெற்றுக் கொண்ட வித்யாவின் மனதிலிருந்த கிலேசம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி மறைந்து விட்டது..

## 14



நதியோரம் நடந்த போது..
காலடியில் சுடு மணல்தான்..
நீர் தன்னில் பாதம் நனைத்தால்..
நீராக அங்கே நீயிருந்தாய்...
-நதியோரம் நான் நடந்த போது-

மதன்பூரின் இளவரசியான நிவேதிதா தேவியின் கண்களில் அலட்சியமும்.. மிடுக்கும் ததும்பி வழிந்தன.. முதல் பார்வையிலேயே அவள் ஆணவத்தில் மீனலோசனியையும்.. பிரபாவதியையும் தூக்கிச் சாப்பிட்டு விடுவாள் என்பதை அவர்கள் இருவருமே புரிந்து கொண்டார்கள்.. ஆனாலும் அவர்கள் அதைப் பொருட் படுத்தாமல் முகம் நிறைய மகிழ்வோடு அவளை வரவேற்றதிற்கு காரணம் இருந்தது...



அது.. அந்த நிவேதிதா மணி முத்தாறு அரண்மனையில் காலடி வைத்தவுடன் அவளுக்கு அறிமுகப் படுத்தப்பட்ட வித்யாவை தூசு போல அலட்சியமாக நோக்கினாள் என்பது..

சுரேந்திரன் வெளிநாட்டுப் படிப்பை முடித்து விட்டு மணி முத்தாறுக்குத் திரும்பிவிட்டான்.. தினமும் பேக்டரிக்கு போய் வர ஆரம்பித்தான்.. அவனிடம் நிவேதிதாவைப் பற்றிக் கேட்கும்படி சௌதாமினி சொன்னதால் நரேந்திரனும் கேட்டான்..

"நெக்ஸ்ட் வீக்.. அவளோட பேமிலி இங்கே வருகிறாங்கண்ணா.." என்றான் சுரேந்திரன்...

"என்னடா இது..? பெண் வீட்டுக்குத்தானே நாம் முதலில் போகனும்..?" நரேந்திரனின் புருவங்கள் ஏறின..

"பெண் பார்க்கத்தான் போகனும்.. நான்தான் பெண்ணைப் பார்த்துட்டேனே..."

"அந்தப் பெண்ணும் மாப்பிள்ளையைப் பார்த்திருக்கும் தானே...?"

"ஆமாம்.. அதுக்கென்ன..?"

"அப்புறம் எதுக்காகடா அவங்க மாப்பிள்ளை பார்க்க வருகிறாங்க..?"

நரேந்திரன் சுள்ளென்ற கோபத்துடன் கேள்வி கேட்டான்.. மூத்தவனும்.. கடைசித் தம்பியும் மோதிக் கொள்வதைப் பார்க்க வேண்டுமென்ற நீண்டநாள் ஆசை கொண்டிருந்த மகேந்திரனும்.. யுகேந்திரனும் அந்தக் கண்கொள்ளாக் காட்சியினைக் கண்கொட்டாமல் பார்த்தார்கள்.. கூடப் பார்வையிட அவர்களின் துணைவிகளையும் கண் சமிக்ஞையில் அருகே அழைத்துக் கொண்டார்கள்...

சௌதாமினிக்கு நரேந்திரனின் கோபம் குறித்து கவலை எழுந்தது.. அவள் மூத்த மகனை சமாதானப் படுத்த முயன்றாள்...

"அதை மாப்பிள்ளை பார்க்க வருகிறாங்கன்னு நாம ஏன் நினைக்கனும் நரேந்திரா..?"

"இவன் அப்படித்தானேம்மா சொல்கிறான்..?"

"அப்படியா சொன்னான்..? என்ன சுரேன்.. நீ அப்படியா சொன்ன..?"

"பெண் பார்க்கத்தானே பெண் வீட்டுக்குப் போகனும்..? நான்தான் பெண்ணைப் பார்த்துட்டேனேன்னு சொன்னதை அண்ணன் அப்படிச் சொல்கிறார்ம்மா..."

"கேட்டாயா நரேந்திரா.. அவன் அதைத்தான் சொல்லியிருக்கிறான்.. நீ நினைப்பதைப் போல சொல்லவில்லை..."



"இதுக்குப் பெயர் என்னம்மா..? பெண் பார்க்கத்தான் பெண் வீட்டுக்குப் போகனும்னா.. மாப்பிள்ளை பார்க்கத்தானே மாப்பிள்ளை வீட்டுக்கும் வருவாங்க..?"

"நரேந்திரா..! என்னப்பா இப்படிக் கோபப்படற..?"

"கோபப்படாம என்ன செய்யச் சொல்கிறீங்கம்மா..? இது வரைக்கும் இல்லாத வழக்கத்தை இவன் கொண்டு வருகிறான்.. அதுக்கு கோபப் படாம கொஞ்ச சொல்கிறீங்களா..?"

"அண்ணா.. அவங்களை நான் வரச்சொல்லலை..."

"பின்னே..?"

"அவங்கதான் இங்கே வரனும்னு சொன்னாங்க.."

"நீ வேண்டாம்ன்னு சொல்லியிருக்கனுமா இல்லையா..?"

"இதில் இத்தனை பார்மாலிட்டிஸ் இருக்கும்ன்னு எனக்குத் தெரியாதே அண்ணா..."

"என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே..."

இந்த வார்த்தைக்கு.. உங்களை எதற்காக கேட்க வேண்டும் என்ற கேள்வியினை சுரேந்திரன் நரேந்திரனைப் பார்த்துக் கேட்க வேண்டும் என்று மகேந்திரனும்.. யுகேந்திரனும்.. ஆவலாக எதிர்பார்த்தார்கள்...

அப்படி மட்டும் நடந்து விட்டால்.. ஆயிரத்து ஐந்து தேங்காய்களை உடைப்பதாக அவர்களின் மனைவிமார்கள் வேண்டிக் கொண்டார்கள்...

கடைசியில் பார்த்தால்.. அந்த அன்புச் சகோதரர்களின் எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை.. அவர்களின் ஆசை மனைவிகளின் வேண்டுதலும் பலிக்கவில்லை... மாறாக...

"வேண்டும்ன்னா.. அவங்களை வர வேண்டாம்ன்னு நான் சொல்லி விடவா அண்ணா..?" என்று தான் சுரேந்திரன் கேட்டான்..

நரேந்திரனாவது உச்சானிக் கொம்பிலிருந்து இறங்காமல் இருப்பான் என்று பார்த்தால்.. அவனோ..

"சேச்சே.. அது நல்லாயிருக்காது சுரேன்.. வர வேண்டும்ன்னு கிளம்பிக்கிட்டு இருக்கிறவங்களை வராதேன்னு சொன்னா அது முறையாய் இருக்காது.. நம்ம குடும்பத்துக்கு அது வழக்கமில்லை.. அவங்க வரட்டும்.." என்று மலையிறங்கி விட்டான்..

"ஸாரிண்ணா.." வருத்தப்பட்டான் சுரேந்திரன்...

"போடா முட்டாள்.. இதுக்குப் போய் எதுக்காக இவ்வளவு வருத்தப்படறே.." பெருந்தன்மையாகப் பேசினான் நரேந்திரன்..



"நீங்க சொன்னதைப் போல நான் உங்களை ஒருவார்த்தை கேட்டிருக்கணும்.."

"உனக்கு இதில் இத்தனை விவரம் இருக்கும்ன்னு தெரியுமா..? காதல் உன் சொந்த விசயம் சுரேன்.. உனக்குப் பிடித்த பெண்ணை நீ தேர்வு செய்தாய்.. அதில் நாங்க தலையிடவே மாட்டோம்.. கல்யாணம் குடும்பங்கள் சேர்ந்து முடிவு பண்றதுடா.. அதில ஆயிரம் சாஸ்திரம் சம்பிரதாயம் இருக்கும்.. அதை நாம பார்க்கணும்.. அதுக்காகத்தான் நான் கோபப்பட்டேன்.."

"அதனால் என்னண்ணா.. என்மேல் உங்களுக்கு இல்லாத உரிமையா..?"

அவர்கள் கட்டித் தழுவிக் கொள்ளாத குறையாகப் பேசிக் கொண்டே போய்விட.. மகேந்திரனும்.. புகேந்திரனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

இப்படிப்பட்ட பாசப் பிணைப்பு தங்களுக்குள் இருக்கிறதா என்ற கேள்வி அவர்கள் நெஞ்சில் எழுந்தது.. ஏன் அவ்வாறு இல்லை என்ற ஏக்கமும் கூடவே சேர்ந்து எழுந்தது.. அதை அவர்களின் மனைவிமார்கள் இனம் கண்டு கொண்டார்கள்...

'ஆஹா.. இரும்பு இளகுதே...' மீனலோசனி சுதாரித்தாள்...

"எத்தனை நேரம்தான் இந்த நாடகத்தைப் பார்த்துக் கிட்டு உட்கார்ந்திருப்பீங்க..?"

சௌதாமினி எழுந்து போய் விட்ட தைரியத்தில் அவள் கேட்க.. பிரபாவதி அவள் போட்டுக் கொடுத்த தடத்தில் கால் பதித்தாள்..

"அதுதானே.. அவங்களைப் பாருங்க.. உள்ளுக்குள்ளே பகையை வைச்சுக்கிட்டு.. வெளியே சிரிச்சு மழுப்பிக்கிறதை.. கேட்டிங்களா அக்கா.. பெரியவர் மனசுக்குள்ளே சுரேந்திரன் மேலே கோபமிருக்கு.. அவரிடம் கேட்காம சுரேனா ஒரு முடிவெடுத்திருக்காரே.. அதைப் போல சின்னவர் மனசிலயும் பெரியவர் மேலே கோபமிருக்கு.. இவர் முடிவெடுத்ததை அவர் தட்டிக் கேட்டுட்டாரே.. ஆனாலும் பாருங்கக்கா.. இரண்டு பேருமே கட்டித் தழுவிக்காத குறையாய் பேசிக்கிட்டே போகிறதை.. என்னவோ ராமர்.. லட்சுமணர் போலவேதான் போஸ் கொடுத்துக்கிட்டு போகிறாங்க... மனசுக்குள்ளே ஆயிரம் இருக்கு.."

"ஆயிரமா..? குறைச்சுச் சொல்றியே பிரபா.. அது கோடி இருக்கும்..."

"இருக்கும்.. இருக்கும்..."

யார் மனதில் என்ன இருக்கிறது என்று மகேந்திரனும் யுகேந்திரனும் நன்றாகவே அறிவார்கள்...



கோடி இருப்பது அவர்களின் மனைவிகளின் மனதில்தான் என்பதும் அவர்களுக்கு மிக நன்றாகவே தெரியும்...

நடிப்பது நரேந்திரனும்.. சுரேந்திரனும் அல்ல.. அவர்கள்தான் என்பதையும் அவர்களின் மனச்சாட்சி தெள்ளத் தெளிவாக அறியும்..

இருந்தும் அவர்கள் மனைவிகளின் பேச்சை ஆமோதித்துச் சிரித்தார்கள்...

என்ன செய்வது..? ராஜா ராஜேந்திர பூபதியின் மகன்களாக இருந்தாலும் அவர்களுடைய மனைவிகளுக்கு அவர்கள் கணவன்களாகிப் போய் விட்டார்களே.. இவற்றையெல்லாம் கண்டும் காணாமல் போனால்தானே அவர்களிடம் இருக்கும் அபத்தங்களை அவர்களின் மனைவிகள் கண்டும் காணாமல் போவார்கள்..?

குடும்ப வண்டி ஓட வேண்டாமா..?

நிவேதிதா தேவியின் குடும்பத்தை வரவேற்க மணிமுத்தாறு அரண்மனை தயாரானது..

அந்த ராஜ குடும்பத்தின் இளைய மருமகளைப் பார்க்க.. மீனலோசனியின் குடும்பமும்.. பிரபாவதியின் குடும்பமும் மணிமுத்தாறு அரண்மனைக்கு வந்து இறங்கி விட்டார்கள்.. இளைய சகோதரனின் வருங்கால

மனைவியைப் பார்க்கவென்று கூடப் பிறந்த பெண்களான மாலினி தேவியும்.. பூர்ணிமா தேவியும் குடும்பத்துடன் வந்து விட்டார்கள்..

அரண்மனை 'ஜே ஜே' என்று திருமணக் கொண்டாட்டத்துடன் இருந்தது.. இந்தக் கொண்டாட்டம் நரேந்திரனுக்கும்... வித்யாவிற்கும் திருமணம் நடந்தபோது எங்கே போய் ஒளிந்து கொண்டிருந்தது என்ற நினைவில் வித்யா லேசாக மனம் நைந்தாள்...

'நீயென்ன இந்த மாளிகையின் மகாராணியாக வேண்டும் என்றா ஆசைப்பட்டாய்..? நரேந்திரனின் மனதினில் மகாராணியாக வேண்டுமென்றுதானே ஆசைப்பட்டாய்..?' அவள் மனம் அவளை அதட்டியது...

"எப்படியிருக்க வித்யா..?"

பிறந்த வீட்டிற்கு வந்த மறுகணமே தோழியைத் தேடி வந்து விடும் பூர்ணிமா.. அன்றும் அது போல வந்து வித்யாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டாள்...

"ஃபைன்..."

இதைச் சொல்லும் போது அவள் மனம் 'பொய்' என்று கூவியது...

'நீ நல்லாவா இருக்கே..?'



பேக்டரியில் ரங்கதுரையுடனும் வீட்டில் மற்ற இரு மருமகள்களுடனும் போராடிக் கொண்டிருக்கும் அந்த வாழ்க்கையில் வித்யா தோழியைப் பார்த்து முகம் மலரச் சிரித்தாள்...

"எனக்கென்ன குறை..? நான் ரொம்ப நல்லாயிருக்கேன்..."

## 15



நதியோரம் நடந்த போது..
கூடவந்த கார் மேகம்..
மழை பொழிய வேண்டி நின்றேன்..
மண்வாசம் நுகர நின்றேன்..
-நதியோரம் நான் நடந்த போது-

வரிசை கட்டி வந்து நின்ற வெளிநாட்டுக் கார்களின் அணிவகுப்பே மதன்பூர் ராஜகுடும்பத்தின் செல்வச் செழுமையை பறைசாற்றியது.. சுரேந்திரனுக்குப் பெண் கொடுக்கப் போகும் குடும்பத்தின் குடும்ப நிலைமையைக் கணிப்பதற்காக.. மாடியில் காத்திருந்து.. மறைந்திருந்து எட்டிப்பார்த்த மீனலோசனியின் விழிகள் விரிந்தன.. பிரபாவதிக்கு அப்படியெல்லாம்

எதுவும் ஏற்பட வில்லையென்றாலும் அவள் முகத்தில் ஈயாடவில்லை...

"பிரபா..."

"அக்கா..."

"வந்திருக்கிறவங்க ரொம்பப் பெரிய இடம்தான் போல இருக்கே பிரபா..."

"அதை நினைத்தால்தான் எனக்கு பயமா இருக்குக்கா.."

"எதுக்கு இந்த பயம்..?"

"நாம என்னதான் ராஜ பரம்பரைன்னு சொல்லிக்கிட்டாலும் இவங்க பக்கத்தில் கூட நம்ம பிறந்த வீடு நிற்கவே முடியாது போல இருக்கேக்கா..."

"எனக்கும் அந்த எண்ணம்தான் பிரபா.."

"வருகிறவ நம்மை மதிப்பாளா..? மாட்டாளா..?"

மீனலோசனிக்கும் அதே எண்ணம்தான் என்றாலும்.. அவள் வேறு ஒன்றை நினைத்தாள்.. சிரித்தாள்...

"என்னக்கா.. சிரிக்கிறிங்க..?"

அவளது சிரிப்பிற்கான காரணத்தை அறியும் ஆவலுடன் பிரபாவதி கேட்டாள்...



எந்தவொரு இக்கட்டிலும் அதை மாற்றி.. மற்றவர்களை மாட்டி விடும் சாதுர்யம் படைத்த மீனலோசனி இப்போது எதை நினைத்துச் சிரிக்கிறாள்.. யாரை மாட்டி விட நினைக்கிறாள் என்று அவளுக்குத் தெரிய வேண்டாமா..?

மீனலோசனி அவளை ஏமாற்றவில்லை.. அவள் சொன்ன பதிலைக் கேட்ட பிரபாவதிக்கு ஆச்சரியம் உண்டானது.. அதை அவள் நினைத்தும் பார்க்க வில்லையே..

"ஏன் பிரபா.. நாம பெரிய குடும்பத்தில் பிறந்தவங்க.. அங்கே சுத்தி.. இங்கே சுத்தி.. இந்த மணிமுத்தாறு ராஜவம்சத்திலே பெண்ணெடுத்து.. பெண் கொடுத்து நாமும் ராஜ வம்சம்தான்னு சொல்லிக்கிறவங்க.. நமக்கே இந்த பயம் வந்தா.. வெறும் கையை வீசிக்கிட்டு வந்த அந்த வித்யாவின் கதி என்னவாகும்..?"

'ஓ..! இப்படியொன்னு இருக்கில்ல...'

பிரபாவதி மீனலோசனியைப் பார்த்துச் சிரித்தாள்.. அவளுக்கு இது தோன்றவில்லையே...

அவளைச் சொல்லியும் குற்றமில்லை.. பிரபாவதி வளர்ந்த வளர்ப்பு அப்படி.. அவளுடைய அப்பா ராஜா ரகுநாதன் பெருந்தன்மையே வடிவானவர்.. அம்மா கோசலை தேவியோ அதிர்ந்து கூடப் பேச மாட்டாள்..

அண்ணன் பிரகாஷ் ரகுநாதன் நியாயத்திற்கு பெயர் பெற்றவன்.. நரேந்திரனின் கடைசித் தங்கையான பூர்ணிமா தேவியின் நியாய குணத்திற்காகவே அவளைக் காதலித்து.. காத்திருந்து.. கை பிடித்தவன்...

இப்படிப்பட்ட வீட்டில் பிறந்து வளர்ந்த பிரபாவதிக்கு சூது.. வாதை சொல்லிக் கொடுத்தவள் மீனலோசனிதான் அவளைச் சொல்லியும் குற்றமில்லைதான்.. அவள் வளர்ந்த வளர்ப்பு அப்படி...

அவளைப் பெற்ற தந்தையான துக்காராம் மணிமுத்தாறு அரண்மனையில் பெண் கொடுத்தே ராஜ வம்சத்தைச் சேர்ந்த வம்சமென்று சொல்லிக் கொள்ளும் பரம்பரையில் பிறந்தவர்.. அவருடன் பிறந்த சௌதாமினி தேவியை ராஜேந்திர பூபதிக்கு திருமணம் செய்து கொடுத்த போதே.. அவருடைய மகளையும் அந்தக் குடும்பத்தில் திருமணம் செய்து கொடுத்து விடும் கனவுகளை வளர்த்துக் கொண்டவர்.. இத்தனைக்கும் அப்போது அவருக்கு திருமணமாகியிருக்கவில்லை...

காலப் போக்கில் அவரின் கனவுப்படியே மீனலோசனி பிறந்து.. தகப்பனின் கனவுகளை சுமந்து வளர்ந்து பெரியவளாகி மணிமுத்தாறு அரண்மனையின் வாரிசுகளில் ஒருவனைத் திருமணம் செய்யும் பருவத்திற்கு வந்த



போது மகேந்திரனைக் காதலிக்கும்படி துக்காராம்தான் அவளுக்குச் சொல்லிக் கொடுத்தார்..

"அம்மாடி மீனா.. இந்தப் பெரியவன் நரேந்திரன் இருக்கிறானே.. அவன் சுமைதாங்கிக் கல்லாய் பிறக்க வேண்டியவன்.. தப்பிப் போய் மணிமுத்தாறு அரண்மனையில் மூத்த மகனாய் பிறந்திருக்கான்.. எவனாவது கிரண்பூர் ராஜ வம்சத்துப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அந்த சமஸ்தானத்துக்கு ராஜாவாகப் போகிற வாய்ப்பை வேண்டாம்ன்னு சொல்லுவானோ.. இவன் சொல்லியிருக்கான். இந்தப் பிழைக்கத் தெரியாதவனெல்லாம் உனக்கு வேண்டாம்.."

"சரிங்கப்பா..."

"யுகேந்திரனுக்கும் உனக்கும் ஒரே வயது.. அதனால் அவன் பக்கமும் நீ பார்வையைத் திருப்பாதே..."

"ஆகட்டும்ப்பா..."

"இந்த மகேந்திரன்தான் உனக்கேத்த ஜோடி.. பிழைக்கத் தெரிந்தவன்.. அவனைப் பிடித்துக்க..."

இப்படியாகத்தானே.. மணிமுத்தாறு அரண்மனையின் வாரிசுகளில் ஒருவனைக் கணக்குப் பண்ண மகளுக்கு கற்றுக் கொடுத்தார் துக்காராம்.. அவளும் தந்தையின்

சொல்படி மகேந்திரனை தன் கைக்குள் கொண்டு வந்து விட்டாள்..

அப்போது தான் நரேந்திரனை அவளுக்கு மணமுடிக்கப் பெண் கேட்டாள் சௌதாமினி... துக்காராமும்...

"அதுக்கென்னம்மா.. உன் ஆசைப்படியே செய்துட்டால் போகுது.." என்று சொல்லி விட்டார்..

"அப்பா.." மீனலோசனி திகைத்த போது..

"பொறு மகளே.. இது ராஜதந்திரம்.." என்று மர்மமாகப் புன்னகை செய்தார்...

"என்னப்பா விசயம்..? எனக்கும் சொல்லுங்க..?" மீனலோசனி வற்புறுத்தினாள்..

"பாரும்மா.. நான் உன்னை மகேந்திரனைக் காதலின்னு சொன்னப்ப மணி முத்தாறு அரண்மனையில கடன் தொல்லை இருந்தது.. பேக்டரியும்.. மில்லும் பிரச்னையில் இருந்தது..."

"அதுக்காக..?" மீனலோசனி குழம்பினாள்..

"பொறும்மா.. நான்தான் சொல்லிக்கிட்டே வருகிறேனில்ல.. இப்ப அப்படியில்ல.. கடன் தொல்லை முடிஞ்சு.. அரண்மனையில பாலாறும்.. தேனாறும் பாய்ந்து



ஓடிக்கிட்டு இருக்கு.. அதோடு அத்தனை பொறுப்பும் நரேந்திரனிடம் இருக்கு.."

"அதனால பெரியத்தானை நான் கல்யாணம் பண்ணிக்கனும்னு சொல்கிறிங்களா..?" என்று கேட்ட மீனலோசனி அதற்கும் தயாராகத்தான் இருந்தாள்..

"அது என்ன தேவைக்கு..? அவன் உழைப்பான்.. அவன் தம்பிகள் உட்கார்ந்து சாப்பிடுவாங்க.. நீயும் அவன்கூட தியாகச் செம்மலாகனுமா..? அதற்கா நான் மகளைப் பெற்றிருக்கேன்..?"

"இப்படிச் சொல்கிறவர் எப்படிப்பா இந்தக் கல்யாணத்துக்கு சம்மதம் சொன்னீங்க..?" மீனலோசனிக்கு புரியவேயில்லை..

"அதுதான் சாணக்கியத்தனம்.. இங்கே பாரு மீனா.. நரேந்திரனுக்கும் பெண் கொடுக்க பெரிய பெரிய இடத்திலிருந்தெல்லாம் 'நான்.. நீ'ன்னு போட்டி போடறாங்க.. அப்படி ஒரு இடத்தில அவன் கல்யாணம் பண்ணிக்கிட்டா யாருக்கு நஷ்டம்..?" அவர் மகளைப் பார்த்து கேட்டார்..

இந்தக் கேள்விக்கு அவளுக்குப் பதில் தெரியவில்லை..

"யாருக்குப்பா நஷ்டம்..?" என்று திருப்பிக் கேட்டாள்..

"ம்ஹீம்.. இத்தனை நாளாய் நான சொல்லிச் சொல்லி வளர்த்ததையெல்லாம் எப்படித்தான் மறக்கிறாயோ.. நமக்குத்தான் நஷ்டம் மீனா.. அதனால நாம என்ன செய்யனும் தெரியுமா..?"

"என்னப்பா செய்யனும்..?"

"நரேந்திரனின் கல்யாணத்தை தடுக்கனும்.."

"அது எப்படிப்பா முடியும்..? நாம மாட்டேன்னா அவருக்கு வேறு இடத்தில இருந்து உடனடியா பெண் பார்த்திர மாட்டாங்களா..?"

"அதைத்தான் தடுக்கனும்னு சொன்னேன் மீனா.. உடனடியாப் பெண் பார்க்க முடியாத சூழ்நிலைக்கு நரேந்திரனையும்.. அந்தக் குடும்பத்தையும் ஆளாக்கினா..?"

தகப்பனின் கேள்வியில் மீனலோசனியின் முகம் மலர்ந்தது..

"அப்பா..!"

அப்படித்தான் நரேந்திரனைச் சுற்றி சூழ்ச்சி வலை பின்னப் பட்டது... மீனலோசனி தன் விருப்பத்திற்கு மாறாக திருமணத்தை நிச்சயித்து விட்டார்கள் என்று திருமணத்திற்கு மூன்று நாள்கள் முன்னதாக மகேந்திரனைச் சந்தித்து அழுதாள்.. இத்தனை நாள்களாக என்ன செய்தாய் என்ற கேள்வியை அவன் கேட்டு



விடாமலிருக்க.. வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதாக பொய் கண்ணீர் விட்டாள்.. மகேந்திரன் இல்லாவிட்டால் செத்து விடுவாள் என்று தேன் இருந்த பாட்டிலைக் காட்டி 'விசம்' என்று கதை சொன்னாள்..

அதுவரை காதலி துரோகம் செய்து விட்டாள் என்ற கொதிப்பில் இருந்த மகேந்திரன் குளிர்ந்து விட்டான்.. அவனுக்காக உயிர் தியாகம் (!?) செய்ய இருந்த காதலியின் உண்மைக் காதலில் (!?) மெய் சிலிர்த்து விட்டான்.. அவர்களின் தெய்வீகக் காதலை உடைக்க நினைத்த நரேந்திரனின் மீது அவனின் கோபம் திரும்பியது.. மீனலோசனி அவ்வாறு திரும்பச் செய்து விட்டாள்..

"உங்க அண்ணன்தான் என்னைப் பெண் கேட்கச் சொன்னாராம்.."

"நிஜமாகவா சொல்கிற..?"

"ஆமாம் அத்தான்.. இத்தனைக்கும் நம்ம காதலைப் பற்றி அவரிடம் ஜாடைமாடையாய் அப்பா சொன்னாராம்.."

"அதைக் கேட்டுமா.. அண்ணன் மனம் மாறவில்லை..?"

"அதுக்குப் பின்னாலேதான் இந்தக் கல்யாணத்திலே உறுதியாய் நின்னாராம்..."

"அப்படியா சொல்கிற..?"

"ஆமாம் அத்தான்.. நான் நினைக்கிறேன்.. அவருக்கு உங்க மேல பொறாமை.. வந்திருக்கும்ன்னு.."

"அது எதுக்கு...?"

"என்ன அத்தான் இப்படிக் கேட்டுட்டிங்க..? அவர் காதலில் தோற்றவர்.. நாம் காதலித்தா அவரால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியுமா..? நம்ம காதலை ஜெயிக்க அவர் விடுவாரா..?"

"மீனா..."

"ஆமாம் அத்தான்.. அவர் மனதில் விசம் இருக்கிறது.. அது உங்களுக்குப் புரியவில்லை.. வெளுத்ததெல்லாம் பால்ன்னு இருக்கறிங்க..."

"இப்பவே அண்ணனிடம் போய் கேட்கிறேன் பார்.."

"வேண்டாம்.. வேண்டாம்.. நமக்கு காரியம் முக்கியம்.. நாம் வேண்டும்ன்னா ஊரை விட்டு ஓடிறலாமா..? நீங்க மணிமுத்தாறு ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவங்க.. உங்க கல்யாணம் ஓடிப் போய் நடக்கிற கல்யாணமா ஆகிடனும்னு உங்க அண்ணன் சதி செய்துட்டாரே அத்தான்.. அவருக்கு மட்டும் ஊர்பார்க்க அரண்மனையில் கல்யாணம் நடக்கும்.. உங்களுக்கு ஒளிஞ்சு மறைஞ்சு கல்யாணமா..? ராஜா ராஜேந்திர பூபதியின் மகனுக்கு





மணிமுத்தாறு அரண்மனையில் கல்யாணம் செய்து கொள்கிற உரிமை இல்லையா..?"

"ஏன் இல்லை..? இப்போச் சொல்கிறேன் மீனா.. அதே அரண்மனையில் குறித்த முகூர்த்தத்தில் ஊர் பார்க்க உனக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கும்.. நான் நடத்திக் காட்டுகிறேன்..."

மீனலோசனி ஜெயித்து விட்டாள்.. மகேந்திரன் சொன்னதைச் செய்து விட்டான்...

## 16

நதியோரம் நடந்த போது..
அருகினிலே நீ வந்தாய்...
உன் மனதைத்தான் தந்தாய்..
இன்று ஏன் மாற்றம் கொண்டாய்..?
-நதியோரம் நான் நடந்த போது-

**ஊ**ரும்.. உலகமும் நினைத்ததைப் போல மகேந்திரன் அத்தனை சுயநலமான மனிதனில்லை.. கொட்டிக் கொட்டிக் குளவியாக்குவதைப் போல மீனலோசனி அவனை அது போல ஆக்கி விட்டாள்..

எந்த ஒரு ஆணுக்கும்.. அவனை விடத் தகுதியான ஆண்மகனைப் புறக்கணித்து நீதான் எனக்கு வேண்டும் என்று ஒரு பெண் வந்து நின்று விட்டால் மனதிற்குள் ஒரு வெற்றிப் பெருமிதம் ஏற்பட்டு விடும்.. அதுதான் மகேந்திரனின் மனதிலும் ஏற்பட்டது..

நரேந்திரன் சாதனையாளன்.. மூழ்க இருந்த மணிமுத்தாறு அரண்மனையின் கௌரவத்தைக் காப்பாற்றியவன்.. கடனில் இருந்த பேக்டரியையும்.. மில்லையும் லாபத்தில் ஓட வைத்தவன்.. அவன் புகழையே பாடிக் கொண்டிருந்த உற்றார்.. உறவினரின் மத்தியில் அவனின் தம்பிகள் அடையாளத்தை இழந்து கொண்டிருந்தார்கள்.. எங்கும் நரேந்திரனைப் பற்றிய பிரமிப்பான பேச்சே ஒலித்துக் கொண்டிருக்க... அவனுக்கு நிச்சயிக்கப் பட்ட பெண்ணோ அவனை விட்டு அவனுடைய தம்பியான நரேந்திரனை விரும்புகிறாள்..

இந்த ஒன்றே மகேந்திரனை மாற்றியது.. அவன் மீனலோசனி ஆட்டி வைத்தால் ஆடும் பம்பரமாக மாறிப் போனான்...

"எப்படி...?" மகளிடம் கேட்டார் துக்காராம்..

"இதை நான் கேட்கனும்ப்பா.. இதைச் செய்தால் இது நடக்கும்ன்னு எப்படிப்பா பிளான் போடறிங்க...?" மீனலோசனி வியந்து போனாள்..



"அது ஒருவகையான கணக்கும்மா.. அதை நீயும் இனிப்போட ஆரம்பிக்கணும்.. இது வரைக்கும் நீ என் மகள் மட்டும்தான்... இனி மணிமுத்தாறு அரண்மனையின் மருமகள்... எல்லாத்துக்கும் என் ஆலோசனையை எதிர்பார்க்காமல் நீயே எல்லாத்தையும் செய்து முடிக்கக் கத்துக்கனும்.. இப்பப் பார்த்தியா.. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிச்சிருக்கோம்.. நரேந்திரனோட கல்யாணத்தையும் நிறுத்தி விட்டோம்.. மகேந்திரனையும் நம்ம பேச்சைக் கேட்கிறதைப் போலக் கொண்டு வந்துட்டோம்.. இதுதான் கணக்குங்கிறது.. இந்தக் கணக்கை நீயும் போட ஆரம்பித்தா வாழ்க்கையில் எங்கேயோ போய் விடுவ..."

மீனலோசனி அன்று கணக்குப் போட ஆரம்பித்தவள்தான்.. இன்றுவரை அதை நிறுத்த வில்லை.. துக்காராமின் பாசறையில் கணக்குப் போடக் கற்றுக் கொண்டவள் சாதுர்யமாக அதை வாழ்க்கையில் கையாண்டாள்.. மகேந்திரனைப் பொறுத்தவரை அவள் போட்ட கணக்குகள் அப்படியே நிறைவேறின.. மகேந்திரனின் வழிமுறையைப் பின்பற்றி யுகேந்திரனும் திருமணம் பண்ணிக் கொண்டபோது மீனலோசனி மனதுக்குள் 'சபாஷ்' போட்டுக் கொண்டாள்..

பிரபாவதியையும் அவளது கணக்கைப் பின்பற்ற வைத்தாள்...

மனிதர்கள் போடும் கணக்குகளே நிறைவேறிக் கொண்டிருந்தால் தெய்வம்.. பார்த்துக் கொண்டே யிருக்குமா...?

மீனலோசனியின் கணக்கிற்கு அப்பாற்பட்டு எங்கோ இருந்த வித்யா மானசீகமாக நரேந்திரனைக் காதலிக்க ஆரம்பித்தாள்.. அந்தக் காதல் மீனலோசனியின் காதலைப் போல கணக்குப் போடும் காதலாக இல்லாமல் புனிதமான காதலாக இருந்து வைத்ததில் அவளின் காதல் ஜெயித்து விட்டது...

மீனலோசனியின் கணக்கு பொய்த்துப் போனது.. நடக்காது என்று அவள் நினைத்திருந்த நரேந்திரனின் திருமணம் நடந்தே விட்டது.. அதிலும் அதிபுத்தி சாலியான.. நரேந்திரனை அவனுக்காக மட்டுமே நேசிக்கிற வித்யா அவனுக்கு மனைவியாகி விட்டாள்..

அதை மீனலோசனியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அதிலும் எந்த அரண்மனையின் மருமகளாக வேண்டும் என்று பிறந்தது முதல் அவள் தவமிருந்தாளோ.. அந்த அரண்மனை வித்யாவின் உடைமையாகி விட்ட போது அவளுக்கு மூச்சே



நின்று விடும் போல ஆகிவிட்டது.. மகேந்திரன் வெட்டி அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்த பேக்டரியை விட்டு வெளியேற்றப் பட்டான்.. இதைவிடக் கொடுமையாக அவன் பொய் கணக்கு எழுதி கொள்ளையடித்துக் கொண்டு வந்த பண வரத்து நின்று போய் விட்டது...

'எல்லாம் யாராலே...? இந்த வித்யாவினாலே...'

மீனலோசனியின் மனதில் வன்மம் வந்தது.. அவள் வித்யாவின் சிறகையொடித்து மூலையில் தள்ள நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்...

பிரபாவதிக்கு அந்த அளவிற்கு வன்மமில்லை.. வித்யாவின் மீது அவளுக்கு கோபமிருந்தாலும் அவளுடைய அண்ணன் பிரகாஷின் மனைவியும் நரேந்திரனின் செல்லத் தங்கையுமான பூர்ணிமாவின் உயிர்தோழி வித்யா என்பதினால் பிரபாவதி தன் கோபத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அடக்கியே வாசித்தாள்...

"ஆக அந்த வித்யாவோட கொட்டத்தை அடக்க ஒருத்தி வந்தாச்சுன்னு சொல்லு.." மீனலோசனியின் கண்கள் மின்னின...

"வருகிறவ சுரேந்திரனுக்கு மனைவியாகப் போகிறவ... அவனோ பெரியண்ணனுக்கு பாத பூஜை பண்ணுகிறவன்

அதே மரியாதையை பெரியண்ணிக்கும் கொடுக்கிறவன்.. அப்படியிருக்கும் போது அவனுடைய மனைவியை வித்யாவை வெறுக்கும்படி விட்டு விடுவானா...?"

"உன் ஹஸ்பெண்டும்.. என் ஹஸ்பெண்டும் கூடத்தான் பெரியத்தானுக்கு பாத பூஜை பண்ணிக்கிட்டு இருந்தாங்க... கல்யாணம்ன்னு ஒன்று நடந்து நாம அவங்க வாழ்க்கைக்குள்ளே வந்த பின்னாலே அதை நடக்க விட்டோமா...?"

"ஆமாமில்ல..."

"ஆமாம்தான்.. இல்லையென்ற வார்த்தையே இங்கே வரக்கூடாது.."

"நாம செய்ததை மதன்பூர் மகாராஜாவின் மகளும் செய்வான்னு என்ன நிச்சயம் அக்கா...?"

"அங்கே பார்.. அவள் கண்ணைப் பார்..."

மீனலோசனி சொல்ல இவள் எங்கே பார்க்கச் சொல்கிறாள் என்ற நினைவுடன் பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்தாள் பிரபாவதி..

அங்கே மிக அலட்சியமான பார்வையுடன் காரிலிருந்து இறங்கி நின்றாள் நிவேதிதா தேவி.. அவள் கண்களில் தெரிந்த அந்த அலட்சியத்தை மீனலோசனியின் கண்கள் கூடப் பிரதிபலித்ததில்லை...



"இவதானே நிவேதிதா...?"

"இவதான் பிரபா.. நாமதான் அத்தை ரூமில இருந்த படத்தில் பார்த்தோமே..."

"இந்த சுரேந்திரன் செய்ததை நினைச்சுப் பார்த்தீங்களாக்கா...?"

"அதை நினைத்தால்தான் என் வயிறு எரியுதே பிரபா.. என் வீட்டுக்காரரைப் பார்த்து பேக்டரியை விட்டு வெளியே போன்னு சொன்ன ஆளில்லையா அவன்...?"

'நீ அதிலேயே இரு....' கடுப்பானாள் பிரபாவதி

"நான் அதைச் சொல்லலைக்கா..."

"வேற எதைச் சொன்ன..?"

"இந்த வீட்டுக்குள்ளே அத்தையும்.. பெரியத்தானும்.. வித்யாவும் மட்டுமா இருக்கிறாங்க...? நாமள்ளாம் இல்லையா...? நம்ம கண்ணிலே அவன் காதலியோட போட்டோவைக் காட்டாம அவங்க கண்ணிலே மட்டும் காட்டியிருக்கான் பார்த்தீங்களா...? நான் அதைச் சொன்னேன்..." எடுத்துச் சொன்னாள் பிரபாவதி..

"நம்மைத்தான் அவன் கணக்கிலேயே எடுத்துக்கலையே பிரபா..." மீனலோசனி வயிறெரிந்தாள்..

"அப்படியிருக்கப்ப அவனுக்கு மனைவியாகப் போகிற இந்த நிவேதிதா மட்டும் நம்மைக் கண்டுக்குவாளா...?"

"நாம கண்டுக்க வைப்போம்..." கண்சிமிட்டினாள் மீனலோசனி..

"எப்படிக்கா..?" பிரபாவதி ஆவலுடன் கேட்டாள்...

"அ.. அ... எல்லாத்தையும் முதலிலேயே போட்டு உடைத்து விட்டால் எப்படி பிரபா...? பொறுத்திருந்து பார்..." மர்மச் சிரிப்புடன் சொன்னாள் மீனலோசனி..

'இவ எதையும் செய்வா.. அண்ணன் சொல்வதைப் போல எப்பவும் இவளிடம் நாம ஜாக்கிரதையாகத்தான் இருக்கனும்...'

எப்போதும் போல அப்போதும் நினைத்துக் கொண்டாள் பிரபாவதி...

"சரி சரி... இங்கேயே நின்றுக்கிட்டிருந்தா எப்படி பிரபா..."

"வேற என்ன செய்கிறதுக்கா...?"

"அடக்கடவுளே..! இது கூட உனக்குத் தெரியாதா..?" மீனலோசனி மட்டம் தட்ட.. பிரபாவதிக்கு கடுப்பு வந்தது..



"உங்களைப் போல எல்லாம் தெரிந்தவங்களா என்னை எங்க வீட்டிலே வளர்த்து விடலையேக்கா..." பணிவுடன் சொல்வதைப் போல மறைமுகத் தாக்குதலைக் கொடுத்தாள் பிரபாவதி...

'ஜாடை பேசுகிறா...'

பல்லைக் கடித்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சாகசமாக சிரித்து வைத்த மீனலோசனி உடனடியாக வெள்ளைக் கொடியை பறக்கவிட்டாள்...

"அது வேற ஒன்றுமில்லை பிரபா.. அவங்க வீட்டுக்குள்ளே வரும்போது நாம மூத்த மருமகள்களாக லட்சணமாக அரண்மனையின் ஹாலில் நிற்க வேண்டாமா...? அப்போத்தானே அத்தை அவங்களுக்கு நம்மை அறிமுகப் படுத்துவங்க..? இல்லைன்னா கூப்பிட்டா அறிமுகப் படுத்தி வைக்கப் போகிறாங்க..?"

மீண்டும் மீனலோசனியின் புத்தி கூர்மையில் அயர்ந்து போனாள் பிரபாவதி..

எத்தனை தடவைதான் இது நமக்குத் தோணலையே என்று பிரபாவதி நினைத்துக் கொள்வாள்...?

அவளுக்கே அது அலுப்பாகி விட இது வேலைக்கு ஆகாது என்ற நினைவுடன் அதை கை விட்டாள்..

"இப்படிச் சொல்லியிருந்தா முதலிலேயே அத்தையுடன் நாமும் சேர்ந்து கீழேயே நின்றிருக்கலாமே..?"

"அது என்ன தேவைக்கு...?"

இவள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்று மண்டை காய்ந்து போனாள் பிரபாவதி...

"என்னக்கா நீங்க இப்படியும் சொல்கிறிங்க.. அப்படியும் சொல்கிறீங்க..? என்னதான் சொல்ல வர்றீங்க..?"

உண்மையில் ஏன் அக்கா இப்படிக் கழுதைபோல முன்னால் போனாக் கடிக்கறிங்க.. பின்னால் வந்தால் உதைக்கறிங்க என்றுதான் கேட்க ஆசைப்பட்டாள் பிரபாவதி..

அப்படிக் கேட்டு.. அதனால் மீனலோசனி முகம் திரும்பிக் கொண்டு விட்டால் இது போன்ற ஆலோசனைகளுக்கு பிரபாவதி எங்கே போவாள்..?

தன் கையே தனக்கு உதவி என்று நிமிர்ந்து நிற்க அவளென்ன வித்யாவா...?

அதனால் சொல்ல நினைத்ததை வேறு வகையில் சொன்னாள் பிரபாவதி.. அதில் மகிழ்ந்துபோன மீனலோசனி மிகக்கெத்தாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

'மாடு' என்றால் திட்டு.. அதையே 'பசுவைப் போல..' என்று சொன்னால் பாராட்டு.. மிக அழகான உலகம் இது..!



## 17

நதியோரம் நடந்த போது
நிலவின்மீது ஆசை கொண்டேன்..
நான் தேடிச்சென்ற அந்தநாளில்..
அம்மாவாசை வந்ததும் ஏன்...?
-நதியோரம்.. நான் நடந்த போது-

"நாமளும் அத்தை கூடச் சேர்ந்து கீழே நின்றிருந்தா வந்தவங்களை கை கூப்பி வாங்க.. வாங்கன்னு அழைக்கனுமில்ல...? அது என்ன தேவைக்கு..?"

"ஓ... சரியாச் சொன்னிங்கக்கா.. வருகிறவங்க என்னதான் மதன்பூர் ராஜவம்சம்ன்னாலும் நாம இந்த அரண்மனைக்கு மூத்த மருமகள்களாய் வந்தவங்களாச்சே.."

"அதேதான்.. அதனாலதான் முதலிலேயே கீழே போகலை.."

"ஆனா அந்த வித்யா அத்தை கூட நின்னு சலாம் போட்டுக்கிட்டு இருப்பாளே..."

"அது அவ தலைவிதி... நம்ம தலைவிதியே வேற.. அவங்க உள்ளே வந்து ஹாலில் உட்காரனும்.. நாம ஒய்யாரமா மாடிப்படியில் இறங்கனும்.."

"அது எதுக்குக்கா...?"

"அப்பத்தானே வந்திருக்கிறவங்க நம்மை திரும்பிப் பார்ப்பாங்க...?"

மீனலோசனியின் அறிவுக் கூர்மையை நினைத்து வியந்து வியந்து பிரபாவதிக்கு தலைவலியே வந்துவிட்டது..

"போதும்க்கா.. இனித் தாங்காது.."

"இதுக்கே தாங்காதுன்னா.. இன்னும் நிறைய இருக்கே பிரபா.."

"இன்னுமா...? இப்பவே எனக்கு கண்ணைக் கட்டுதுக்கா.."

"கண்ணைச் சிமிட்டிக்கோ... இந்நேரம் கீழே எல்லோரும் உட்கார்ந்திருப்பாங்க.. அந்த வித்யா வேலைக்காரியைப் போல வந்தவங்களுக்கு ஜீஸ் கொடுமுத்துக்கிட்டு இருப்பா.. நாம மாடியிறங்க இதுதான் நல்ல சமயம்..."



மீனலோசனி சொன்னதைப் போல்தான் நடந்தது.. அவர்கள் மாடியிறங்கியபோது.. ஹாலில் அமர்ந்திருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்...

"இதுதான் என் இரண்டாவது மருமகள்.. மீனலோசனி.."

சௌதாமினி அறிமுகத்தை ஆரம்பித்து வைக்க.. ரகசியமாக பிரபாவதியைப் பார்த்த மீனலோசனி கிசுகிசுப்பாக...

"எப்படி..?" என்று கேட்டுவிட்டு கண் சிமிட்டினாள்..

பிரபாவதி பதில் சொல்லாமல் வந்திருந்தவர்களை பார்வையிட்டாள்... பெரிய மீசையுடனும் நரை முடியுடனும் இருந்த மிடுக்கான பெரியவர்தான் மதன்பூர் ராஜாவான கங்காதர் ராவ் என்று பிரபாவதியின் காதோரமாக மீனலோசனி கூறினாள்.. அவளுடைய மனைவி காயத்ரி தேவியென்ற கூடுதல் தகவலையும் சேர்த்துக் சொன்னாள்..

"பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறது அவருடைய மகனாம்.. பெயர் கௌதம் ராவாம்..."

அடுத்த தகவல் பறந்து வர.. இவளும் நம்மோடுதானே இருந்தாள் இந்த விவரமெல்லாம் இவளுக்கு எப்படித் தெரிந்து என்ற மலைப்பு பிரபாவதியின் மனதில் எழுந்து தொலைத்தது..

"அவதான் நிவேதிதாவோட அக்காவாம்.. பெயர் ஸ்வாதிகா தேவியாம்.."

மீனலோசனி கண்ணால் சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தபோது அந்த ஸ்வாதிகா அமைதியான நதியைப் போல அமர்ந்திருந்தாள்..

'இவளுக்கு இப்படியொரு அக்காவா..!' பிரபாவதிக்கு ஆச்சரியமாக இருந்தது..

அது எப்படி அமைதியான நதியைப் போன்றவளும்.. ஆர்ப்பாட்டமான அருவியைப் போன்றவளும் கூடப் பிறந்தார்கள்..?

நிவேதிதாவைப் பாராததைப் போல இவர்கள் பார்க்க அவளோ.. அவர்களைப் பார்ப்பது கூட தகுதி குறைவான செயல் என்பதைப் போல அலட்சியத்துடன் முகம் திருப்பிக் கொண்டாள்...

"என்ன திமிர்..." பிரபாவதிக்கு பற்றிக் கொண்டு வந்தது..

"விடு பிரபா.. இப்ப நமக்கு இது முக்கியமில்ல.. இவகிட்ட வித்யா மாட்டனும்... அதுதான் முக்கியம்.."

நிவேதிதா வித்யாவையும் மதிக்கவில்லை.. ஆனால் வித்யா அதைப் பொருட்படுத்தவில்லை.. உன்னையும் உன் வீட்டினரையும் உபசரிப்பது என் கடமை.. அதைத்தான் செய்கிறேன் என்ற ரீதியில் அவள் உள்ளே போய்விட்டாள்.. மதிய விருந்தின் போதும் அப்படித்தான்.. வித்யா பரிமாற முனைந்த போது நிவேதிதா எரிச்சலை அப்பட்டமாக முகத்தில் காட்டிக் கையை நீட்டி தடுத்தாள்.. வித்யா ஏனென்று கூடக் கேட்கவில்லை.. சட்டென்று அவள் பக்கத்தில் இருந்த ஸ்வாதிகாவின் தட்டில் பரிமாறிவிட்டு நகர்ந்து விட்டாள்..



விருந்தினர்கள் மாலை வரை இருந்தார்கள்.. அரண்மனையைச் சுற்றிப் பார்த்தார்கள்.. பேக்டரிக்கு போய் வந்தார்கள்.. கிளம்பும் போது.. கங்காதர்ராவ் சௌதாமினியைப் பார்த்து

"நீங்க எப்ப மதன்பூர் வருகிறீங்க..?" என்று கேட்டார்....

"சம்பந்தி.. இதை என் பெரிய மகன்தான் முடிவு செய்யனும்.." சௌதாமினி சொன்னாள்..

நிவேதிதாவின் முகம் சுருங்கியது..

"வாட் இஸ் திஸ் டாட்..." என்று கங்காதர்ராவின் முகம் பார்த்தாள்..

"என்னம்மா...?"

"இவங்கதானே சுரேனைப் பெற்றவங்க... இவங்க முடிவு சொல்லாம.. எதுக்காக சுரேனின் அண்ணனை இதில் இன்வால்வ் பண்றாங்க...?"

மீனலோசனியின் முகத்தில் பல்ப் எரிந்தது..

"சபாஷ் பிரபா.." என்று கொழுந்தனின் மனைவியிடம் குதூகலித்தாள்..

"சபாஷ் மீனான்னுதான் ஒரு பழைய படம் இருக்குன்னு என் பாட்டி சொல்லியிருக்காங்க.." பிரபா நொடித்தாள்

"அதை விடு பிரபா.. நடக்கிறதை கவனி..."

"கவனிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன்..."

"இந்த மதன்பூர் பொண்ணு மணி முத்தாறு அரண்மனையை தலைகீழாய் மாற்றிடும் போல இருக்கே.."

"மாற்றம் ஒன்று தானேக்கா மாற்றமில்லாதது..."

"எப்பேர்பட்ட வார்த்தைகள்.. எதற்காக பயன்டு-துன்னு பார்த்தியா.."

மீனாவின் கிண்டலில் பிரபா அவளை முறைத்தாள்.. நிவேதிதாவின் கேள்வியில் சுரேந்திரன் அவளை முறைத்தான்.. எதையோ பேசப் போனவனை பார்வையாலேயே தடுத்த சௌதாமினி இளைய



மருமகளாக வரப்போகிறவளிடம் மென்மையாக முறுவலித்தாள்...

"இந்த வீட்டில் எல்லாமே நரேந்திரன்தான்ம்மா.. நான் பெற்றவளாக இருக்கலாம்.. வளர்த்ததெல்லாம் அவன்தான் அவன் அண்ணன் மட்டுமில்லை.. தாயுமானவன்.. அதனால அவன் சொல்படிதான் இங்கே எல்லாமே நடக்கும்..."

"எல்லாமேன்னா..?" நிவேதிதா புருவங்களை உயர்த்த சௌதாமினிக்குப் பதிலாக சுரேந்திரன் பேசினான்..

"எல்லாமேன்னா.. எல்லாமும்தான் நிவி..."

"நம் கல்யாணமும் இதில் அடங்குமா சுரேன்...?"

"ஷ்யூர்..."

அழுத்தமான சுரேந்திரனின் பதிலில் நிவேதிதாவின் முகம் மாறியது..

"சப்போஸ்.. உங்க அண்ணன் நம்ம கல்யாணத்துக்கு சம்மதிக்கலைன்னா...?"

நிவேதிதாவின் கேள்வியை கங்காதர்ராவே விரும்பவில்லை.. அவர் முகம் சுளித்து மகளை அதட்டினார்..

"என்ன நேரத்தில் எதைப் போசற நிவேதா..?"

"டாட்.. இவர் என்னைக் காதலிக்கிறவர்.."

"ம்ப்ச்.. பெரியவங்க பேசும்போது நீ அமைதியாய் இருக்க கற்றுக் கொள்.. ஸ்வேதிகாவைப் பார்த்தாவது நீ தெரிந்து கொள்ள வேண்டாமா...?"

வித்யாவிற்கு அங்கே நிலவிய பேச்சு சங்கடத்தைத் தந்தது.. நரேந்திரன் அங்கே இல்லை.. அவசர வேலையென்று திருநெல்வேலி வரை போயிருந்தான்..

'நல்ல வேளை.. அவர் முன்னால் இந்தப் பேச்சு நடக்கலை..' வித்யா ஆறுதல் பட்டுக் கொண்டாள்...

"என்னையே சொல்லாதீங்க டாட்.. இன்றைக்கு நாம் வருகிறோம்ன்னு இவரோட அண்ணனுக்குத் தெரிந்திருக்குமில்லையா...? அப்படியிருந்தும் அவர் இங்கே இல்லை.. அவர் வந்து முடிவு சொல்கிற வரைக்கும் நாம காத்திருக்கனுமா..?"

கங்காதர் ராவும் அதை மனதிற்குள் குறித்து வைத்திருந்தார்.. அவரின் கண்பார்வை படுவதற்காக எத்தனையோ கோடிஸ்வரர்கள் காத்திருக்க அவர் நரேந்திரனைச் சந்திப்பதற்காக மதன்பூரிலிருந்து கிளம்பி மணி முத்தாறுக்கு வந்திருக்கிறார்.. அப்படி வந்தவரை வரவேற்க நரேந்திரன் அங்கே இல்லையென்றால் அதற்கு என்ன அர்த்தம்...?



அதை அவர் வெளியே சொல்லி விட முடியாது.. அவரது உயரத்திற்கு அது அழகல்ல..

"நிவேதிதா.. அவருக்கு அவசர வேலை இருந்திருக்கலாம்.."

அவரின் தன்மையான பேச்சில் சுரேந்திரனின் கோபம் கொஞ்சம் குறைந்தது..

"அப்சல்யுட்லி யு ஆர் ரைட் அங்கிள்.. அண்ணன் மிக முக்கியமான அவசர வேலைக்காக திருநெல்வேலி வரைக்கும் போயிருக்கிறார்.. இப்போது வந்துவிடுவார்.."

"எப்ப சுரேன்.. அப்பாவும்.. நாங்களும்.. கிளம்பிப்போய் மதன்பூரில் ரீச் ஆனபின்னாலா..?"

"நிவி.. நான் உன் அப்பாவுடன் பேசிக் கொண்டிருக்கிறேன்.."

"ஊடே நான் பேசக் கூடாதுன்னு சொல்கிறீங்களா..?"

"தெரிந்தால் சரி..."

"வெரிகுட்... வி ஆர் லவ்வர்ஸ்.. குட் ஜோக்.."

சௌதாமினிக்கும் அதே கவலைதான்...

சுரேந்திரனும் நிவேதிதாவும் காதலர்கள்... ஆனால் அவர்களின் மோதல் அந்தக் காதலைச் சொல்லவில்லையே..

அந்த நேரத்தில் நரேந்திரன் அங்கேயிருந்தால் தேவலையென்று அவள் மனம் சோர்ந்தது.. அவள் மனது சென்று தூது சொல்லியதைப் போல நரேந்திரன் வந்து சேர்ந்து விட்டான்...

"அதோ நரேந்திரனே வந்து விட்டானே.." சௌதாமினி உற்சாகமானாள்..

"பெரிய பில்ட் அப்தான்.."

நிவேதிதா வாய்க்குள் முணுமுணுத்ததை மீனலோசனி கண்டுபிடித்து பிரபாவதியின் காதோடு சொன்னாள்.. நிவேதிதாவின் நரேந்திரனின் மீதான எதிர்ப்புணர்வு குறித்து அவர்களுக்குள் சந்தோசம் ஊற்றெடுத்தது..

நரேந்திரன் அவசரமாக உள்ளே வந்து கங்காதர்ராவிடம் கை குவித்து வணக்கம் சொன்னான்...

"ஐ ஆம் ஸாரி.. உங்களை வரவேற்க இங்கே இருக்க முடியாமல் போய் விட்டது.. தவிர்க்க முடியாத அவசர வேலை.."

அவன் வருத்தம் தெரிவித்த விதத்தில் கங்காதர்-ராவுக்கும் அவரின் குடும்பத்திற்கும் அதுவரை மனதிலிருந்த எரிச்சல் உணர்வு மறைந்து ஓடிவிட்டது.. நிவேதிதாவின் மனதிலிருந்து மட்டும் அது ஓடவில்லை..



# 18

நதியோரம் நடந்த போது...
நட்புசொல்லி வந்த தோழி..!
பாரம் சுமக்க நானிருக்க...
பரிதவிப்பில் ஏன் கரைந்து போனாய்..?
-நதியோரம் நான் நடந்த போது-

மேகங்கள் சூழ்ந்த ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தாள் வித்யா.. சற்றுமுன் நிர்மலமாக இருந்த வானத்தில் எப்போது கார்மேகங்கள் வந்து சூழ்ந்தன என்று அவளால் அனுமானிக்க முடியவில்லை..

"எதைப் பார்க்கிற வித்யா..?" பூர்ணிமா கேட்டாள்..

"இல்லை.. நாம வந்தப்ப வானம் தெளிவாத்தானே இருந்துச்சு..? எப்ப மழைமேகம் வந்துச்சுன்னு தெரியலையே.." வித்யா வானத்தைப் பார்த்தபடி சொன்னாள்..

"நீயென்ன வானிலை ஆராய்ச்சியா பண்ற..?" சிரித்தாள் பூர்ணிமா.. அந்தச் சிரிப்பு வித்யாவைத் தொற்றிக் கொள்ளவில்லை.. ஏதோ ஓர்விதமான சிந்தனையுடனே இருந்தாள்.. அதை பூர்ணிமாவும்

கவனித்தாள்.. அவளது நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன..

"அப்புறம்...?"

பூர்ணிமாவின் கேள்வியில் அவளை நிமிர்ந்து பார்த்தாள் வித்யா.. அவள் எதைக் கேட்கிறாள் என்று வித்யாவிற்கு புரியவில்லை..

"என்னடி..?"

"சொல்லுன்னு சொன்னேன்..."

"எதை...?"

"உன் மண்டைக்குள் குடைந்து கொண்டிருக்கும் கவலைகளை.."

வித்யாவின் தலையைத் தொட்டுக் காட்டி தலை சாய்த்துச் சிரித்தாள் பூர்ணிமா..

"ஏய்ய்..." வித்யாவும் கூடச் சேர்ந்து சிரித்தாள்.. ஆனால் அந்தச் சிரிப்பில் உயிர்ப்பில்லை..

"வித்யா.."

"ஊம்...?"

"பேக்டரியில் தொழிலாளர் பிரச்னையை அந்த ரங்கதுரை கிளப்பி விடுகிறானாமே.."

"யெஸ்.. பட்.. ஐ கேன் மேனேஜ்.. டோன்ட் ஒர்ரி..."



"அதுக்குப் பின்னாலே மகியண்ணனின் வேலையிருக்காமே.."

"இதை உனக்கு யார் சொன்னது...?"

"நீ ஏண்டி சொல்லலை...?"

"இதுதான் என் கேள்விக்கான பதிலா...?"

"நீ சொல்லியிருக்க வேணாமா வித்யா...?"

"ஏய்ய்.. இது பெரிய விசயமில்லை பூர்ணி.."

"பெரிசோ.. சிறிசோ.. பிராப்ளம் வந்திருக்கு.. அதை என்னிடம் பகிர்ந்துக்கனும்னு நீயேண்டி நினைக்கலை...?"

பூர்ணிமாவின் மனத்தாங்கலில் வித்யாவின் மனம் நெகிழ்ந்தது.. இதுதான்.. இந்த அன்புதான்.. வித்யாவைக் கட்டிப் போட்டது.. யாரிடமும் ஒட்டிப் பழகாத வித்யாவை பூர்ணிமாவின் வீட்டில் தங்கிப் படிக்க ஒப்புக் கொள்ள வைத்தது.. பார்த்துக் கொண்டிருந்த வேலையையும்.. பார்க்கப் போன வேலையையும் துறந்துவிட்டு பூர்ணிமாவுக்காக ஊர் விட்டு ஊர் வரச் செய்தது..

"பூர்ணி.." வித்யா தோழியைக் கட்டிக் கொண்டாள்..

"நீயா தனியா மனதுக்குள்ளே வைத்துக்கிட்டு மறுகணுமா...? நான் உனக்கு இல்லையா...? உன் வருத்தத்தை என்னிடம் சொல்லனும்னு ஏண்டி உனக்குத்

தோணலை...? பிரகாஷ் சொல்லி நான் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு..."

"அண்ணன் சொன்னாரா...? அவருக்கு எப்படித் தெரியுமா..?"

"அவருக்கு எல்லாம் தெரியும்.. யார் அவர்..?" பெருமையுடன் சிரித்தாள் பூர்ணிமா..

"அதைச் சொல்லு.. ஆணைப்பட்ட பூர்ணிமா தேவியின் காதலைப் பெற்ற வீராதி வீரணாச்சே.." வித்யாவும் கூடச் சேர்ந்து சிரித்தாள்...

இப்போது அவளின் சிரிப்பில் உயிர்ப்பு வந்திருந்தது..

"என்னவோ சரித்திர கலைத்து கதாநாயகனைச் சொல்கிறதைப் போல இருக்கே.." பூர்ணிமா கண் சிமிட்டினாள்..

"இல்லையா பின்னே...?" வித்யா பதிலுக்கு கண்சிமிட்டினாள்..

"சொல்லு.. சொல்லு... சொல்லு..."

"எதைடி சொல்லச் சொல்கிற...?"

"அவர் எந்தக் காலத்து கதாநாயகன்..?"

"சோழர் காலத்து கதாநாயகன்.."

"ராஜராஜ சோழனா...? ராஜேந்திர சோழனா...?"



"இரண்டும் இல்லை.. ராஜராஜ சோழனின் நண்பன்.."

"யு மீன் வந்திய தேவன்...?"

"யா..."

"இதைப் பாருடா.. அப்ப நான்தான் குந்தவையா..?"

"இல்லையா.. பின்னே...?"

"ஓ.. அந்தக் குந்தவை தம்பிக்குத்தானே சப்போர்ட் பண்ணினா...? எனக்கு எல்லோருமே அண்ணன்களாச்சே.."

"இந்தக் குந்தவை பெரியண்ணனுக்கு சப்போர்ட் பண்ணுகிறவளாச்சே..."

இருவரும் மீண்டும் சேர்ந்து சிரித்தார்கள்.. வானத்தில் மேகங்கள் சூழ்ந்து.. இப்போது மழை வரவா.. இல்லை இரு வினாடிகள்.. கழித்து வரவா என்று கேட்டுக் கொண்டிருந்தன..

"மழை வரப் போகுது பூர்ணி..."

"வரட்டுமே... உனக்கு ஞாபகம் இருக்கா வித்யா.. சென்னையில் நாம படித்துக்கிட்டு இருந்த காலத்தில் மழை வந்தால் நாம ரெண்டு பேரும் மொட்டை மாடிக்கு ஓடிப் போய் நின்னு மழையில் நனைவோமே.."

"மறக்க முடியுமா...?"

அந்த நாள்களின் நினைவில் மனம் நனைந்தாள் வித்யா... எத்தனை இனிமையான நாள்கள் அவை.. பாதங்கள் கொப்பளிக்க சுடு மணலில் நடந்து வந்தவளுக்கு பாலைவனச் சோலையைத் தந்த நாள்கள்..

"நீயும்.. நானும் சொட்டச் சொட்ட நனைந்துக் கிட்டு கண்ணம்மா சித்தி போட்டுத் தந்த சூடான டீயைக் குடிப்போமே.. அந்த 'டீ'யின் ருசி வேற எந்த 'டீ'க்கும் இருந்ததில்லை தெரியுமா.."

"ஆமாமாம்..."

"அந்த மொட்டைமாடியின் நினைவுகள் என்னைக்கும் மனதை விட்டுப் போகாது வித்யா.."

"ஆமாமாம்.." வித்யா முணுமுணுத்தாள்...

அவள் மனதில் அந்த நிலாக்கால நினைவு எழுந்தது.. பௌர்ணமியின் முழு நிலவின் ஒளியில்.. அந்த சென்னை வீட்டின் மொட்டை மாடியில்.. கோட்டுச் சித்திரம் போல் நின்று கொண்டிருந்த நரேந்திரன் தோன்றினான்.. அவனும் அவளும் உணர்ந்த மனதின் அலைகள் நினைவில் வந்தன..

"மறக்க முடியாதுதான் பூர்ணி.." வித்யாவின் விழிகள் கனவில் மிதந்தன..



"பேசாமல் அந்த நாள்களிலேயே நாம் இருந்திருக்கலாம் வித்யா.." குழந்தை போல பூர்ணிமா பேசினாள்..

"நடக்கிறதைப் பேசுடி.." வித்யா அவள் தோளில் செல்லமாகத் தட்டினாள்..

"அப்படிங்கற...?"

"அப்படித்தான்..."

"அப்போச் சொல்லு.. வீட்டுக்குள்ளே மீனா அண்ணியும்.. பிரபா அண்ணியும்.. உள் வீட்டுக் கலவரத்தை வெடிக்க வைத்துக்கிட்டு இருக்காங்களாமே...?"

"இது என்ன புதிதா...?"

"இருக்கட்டும்டி.. இதுக்க ஒரு முடிவு வேணாமா..?"

"சிந்துப் பாத்தின் கன்னித்தீவுக்கு கூட ஒரு முடிவு வந்திரும்.. இதுக்கு வராது.. விடு பூர்ணி.."

"அம்மாவைச் சொல்லனும்.. பேசாமல் மகியண்ணனையும் யுகே அண்ணனையும் தனிக்குடித்தனம் போக விடலாமில்லையா...?"

"அதுதான் தாய் மனசு..."

"என்னவோ போடி.. எனக்கு உன்னை நினைத்தால் தான் கவலையாய் இருக்கு.."

'இது இவளின் என் மீதான தாய் மனசு...'

வித்யா தோழியின் தோளில் சாய்ந்தாள்.. தாயில்லாத அந்தப் பேதையை.. தாய் போல அரவணைத்துக் கொண்டாள் பூர்ணிமா...

"நீ கவலைப்படாதே பூர்ணி.. உன் அண்ணன் இருக்கார்.. அவர் கண்ணுக்குள் வைத்து என்னைப் பார்த்துக்குவார்..."

"அந்த தைரியத்திலதான் இவங்க மத்தியிலே உன்னை விட்டுட்டு.. தென்காசிக்குப் போக என்னால முடியுது..."

"பேக்டரியைப் பத்திப் பிரச்னையில்லை.. ரங்கதுரை அடிப்படையிலே நல்லவன்தான்.. அவனை உங்க மகியண்ணன் தூண்டி விட்டுக்கிட்டு இருக்கிறார்.. அதை அவன் என்னைக்குத் தெரிஞ்சிக்கிறானோ.. அன்னைக்கு நிலைமை சரியாகிவிடும்.."

"அந்த நாள் எப்போவரும்..?"

"வரும் போது வரும்.."

"அதுவரை..?"

"நான் பார்த்துக்குவேன் பூர்ணி.."

லேசான தூறல் பூச்சாரலாய் அவர்கள் மீது விழுந்தது.. அவர்கள் இன்பமாக உணர்ந்தார்கள்.. சற்றுத் தொலைவில்



தெரிந்த நதிநீர் வெள்ளி ரிப்பனைப் போல ஓடிக் கொண்டிருந்தது.. அந்தச் சூழ்நிலை அவர்களின் மனதில் ரம்யத்தை அளித்தது.. அவர்கள் ஏதேதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.. நட்புடன் அளவளாவுவதில் உள்ள சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள் வித்யா.. அவர்களின் பேச்சு சுரேந்திரனின் திருமணத்தின் பக்கம் திரும்பியது..

"எனக்கு ஒன்னுதான் புரியலை வித்யா..."

"அந்த ஒன்னு என்னன்னு நீயே சொல்லிரு.."

கலகலத்துச் சிரித்தாள் வித்யா.. ஏனோ பூர்ணிமா அந்தச் சிரிப்பில் இணைந்து கொள்ளவில்லை...

"என்னடி..?" வித்யா புருவங்களை உயர்த்தினாள்..

"நம்ம சுரேன் அண்ணா.. எப்படிப் போய் இவளைத் தேடிப் பிடிச்சுக் காதலித்தான்..?"

இதற்கு வித்யாவினால் என்ன பதிலைச் சொல்ல முடியும்..? அவள் மௌனம் சாதித்தாள்.. அவளின் பதிலை எதிர்பார்க்காமல் தனக்குள்ளே யோசித்தபடி பேசிக் கொண்டிருந்தாள் பூர்ணிமா..

"ஏனோ தெரியலை வித்யா.. அவளை எனக்குப் பிடிக்கலை.."

"உன் அண்ணனுக்குப் பிடித்திருக்கே..."

"அதானே எனக்கும் ஆச்சரியமாயிருக்கு.."

"அழகா இருக்கிறா.. படித்திருக்கா.. இத்தனைக்கும் மேலாய் உங்களுக்குப் பொருத்தமான ராஜவம்சம்.."

இதைச் சொல்லும் போது வித்யாவின் குரல் கம்மியது.. பூர்ணிமா துணுக்குற்று தோழியின் முகம் பார்த்தாள்...

"முட்டாள்..! என்னடி பேச்சு இது..? இதை பெரியண்ணனிடம் பேசிப் பார்.. உன் அத்தனை பல்லையும் உதிர்த்து விடுவார்.. உங்களுக்குன்னு பிரிச்சு வேற பேசற..."

தோழியின் உரிமையான பாசம் மிகுந்த அதட்டுதலில் வித்யாவின் மனம் ஆறுதலை அடைந்தது..

"அத்தை சொன்னதைத்தான் சொன்னேன் பூர்ணி.."

"அம்மாவுக்கு அறிவில்லை..."

"அவங்க யதார்த்தமாகத்தான் சொன்னாங்க.. சொல்லனும்னு சொல்லலை.. மனதிலிருந்ததை யோசிக்காம போசிட்டாங்க..."

"யோசிக்க வேணாமா..? இவங்க வீட்டுக்குப் பெரியவங்க இல்லியா..?"

"விடு பூர்ணி..."



"என்னவோ போ.. இந்த மதன்பூர் மகாராணி தானாகத்தான் வந்து நம்ம சுரேன் அண்ணாவிடம் காதல் சொல்லியிருக்கா.. ம்ஹீம்.. இருந்திருந்து இவள் கண்ணில் தான் சுரேன் படனுமா..?"

வனாத்தில் மின்னல் வெட்டி பெரும் சப்தத்துடன் இடி இடித்தது...

## 19

நதியோரம் நடந்த போது..
தூரத்திலே இடிமுழக்கம்...
இடி முழக்கம் சொல்லியது..
எதையென்று மனதில் கணக்கம்..
-நதியோரம் நான் நடந்த போது-

'இது எதற்கான அறிகுறி..?'

வித்யாவிற்கு அன்று இரவு தூக்கம் பிடிக்க வெகு நேரமானது...

லேசான தூறல் நொடிப் பொழுதில் கனத்த மழைத் துளிகளுடன் சடசடவென கொட்டியது எப்படி..?

அவளது மனக்கிலேசத்தை அறியாதவனாக தூக்கத்தில் புரண்டு படுத்த நரேந்திரன் அவள்மீது கை

போட்டு இறுக்கினான்.. அவன் தொட்டவுடன் குழைந்து நடுங்கும் அவளின் உடல் அதிர்வை எதிர்பார்த்தவனுக்கு அவளிடம் எந்தவிதமான பிரதிபலிப்பும் இல்லாததைக் கண்டு ஆச்சரியம் வந்தது...

"வித்யா..."

அவள் முகத்தைத் திருப்பிக் கண்களுக்குள் உற்றுப் பார்த்தான்.. அதில் தெரிந்த சஞ்சலத்தில் அவனது புருவங்கள் சுருங்கின...

"என்னடி..?"

"ஒன்.. ஒன்னுமில்லையே..."

"அதுக்கு ஏன் உன் வாய் தந்தியடிக்குது..?"

வித்யா சிணுங்கலுடன் அவன் மார்பில் குத்தினாள்.. அவள் கைகளைப் பிடித்து முத்தமிட்டவன்.. அவள் தலையில் செல்லமாக முட்டினான்...

"உன் தலைக்குள்ளே எது குடையுது..?"

"ம்ஹீம்.. பூர்ணியைப் போல நீங்களும் ஆரம்பிச்சுட்டிங்களா..? அவளும் இதையேதான் கேட்டா.."

"அவகிட்ட ஒப்பிச்சிருப்பியே.. அது என்னடி உன் பிரச்னைகளை உன் புருசன்கிட்டச் சொல்ல மாட்ட.. அதுவே உன் பிரண்ட் கேட்டா எல்லாத்தையும் கொட்டிக் கவிழ்த்திடறே..?"



"அதெல்லாம் ஒன்னும் கொட்டிக் கவிழ்க்கலை..."

"இதை நான் நம்பனுமாக்கும்..?"

"நம்பாட்டிப் போங்க.."

"எங்கே போகச் சொல்ற..? உன்னை விட்டு எங்கேயும் போறதா இல்லைடி.. போனா உன்னையும் சேர்த்து கூப்பிட்டுக்கிட்டுத்தான் போவேன்.."

நரேந்திரனின் வார்த்தைகளில் வித்யாவின் மனக்கிலேசம் மறந்து போக.. அவள் சஞ்சலத்தை மறந்தவளாக அவன் மார்பில் ஒன்றினாள்.. அவளின் காதலில் அவனுக்குள் காதல் கலந்த காமம் பொங்கியது.. அது தந்த வேகத்தில் அவன் முரட்டுத்தனமாக அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.. மெல்ல.. மெல்ல.. அவனது ஆக்ரமிப்பில் வித்யா மூழ்கிப் போனாள்..

மதன்பூரில் நரேந்திரனின் குடும்பத்திற்கு பிரமாதமான வரவேற்பு கிடைத்தது.. மணிமுத்தாறுக்கு கார்களின் அணி வகுப்பு வந்ததைப் போலவே.. மதன் பூருக்கும் நரேந்திரனின் குடும்பத்தினரின் கார்கள் அணி வகுத்துச் சென்றன...

மாப்பிள்ளை வீடு பார்க்க கிளம்பிய அண்ணன் தம்பிகள் அவரவர் கார்களில் அவர்களுடைய குடும்பத்துடன் ஏறிக் கொள்ள.. சுரேந்திரனின் காரில் சௌதாமினி ஏறிக் கொண்டாள்.. மாலினியும்..

பூர்ணிமாவும் அவர்களின் குடும்பத்துடன் கார்களில் ஏறிக் கொள்ள.. நரேந்திரனின் அவரவர் குடும்பமும்.. மாமா குடும்பமும் அவர்களுடைய அத்தை சேர்ந்து கொண்டார்கள்.. கார்களுடன்

மதன்பூரின் பிரமாண்டமான அரண்மனையில் அவர்களுக்கு வட இந்திய உணவு வகைகளுடன் தென்னிந்திய உணவு வகைகளைச் சேர்த்து பிரமாதமான விருந்து தயாரிக்கப் பட்டிருந்தது.. சாப்பாட்டு மேஜையில் பரப்பி வைக்கப்பட்டிருந்த உணவு வகைகளைப் பார்த்த பூர்ணிமா...

"இதுதான் ஒன்றுபட்ட இந்தியா வித்யா.." என்று தோழியுடன் முணுமுணுத்தாள்...

விருந்தில் அமர்ந்து கொண்ட போது கவனமாக வித்யாவின் அருகே அமர்வதை மீனலோசனி தவிர்த்த போது...

"இந்தியா ஒன்று பட்டதுதான்.. அதிலிருக்கிற மனிதர்களின் மனங்கள்தான் ஒன்றுபடவில்லை.." என்று சத்தமாகவே சொல்லி வைத்தாள்...

அதைக் கேட்ட நிவேதிதான் அக்கா ஸ்வாதிகா மெலிதாகச் சிரித்தாள்.. மீனலோசனியின் முகம் விழுந்து விட்டது..



"இவ சொல்கிறதைக் கேட்டியா பிரபா.. இங்கே வந்தும் இவ நம்மை வாருகிறதை விடலையே..."

பிரபாவதியிடம் அவள் முணுமுணுத்தபோது பிரபாவதிக்கு எரிச்சல் வந்தது..

பூர்ணிமா அவளின் அண்ணனின் மனைவி.. ஒரே சகோதரனுடன் பிறந்த அவளுக்கு பிறந்த வீட்டில் பந்தமும் பாசமும் நிலைத்திருக்க வேண்டுமானால் அவளின் அண்ணனின் மனைவியை பகைத்துக் கொள்ள முடியுமா..?

அதனாலேயே பூர்ணிமா மணிமுத்தாறுக்கு வருகை தருகிற போதெல்லாம் மீனலோசனியுடன் பேசுவதையே தவிர்த்து விடுவாள் பிரபாவதி...

இப்படித்தான் பிரபாவதி பேசாமல் இருந்தாலும் அவளின் காதோரமாக வந்து எதையாவது மீனலோசனி முணுமுணுத்து வைத்து விடுவாள்.. பார்க்கிற பூர்ணிமாவிற்கு அது மீனலோசனி பேசிய பேச்சு என்று தெரியுமா..? பிரபாவதியும்.. மீனலோசனியும் கூட்டுச் சேர்ந்து கொண்டு வித்யாவைப் பற்றிப் புறம் பேசுகிறார்கள் என்று தோன்றிவிடாதா..?

மணிமுத்தாறிலேயே அப்படியெனும் போது.. மதன்பூரில் பூர்ணிமா அருகிலேயே இருக்கும் போது

அவளைப் பற்றி மீனா பேசி வைத்தால் பிரபாவதிக்கு எரிச்சல் வராதா..?

அவள் அவசரமாக கணவன் பக்கம் சாய்ந்து அவனிடம் பேசுவதைப் போல முகத்தைத் திருப்பித் தப்பித்தாள்..

மீனலோசனிக்கா அந்த யுக்தி புரியாது..?

அவள் முகம் விழுந்து விட்டது.. மானசீகமாக பற்களை நறநறத்துக் கொண்டாலும் சிரித்த முகம் மாறாமல் அவள் மகேந்திரனின் பக்கமாக சாய்ந்து அவன் காதில் ரகசியம் பேச ஆரம்பித்தாள்..

'இவதான் புருசன் காதில ரகசியம் பேசுவாளா..? எனக்கு என் புருசன் காதில ரகசியம் பேசத் தெரியாதா.. யாரு கிட்ட..?'

அவளின் மிதப்பான பார்வையில் பூர்ணிமாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது.. வித்யாவிற்கு அந்தச் சிரிப்பு எதற்கான சிரிப்பென்று பிடிபடவில்லை...

"என்னடி..?" என்று வினவினாள்..

"அப்படியே நாடகம் பார்க்கிறதைப் போலவே இருக்குடி வித்யா..."

"எதைச் சொல்கிற..?"



"என்னத்தைச் சொல்ல..? கண்ணதாசன் அழகாக எழுதிவைச்சார்.. காதோடுதான் நான் பாடுவேன்னு..."

"அது அருமையான பாட்டாச்சே..."

"அந்த அருமையெல்லாம் யாருக்குப் புரிகிறது..?"

யாருக்கும் புரிந்ததோ இல்லையோ.. மீனலோசனிக்கு தெளிவாகவே புரிந்தது.. எதைச் செய்தாலும் அதைக் கண்டு பிடித்து விடும் பூர்ணிமாவை என்ன செய்வதென்று அவளுக்கு தெரியவில்லை...

தெரியாத எதையும் தெரியாதென்று அவள்தான் ஒப்புக்கொள்ள மாட்டாளே.. அதனால் அவளின் மிதப்பான பார்வையை நாத்தனாரின் மீது வீசி விட்டு அவள் மௌனமாகி விட்டாள்...

விருந்து முடிந்து கிளம்பும் போது திருமணத்தைப் பற்றி கங்காதர்ராவ் பேசினார்.. திருமண நாள் நிச்சயிக்கப் பட்டது.. அதை ஒரு விழாவாக கொண்டாட வேண்டும் என்று கங்காதர்ராவ் சொன்னார்.. நரேந்திரன் யோசிக்க ஆரம்பித்த போதே அவனை முந்திக் கொண்டு...

"நோ... நோ.." என்று சொல்லி விட்டான் சுரேந்திரன்...

"எங்க அரண்மனையில் இது வழக்கம் மாப்பிள்ளை.."

"பட்.. ஐ டோன்ட் லைக் இட்.. நாங்க பார்த்தோம்.. பழகினோம்.. காதலிச்சோம்.. இப்பக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறோம்.. இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதானே.. அதை விழாவாகக் கொண்டாட வேண்டிய அவசியமென்ன..?"

"எங்கேஜ்மென்ட் ரிங்கை நீங்க மாற்றிக்க வேண்டாமா..?"

"மணமேடையில் மாற்றிக்கிறோம்.. அண்ணா.. டைரக்டா கல்யாணம்தான்.. சொல்லிட்டேன்.."

அந்தக் கண்டிப்பில் நிவேதிதாவின் முகம் சுருங்கியதை கண்டு கொண்டாள் மீனலோசனி.. தனியாக நிவேதிதா நின்று கொண்டிருந்த நேரம் பார்த்து அவளருகே சென்று புன்னகைத்தாள்.. பதிலுக்கு நிவேதிதா லேசாகக் கூடச் சிரிக்க வில்லை...

'ம்ஹீம்.. என் கடைசி மச்சினன் எங்கேயிருந்து இவளைத் தேடிக் கண்டு பிடிச்சானோ.. சிரிக்கத் தெரிந்ததுகதான் மனிதப் பிறவி.. இது என்ன பிறவியோ..'

இப்படி நினைத்துக் கொண்ட மீனலோசனிக்கு அவளும் அந்த ரகம்தான் என்ற விவரம் வசதியாக மறந்து விட்டது...



போட்டுக் கொடுக்க வந்தவள் புன்னகையை எதிர்பார்த்தால் வேலைக்கு ஆகுமா..? அதனால் அதெல்லாம் நமக்கு எதற்கு என்று அதை ஒரம் கட்டி அனுப்பிவிட்டு தன் வேலையை செவ்வனே செய்ய ஆரம்பித்தாள்..

"நான்தான் சுரேனின் பெரியண்ணி..."

"சுரேன் அப்படிச் சொல்லலையே.."

இதைச் சொன்ன நிவேதிதாவின் விழிகளில் தெரிந்த உதாசீனத்தில் அவளுக்கு மணிமுத்தாறு அரண்மனையின் ரகசியங்கள் அத்துபடி என்ற விவரம் தெள்ளத் தெளிவாக மீனலோசனிக்கு விளங்கியது..

'இந்த சுரேன் அத்தனையையும் இவளிடம் ஒப்பிச்சிட்டான் போல..' பல்லைக் கடித்தாலும் சமாளித்துக் கொண்டு புன்னகை செய்தாள் மீனலோசனி..

"நான்தான் மணிமுத்தாறு அரண்மனையில் மூத்தமருமகளாக காலடி வைத்தவள்..."

"பட்.. சுரேனோட இரண்டாவது அண்ணனை மேரேஜ் பண்ணிக்கிட்டு மருமகளாய் காலடி வைச்சீங்க.. ஆம் ஐ ரைட்..?"

'இவ வாயைத் திறக்கவே இல்லைன்னு ஏக்கப்பட்டது தப்பாப் போச்சே.. இவளுக்கு இத்தனை

பேச்சுக்கூடப் பேசத்தெரியுமா..? இதுக்கு இவ பேசாமடந்தையாவே இருந்திருக்கலாம்..' மீனலோசனி ஏக்கப் பட்டுப் போனாள்..

"நீ தப்பாவா சொல்லிடப் போற..? ரைட்டுத்தான் நிவேதா.. அதைப் பத்திப் பேச்சு இப்ப எதுக்கு..?"

"நான் பேசலை.. நீங்கதான் பேசினீங்க.."

பட்டுக் கத்தறித்தாள் நிவேதிதா.. மீனலோசனிக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. இப்படிப் பேசுகிறவளிடம் எப்படித்தான் போட்டுக் கொடுப்பது..?

'கொஞ்சமாவது மூத்தவரின் பெண்டாட்டியை மதிக்கனும்னு நினைக்கிறாளா..?'

அவளுக்குள் சினம் மூண்டது.. அவளும் நரேந்திரனின் மனைவியை மதிப்பதில்லை என்பது வழக்கம் போல வசதியாக அவளுக்கு மறந்து போனது...



## 20

நதியோரம் நடந்தபோது...
பூவாசம்தான் நுகர்ந்தேன்...
பூவைத் தேடிச் சென்றபோது...
முள்வேலிதான் கண்டேன்...
-நதியோரம் நான் நடந்த போது-

"இருக்கட்டும் நிவேதா... நான்தான் பேசினேன்.. இப்ப என்ன அதுக்கு...? நாம இரண்டு பேரும் ஒரே அரண்மனையில் வாழப் போகிறவங்க.. இதில யார் முதலில் பேசினா என்ன..?" திரும்பவும் சமாளித்தாள் மீனலோசனி..

"இல்லையே.. பாகப்பிரிவினை நடந்துட்டதா சுரேன் சொன்னாரே.. நீங்கதான் உங்க பங்களாவுக்கு போகாம அரண்மனையிலேயே ஸ்டே பண்ணியிருக்கீங்களாமே.." விடாமல் மீனலோசனியின் மூக்கை உடைத்தாள் நிவேதிதா...

"பாரு நிவேதிதா..."

"நீங்க என்ன சுரேனா...? நான் உங்களைப் பார்த்து என்னங்க ஆகப் போகுது...?"

"என்னைப் பார்த்து எதுவும் ஆகாமல் போகலாம்.. ஆனா நான் பேசுகிறதைக் கேட்டா உனக்கு நிறைய விசயங்கள் புரியும்..."

"ஓ.. எனக்கு அப்படியெதுவும் புரியத் தேவையில்லை.."

அலட்சியத்துடன் நகர முற்பட்ட நிவேதிதாவின் கையைப் பிடித்து நிறுத்தினாள் மீனலோசனி..

"அப்படிச் சொல்லிட்டா எப்படி நிவேதிதா.. உன் சுரேன் எதுக்காக எங்கேஜ்மென்டை வேண்டாம்னு சொன்னாருன்னு உனக்கு தெரிய வேண்டாமா...?"

"அவருக்கு பிடிக்காமல் இருந்திருக்கலாம்.. இல்லைன்னா உங்க அரண்மனையில அது வழக்கத்தில் இல்லததா இருக்கலாம்..."

"யார் சொன்னது...?"

"வாட்...?"

"யெஸ்.. சுரேனுக்கு எங்கேஜ்மென்ட் பங்சன்னா பிடிக்கும்.. எங்க அரண்மனையிலயும் எங்கேஜ்மென்ட் நடத்துகிற வழக்கமுண்டு..."

மீனலோசனியின் விழிகளில் ஏதோரகசியம் தெரிய நிவேதிதாவின் பார்வை கூர்மையாகியது..



"இப்ப என்னதான் சொல்ல வருகிறிங்க...?"

"ஆ.. அப்படிக் கேளு.. சுரேன்.. எங்கேஜ்மென்டை அவாய்ட் பண்ணுகிறதுக்குக் காரணம் வித்யா..!" மர்மக் குரலில் சொன்னாள் மீனலோசனி...

"ஏன்..?" நிவேதிதாவின் முகம் மாறியது...

"ஏன்னா அந்த வித்யா சுரேனின் முன்னாள் காதலி.." நிதானமாச் சொன்னாள் மீனா..

"ஸ்டுப்பிட்.." நிவேதிதா சீறினாள்...

"இதை யாரிடம் வேண்டும்னாலும் கேளு.. அவங்க உண்மையைச் சொல்லுவாங்க... வெளிநாட்டுப் படிப்பை பாதியிலேயே விட்டுட்டு வித்யாவை கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக இந்தியாவுக்கு வந்தார் சுரேன்..."

"ஐ கான்ட் பிலிவ் திஸ்..."

"நம்பலைன்னா யாரிடம் வேணும்னாலும் இதைக் கேட்டு கன்பர்ம் பண்ணிக்க... வித்யா சுரேனை வேண்டாம்னு சொல்லிட்டா..."

இதைச் சொல்லும்போது மீனலோசனியின் குரலிலும் மனதிலும் குரூரம் நிறைந்திருந்தது..

'ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது என்பது இதுதானா...?' அவள் மகிழ்ந்து போனாள்...

'இந்த நிவேதிதாவிற்கு என்ன திமிர்...! இவ திமிரையும் அடக்கலாம்.. அந்த வித்யாவிற்கு எதிரா இவளைத் திருப்பலாம்.. ஆஹா என்ன ஒரு சான்ஸ்..'

கிடைத்த வாய்ப்பை மிகச் சரியாக பயன்படுத்திக் கொண்டாள் மீனலோசனி... அதுவரை அலட்சியமாக இருந்த நிவேதிதாவின் குரலில் தீவிரம் வந்திருந்தது..

"நீங்க சொல்கிறது உண்மையா...?"

"நூற்றுக்கு நூறு உண்மை.. சுரேன்.. வித்யாவைக் கல்யாணம் பண்ணிக்கனும்னு ஆசைப்பட்டார்.. இதை எங்க அத்தையிடமும் சொன்னார்..."

"வாட்...? சுரேனின் அம்மா என்ன சொன்னாங்க...?"

"வித்யாவை சுரேனுக்காக பெண கேட்டாங்க..."

நிவேதிதாவின் விழிகள் சிவந்து விட்டன.. அவர் கண்களின் ஜீவலிப்பில் மீனலோசனியே அயர்ந்து விட்டாள்...

'என்னடா இது.. வடக்கே பிறந்ததினால இவ ஜான்ஸி ராணியைப் போலவே முழிச்சு வைக்கிறாளே....'

"அப்புறம் எதற்காக மேரேஜ் நடக்கலை...?"

"அதைத்தான் சொன்னேனே.. வித்யா சுரேனை வேண்டாம்னு சொல்லிட்டா..." நிவேதிதாவின் முகத்தை ஆராய்ந்தபடி சொன்னாள் மீனலோசனி..



'ஆப்டர் ஆல்.. அந்த வித்யா வேண்டாம்னு சொன்ன சுரேந்திரனை நான் துரத்தித் துரத்தி காதலித்தேனா...' நிவேதிதாவின் முகம் பயங்கரமாக மாறியது..

'கொதிக்குதா.. இருடி.. இன்னும் கொஞ்சம் சூட்டைக் கிளப்பறேன்...'

"வித்யா நரேந்திரனைத்தான் காதலித்தாளாம்... அதைக் கேட்ட சுரேன் திரும்பவும் வெளிநாட்டுக்கே போயிட்டார்.. இந்தியா பக்கமே தலை வைத்துப் படுக்கலை.." மீனலோசனி கதையளக்க..

"ஏங்க.. அவர் பாரினில் எந்தப் பக்கம் தலை வைத்துப் படுத்தார்னு நீங்க போய் பார்த்துவிட்டு வந்தீங்களா...?" கடுப்புடன் கேட்டாள் நிவேதிதா...

"ஹி.. ஹி.. சும்மா ஒரு பேச்சுக்கு சொல்கிறதுதான்.. அசடு வழிந்தாள் மீனா..."

"அவர் படிக்க பாரின் போனால் நீங்களா கதை சொல்வீங்களா...?" நிவேதிதாவிடம் பழைய நிமிர்வு வந்திருந்தது..

"முதலிலேயும் படிக்கத்தானே போனார்...? ஏன் பாதியிலேயே விட்டுவிட்டு வந்தார்...?" எதிர் கேள்வி கேட்டாள் மீனலோசனி..

"இதுக்கு என்ன காரணம் சொல்லப் போகிறிங்க..?"

"இருக்கே.. காரணம் இருக்கே.. மணிமுத்தாறிலே பெரியத்தான் கூட வித்யாவிற்கு கல்யாணம் நடந்து விட்டது..."

"ஸோ...?"

"அவர் மனசிலிருந்த வித்யாவை அண்ணியாகப் பார்க்க சுரேனுக்கு சகிக்குமா...?"

"சகிக்கலை"

"உங்களுக்கு மட்டும்தானா.. எங்களுக்கும்தான் சகிக்கலை..."

"நான் நீங்க சொல்கிற கதையைச் சொன்னேன்.."

விர்ரென்று அங்கிருந்து விலகி நடந்து விட்டாள் நிவேதிதா.. போகிற போக்கில் அவள் உடைத்து விட்டுப் போன மூக்கை தடவிப் பார்த்துக் கொண்டாள் மீனலோசனி...

'நான் நினைத்ததை விட இவ கெட்டிக்காரியாய் இருக்கிறாளே.. எதுக்கும் இவகிட்ட ஜாக்கிரதையாய் இருந்து வைத்துக்கனும்...'

நிவேதிதாவை கலங்கடிக்க வைக்க முடியாத சோகத்துடன் மீனலோசனி மகேந்திரனைத் தேடிப்



போய்விட நிவேதிதா சுரேந்திரனைத் தேடினாள்.. அவன் நரேந்திரனுடன் பேசிக் கொண்டிருந்தான்.. அருகே வித்யா நின்று கொண்டிருந்தாள்.. நிவேதிதா பார்த்த நேரம் பார்த்து நரேந்திரன் கங்காதர்ராவுடன் எதையோ பேசச் சென்றுவிட சுரேந்திரனும்... வித்யாவும் அருகருகே நின்று கொண்டிருந்தார்கள்...

சுரேந்திரன் எதையோ கேட்க.. இயல்பாக அவன் முகம் பார்த்துப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள் வித்யா.. அதைக் கண்ட நிவேதிதாவின் மனதில் புயல் அடித்தது..

'ஓ.. இதனால்தான் நான் காதல் சொன்னபோது இவன் உடனே ஓகே சொல்லவில்லையா...?'

நிவேதிதா வித்யாவை முறைத்தபடி சுரேந்திரனிடம் போனாள்...

"ஒன் மினிட் சுரேன்..."

"வாட் இஸ்தி மேட்டர் நிவி...?"

"அதை இங்கேதான் சொல்லனுமா...?"

நிவேதிதா வித்யாவை தீர்க்கமாகப் பார்க்க.. அவள் குறிப்பறிந்தவளாக நகரப் போனாள்.. அவளை சுரேந்திரனின் குரல் தடுத்து நிறுத்தியது..

"வெயிட் அண்ணி.. நீங்க எங்கே போகிறிங்க...?"

"உங்க வுட்பி உங்களிடம் தனியே பேச வந்திருக்காங்க சுரேன்..." தயக்கத்துடன் சொன்னாள் வித்யா...

"தனியே நிறைய பேசியாகிவிட்டது.. அதோடு இது லவ்வர்ஸ் பார்க் இல்லை.. வீடு.. இங்கே குடும்பத்தோடு நான் வந்திருக்கிறேன்.. இப்ப ரகசியப் பேச்சு தேவையில்லாதது.. நீங்க இருங்க....."

வித்யாவிற்கு தர்மசங்கடமாகி விட்டது.. நரேந்திரன் வந்து விட்டால் தேவலை என்ற தவிப்புடன் அவன் போன திசையைப் பார்த்தாள்.. அவன் வருகின்ற வழியைக் காணோம்.. நிவேதிதாவோ கொதித்துப் போயிருந்தாள்.. வித்யாவின் முன்னிலையிலேயே நிவேதிதாவுடன் தனிமையில் பேச சுரேந்திரன் மறுத்ததில் அவளின் கொதிப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது.. அவனோ அதைக் கண்டு கொள்ளாமல் சாவதானமாய் அவளின் முகம் பார்த்து..

"சொல்லு நிவி..." என்றான்...

"நத்திங் சுரேன்..." நிவேதிதா விலகி நடந்து விட்டாள்...

"திங் இஸ் நாட் ஃபேர் சுரேன்.. அவங்க கோபமாய் போகிறாங்க.." வித்யா கவலையாகச் சொன்னாள்...



"போகட்டும் அண்ணி.. இது முதல் தடவையில்லை.. அவளின் குணமே இதுதான்.. நினைத்தது நடக்கனும்னு எதிர்பார்ப்பா.."

"அது தப்பில்லையே..."

"அவ நினைப்பின்படி என்னை வளைக்க நினைக்கிறது தப்பு..." சுரேந்திரன் கடினமான குரலில் சொன்னான்..

'என்ன மாதிரியான காதலர்கள் இவர்கள்...' வித்யாவிற்கு ஒன்றுமே புரியவில்லை...

சுரேந்திரனுக்கு நிவேதிதாவின் மீது அதீதக் காதல் இருப்பதைப் போலத் தெரியவில்லை.. நிவேதிதாவின் விழிகளிலோ ஒரு தீயின் ஜ்வாலை தெரிந்து கொண்டே இருந்தது.. அது வித்யாவைக் கண்டால் அதிகமானது.. அது எதற்காக என்றும் வித்யாவிற்குத் தெரியவில்லை..

நிவேதிதா கோபமாக போன பின்னாலும் சுரேந்திரனின் பக்கத்தில் நின்றால் நன்றாக இருக்காது என்ற நினைவுடன் அவள் சௌதாமினியிடம் போய் நின்று கொண்டாள்.. அவளிடம் பேசியபடி யதேச்சையாக தோட்டத்தின் பக்கம் பார்த்த வித்யாவிற்கு தூக்கி வாரிப் போட்டது...

அங்கே ஒரு செடி மறைவில் நரேந்திரன் யாரோ ஒரு பெண்ணுடன் நின்று பேசிக் கொண்டிருந்தான்.. வித்யா நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து அவர்களை அவளால் தெளிவாகப் பார்க்க.. முடிந்தது.. மற்றவர்களின் பார்வைக்கு அது மறைவான இடமாக இருந்தது..

நரேந்திரனுடன் பேசிக் கொண்டிருந்த பெண்ணை எங்கேயோ பார்த்திருப்பதைப் போல வித்யாவிற்குத் தோன்றியது..

'யாராய் இருக்கும்...?'

வித்யா நினைவுக் குவியல்களின் இடையே தேடிப் பார்த்துக் கொண்டிருந்த போது அந்தப் பெண் நரேந்திரனின் தோளில் சாய்ந்து விட்டாள்.. வித்யாவின் காலடியில் பூமி நழுவிய போது அவளுக்கு அந்தப் பெண் யாரென்று நினைவுக்கு வந்து விட்டது...



# 21



நதியோரம் நடந்த போது
விரல் கோர்த்த என்னவளே..!
சந்தேகம் வரலாமா...?
என் தேகம் உனதில்லையா...?
-நதியோரம் நான் நடந்தபோது-

அவள்... அந்தப் பெண்.. கார்த்திகாயினி தேவி..!

எந்தப் பெண்ணை முதன் முதலில் நரேந்திரன் காதலித்தானோ அந்தப் பெண்தான் வித்யாவின் கண் முன்னாலேயே அவளுடைய நரேந்திரனின் தோள் மீது தலை சாய்த்தாள்...

எந்தப் பெண்ணின் வாழ்க்கையை தான் வாழ்ந்து கொண்டிருப்பதாக வித்யா மனதிற்குள் குமுறிக் கொண்டிருக்கிறாளோ.. அந்தப் பெண்தான் நரேந்திரனின் தோள் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள்..

வித்யாவின் மனதில் இடி இடித்தது.. சுரேந்திரனின் திருமணத்தைப் பற்றி பூர்ணிமாவும்.. அவளும் மணிமுத்தாறு அரண்மனையின் மொட்டை மாடியில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது இடி இடித்து கடும் மழை

பொழிந்ததின் காரணத்தை அவள் மதன்பூர் அரண்மனையில்.. அந்த நொடியில் கண்டு கொண்டாள்..

நரேந்திரன் கார்த்திகாயினியை விலக்கி நிறுத்தினான்.. ஆனால் விலகி வந்து விடவில்லை.. அங்கே நின்றபடி அவளுடன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்...

"யார் தெரிகிறதா...?"

வித்யாவின் பின்னாலிருந்து குரல் கேட்டது.. முகம் வெளுத்துப் போயிருந்த வித்யா திரும்பினாள்.. நிவேதிதா நின்று கொண்டிருந்தாள்...

"அது கார்த்திகாயினி தேவி... என் அக்கா..." நிவேதிதாவின் விழிகளில் சவால் இருந்தது...

"என்ன...?" வித்யா அதிர்ந்து விட்டாள்...

"யெஸ்.. என் அக்காவேதான்.. அக்கான்னா கூடப்பிறந்த அக்கா இல்லை.. என் அம்மா கூடப் பிறந்த அக்காவின் மகள்.. கிரன்பூர் அரண்மனையின் ஒரே வாரிசு... உன்னைப் போல வேலை செய்ய வந்து.. முதலாளியின் கை பிடித்தவளல்ல.. அழகாலும்.. அறிவாலும்.. அந்தஸ்தாலும்.. உனக்கு முன்னாலேயே மிஸ்டர் நரேந்திரனின் மனதில் இடம் பிடித்தவள்..."

"நிவேதிதா..."



"என் பெயரைச் சொல்லிக் கூப்பிடக் கூட உனக்கு அருகதை இல்லை.. இருந்தும் நீ கூப்பிடுகிறாய்.. நான் கேட்டுக் கொண்டு இருக்கிறேன்.. எதனால்...? மிஸ்டர் நரேந்திரன் உன் கழுத்தில் கட்டியிருக்கிற தாலியினால்.. அந்தத் தாலி எப்படி உனக்கு கிடைத்தது தெரியுமா...? என் அக்கா மிஸ்டர் நரேந்திரனை விட்டுக் கொடுத்ததால் கிடைத்தது"

வித்யாவின் விழிகள் அகன்றன.. எந்த வார்த்தைகளை மீனலோசனி சொல்கிறாளோ.. அதே வார்த்தைகளை இன்று நிவேதிதாவும் சொல்கிறாள்...

ஏன்...? அந்த வார்த்தைகள் மனதிற்கு வலியைத் தந்தாலும் அவற்றில் உண்மை இருப்பதினால்தானே சொல்கிறார்கள்...?

"நினைச்சுப் பார்க்கலைல்ல.. இந்த மதன்பூர் அரண்மனைக்கும்.. கிரண்பூர் அரண்மனைக்கும் சம்பந்தம் இருக்கும்ன்னு நீ நினைத்துப் பார்க்கலைல்ல.. என் அக்காவா கார்த்திகாயினி தேவி வந்து நிற்பாங்கன்னு நினைச்சுப் பார்க்கலைல்ல..." நிவேதிதாவின் விழிகளில் வேட்டைக்காரனின் பார்வை இருந்தது...

வித்யா வேட்டையாடப் படும் பறவையின் பார்வையை உயிர்துடிக்கப் பார்த்து வைத்தாள்... அந்தப் பார்வையைக் கண்டும் நிவேதிதா மனம் இரங்கவில்லை...

"ஊடே வந்த உனக்கே இப்படியிருந்தால்... காதலித்து விட்டுக் கொடுத்த என் அக்காவிற்கு எப்படியிருக்கும்...?"

"நான் உன் அக்காவின் காதலைப் பறிக்கவில்லை.."

வித்யா சுதாரித்துக கொண்டவளாக பதில் சொன்னாள்.. அவளின் இயல்பான நிமிர்வு அவளிடம் திரும்பி விட்டது.. அவள் என்ன தவறைச் செய்தாளென்று நிவேதிதா குட்டக் குட்ட தலையைக் கொடுக்க வேண்டும்...?

அந்த நிமிர்வை அறிந்திராத நிவேதிதாவின் விழிகளில் கோபம் அதிகரித்தது.. அவள் முன்னால் ஒரு சாதாரணப் பெண் நிமிர்ந்து பேசுவதா...? என்ன தான் மணிமுத்தாறு அரண்மனையின் மூத்த மருமகளாக இருந்தாலும் நிவேதிதாவிற்கு அவள் இணை ஆவாளா...?

தனக்கு போட்டி என்று யாரையும் வித்யா நினைத்துக் கூடப் பார்க்க மாட்டாள்.. என் வழி தனிவழி என்று அவள் போக்கில் தெளிந்த நீரோடைபோல போய் கொண்டிருப்பாள்..

அது தெரியாத நிவேதிதா ஆவேசப் பட்டாள்..



"பறிக்கவில்லையா...? என் அக்காவின் காதலைப் பறிக்கவில்லையா...? நீ பறிக்காமலா மிஸ்டர் நரேந்திரன் உன்னை மேரேஜ் பண்ணிக்கிட்டார்...?"

"அதுக்கு முன்னாலேயே உன் அக்கா காதலை மறந்து வேறு ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க.. அது உனக்கு மறந்து விட்டதா...?"

வித்யா புருவங்களை உயர்த்திக் கேட்டதில் நிவேதிதா சரியான இடத்தில் அடியை வாங்கினாள்...

"ஏன் அதைச் செய்தாங்க...?" அவள் கொதித்தாள்..

"அதைத்தான் நானும் கேட்கிறேன்.. ஏன் அதைச் செய்தாங்க...?" வித்யா நிதானமாகக் கேட்டாள்..

"ஏய்ய்.. எங்க ராஜ வம்சத்து பெருமையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்...?"

"தெரியவே வேணாம்.. உங்க குலப் பெருமையைச் சொல்லச் சொல்லி நான் கேட்டேனா...?"

"உன்னைப் போல ஒருத்திக்கு அரண்மனையின் மருமகளாகும் வாய்ப்புக் கிடைத்து விட்ட ஆணவத்தில் பேசுகிறயா...?"

"ஊஹூம்... என் நரேந்திரனின் மனைவியாகும் வாய்ப்புக் கிடைத்து விட்ட சந்தோசத்தில் பேசுகிறேன்.."

"அது எப்படிக் கிடைத்தது...?"

"சும்மா.. சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளையைப் போல இதையே சொல்லிக்கிட்டு இருக்காதே.. உன் அக்காவை யார் காதலை கை கழுவி விட்டுப் போகச் சொன்னது...? நானா சொன்னேன்...?"

"ஏய்ய்..."

"ஷட் அப் நிவேதிதா.. முதலில் மரியாதையாகப் பேசக் கற்றுக் கொள்..."

"இல்லைன்னா...?"

"இந்த மேரேஜ் நல்லபடி நடக்க வேண்டாமா...? எனக்கு நீ மரியாதை கொடுக்கலை என்கிற விவரத்தை சுரேந்திரன் தெரிந்துக்கிட்டால் என்ன ஆகும் தெரியுமா..?"

வித்யா என்னவோ சுரேந்திரன் அவளின் மைத்துனன்.. அண்ணனின் மீதும்.. அண்ணியின் மீதும் பக்தி கலந்த மரியாதையை வைத்திருப்பவன் என்ற அர்த்தத்தில்தான் சொன்னாள்.. அதைக் கேட்ட நிவேதிதா வேறு விதமாக அர்த்தப் படுத்திக் கொண்டாள்...

"ஸோ.. நீ சொல்கிறபடிதான் சுரேன் ஆடுவார்ன்னு உறுதியாகச் சொல்கிற..."



"நான் சொல்ல மாட்டேன்.. அவராத் தெரிந்துக் கிட்டால் என்ன ஆகும்ன்னுதான் சொன்னேன்.."

"நீ கெட்டிக்காரி.. அப்படியில்லாமலா என் அக்கா வாழ வேண்டிய வாழ்க்கையை வாழ்கிறாய்...?"

"உன் அக்காவை யார் வாழ வேண்டாமென்று சொன்னது...?"

"கிரண்பூரின் ராணி.. ஒன்றுமேயில்லாமல் கடனில் மூழ்கிக்கிட்டு இருக்கும் மணிமுத்தாறு அரண்மனையில் வாழ வருவாளா...?"

"ஓஹோ.. அப்புறம் எதுக்காக நீ அடிச்சக்கிற...?"

"மிஸ்டர் நரேந்திரன் கிரண்பூருக்கு வந்திருக்க வேண்டாமா...? அந்த அரண்மனைக்கு ராஜாவாக்கு-கிறேன்னு என் பெரியப்பா அவரைத் தேடிப் போய் கூப்பிட்டாரே.. அப்போது அவர் கூடவே கிளம்பி வந்திருந்தால் என் அக்காவின் வாழ்க்கை நன்றாக இருந்திருக்குமே..."

"ஏன்.. அவங்க வாழ்க்கைக்கு என்ன ஆச்சு...? அவங்கதான் உங்க வம்சப் பெருமையைக் காப்பாத்தி வேற ஒருத்தருக்கு மனைவியாகிட்டாங்களே.. ஒன்றை நினைவில் வைத்துக் கொள் நிவேதிதா.. அன்றைக்கு மட்டும் நரேன்.. கார்த்திகாயினியின் அப்பா பின்னால்

போயிருந்தால் அவரின் குடும்பம் அழிந்திருக்கும்.. இன்றைக்கு.. நீ காதலித்து கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் சுரேந்திரனின் அரண்மனை அந்தஸ்து நிலைத்திருக்காது..."

இதைக் கேட்ட நிவேதிதா ஏளனமாகச் சிரித்தாள்.. அவள் விழிகளில் வன்மம் தெரிந்தது...

"நான் சுரேனைக் காதலித்தேன்.. ஏன் தெரியுமா...? அப்போதுதானே மணி முத்தாறு அரண்மனையில் மருமகளாக உள்ளே நுழைய முடியும்...?"

"புரியலை..."

"உனக்கு புரிய வேணாம்.. புரியும் போது எல்லாம் தானாய் புரியும்..."

நிவேதிதா அங்கேயிருந்து அகன்று விட்டாள்.. வித்யா நரேந்திரன் நின்று கொண்டிருந்த திசையில் பார்த்தாள்.. அப்போதும் நரேந்திரன் கார்த்திகாயினி தேவியுடன்தான் பேசிக் கொண்டிருந்தான்..

"என்னடி அங்கேயே பார்த்துக்கிட்டு நிற்கிற...?"

பூர்ணிமா தேவி அருகில் வந்தபோது.. வித்யா சட்டென்று நகர்ந்து தோழியிடம் போய் விட்டாள்..

"ஒன்றுமில்லையே..."

"ஏன்.. உம்முன்னு இருக்க...?"



"தலைவலி பூர்ணி..."

"எனக்கும் அப்படித்தான்.. எல்லோருக்கும் சீக்கிரமா கிளம்பினாத்தேவலை.. எங்கே...? எல்லோரும்தான் ஆளுக்கொரு திசையில் நிற்கிறாங்களே..."

பூர்ணிமா ஆதங்கப் பட்டபடி மற்றவர்களை ஒன்று சேர்க்கப் போனாள்.. வித்யா நரேந்திரன் வருகிறானா என்று அவன் நின்ற திசைப் பக்கம் பார்த்தாள்.. நரேந்திரன் வந்து கொண்டிருந்தான்..

'அப்பாடி.. வந்துட்டான்...' வித்யாவின் மனதில் நிம்மதி வந்தது.. கூடவே இனம் விளங்காத சஞ்சலமும் வந்தது..

'கூடவே அவளும் வந்துட்டா...?' திகிலுடன் நரேந்திரனின் பின்னால் பார்வையால் துழாவினாள்.. நல்ல வேளையாக கார்த்திகாயினி பின் தொடர்ந்து வரவில்லை..

இரவில் திரும்பியபோது.. நரேந்திரன் அதிகம் பேசவில்லை.. சிந்தனையுடனே இருந்தான்.. வித்யாவும் அவனுடன் பேச முயலவில்லை...

அன்று மட்டுமில்லை.. அடுத்து வந்த நாள்களிலும் நரேந்திரன் ஏதோவொரு சிந்தனையுடனே இருந்தான்.. வித்யா அதைக் கலைக்காமல் விலகி நின்றாள்.. பேக்டரியின் வேலைகளில் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள்..

எப்போதுமே தோழியின் முகத்திலிருந்து அவளின் மனச் சுணுக்கத்தை கண்டு விடும் பூர்ணிமா.. நெருங்கி வந்த சுரேந்திரனின் திருமண வேலைகளால் அதைக் கவனிக்கத் தவறிவிட்டாள்.. வித்யாவின் மனதில் தனிமை சூழ்ந்தது..

சுரேந்திரனின் திருமணம் அமர்க்களமாக நடந்து முடிந்தது.. மணி முத்தாறு அரண்மனையின் சின்ன மருமகளாக கால் பதித்து நிவேதிதா நுழைந்து விட்டாள்..

'இதற்குப் பிறகு...?' வித்யாவின் மனதில் கலவரம் எழுந்தது..

## 22



நதியோரம் நடந்த போது..
எனக்காக நீயும் வந்தாய்...
கூட நடந்து வந்தவளே...
ஊடலுடன் ஏன் பிரிந்து போனாய்..?
-நதியோரம் நான் நடந்த போது-

வித்யா காரை விட்டு இறங்கி பேக்டரிக்குள் நடந்தாள்... இப்போதெல்லாம் அவள் தனியாகத்தான்



காரில் வருகிறாள்.. நரேந்திரன் கூட வருவதில்லை.. அடிக்கடி சென்னைக்குப் போகிறேன் என்று வெளியூர் பயணங்களை ஏற்படுத்திக் கொள்கிறான்...

'கார்த்திகாயினியைப் பார்க்கப் போகிறானோ...'

வித்யாவின் மனதிற்குள் சந்தேக மேகங்கள் சூழ்ந்தன.. இருந்தும் அவள் எதையும் நரேந்திரனிடம் வாய் விட்டுக் கேட்கவில்லை... வித்யாவின் மனதை முகத்தின் வழியே படித்து விடும் நரேந்திரன்தான் அவளைக்கண்டு கொள்ளாமல் சதா ஏதோ ஒரு சிந்தனையிலேயே உழன்றானே...

'கார்த்திகாயினியைப் பற்றிய கவலையாய் இருக்கும்...'

ஊமையாய் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் வித்யா.. நிவேதிதாதான் மணிமுத்தாறுக்கு மருமகளாய் வந்த முதல் வாரத்திலேயே அவள் எதற்காக சுரேந்திரனைத் தேடிப் பிடித்து காதலித்தாள் என்ற விவரத்தைப் போட்டு உடைத்து விட்டாளே...

"எனக்கு கார்த்திகாயினி அக்காவை ரொம்பப் பிடிக்கும்... சின்ன வயதில் நான் எப்போதும் கார்த்திகாயினி அக்காவின் பின்னாலேயேதான் அலைவேனாம்.. என் அம்மா சொல்வாங்க.. அக்கா என்னை மடியில் தூக்கி வைத்துக்குவாங்களாம்..."

நிவேதிதாவின் இறுக்கமான முகத்தில் ஏற்பட்ட இளக்கத்தை வியப்புடன் பார்த்தாள் வித்யா...

'இவளுக்கும்.. அந்த கார்த்திகாயினிக்கும் இடையே இருந்த பாசப்பிணைப்பு அத்தனை இறுக்கமானது போல..' வித்யா நினைத்துக் கொண்டாள்...

யாரிடமும் ஒட்டுதல் காட்டாத நிவேதிதா கூடப் பிறந்த அண்ணன்.. அக்காவை விட்டு.. ஒன்று விட்ட சகோதரியின் மீது எப்படி அவ்வளவு இறுக்கமான பாசப் பிணைப்பை உண்டாக்கிக் கொண்டாள் என்று ஆச்சரியப் பட்டுப் போனாள் வித்யா...

அதை அறிந்தவளைப் போல நிவேதிதாவும் அந்தப் பாசப் பிணைப்பைப் பற்றித்தான் சொன்னாள்...

"எனக்கு கௌதம் அண்ணா.. ஸ்வாதிகா அக்காவை விட கார்த்திகாயினி அக்காவைத்தான் பிடிக்கும்.. எங்க அரண்மனையில் நாங்க மூன்று பேர் வாரிசா இருந்தோம்.. அக்கா அப்படியில்லை.. அவங்க அரண்மனையில அவங்க மட்டும்தான் ராணி.. எனக்கு அது பிடிச்சிருந்தது..."

'உனக்கு அது மட்டும்தானே பிடிக்கும்..' வித்யா கைக்கடிகாரத்தை பார்த்துக் கொண்டாள்..

அவளுக்கு அலுப்பாக இருந்தது.. அவளுக்கும் நரேந்திரனுக்கும் இடையே பள்ளம் பறிக்கத்தான்



சுரேந்திரனைத் தேடிப் பிடித்துக் காதலித்தேன் என்று சொல்கிறாள் அவன் மனைவி.. அந்தக் காவியக் காதல் கதையை வேலை மெனக்கெட்டு அவள் வந்து சொல்ல.. வேலையைக் கெடுத்துக் கொண்டு வித்யா 'ஊம்' போட்டுக் கேட்க வேண்டுமா.. என்ன..?

"ம்ஹீம்.. நீயெல்லாம் வாட்சைப் பார்க்க உன்னிடம் கதை சொல்லணும்னு எனக்கு விதித்திருக்கு பாரேன்..", நிவேதிதா இகழ்ச்சியாகச் சொன்னாள்...

"உன்னிடம் கதை சொல்லச் சொல்லி நான் கேட்டேனா..?" வழக்கமான நிதானத்துடன் பதிலுக்கு கேட்டாள் வித்யா...

"நீ கேட்க மாட்ட.. எப்படிக் கேட்ப..? இந்தக் கதை உன் வாழ்க்கையை ஆட்டி வைக்கப் போகிற கதையாச்சே..."

"என் வாழ்வை ஆட்டி வைக்க உன்னால் முடியாது.."

"ஆனா கார்த்திகாயினி அக்காவால் முடியுமே..."

வித்யாவின் உயிர் துடித்தது.. அவள் வாழ்வை கார்த்திகாயினி ஆட்டி வைத்து விடுவாளா..? அவளுடைய நரேந்திரனை அவளிமிருந்து பிரித்து விடுவாளா..?

"அவளுக்குத்தான் கல்யாணம் ஆகி விட்டதே..." வித்யா பற்றுக் கோடாக அதைப் பிடித்துக் கொண்டாள்...

அதைக் கேட்ட நிவேதிதாவின் முகம் மாறியது.. அவள் விழிகளில் தீயின் ஜ்வாலை தெரிந்தது..

“அதுக்குப் பெயர் மேரேஜா..? இது எல்லாத்துக்கும் நரேந்திரன்தான் காரணம்..”

“ஷட் அப் நிவேதா.. நரேன் உன் கணவரின் அண்ணன்.. அந்த மரியாதை உன் மனதில் இருக்கட்டும்..”

“ஹ..! என் ஹஸ்பெண்டுக்கு பிரதர்ங்கிறதெல்லாம் இப்போது வந்த உறவு.. அதுக்கு முன்னாலே அவர் என் கார்த்திகா அக்காவின் சந்தோசத்தை குழி தோண்டிப் புதைத்த ராட்சசன்...”

“நிவேதா..”

“சும்மா கத்தாதே.. என் பெரியப்பா அக்காவுக்கு மாப்பிள்ளை பார்த்தார்.. ஜெய்ப்பூர் ராஜவம்சம்...”

“அப்புறம் என்ன..? உங்க வம்சப் பெருமையில் தானே உங்க அக்கா கல்யாணம் பண்ணிக் கொண்டாங்க..? அதற்காக ஏன் நரேனைத் திட்டுகிற..?”

“பேசாதே.. அந்த ஆள் பெயருக்குத்தான் அக்காவை மனைவியாக வைத்திருக்கிறார்.. மற்றபடி அவருக்கு ஊருக்கு ஒருத்தி.. அவர் குழந்தைகளுக்கு ராஜ வம்சத்துப் பெண்தான் அம்மாவா இருக்க முடியுமாம்.. அதுக்காகத் தான் அக்காவை மேரேஜ் பண்ணிக்கிட்டாராம்..”



“என்னது...?”

வித்யா அதிர்ந்து போனாள்.. கார்த்திகாயினி சந்தோசமாக இல்லையா..? அவள் சந்தோசமாக இல்லையென்பதைத்தான் மதன்பூரில் நரேந்திரனிடம் சொல்லிக் கொண்டிருந்தாளா..? அதனால்தான் நரேந்திரன் வித்யாவை மறந்து சதா.. ஏதோ ஒரு சிந்தனையிலேயே உழல்கின்றானா...?

“நரேந்திரன் மட்டும் காதலித்த என் அக்காவை கை விடாமலிருந்தால் என் அக்காவுக்கு இந்த நிலைமை வந்திருக்காதே..” நிவேதிதா பொருமினாள்...

நரேந்திரனை அவள் குற்றம் சொல்வதை வித்யாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

“ஏன்..? அதை இப்படியும் சொல்லலாமே.. கார்த்திகா மட்டும் காதலை உதறிவிட்டு வேறு ஒருவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் நரேனுக்காக காத்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காதே...” வித்யா பதில் கொடுத்தாள்...

“எப்படிக் காத்திருக்க முடியும்..? காதலியை மறந்து குடும்பம்தான் முக்கியம்ன்னு நினைக்கிற ஒருத்தனுக்காக என் அக்கா காத்திருக்கனுமா..?”

“வேணாம்ன்னு அவங்க நினைத்தாங்க.. வேற ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க.. இதில்

நரேனின் தப்பு என்ன இருக்கு..? காதலியை மறக்கலை... அவருடைய காதலிதான் அவர் மறந்துட்டாங்க..." வித்யாவுக்கு ஆற்றாமையாக இருந்தது..

அவளின் நரேந்திரன் என்ன நிலையில் இருந்தான் என்பதெல்லாம் இவளுக்கு எப்படித் தெரியும்...

வித்யா முகம் சிவக்க முகத்தை திருப்பிக் கொண்டாள்.. அவளை தீர்க்கமாகப் பார்த்தாள் நிவேதிதா..

"இப்போது சொல்கிறேன் கேட்டுக் கொள்.. நான் எதற்காக சுரேந்திரனைத் தேடிப் பிடித்துக் காதலித்தேன் தெரியுமா..? இந்த மணிமுத்தாறு அரண்மனையில் ஏன் மருமகளாக காலடி வைத்தேன் தெரியுமா..?"

"தெரியாது..."

"எந்தக் குடும்பத்தைக் காரணம் காட்டி என் அக்காவை உன் அருமை நரேந்திரன் உதறினானோ.. அந்தக் குடும்பம் அவனைத் தூக்கி எறிய வேண்டும் என்பதற்காக..."

'அதைத்தான் ஏற்கனெவே நரேனின் குடும்பம் செய்து விட்டதே...' மனதிற்குள் வேதனைப் பட்டாள் வித்யா..

பூர்ணிமா மட்டும் நரேந்திரனுக்காக.. போராடாமல் இருந்திருந்தால் அவனின் வாழ்க்கையில் திருமணம் என்ற ஒன்று நடந்திருக்குமா...?



அதையெல்லாம் இவளிடம் ஏன் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் வேறு ஒரு காரணத்திற்காக சீறினாள் வித்யா..

"ஜாக்கிரதை நிவேதா.. இனியொரு முறை என் கணவரை 'அவன்.. இவன்..'ன்னு நீ பேசினால் உன் பல்லை உடைத்து விடுவேன்..."

"வாட்..."

"போடி.."

ஏற்கனெவே அகன்றிருந்த நிவேதிதாவின் விழிகள் மேலும் அகல்வதைக் கவனிக்காதவளைப் போல வெளியே நடந்து விட்டாள் வித்யா...

'யாருகிட்ட..?' அவளுக்கு கோபம் கொந்தளித்தது...

'இவ மனசில என்ன நினைச்சுக்கிட்டு இருக்கா..? எவ்வளவு தைரியமிருந்தா என்கிட்டேயே நரேனை 'அவன்' 'இவன்'ன்னு பேசுவா...'

அன்று முழுவதும் அந்தக் கோபம் வித்யாவின் மனதில் இருந்தது...

'இவ பெரிய மகாராணியாய் இருந்தால் அது இவள் மட்டுக்கு.. எனக்கென்ன வந்தது..? என் புருசனை மரியாதை குறைவாய் பேச இவள் யார்..? இவளுடைய

ஒன்று விட்ட அக்காவை என் நரேனா கைவிட்டார்..? அவள்தானே இவரை கை விட்டாள்..?'

நரேந்திரனை யாரெல்லாம் கைவிட்டார்கள் என்ற நினைவில் மனம் நொந்தாள் வித்யா...

'வந்துட்டா.. பெரிசா நியாயம் பேசிக்கிட்டு.. என் நரேனுக்கு அநியாயத்திற்கு மேல் அநியாயம் நடந்ததே.. அது இவளுக்குத் தெரியுமா...'

வித்யா நிவேதிதாவிடம் பேசுவதைத் தவிர்த்தாள்.. தானுண்டு.. பேக்டரியுண்டு என்று இருந்தவளிடம் பேக்டரிக்குள் நுழைந்து வம்பு வளர்த்தாள் நிவேதிதா..

"அண்ணி.. நிவி நம்ம பேக்டரி அட்மினிஸ்ட்ரேசனில் பங்கெடுத்துக்கனும்னு ஆசைப்படறா..."

சுரேந்திரன் வித்யாவிடம் இந்த தகவலைச் சொன்ன போது நரேந்திரன் ஊரில் இல்லை.. சென்னைக்கு சென்றிருந்தான்... நிவேதிதாவின் ஆசை எதுவென்று வித்யாவுக்குப் புரிந்தது.. அவள் பேக்டரியின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்படவில்லை.. நரேந்திரன்.. வித்யாவின் நிம்மதியைக் குலைக்க வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறாள்..

"இதில் நான் சொல்ல என்ன இருக்கு சுரேன்.. பேக்டரி உங்களுக்கும்.. உங்கள் அண்ணனுக்கும் சொந்தமானது..



பொதுவானது.. இதை உங்க அண்ணனிடம் சொன்னால் போதுமே..."

"அண்ணனிடம் சொல்லிட்டேன் அண்ணி..."

"ஓ..."

வித்யாவுக்கு பேச்சு வரவில்லை.. அவளுடைய நரேந்திரன் ஏன் இதைப் பற்றி அவளிடம் சொல்லவில்லை..?

## 23

நதியோரம் நடந்த போது..
உன்வரவை கண்கள் தேடும்..
தினந்தோறும் வந்துவிட்டு...
நான் தேடும்போது நீ எங்கே போனாய்..?
-நதியோரம் நான் நடந்த போது-

"நிவி ஜி.எம்மா இருக்கட்டும் அண்ணி..."

சுரேந்திரன் சொன்னபோது வித்யா மறுத்துப் பேசவில்லை.. பேக்டரியின் எம்.டியாக நரேந்திரனும் உதவி எம்.டியாக சுரேந்திரனும் இருந்தார்கள்.. வித்யா

பெர்ஸனல் மேனேஜராக இருந்தாள்.. மகேந்திரன் பார்த்துக் கொண்டிருந்த ஜி.எம் பதவி காலியாகவே இருந்தது.. அதில் நிவேதிதா அமர்வதை வித்யாவால் எப்படி ஆட்சேபிக்க முடியும்...?

'இனி பேக்டரியின் நிலவரம் என்னவாக இருக்கும்..?'

வித்யாவால் அனுமானிக்க முடிந்தது.. அவள் கணித்ததைப் போலவே நிவேதிதா பேக்டரிக்குள் பிரச்னைகளை உண்டாக்க ஆரம்பித்தாள்...

அன்றும் அதுபோலவே அவள் செய்து வைத்திருக்க.. வித்யா காரை விட்டு இறங்கும் போதே அவளிடம் வழக்கு வந்து விட்டது..

"என்ன மேடம் நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..? தொழிலாளின்னா உங்களுக்கு அவ்வளவு இளக்காரமா போயிருச்சா..?"

அப்போதுதான் வந்தவளிடம் ரங்கதுரை இப்படிக் கொதித்தால் அவள் என்னவென்று பதில் சொல்லுவாள்..?

ரங்கதுரையோ அதையெல்லாம் நினைத்துப் பார்த்தாகத் தெரியவில்லை.. அவனுடைய மீசை துடித்துக் கொண்டிருந்தது...



"கூல் டவுன் சார்.. என்ன விசயம்ன்னு நிதானமாச் சொல்லுங்க.. நீங்க சொன்னாத்தானே எனக்கு என்னன்னு தெரியும்..?" அவள் அமைதியாகவே பதில் சொன்னாள்..

"நிதானமா பேசுன்னா எப்படிப் பேசறது மேடம்..? எங்க சுயமரியாதையை காலடியில் போட்டு மிதிக்கறிங்க.. தொழிலாளியின் உரிமையைத் தட்டிப் பறிக்கறிங்க.."

"யார்...? நானா...?"

"அதை நீங்க செய்தா என்ன...? ஜி.எம் அம்மா செஞ்சா என்ன...? ரெண்டுமே ஒன்னுதானே..."

'போச்சுடா..' என்றிருந்தது வித்யாவிற்கு...

இரண்டும் ஒன்றில்லை.. வேறுவேறு என்று இவனுக்கு யார் சொல்வது என்ற நினைவுடன் இயலாமை மேலோங்க ரங்கதுரையின் முகம் பார்த்தாள்...

"இன்னைக்கு என்ன பிரச்னை...?"

"தினமும் நடக்கிறதைப் போல்தான்ம்மா.. ஜி.எம் மேடம் ரவுண்ட்ஸ் வந்திருக்காங்க.. நம்ம சுப்பிரமணி அவங்களுக்கு வணக்கம் சொல்லலை.."

"சொல்லியிருக்கலாமே..."

அப்படிச் சொல்லியிருந்தால் பிரச்னையைத் தவிர்த்திருக்கலாமே என்ற நினைவில்தான் யதார்த்தமாக

அந்த வார்த்தைகளை வித்யா சொல்லி விட்டாள்... ரங்கதுரையோ பிலுபிலுவென்று அவளை பேச்சில் உலுக்கி விட்டான்..

"ஏன் சொல்ல மாட்டிங்க...? எங்க வியர்வையிலே தேரோட்டுகிற முதலாளி வர்க்கம்தானே நீங்க...?"

"யூனியன் லீடர் சார்.. நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை.."

"நீங்க எந்த அர்த்தத்தில் சொல்லியிருந்தாலும் அந்த அர்த்தத்தில்தானேம்மா வந்து முடியும்...?"

"அப்படி நீங்களா நினைச்சுக்கிட்டா நான் என்ன செய்கிறது...? எப்படியும் நம்ம சுப்பீரியரைப் பார்த்தா நாம மரியாதைக்கு வணக்கம் சொல்லனுமா.. வேண்டாமா..?"

"சொல்லனும்தான்.. எப்பச் சொல்லனும்..? மேலே ஃபேன் ஓட.. காலை ஆட்டிக்கிட்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தா சொல்லனும்..மெஷின் ஓட.. அதில தலையைக் கொடுத்து வேலையைப் பார்த்துக்கிட்டு இருக்கிறவன்.. யார் வருகிறாங்கன்னு பார்த்தாத்தானே சொல்ல முடியும்...?"

'நியாயம்தான்...' வித்யா நினைத்துக் கொண்டாள்..

இயந்திரத்துடன் வேலை பார்ப்பவனின் கவனம் நொடிப்பொழுதுக்கு சிதறினாலும் எப்படிப்பட்ட விபத்து நிகழும் என்பதை அவள் அறியாதவளா...?



ஆனால் இந்த நியாயத்தை நிவேதிதாவிடம் யார் சொல்வது...? அவளால் சொல்ல முடியுமா...? அப்படிச் சொல்ல முடியாமல்தானே இது போன்ற பிரச்னைகள் அடிக்கடி வெடிக்கின்றன...

"எனக்கு உங்க பக்க நியாயம் புரிகிறது யூனியன் லீடர் சார்.. நான் இதை எம்.டியிடம் சொல்கிறேன்..."

"ஏன்ம்மா.. ஜிஎம் அம்மாகிட்டச் சொல்ல மாட்டிங்களா...? வணக்கம் சொல்லலைங்கிறதுக்காக வாடா.. போடான்னு அவனைப் பேசியிருக்காங்க.. தொழிலாளின்னா அவ்வளவு ஈஸியாப் போயிருச்சா...? உழைக்கிறோம்... அதுக்கான சம்பளத்தைத்தான் உங்ககிட்ட வாங்கறோம்.. நீங்க ஒன்றும் இலவசமாக் கொடுக்கலை.. நாங்க ஒன்றும் கொத்தடிமை இல்லை..."

"விசயத்தை பெரிசாக்க வேணாம் சார்..."

"இது பெரிசான விசயம்தான் மேடம்.. எங்க சுயமரியாதை பெரிசில்லைன்னா.. வேற எதுதான் பெரிசு...?"

உண்மைதானே.. சுயமரியாதையைவிட பெரிதான ஒன்று இந்த உலகத்தில் இருக்கிறதா...?

"என்ன செய்யனும்னு நினைக்கறிங்க...?"

"அவங்க சுப்பிரமணிகிட்ட மன்னிப்புக் கேட்டாகனும்..."

"இல்லைன்னா...?"

"இங்கே யாரும் வேலை செய்ய மாட்டோம்.. லே.. வாங்கலே.. பேக்டரியோட கதவை இழுத்து மூடுங்கலே..."

நொடிப் பொழுதில் அங்கே கலவரம் வெடிக்கும் சூழ்நிலை உருவாகியதில் வித்யா முடிவெடுத்து விட்டாள்..

இதைப் போல தினமும் பல பிரச்னைகளை நிவேதிதா உருவாக்குவதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.. வித்யாவுடன் மோதினால் கூட வித்யா பொறுமையாக போய் விடுவாள்... தொழிலாளிகளின் சுய மரியாதையுடன் விளையாடிப் பார்க்க நிவேதிதா நினைப்பதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை..

செல்போனை எடுத்து காதுக்கு கொடுத்தவள் சுரேந்திரனை அழைத்தாள்... மறுநொடியில் சுரேந்திரனின் குரல் கேட்டது...

"சொல்லுங்க அண்ணி..."

"பேக்டரியின் முன் வாசலுக்கு வாங்க சுரேன்..."

சுரேந்திரன் உடனடியாக வந்து விட்டான்.. அங்கிருந்த கொந்தளிப்பான சூழலைக் கண்டு புருவங்களை உயர்த்தினான்...



"என்ன ஆச்சு...?"

வித்யா விவரத்தைச் சொன்னதும் சுரேந்திரனின் புருவங்கள் முடிச்சிட்டன... அவனுடைய செல்போனை எடுத்து நிவேதிதாவை அழைத்தான்.. வந்தவளிடம் மன்னிப்புக் கேட்கச் சொன்னான்.. இப்போது நிவேதிதா கொந்தளித்தாள்...

"என் சைடில எனன நியாயம் இருக்குன்னு நீங்க பார்க்க மாட்டிங்களா சுரேன்..."

"சொல்லு.. அதில் நியாயம் இருக்குதான்னு பார்க்கிறேன்.."

"சுப்பிரியருக்கு.. மரியாதை கொடுக்கனும்.. அதைக் கேட்டு வாங்குகிறபடி உங்க பேக்டரி லேபர்ஸை நீங்க பழக்கி வைத்திருக்கீங்க.. மதன்பூரில் இப்படி இல்லை.. எங்க நிழலைக் கண்டால் கூட உடனே சல்யூட் வைத்து விடுவார்கள்.. மரியாதை தெரியாதவங்கதான் உங்க ஊரில் இருக்காங்களா...?"

"நிவி... எங்களுக்கும் மரியாதை தெரியும்.. பேக்டரியின் செக்யூரிட்டி உன்னைக் கண்டதும் விஷ் பண்ணலையா...? நம்ம ஆபிஸில் அட்மினிஸ்ட்ரேசன் செக்சனில் இருக்கிறவங்க உன்னைக் கண்டதும் விஷ் பண்ணலையா...?"

சுரேந்திரன் கேட்டுக் கொண்டிருந்த போதே அங்கே வந்த குகன் நிவேதிதாவிடம்...

"குட்மார்னிங் மேடம்..." என்று சொன்னான்...

சுரேந்திரனின் பார்வை 'கேட்டுக்கிட்டியா...' என்று கேட்க நிவேதிதா திணறிப் போனாலும் உடனே சமாளித்துக் கொண்டாள்..

"நான் சொன்னது உங்க லேபர்ஸை..."

"அவங்க வேலை மெஷினோடு.. மெஷின் முன்னால் இருக்கிறவங்க முதலாளியே வந்தாலும் திரும்பிப் பார்க்க மாட்டாங்க.. நீ ஸாரி சொல்லு..."

"ஓகே... சுரேன்.. நீங்க உங்க லேபர் விஷ் பண்ணாததுக்கு விளக்கம் சொல்லிட்டிங்க.. மேட்டர் இஸ் ஓவர்.. இதில் நான் ஸாரி சொல்ல வேண்டிய அவசியம் என்ன...?"

"என்ன பேசற...? நீ எப்படி 'வாடா' போடான்னு பேசலாம்...?"

"அது கோபத்தில் பேசினது.. இப்ப நீங்க விளக்கம் சொல்லிட்டிங்கல்ல... இனி இதை அவாய்ட் பண்ண டிரை பண்றேன்..."



நிவேதிதா அசைந்து கொடுக்காமல் வழக்கடித்ததில் ரங்கதுரையின் ரத்தஅழுத்தம் எகிறியது..

"டிரை பண்றிங்களா...? இவ்வளவு ஈஸியா பேசறிங்களே... எங்க மரியாதை உங்களுக்கு இவ்வளவு ஈஸியா போயிருச்சா...? இனிமே நீங்க டிரை பண்றது இருக்கட்டும்மா.. இப்ப நீங்க பேசினதுக்கு என்ன பதில்...?"

"சுரேன்! இவங்ககிட்டயெல்லாம் நான் ஈக்குவலா பேச முடியாது.. யார்கிட்ட யார் ஸாரி கேட்கிறது...? எங்க மதன்பூரில் என்னிடம் நின்று பேசக்கூட எங்க லேபர்ஸ் யோசிப்பாங்க..."

எரிகிற கொந்தளிப்பில் நிவேதிதா எண்ணையை ஊற்றிக் கொண்டேயிருக்க சுரேந்திரன் கோபமானான்..

"முதலில் உன் வாயை மூடுகிறயா...?" என்று சீறினான்..

"சுரேன்.. இவங்க முன்னாலே என்னை அதட்டுகிறிங்களா..?" நிவேதிதா வெகுண்டாள்...

"ஷட் அப்.. இவங்க என்னோட லேபர்ஸ்.. இவங்க வேற நான் வேற இல்லை.. முதலில் ஸாரி சொல்லு..."

நிவேதிதாவிற்கு வேறு வழி இருக்கவில்லை.. அரை குறையாக அவள் "ஸாரி.." என்று வாய்க்குள்

முணுமுணுக்க.. வெற்றிபெற்ற தொழிலாளர்களின் கொந்தளிப்பு குறைந்தது.. சுரேந்திரன் வேகமாக போய்விட.. கோப மூச்சுக்களுடன் வித்யாவை முறைத்தாள் நிவேதிதா...

"இது உன் வேலைதானா...?"

"நீ செய்து வைத்த வேலை..."

"அது எப்படி நரேனைப் போலவே சுரேனும் நீ என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்கிறார்..? நீ போட்டிருக்கும் மயக்க மருந்தின் ரகசியத்தை என்னிடமும் சொல்லேன்.."

"நிவேதிதா..."

"உண்மையைச் சொன்னால் ஏன் கத்துகிறாய்...?"

"ச்சீ.. நீயெல்லாம் ஒரு மனுஷி..."

வித்யா வேகமாக போய்விட நிவேதிதாவின் கோபம் அடங்க மாட்டேன் என்று திமிறியது..

மாலையில் மணிமுத்தாறு அரண்மனைக்குள் அவள் நுழைந்த போது மீனலோசனி அவளைத் தேடி வந்தாள்...

"இன்னைக்கு பேக்டரியில் பிரச்னையாமே.. அந்த வித்யா உன்னை ஸாரி கேட்க வைத்தாளாமே.." என்றும் கேட்டாள்.



அதற்குள் இவளுக்கு எப்படி விவரம் தெரிந்தது என்று நிவேதிதா திகைத்துப் போனாள்.. காற்றில் கூட விவரத்தைக் கறந்து விடும் மீனலோசனியின் ஆற்றலைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்...?

"வித்யா கேட்க வைக்கலை.. சுரேன் கேட்க வைத்தார்..."

"நினைத்துக்கிட்டு இரு.. அந்த வித்யாதானே சுரேனுக்கு போனை போட்டு விவரத்தைச் சொன்னா...?"

"என்னிடம் சொல்லலை.."

"உனக்கு இதில் ஒரு திருப்தியா...? ஆனாலும் நிவேதிதா... உனக்கு விவரம் போதாது.. அவ்வளவுதான் நான் சொல்வேன்..."

"வாட்...!"

"கோபப்பட்டால் பட்டுக்க.. பின்னே என்ன...? அந்த பேக்டரிக்குள்ளே தொழிலாளர்களுக்கு ஏதாவது ஒன்றுன்னா வித்யா அவங்க பக்கம்தான் நிற்பா.. இதுவரைக்கும் அது போல நடக்காமல் இருந்தது.. நீ வந்து அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கிட்ட.."

மீனலோசனி என்னவோ நிவேதிதாவிற்கு ஆலோசனை கூறும் எண்ணத்துடன்தான் அதைச் சொன்னாள்.. அது நாள் வரை மகேந்திரன் யூனியன்

தலைவரை தூண்டி விட்டு வித்யாவிற்கு எதிராக வேலை செய்ததை எடுத்துச் சொன்னாள்.. அதனால் தொழிலாளர்களை பகைத்துக் கொள்ளாமல் அவர்களுக்கு நன்மை செய்வதைப் போல வித்யாவிடம் மோத விடச் சொன்னாள்.. ஆனானப்பட்ட மீனலோசனியாலேயே நிவேதிதாவின் எண்ணவோட்டத்தை புரிந்து கொள்ள முடியாமல் போனது உலக மகா அதிசயம்தான்...

"ஐ.. ஸீ.. " என்ற நிவேதிதாவின் கண்கள் மின்னின..

'ஆஹா... இனி இவ தொழிலாளர்களை பகைத்துக்க மாட்டா...' மகிழ்ந்து போன மீனாவிற்கு...

'அது என்ன தேவைக்கு...?' என்று நிவேதிதாவின் நினைவைப் பற்றித் தெரியாது...

நிவேதிதாவே வித்யாவுடன் மோதும் எண்ணத்துடன் இருந்தாள்... அதிகார வர்க்க மனப்பான்மை கொண்டவளிடம் தொழிலாளர்களிடம் கை கோர்த்துக் கொள் என்று சொன்னால் கேட்டுக் கொள்வாளா...?

வித்யாவுடன் நேருக்கு நேர் மோதினால் சுரேந்திரனின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதால் நிவேதிதா வாய்ப்புக்களை எப்படி உருவாக்கிக் கொள்வது என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.. அப்போது பார்த்து



மீனலோசனி அதற்கு வழி சொல்லிக் கொடுத்து விட.. நிவேதிதா உற்சாகமாகி விட்டாள்...

'அப்படியா.. அங்கே அடித்தால் இங்கே வலிக்குமா..? இவளும் தொழிலாளியாய் இருந்தவள்தானே.. அதனால் தான் ரோசம் பொத்துக்கொண்டு வருதோ.. வரட்டும்.. அப்படி வந்தால்தான் அவளை உண்டு இல்லைன்னு ஆக்க முடியும்.. எத்தனை நாளைக்குத்தான் சுரேன் அவளுக்கு சப்போர்ட் பண்ணுவார்...? என்றைக்காவது ஒருநாள் எனக்கு சப்போர்ட் பண்ணித்தானே ஆகணும்....? அப்போது குடும்பம் உடைந்துதானே போகும்...'

நிவேதிதா தினமும் பிரச்னைகளை உருவாக்கினாள்.. வித்யா சளைக்காமல் அவளுடன் போராடினாள்.. தொழிலாளர்களின் பக்கம் நின்ற வித்யாவின்மீது தொழிலாளர்களின் பழைய நம்பிக்கை மீண்டது.. ரங்கதுரையின் மனதிலிருந்த கசடும்.. பொறாமையும் பறந்தோடியது.. தூண்டி விட வந்த மகேந்திரனிடமே அவன் பொரிந்து தள்ளி விட்டான்..

"சும்மா போங்க சார்.... உங்களுக்கு எதுக்காக அந்தம்மா மேலே இத்தனை காண்டு..? உங்களைப் போல முதலாளி வர்க்கத்தில் உங்க அண்ணன் பெண்ணைக் கட்டாம எங்களைப் போல தொழிலாளிகள் வர்க்கத்தில் கட்டிட்டார்.. அதுதானே..."

'போச்சுடா...' மகேந்திரன் தலையில் கை வைத்துக் கொண்டு போய் விட்டான்...

நிவேதிதா பேக்டரிக்குள் குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருக்க.. கார்த்திகாயினி தேவி.. வித்யாவின் மனதிற்குள் குழப்பத்தை விதைத்துக் கொண்டிருந்தாள்..

நரேந்திரன் மணிமுத்தாறில் இருக்கும் சமயங்களில் அவனுக்கு வரும் செல் போன் அழைப்புகளில் கார்த்திகாயினியின் பெயர் அதிகமாக இருந்தது..

'இவன் அவகூட போனில் பேசுகிறானா...'

வித்யாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. கார்த்திகாயினியின் போன் வரும்போது நரேந்திரன் தனிமையில் பேசப்போய் விடுவதை அவள் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்... ஓர் முறை அப்படி அழைப்பு வந்தபோது நரேந்திரன் குளியலறையில் இருந்தான்.. வித்யா பெயரைக் கவனிக்காமல் அவனின் செல்போனை எடுத்து உயிர்ப்பித்து விட்டாள்.. அவள் பேசுவதற்கு முன்னால் செல்போனில் பெண் குரல் குழைவுடன் பேசியது..

"இன்னைக்கு நீங்க என்னுடன் இருந்திருக்கனும் நரேந்தர்.. ஏன் வரவில்லை...?"



வித்யா உறைந்து போனவளாக செல்போனின் திரையைப் பார்த்தாள்.. அது 'கார்த்திகாயினி' என்று ஒளிர்ந்தது....

## 24

நதியோரம் நடந்த போது..
நீ சொன்னதெல்லாம்.. கானல் நீரா..?
தண்ணீரில் எழுதியதைப் போல..
கண்ணீரில் நான் எழுதிய கதையா..?
-நதியோரம் நான் நடந்த போது-

வித்யாவினால் தன் காதுகளையும்.. கண்களையும் நம்ப முடியவில்லை.. அவள் ஸ்தம்பித்து விட்டாள்...

எவ்வளவு உரிமையுடன் சொல்கிறாள்..? அன்று அவளுடன் வித்யாவின் நரேந்திரன் இருந்திருக்க வேண்டுமாமே.. அப்படியா..? அவளுடைய நரேந்திரன் அப்படியொரு வாக்குறுதியை அவனுடைய முன்னாள் காதலிக்குக் கொடுத்திருந்தானா...?

அவள் முன்னாள் காதலியாக இருந்தாலும்.. அவள்தான் நரேந்திரனின் முதல்காதலி என்ற நினைவில்

வித்யா தவித்துப் போனாள்... அந்த முன்னாள் காதலியும்.. முதல் காதலியுமான கார்த்திகாயினி தேவியுடன் வித்யாவின் நரேந்திரன் ரகசிய உறவில் இருப்பதில் துடித்துப் போனாள்...

குளியலறையில் தண்ணீர் கொட்டும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.. வித்யாவிற்கு கண்ணீர் வந்தது.. அடக்கிக் கொண்டாள்..

'அழாதே வித்யா...' மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்..

'உன நரேன் ஏற்கனெவே ஒரு பெண்ணைக் காதலித்தவன் என்று உனக்குத் தெரியும்தானே.. தெரிந்துதான் நீ அவனைக் காதலித்தாய்.. இன்னொருத்தியைக் காதலித்தவனின் மனதில் அவளைப் பற்றிய நினைவுகள் வராமலிருக்கும் என்று எந்த நம்பிக்கையில் நீ முடிவு செய்தாய்...?'

அவள் மனதுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.. வித்யா ஜன்னல் திரையை விலக்கி.. தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த நதியைப் பார்த்தாள்.. அவளுடைய சிநேகிதியான நதி.. அவளுடைய துடிப்பை உணர்ந்து கொண்டதைப் போல.. மௌனமாக ஓடிக் கொண்டிருந்தது.. ஜன்னல் கம்பியில் முகம் பதித்திருந்த வித்யாவின் முகம் கண்ணீரின் ஈரத்தில் நனைந்திருந்தது..



எவ்வளவுதான் கட்டுப்படுத்தினாலும்.. கண்ணீருக்கு அனை போட முடியவில்லை என்பதை உணர்ந்த வித்யாவின் மனதில் பாறாங்கல் ஏறி அமர்ந்தது.. கனக்கும் மனதின் சுமையை இறக்க வழி தெரியாமல் தவித்துப் போனாள் அந்தப் பேதை...

லேசாக கண்ணைச் செருகியதைப் போலத் தோன்றியதில் அவள் அவசரமாக ஜன்னலை விட்டு விலகி படுக்கைக்குச் சென்று சரிந்து படுத்து.. கண் மூடிக் கொண்டாள்...

கண் திறக்க முடியாமல் அவளை அழுத்தும் சோர்வு எதனால் ஏற்பட்டிருக்கிறது என்று அவளுக்கு நன்றாகவே தெரியும்.. அந்தச் சோர்வு.. அந்த ஒரு மாத காலமாகவே அவளைப் படுத்தி எடுத்துக் கொண்டிருக்கிறது.. சோர்வு மட்டுமல்ல.. எதைச் சாப்பிட்டாலும் அவள் வயிற்றில் விழுவதற்கு முன்னாலேயே குமட்டல் எடுத்து வாந்தியாய் வெளிவந்து விடுகிறது.. இதைச் சொல்ல நரேந்திரன் அவளருகில் இல்லை.. முதல் நாள்வரை அவன் வெளியூரில்தான் இருந்தான்.. அன்றுதான் மணி முத்தாறுக்கு வந்தான்.. பின்னாலேயே போனில் கார்த்திகாயினியின் அழைப்பும் வந்து விட்டது...

வித்யாவின் மனதுக்கு.. அந்த வாந்தியும்.. மயக்கமும் எதனால் ஏற்படுகின்றன என்று மிக நன்றாகவே தெரியும்..

அதை ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள அவள் லேடி டாக்டரை அணுகியாக வேண்டும்.. அந்த நொடியில் அவளுடைய நரேந்திரன் அவளருகில் இருக்க வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள்..

'இன்னைக்கு நீங்க என்னுடன் இருந்திருக்கனும் நரேந்தர்...'

கார்த்திகாயினியின் குரல் அவள் காதுகளில் ஒலித்தது... வித்யாவினால் ஏன் அந்த நிச்சயத்தில் இருக்க முடியவில்லை..?

அவள் வாழ்வின் மிக முக்கியமான தருணத்தில் அவள் எதிர்பார்க்கும் இனிப்பான செய்தியை லேடி டாக்டர் சொல்லும்போது அவளுடைய நரேந்திரன் அவளுடன் இருக்க வேண்டாமா..?

சொல்லி விடலாம்.. ஒற்றை வரியில் அவள் உடல் நிலையைப் பற்றித் தெரிவித்து விடலாம்.. ஆனால் அவளால் அதைச் சொல்லவும்.. செய்யவும் முடியவில்லை..

அவள் முகம் பார்த்து.. அவளின் உடல் நிலையையும்.. மனநிலையையும் தெரிந்து கொண்ட அவளுடைய நரேந்திரன் எங்கே போய் விட்டான்..? கார்த்திகாயினியின் பின்னால் போய் விட்டானா..? அப்படிப்



போய் விட்டவனை அவளுடைய உடல் நலத்தைக் காரணம் காட்டி அவள் இழுத்துப் பிடித்துக் கொள்வதா..?

'ஒருநாளும் நான் அதைச் செய்ய மாட்டேன்...'

வித்யா மனதிற்குள் உறுதியுடன் சொல்லிக் கொண்டாள்.. அவளைவிடக் கார்த்திகாயினி தேவிதான் முக்கியம் என்று நரேந்திரன் நினைத்தால் வித்யா அவன் போக்கில் அவனை விட்டு விட்டு விலகிக் கொள்வாள்.. அவன் மனதைத் திருப்ப முனைய மாட்டாள்...

குளியலறை திறக்கும் சப்தம் கேட்டது.. வித்யா அவசரமாக கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.. குளியலறையை விட்டு வெளியே வந்த நரேந்திரனின் விழிகளைச் சந்திக்காமல் முகம் திருப்பிக் கொண்டாள்.. மனைவியைப் பார்த்தபடி வந்த நரேந்திரனின் புருவங்கள் சுருங்கின.. அவன் முகம் பார்க்காமல் முதுகைக் காட்டிப் படுத்திருந்த மனைவியின் அருகில் அமர்ந்து அவளின் இடுப்பைத் தொடப் போனான்...

அவனின் அருகாமையை உணர்ந்த வித்யாவின் மனம் பரவசத்துடன் 'டிக்..டிக்' கென்று அடித்துக் கொண்டது.. இதோ அவன் அவள் இடுப்பைத் தொடப் போகிறான்.. அவளை அவன் பக்கமாகத் திருப்பப் போகிறான்.. ஏண்டி முகம் திருப்பிக் கொள்கிறாய் என்று கேட்கப் போகிறான்.. கலைந்திருக்கும் அவள் முடியை சீர்

படுத்தப் போகிறான்.. கலங்கிச் சிவந்திருக்கும் அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்க்கப் போகிறான்.. உன் உடம்பு சரியில்லையா வித்யா என்று பதறப் போகிறான்.. வா டாக்டரிடம் போகலாம் என்று சொல்லப் போகிறான்..

இத்தனையையும் எதிர்பார்த்து வித்யாவின் மனம் தவித்துக் கொண்டிருந்த போது நரேந்திரனின் போன் ஒலித்தது.. நரேந்திரனின் கை வித்யாவின் இடுப்பைத் தொடாமல் விலகி செல்போனை எடுத்தது.. செல் போனின் திரையில் ஒளிர்ந்த பெயரைக் கண்டதும் அவனும் விலகி எழுந்து பால்கனிக்குப் போய் விட்டான்...

வித்யாவின் பரவச உணர்வுகளும்.. எதிர்பார்ப்புகளும் ஒரு நொடியில் கலைந்து.. மறைந்து விட்டன.. காற்றில் கலந்து விட்ட கற்பூரமாய் தொலைந்து போன உணர்வுகளைத் தேடுபவளைப் போல சூன்யவெளியில் பார்வையைப் பதித்திருந்தாள் வித்யா...

நரேந்திரன் பால்கனியின் கதவை இறுக்கிச் சாத்தியிருந்தான்.. சாத்தப்பட்டிருப்பது பால்கனியின் கதவுகளா.. இல்லை... அவன் மனக் கதவுகளா என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டாள் வித்யா...

அவளுடைய நரேந்திரன் மூடப் பட்டிருக்கும் கதவுகளுக்கு அந்தப் பக்கமாக.. அவள் கை தொடும் தூரத்தில்தான் இருக்கிறான்.. ஆனால்... வித்யாவிற்கு



மட்டும் அவன் அவளின் கைக்கு எட்டாமல் வெகு தொலைவில் இருப்பதைப் போன்ற பிரமை உண்டானது..

பால்கனியின் கதவைத் திறந்து வந்தவனின் முகத்தில் கடுமை விரவியிருந்தது... அப்படிப்பட்ட கடுமையை அதற்கு முன்னால் அவன் முகத்தில் வித்யா பார்த்ததே இல்லை..

'இது என் நரேந்திரன்தானா..' துக்கத்துடன் அவள் துடித்தாள்..

"எனக்கு வந்த போனை நீ அட்டெண்ட் பண்ணினயா..?"

அவனின் கேள்வியில் வித்யாவின் விழிகள் விரிந்தன.. எத்தனை அதிகாரமாகக் கேட்கிறான்.. எவ்வளவு கோபத்துடன் கேட்கிறான்.. அவனுக்குத் தெரியும்.. போனில் பேசியவள் கார்த்திகாயினி தேவிதான் என்பது.. அவள் என்ன பேசியிருக்கிறாள் என்பதும் தெரிந்திருக்கும்... உண்மையில் அவன் குற்ற உணர்வில் தடுமாறியிருக்க வேண்டும்.. விளக்கம் சொல்ல முடியாமல் கைகளைப் பிசைந்திருக்க வேண்டும்.. அவன் அதைச் செய்யாமல் அவளை அதட்டுகிறான் என்றால் இதை வித்யா எங்கே போய் சொல்வாள்...?

'பெருமாளே...'

கைப்பொருளை களவு கொடுத்த சிறுமியாய் அவள் மனதுக்குள் அரற்றினாள்...

அவளுடைய பெருமாளின் செவிகளில் அவளின் வேதனைக் குரல் ஏன் ஒலிக்கவில்லை..? எதுவுமே இல்லாத அந்தப் பேதைக்கு இருந்தது நரேந்திரனின் காதல் மட்டும்தான்.. அதையும் பங்குபோட கார்த்திகாயினி வருவாளென்றால் பெருமாள் அதை எப்படி அனுமதித்தார்..?

"கேட்கிறேனில்ல.. பதில் சொல்லு..."

"ம்ம்ம்..."

"ம்ப்ச்.. இதென்ன பழக்கம்..? என் போனை நீ எதுக்காக அட்டெண்ட் பண்ணின...?"

வித்யா அதிர்ந்து போனாள்.. அவனுடைய போன் காலை அவள் எடுத்துப் பேசியிருக்கக் கூடாதா..? அவள் வேறு.. அவன் வேறா..?

செல்போனில் கார்த்திகாயினியின் பெயரை வெளிப்படையாக அவன் பதிவு பண்ணி வைத்திருக்கிறான் என்பது அவள் அறிவில் உறைத்தது...

அதற்கு என்ன அர்த்தம்...?



## 25

நதியோரம் நடந்த போது..
நான் நடக்க கரம் கொடுத்தாய்..
உன் கைபிடித்து நடந்து வந்தால்..
கரம் விலக்க ஏன் முனைந்தாய்..?
-நதியோரம் நான் நடந்த போது-

வெள்ளைக்காரர்களின் சிந்தாந்தமான வெளிப்படையான நடவடிக்கைகளைப் பற்றி வித்யா படித்திருக்கிறாள்.. அவர்கள் ரகசியம் பேண மாட்டார்கள்.. அதற்குக் காரணம்.. அவர்கள் வெளிப்படையான.. ஒளிவு மறைவில்லாத.. கள்ளம்.. கபடமில்லாத நடவடிக்கைகளை உடையவர்கள் என்பதல்ல.. அவர்களைப் பற்றி அறியும் எதிரிகளால் அவர்களை என்ன செய்து விட முடியும் என்ற ஆணவம்தான் அதற்குக் காரணம்...

அதைப் போலவே நரேந்திரனின் செயல்பாடும் இருந்தது... கார்த்திகாயினி தேவியின் பெயரை அவன் வெளிப்படையாக அவன் போனில் பதிவு செய்திருந்தான்.. அவளிடமிருந்து போன் வந்தால் அந்தப் பெயரை வித்யா

பார்த்து விடக் கூடுமே என்ற பயமின்றி செயல்பட்டான்.. வித்யாவின் கண் முன்னாலேயே.. போனில் பேசியபடி பால்கனிக்குப் போய் கதவை அடைத்துக் கொண்டான்.. இப்போது அத்தனைக்கும் சிகரமாக.. அவனிடம் பேசுவதற்காக கார்த்திகாயினி போன் பண்ணிய போது.. வித்யா எதற்காக அதை எடுத்துப் பேசினாள் என்று கேள்வி வேறு கேட்கிறான்...

'நாராயணா.. இதுதான் உன் விளையாட்டா..?' துக்கத்துடன் மனதுக்குள் கேட்டுக் கொண்டாள் வித்யா..

"நீங்க குளித்துக்கிட்டு இருந்தீங்க.. அதோட.. உங்க போன்காலை நான் அட்டெண்ட் பண்றது சகஜம்தானே.. இது முதல் தடவையில்லையே..."

அவளின் பதிலில் நரேந்திரன் முகம் சுளித்தான்.. அவனின் அந்த முகச் சுளிப்பில் வித்யாவின் மனம் சுக்கு நூறாக உடைந்தது.. அவன் முகம் பார்க்காமல் ஒட்டுதல் இல்லாத குரலுடன்...

"இதுவரைக்கும் நீங்க அதை ஆட்சேபித்ததில்ல.. இதைப்போல கேள்வியும் கேட்டதில்ல.." என்றாள்...

"ம்ப்ச்.. கூடக்கூடப் பேசாதே.. மத்த போன்களும் இந்த போனும் ஒன்றா...? பெயரைப் பார்த்ததும் இந்த போனை அட்டெண்ட் பண்ணக்கூடாதுன்னு உனக்குத்



தெரிந்திருக்க வேணாமா..? பேஸிக் மேனர்ஸ் கூட இல்லையா...?"

வித்யா விக்கித்துப் போனாள்.. தீயினால் சுட்ட புண்ணைவிட நாவினால் சுடப்பட்ட புண்ணுக்கு ரணமும்.. வலியும் அதிகமென்பதை பொய்யா மொழிப் புலவர் சொல்லி அவள் கேள்விப் பட்டிருக்கிறாள்.. அன்றுதான் அவள் அறிந்தாள்...

அதுவரை அவளை நாவினால் சுட்டவர்களால் அவளைக் காயப்படுத்த முடியவில்லை.. அவள் வித்யா..! தலை நிமிர்ந்து நிற்பவள்..! எவளுக்கும் தலை வணங்காத நிமிர்வைக் கொண்டவள்..!

யாருடைய வார்த்தைகளையும் அவள் பொருட் படுத்தியதில்லை... யாரையும் அவள் எதிரியாக ஏற்றுக் கொண்டதுமில்லை.. அவள்வழி தனி வழி..!

அப்படிப்பட்டவளின் மனம் என்று நரேந்திரனின் பின்னால் சென்றதோ.. அன்றே பலவீனமாகிப் போனதாக உணர்ந்தாள் வித்யா..

இல்லாவிட்டால் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டுக் கொண்டு அவள் சும்மா நிற்க மாட்டாள்.. இது போன்ற கேள்விகளை அனுமதிக்கவும் மாட்டாள்..

அவளுக்கா அடிப்படை நாகரிகம் இல்லை...?

அவளுடைய காதல் கணவனுக்கு.. அவனுடைய முன்னாள் காதலியிடமிருந்து போன் வந்திருக்கிறது.. அதற்காக அவள் கணவனைப் பார்த்து ஏன் என்று கேட்கவில்லை...

அந்த முன்னாள் காதலியின் போன் வந்துவிட்டால்.. அவளுடைய கணவன் அவள் கண் முன்னாலேயே தனிமையை நாடிப் போய் விடுகிறான்.. மணிக் கணக்காக அவனுடைய முன்னால் காதலியுடன் பேசிவிட்டு திரும்பி வருகிறான்.. அதையும் அவள் ஏன் என்று கேட்கவில்லை..

அவளைப் பார்த்து அவள் கணவன் கேட்கிறான்.. உனக்கு அடிப்படை நாகரிகம் தெரியாதா என்று..

"இனிச் செய்யலை..." அவள் உறுதியுடன்.. மனம் வலிக்கச் சொன்னாள்..

அவள் குரலின் மாறுபாட்டை உணர்ந்தவனாக அவள் முகம் பார்த்த நரேந்திரன் உதட்டைக் கடித்துக் கொண்டான்.. பின்னர் ஒரு பெருமூச்சுடன் பெட்டியை எடுத்தான்.. துணிகளை அடுக்க ஆரம்பித்தான்..

"நான் வெளியூர் போகனும்..."

எந்த ஊருக்கு என்று வித்யா கேட்கவில்லை... அதற்கு முன்னாலும் அவள் அது போன்ற கேள்விகளை



அவனைப் பார்த்துக் கேட்டதில்லை.. அப்படிப்பட்டவளைப் பார்த்துத்தான் உனக்கு அடிப்படை நாகரிகம் தெரியாதா என்று நரேந்திரன் கேட்டு விட்டான்...

"வித்யா..."

அவள் பதில் பேசவில்லை.. என்ன நினைத்தானோ.. நரேந்திரன் அவள் அருகில் வந்தான்.. சட்டென்று விலகி அமர்ந்தாள் வித்யா... அவன் முகம் சுருங்கி விட்டது...

"நான் திரும்பி வர கொஞ்ச நாளாகும்..." என்றான்...

வித்யா பதில் சொல்லாமல் அசைவின்றி அமர்ந்திருந்தாள்.. சற்று நேரம் நின்று பார்த்த நரேந்திரன் ஒரு பெருமூச்சுடன் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான்...

'கிளம்பி விட்டான்..' வித்யா மனம் வலிக்க அவனைப் பார்த்தாள்...

அதே நொடியில் அவனும் அவளைத் திரும்பிப் பார்த்தான்... இருவரின் பார்வைகளும் ஒரு நொடி பின்னிப் பிணைந்தன.. வித்யாதான் முதலில் பார்வையை விலக்கிக் கொண்டு வேறு திக்கில் பார்த்தாள்.. அவளின் வெறுமையான பார்வையைப் பார்த்தவனின் புருவங்கள் முடிச்சிட்டன...

"கார்த்திகாயினி எப்படியோ போகட்டும் என்று என்னால் விட்டு விட முடியாது வித்யா..." நிதானமாகச் சொன்னான்...

வித்யா அதிர்ந்து போனாள்.. முதன் முதலாக அவன் வாயிலிருந்து வரும் தன்னிலை விளக்கத்தைக் கேட்டவளின் உயிர் துடித்தது...

"அவ சந்தோசமா வாழ்ந்திருந்தா.. அவளைப் பற்றி நினைக்காம என்னால வாழ்ந்திருக்க முடியும்.. ஆனா.. அவ சந்தோசமா வாழலை.. அது தெரிஞ்ச பின்னாலே என்னாலே அவ எக்கேடோ கெடட்டும்ன்னு விட்டுவிட முடியலை..."

அவன் போய் விட்டான்.. அவன் சிந்தி விட்டுப் போயிருந்த வார்த்தைகள் வித்யாவைச் சுற்றிக் குளவிக் கூடுகளின் கூட்டைப் போல கூடு கட்டி.. அவள் மனதைக் கொட்டிக் கொட்டி துடிக்க வைத்துக் கொண்டிருந்தன...

கார்த்திகாயினி தேவியை நரேந்திரனால் விட்டு விட முடியாது.. இதை அவன் தெளிவாகச் சொல்லி விட்டான்...

இனி முடிவெடுக்க வேண்டியது வித்யாதான்... அவள் என்ன செய்ய வேண்டும்..? நரேந்திரனின் முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டுமா..?



*'சீச்சீ...'* அருவெறுத்தாள் வித்யா...

அவனின் இந்த முடிவை வித்யா ஏற்றுக் கொள்வதா..? ஒருநாளும் அது நடக்காது...

'வேறு என்ன செய்யப் போகிறாய்..?' அவள் மனம் கேட்டது...

'நரேந்திரனை விட்டுப் பிரிந்து போகப் போகிறாயா..?'

முடியுமா..? அவளால் அது முடியுமா..? முன்பு ஒருமுறை அவனைப் பிரிந்து போக முடிவு செய்தவள் தான் அவள்.. அன்றும் அவளுடைய நரேந்திரன் அவளை இன்னொருவனுக்கு தாரை வார்த்துக் கொடுக்க முடிவு செய்திருந்தான்.. இன்று.. அவனை இன்னொருத்திக்கு தாரை வார்த்துக் கொடுத்து விடும்படி வித்யாவை மறைமுகமாக வற்புறுத்துகிறான்...

அன்று வித்யா நரேந்திரனின் காதலி மட்டும் தான்.. இன்றோ அவன் மனைவி...!

காதலியாக இருந்தபோதே இன்னொருவனுடன் அவளை இணைக்கும் நினைவை நரேந்திரன் நினைத்து விட்டான் என்று அவனை விட்டு விலகிப் போக நினைத்தவள்தான் வித்யா.. மனைவியாக இந்த நிலையில் அவன் செய்கையை அவள் பொறுத்துக் கொள்வாளா..?

எழுந்து நிற்க முயன்றவளுக்கு மயக்கம் வந்தது. சுதாரித்துக் கொண்டவளாய் குளியலறைக்குள் புகுந்து, தண்ணீரை அள்ளி முகத்தில் அடித்து மயக்கத்தை விரட்ட முயன்றாள்...

'டாக்டரிடம் போயாகனும்...'

தனித்து டாக்டர் திலகவதியைத் தேடிக் கிளம்பிய போது.. அவள் மனதில் நிராதரவான உணர்வு எழுந்தது.. எப்போதும் அவளுக்கு சாய்ந்து கொள்ளத் தோள் கொடுத்த நரேந்திரன் அப்போது அருகில் இல்லையே என்ற ஏக்கம் வந்தது.. அதை விரட்டியடிக்க முயலாத இயலாமையுடன் மருத்துவமனைக்குள் சென்றாள்.. அவளைப் பரிசோதித்த டாக்டர் திலகவதியின அகலமான புன்னகை வித்யாவின் கணக்கீட்டை ஊர்ஜிதம் செய்தது...

"கங்கிராஜீலேசன்ஸ் வித்யா.. நீங்க அம்மாவாகப் போகிறிங்க..."

அப்பாவாகப் போகிறவன் எங்கே போயிருக்கிறான் என்ற நினைவில் சந்தோஷிக்க முடியாமல் கண்களில் கண்ணீரால் குளம் கட்டினாள் வித்யா...



# 26



*நதியோரம் நடந்த போது..*
*வெந்நிலவின் வரவு கண்டேன்..*
*தந்நிலவில் குளிராமல்..*
*தவிப்பினிலே தனிமை கொண்டேன்..*
*-நதியோரம் நான் நடந்த போது-*

இதமான குளிர் காற்று வித்யாவின் உடல் தழுவியது.. நதிக்கரையில் நடந்தவளுக்கு நரேந்திரனின் நினைவு மட்டுமே நெஞ்சில் இருந்தது.. லேசாக உடல் தள்ளாடிய போது தாங்கிக் கொள்ள அவன் வருவானா என்று மனம் கலங்கியபடி தன்னை சமாளித்துக் கொண்டு படித்துறையில் அமர்ந்தாள் வித்யா.. சலசலத்து ஓடிய நதிநீர் தோழியின் தனிமையான வரவில் திகைத்ததைப் போல மௌனமாக இருந்தது...

**'காற்று வெளியினில் கண்ணம்மா...**
**நிந்தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்..'**

இந்தப் படித்துறையில் வைத்துத்தான் பாடினான் நரேந்திரன்.. அவன் காதலைச் சொன்னான்.. இன்று அவன்

மனைவியாக அவனின் குழந்தையை வயிற்றில் சுமந்தபடி அந்தச் செய்தியை அவனிடம் பகிர்ந்து கொள்ள முடியாமல் தனிமையில் அமர்ந்திருக்கிறாள் வித்யா.. அவனோ.. அவனது முன்னாள் காதலியைத் தேடிப் போயிருக்கிறான்...

வித்யாவிற்கு கண்கள் மங்குவதைப் போல இருந்தது.. அவளின் உடல் உபாதைகளை அவளால் யாரிடம் சொல்ல முடியும்...?

அவைகளைச் சொல்லித் தலைசாய தாயின் மடி இருக்கிறதா..? இல்லையே.. அவளின் சித்தி மனம் மாறியிருக்கலாம்.. குணம் மாறவில்லையே... வித்யாவின் தயாள குணத்தால் அவள் வெறுப்புக் காட்டுவதை நிறுத்தியிருக்கிறாள்.. விருப்பம் காட்டவில்லையே...

மணிமுத்தாறு அரண்மனையில் சௌதாமினி விரும்பியதைப் போல அண்ணன் தம்பிகளின் குடும்பங்கள் ஒரே அரண்மனையில் தான் வசிக்கின்றனர்... வீடு முழுவதும் நிறைந்திருப்பவர்களில் ஒருவர் கூட வித்யாவின் உடல்நிலையைக் கவனித்து பரிவோடு கேள்வி கேட்கவில்லையே...

சொந்தங்களின் மத்தியில் தனித்தீவாய் வாழ்வது எவ்வளவு பெரிய கொடுமை என்பதை வித்யா அன்று உணர்ந்தாள்.. நரேந்திரன் மட்டும் வழக்கமான




நரேந்திரனாக இருந்திருந்தால் அவளை இந்த அளவுக்கு மறுக விட்டிருக்க மாட்டான்.. அனைத்துமானவனாக அவளை ஆதரித்திருப்பான்.. அவன்தான் இப்போது அப்படியில்லையே...

வித்யா துயரத்துடன் ஓடும் நதி நீரை வெறித்தாள்.. அவள் கைகள் தன்னிச்சையாக வயிற்றைத் தடவின...

'ஏ நதியே..! உன் சிநேகிதி வந்திருக்கிறேன்.. உன் கரையினில்தான் என் மனதுக்குப் பிடித்தவனிடம் என் மனதைச் சொன்னேன்.. தயாள குணம் படைத்த என்னவன்.. என்னை ஏற்றுக் கொண்டான்.. இன்று அவன் மகவை என் வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறேன்.. இதை அவனிடம் சொல்ல முடியாமல் எங்கோ அவன் விலகி நிற்கிறான்.. அதனால் உன்னிடம் சொல்ல வந்திருக்கிறேன்.. கேட்டுக் கொள்ள.. எனக்கென்று பூர்ணிமாவிற்கு இணையாக இருக்கும் சிநேகிதி நீ மட்டும் தான்.. அவளிடம் இதை நான் பகிர்ந்து கொள்ள முடியாது.. அவளுடைய அண்ணனிடம் பகிர்ந்து கொள்ளாமல் அவளிடம் எப்படி இதை என்னால் பகிர்ந்து கொள்ள முடியும்..? ஆனால் உன்னிடம் பகிர்ந்து கொள்ள முடியும்.. இந்த நொடியில் உன்னை விட்டால் எனக்கென்று யாருமில்லை...'

வித்யா.. நதி நீரில் கால் நனைத்தாள்.. தோழியின் மனதைப் படித்ததைப் போல.. நதிநீர் வேகம் குறைந்து அவள் பாதம் நனைத்து அவளைத் தொட்டு ஆறுதல் படுத்தியது..

சோர்வுடன் எழுந்து கொண்ட வித்யா.. காருக்குச் சென்றாள்.. காத்திருந்த டிரைவர் அவள் முகம் பார்த்தான்..

"பேக்டரிக்கு போங்க..." சோர்வுடன் சொல்லிய வித்யா சீட்டில் தலை சாய்த்துக் கொண்டாள்...

பேக்டரிக்குள் கார் நுழைந்த போது.. அங்கே கூட்டம் குழுமியிருந்தது.. தூரத்திலேயே கலவரமான சூழல் உருவாகியிருப்பதைக் கண்டு கொண்ட டிரைவர்..

"ஏதோ ரகளை நடந்திருக்கு போலம்மா..." என்றான்..

"அப்படித்தான் தெரியுது..."

"என்னன்னு தெரியலையே..."

"கிட்டப் போய் விசாரிச்சாத்தான் தெரியும்.. எதுவா இருந்தாலும் ஃபேஸ் பண்ணித்தானே ஆகனும்..."

அலுப்புடன் சொன்ன வித்யாவை ஒர்முறை திரும்பிப் பார்த்தான் டிரைவர்.. அவன் எதையோ சொல்ல நினைப்பதை புரிந்து கொண்ட வித்யா...

"என்ன விசயம்..?" என்று கேட்டாள்...



"இப்பல்லாம் அடிக்கடி ரகளை வருதும்மா.. பழைய மாதிரி இல்லை..."

டிரைவர் சொல்ல வருவதை புரிந்து கொண்டாள் வித்யா.. அவன் நிவேதிதாவின் வரவுக்கு முன்னாலிருந்த காலத்தை 'பழைய மாதிரி' என்று சொல்கிறான்...

இதற்கு வித்யா என்ன பதிலைச் சொல்வாள்..? ஆமாம்.. அப்படித்தான் என்று சொல்ல முடியுமா..?

மௌனமாக காரை விட்டு இறங்கியவளை தொழிலாளர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.. விவரத்தை விசாரித்த வித்யா தலையைப் பிடித்துக் கொண்டாள்.. அங்கே பூகம்பம் உருவாகியிருந்தது...

நிவேதிதா.. ரங்கதுரையின் கன்னத்தில் அடித்திருந்தாள்..

தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவனின் கன்னத்தில் முதலாளியின் மனைவி அறைந்து விட்டால் என்ன நிகழுமோ.. அது அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது..

ஒட்டு மொத்த தொழிலாளர்களும் வேலையைப் புறக்கணித்து விட்டு அங்கே நின்று கொண்டிருந்தார்கள்.. ஒவ்வொருவரின் முகத்திலும் அக்கினியின் ஜீவாலை தெரிந்தது.. வித்யா சுரேந்திரனிடம் விவரம் சொல்ல

வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.. சுரேந்திரனும் அங்கேதான் நின்று கொண்டிருந்தான்..

தொழிலாளர்களை சமாதானப் படுத்த முனையாமல் அவர்களுக்கு குறையாத கோப முகத்துடன் அவர்களை முறைத்துக் கொண்டிருந்தவனைப் பார்த்த வித்யாவிற்கு எரிச்சல் வந்தது..

'என்ன மனிதன் இவன்..!'

நரேந்திரன் இல்லாத நேரத்தில் அஸிஸ்டெண்ட் எம்.டி தானே ஆக்டிங் எம்.டியாக செயல்பட வேண்டும்..? அதை விட்டுவிட்டு இவனும் தொழிலாளர்களை முறைத்துக் கொண்டிருந்தால் என்ன செய்வது என்ற ஆயாசத்துடன்...

"இதெல்லாம் என்ன சுரேன்...?" என்று கேட்டாள் வித்யா...

சுரேந்திரன் பதில் சொல்வதற்குள் தொழிலாளிகளில் ஒருவன் முந்திக் கொண்டு கூச்சலிட்டான்...

"இவர்கிட்டப் போயி கேட்கறிங்களே மேடம்.. இவரோட நாயம் வேற மாதிரியில்ல இருக்கு..."

சப்தம் போட்டவனைப் பார்த்து பேசாமலிருக்கும்படி சைகை செய்தாள் வித்யா..



"நாணயத்திற்கு இரண்டு பக்கம் உண்டு.. இவர் பக்கம் என்ன நியாயம் இருக்குன்னு நாமளும் கேட்டுத் தெரிந்துக்கலாமே..."

'நாமும்' என்று தொழிலாளர்களுடன் கூட்டுச் சேர்ந்த வித்யாவை சொந்தமில்லாத பார்வை பார்த்தான் சுரேந்திரன்.. அவனின் அந்தப் பார்வையினை மனதில் பதிய வைத்துக் கொண்டாள் வித்யா...

"ஸோ.. நீங்க லேபர்ஸ் பக்கம்தான் நிப்பீங்க...?"

"இல்லை சுரேன்.. நியாயத்தின் பக்கம் நிற்பேன்.. ரங்கதுரையின் கன்னத்தில் நிவேதிதா அடிக்கலாமா..?"

"நிவேதிதாவின் ஸ்டேட்மென்ட் வேறாய் இருக்கு அண்ணி..."

"என்னவாம்...?"

"ரங்கதுரை அவளின் கையைப் பிடித்து இழுத்ததினால் சட்டுன்னு கன்னத்தில் அடித்திருக்கிறாள்.. இட்ஸ் கொயட் நேச்சுரல்.. யாராய் இருந்தாலும் அதைத்தான் செய்திருப்பாங்க.. ஏன்..? நீங்களா இருந்தாலும் அதைத்தானே செய்திருப்பீங்க...?"

சுரேந்திரன் கேட்ட கேள்வியில் உதடுகளைக் கடித்தாள் வித்யா.. ஒரு கணவனாக மனைவியின் செயலை

நியாயப் படுத்த சுரேந்திரன் முனைவதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. ஒரு பெண்ணின் கையைப் பிடித்து இழுத்தால் அவள் யோசிக்காமல் சட்டென்று அடித்து விடுவது இயல்புதான்.. அதில் தவறேதும் இருப்பதாக வித்யாவிற்கும் தோன்றவில்லை...

ஆனால்.. ரங்கதுரை ஏன் அப்படிச் செய்தான்..?

வித்யா ரங்கதுரையைப் பார்த்தாள்.. அவள் பார்வை கேள்வி கேட்டது.. அதைப் புரிந்து கொண்ட ரங்கதுரை பதில் சொன்னான்..

"அவசரப்பட்டு தப்பான முடிவுக்கு வந்துடாதீங்க மேடம்.. நான் அப்படிப்பட்ட ஆளில்லை..."

இதுபோன்ற தன்னிலை விளக்கத்தை ரங்கதுரை சொல்லித் தான் கேட்க வேண்டிய நிலைமையை எண்ணி நொந்து போனாள் வித்யா.. அவன் நல்லவன்.. கோபக் காரனாக இருந்தாலும் கண்ணியம் மிக்கவன்.. பெண்களிடம் மரியாதை தவறாமல் கௌரவம் காப்பவன்...



## 27

நதியோரம் நடந்த போது..
தூரத்திலே விடிவெள்ளி கண்டேன்..
உன்னிடம் சொல்லத் திரும்பியபோது..
இருளோடு நீ மறையக் கண்டேன்..
-நதியோரம் நான் நடந்த போது-

அப்படிப்பட்ட ரங்கதுரையின் மீது இப்பேற்பட்ட பழி வந்திருக்கிறது.. என்னதான் ரங்கதுரை நல்லவன் என்று மனதிற்கு தெரிந்தாலும்.. நிவேதிதாவின் பக்கமும் ஒரு நியாயம் இருந்து வைக்கிறதே.. அதற்கான பதில் கிடைக்காமல் வித்யா எந்த முடிவுக்கும் வரமுடியாதே...

"இப்பப் பிரச்னை அது இல்லை ரங்கதுரை.. நீங்க எதுக்காக நிவேதிதாவின் கையைப் பிடிச்சு இழுத்தீங்க..?"

"முழுதாக் கேட்காம என்மேல பாயாதீங்கம்மா.. அந்தம்மா பேக்டரிக்குள்ள நடந்து வந்தாங்க.. மெஷின் வேலை செய்கிற பக்கம் வர்றவங்க நாலா பக்கமும் பார்த்தபடி வரனுமா.. வேணாமா..? அந்தம்மா நடந்து வர்றாங்க.. மேலே மெஷின் கீழே இறங்கி வந்துக்கிட்டே

இருக்கு.. நான் கையைப் பிடிச்சு இழுத்து இந்தப் பக்கம தள்ளி விட்டேன்.. ஒரு நொடி தாமதிச்சிருந்தாலும் அந்தம்மா மெஷினுக்கு கீழே அகப்பட்டிருப்பாங்க..."

ரங்கதுரை விவரித்ததில் வித்யா திகிலடைந்து விட்டாள்.. எப்பேற்பட்ட விபத்து தவிர்க்கப் பட்டிருக்கிறது..! அதற்காக ரங்கதுரையை பாராட்டாமல் கன்னத்தில் அடிப்பதா...?

"சுரேன்.. இவர் நிவேதிதாவின் உயிரைக் காப்பாத்தியிருக்கார்.. அதுக்காக தேங்க்ஸ் சொல்லாம கன்னத்தில் அடிப்பதா..?"

வித்யா நியாயம் கேட்டபோது அவள் எதிர்பார்க்காத வார்த்தைகளை சுரேந்திரன் சொன்னான்..

"உங்களுக்கு நிவியைப் பிடிக்காதுதான் அண்ணி.. அதுக்காக ஒரு பெண்ணுன்னும் நினைக்காம.. அவ உணர்வுகளை மதிக்காம நீங்க பேசக்கூடாது.. அவளைப் பழிவாங்க இதுதான் நேரமா..?"

"சுரேன்.." வித்யா விக்கித்து நின்று விட்டாள்..

அவளைப் பார்த்து எப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லி விட்டான் சுரேந்திரன்.. நிவேதிதாவின் முகத்தில் அப்பட்டமான மகிழ்வு தெரிந்தது.. அவளின் விழிகள் வெற்றிப் பெருமிதத்தை பறைசாற்றின...



வித்யா தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்...

இது அவளின் மனக் காயங்களை நினைத்து மருகுவதற்கான நேரமல்ல.. அவளை நம்பி.. அவளின் வார்த்தைக்காக.. போராட்டத்தை கைவிட்டு நிற்கும் தொழிலாளர்களுக்கு அவள் நியாயம் செய்ய வேண்டும்.. சுரேந்திரன் சொன்னதற்காக பின் வாங்கி விட்டால் ரங்கதுரைக்கு நியாயம் செய்ய முடியாது..

"இது பேக்டரி சுரேந்திரன்.. இதில் சொந்த விருப்பு.. வெறுப்புகளுக்கு இடமில்லை.. உங்க வொய்பை எனக்குப் பிடிக்காதுன்னு எதை வைத்துச் சொல்கிறிங்க..? எனக்கு யார் மீதும் விரோதமில்லை.. உங்க வொய்ப் தான் என்மேல தேவையில்லாம விரோதம் வைத்துக்கிட்டு இருக்காங்க.. இதை முதலில் நினைவில் வைத்துக்கங்க.. ஒரு பெண்ணாக ரங்கதுரையை உங்க வொய்ப் யோசிக்காமல் அடித்ததில் தவறில்லை.. ஆனால்.. அதற்க்கப்புறமா மெஷின் கீழே இறங்கி வந்ததைப் பார்த்திருக்கனுமே.. நிவேதிதாவோட உயிர் காப்பாற்றப் பட்டிருப்பதைப் புரிந்திருக்கனுமே.. உடனடியாக நிவேதிதா என்ன செய்திருக்கனும்..?"

வித்யாவின் கேள்வியில் சுரேந்திரனின் முகத்தில் யோசனை வந்தது.. அவன் இந்தக் கோணத்தில் யோசிக்கவே இல்லையே...

"கையைப் பிடித்ததினால சட்டுன்னு ரியாக்ட் பண்ணி அடிக்கத் தெரிஞ்சவங்களுக்கு அது எதற்காகன்னு தெரிந்தவுடனே தேங்க்ஸ் சொல்லி அடிச்சதுக்கு மன்னிப்புக் கேட்கவும் தெரிந்திருக்கனுமில்ல..?"

வித்யா நிற்க வைத்து கேட்ட கேள்வியில் நிவேதிதாவின் முகம் மாறியது.. இந்த அளவுக்கு புத்திசாலித்தனமாக வித்யா கேள்வி கேட்பாள் என்று அவள் எதிர் பார்த்திருக்கவில்லை...

வித்யாவின் கேள்வியில் சிந்திக்க ஆரம்பித்த சுரேந்திரனை கவலையுடன் பார்த்தாள் நிவேதிதா..

'இவன் யோசிக்கக் கூடாதே...'

நிவேதிதாவின் கவலையைப் பற்றிய கவலையன்றி சுரேந்திரன் யோசிக்க ஆரம்பித்து விட்டான்.. அவன் முகம் கல்லைப் போல கடினமானது...

அவன் ஆண்மகன்.. அவனுடைய மனைவியை அன்னியன் ஒருவன் தொட்டவுடன் அவள் சட்டென்று அவனை அடித்து விட்டதை அவன் மனப்பூர்வமாக ஆதரித்தான்.. அதனாலேயே அவன் மனைவியின் பக்கமாக நின்று வித்யாவிடம் மோதிவிட்டான்.. ஆனால் வித்யா அவன் கேள்வியில் மனதில் அடிவாங்கினாலும் பின் வாங்காமல் நின்று எதிர்த்து கேள்வி கேட்டதில் அவன் அறிவு விழித்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித்து விட்டது.



"இப்ப என்ன செய்யனும்கறிங்க..?"

"உங்க மனச்சாட்சியிடம் இந்தக் கேள்வியைக் கேளுங்க சுரேந்திரன்.. அது சொல்வதைச் செய்யுங்க.. ஐ திங்க்.. இன்னும் உங்க மனச்சாட்சி உயிர்ப்போட இருக்குதுன்னு நான் நம்பறேன்..."

வித்யாவின் மறைமுகமான குத்தலில் சுரேந்திரனுக்குள் இருந்த நியாயவாதி உயிர் பெற்றான்.. சுரேந்திரன் நிவேதிதாவின் பக்கம் திரும்பினான்.. நிதானமாகச் சொன்னான்..

"நிவி.. ரங்கதுரைக்கு தேங்க்ஸ் சொல்லிட்டு ஸாரி சொல்லிடு..."

"வாட்.." நிவேதிதா இமை கொட்டினாள்...

அவளுக்கு அவள் காதில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியவில்லை...

அவள் எவ்வளவு மெனக்கெட்டு.. திட்டமிட்டு.. அந்தச் சம்பவத்தை செயல்படுத்தினாள் என்று அவளுக்குத்தான் தெரியும்..

கணவனின் குணம் அறிந்தவள் நிவேதிதா.. அவனாலேயே ஆட்சேபிக்க முடியாத அளவிற்கு தொழிற்சாலைக்குள் ஒரு கலகத்தை உண்டு பண்ண

வேண்டும் என்று அவள் திட்டமிட்டாள்.. வேண்டுமென்றே ரங்கதுரை பார்த்துக் கொண்டிருக்கும் போது.. மேலேயிருந்து இறங்கிக் கொண்டிருந்த இயந்திரத்தைக் கவனிக்காததைப் போல அவள் நடந்து போனாள்.. அவளின் யுக்தி பலித்தது.. ரங்கதுரை அவசரமாக அவளின் கையைப் பிடித்து இழுத்து காப்பாற்றி விட்டான்.. ரங்கதுரை அவளைக் காப்பாற்ற முனையா விட்டாலும் நிவேதிதா கவனமாகத்தான் இருந்தால்.. தானாக இயந்திரத்தின் அடியிலிருந்து விலகியிருப்பாள்.. அது தெரியாத ரங்கதுரை பதறி விட்டான்.. அவனின் அந்த மனிதாபிமானத்திற்கு பரிசாக நிவேதிதா ஒரு அறை விட்டுவிட்டு.. அதை நியாயப் படுத்தி சுரேந்திரனிடம் நாடகமும் ஆடிவிட்டாள்..

"நீங்களே சொல்லுங்க சுரேன்.. உங்களைத் தவிர வேறு ஒருத்தனின் விரல் என்மேல பட்டாலும் அவனைக் கொன்று விடனும்கிற கோபம் எனக்கு வருமா.. வராதா..?"

வராது என்று எந்தக் கணவன்தான் சொல்லுவான்..? அப்படிப்பட்ட கோபம் வந்து விட்டதால் ரங்க துரையின் கன்னத்தில் ஓங்கி அடித்து விட்டாள் நிவேதிதா என்பதில் சுரேந்திரன் மகிழ்ந்து போனான்..

அவளுக்காக.. தொழிலாளர்களையே எதிர்த்தும் நின்று விட்டான்..



இப்படி அணுவளவு கூடப் பிசகாமல் காய் நகர்த்திய நிவேதிதாவின் திட்டத்தை ஒரு நொடியில் வித்யா தகர்த்து விட்டாளே...

'இவளை என்ன செய்தால் தேவலாம்..' கொலை வெறியுடன் வித்யாவை முறைத்தாள் நிவேதிதா...

"நான் எதுக்காக இந்த ஆளிடம் தேங்க்ஸ் சொல்லனும் சுரேன்..."

"இந்த ஆள்ன்னு சொல்லாதே.. அவர் யூனியன் லீடர்.. அத்தோட உன் உயிரைக் காப்பாற்றியிருப்பவர்.."

"ஸோ வாட்..?"

"அதுக்காக நீ இவருக்கு தேங்க்ஸ் சொல்லனும் நிவி.."

"ஸாரியும் சேர்த்துச் சொல்லனும்கிறது டூ மச் சுரேன்.."

"நோ நிவி.. உன்னைக் காப்பாற்றியவரை நீ புரிந்துக்காம அடிச்சுட்ட.. அது தெரியாம நீ செய்து விட்ட தவறு.. அதுக்காக நீ இவரிடம் ஸாரி சொல்லித்தான் ஆகனும்..."

திரும்பவும் வித்யாவின் முன்னால் தோற்றுப் போய் விட்டதை உணர்ந்தாள் நிவேதிதா.. முகம் கன்ற

சுரேந்திரன் சொன்ன இரண்டு வார்த்தைகளையும் வானத்தைப் பார்த்துச் சொல்லிவிட்டு ஆத்திரத்துடன் அவளுடைய கேபினுக்குப் போய் விட்டாள்..

"அண்ணி..."

எதையோ சொல்ல வந்த சுரேந்திரனின் முகம் பார்க்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் வித்யா.. சுரேந்திரனின் முகம் மாறி விட்டது.. அவன் குற்ற உணர்வுடன் விலகி நடந்தான்..

## 28

நதியோரம் நடந்த போது..
நெஞ்சுக்குள்ளே ஏதோ பாரம்..
பகிர்ந்து கொள்ள நீயுமின்றி..
மனதுக்குள்ளே ஏதோ ஏக்கம்..
-நதியோரம் நான் நடந்த போது-

விலகி நடந்த சுரேந்திரனைப் பார்த்த போது வித்யாவின் மனம் வலித்தது.. அவன் அவளுடைய கணவனின் சகோதரன்.. அவளிடமும் சகோதரனைப் போல பாசம் காட்டியவன்...



அவனின் அந்த பாசத்தை நிவேதிதா உடைத்து விட்டாள்... அவளால் சுரேந்திரனை இந்த அளவுக்கு பேச வைக்க முடியுமென்று வித்யா நினைத்தும் பார்த்ததில்லை..

'நித்தம்.. நித்தம்..
மாறுவது எத்தனையோ...'

என்றோ கேட்ட பாடல் அவள் மனதில் ஒலித்தது.. இப்போதெல்லாம் இது போன்ற பாடல் வரிகள் தான் அவள் மனதில் ஒலித்து வைக்கின்றன...

தாய்மை அடைந்திருக்கும் அந்தத் தருணத்தில் இது போன்ற பாடல்கள் மனதில் தோன்றுவது சரியல்ல என்று நினைத்துக் கொண்டாலும்.. அந்தப் பாடல்களை நினைவு படுத்திக் கொள்ளாமல் இருக்க வித்யாவினால் முடியவில்லை...

"ரொம்ப நன்றிங்கம்மா.." மனதார நன்றி சொன்னான் ரங்கதுரை..

அவனைச் சுற்றி நின்று கொண்டிருந்த தொழிலாளர்களின் முகத்திலும் அந்த நன்றி உணர்வு தெரிந்தது...

"இருக்கட்டும்.. இது என் கடமை.." வித்யா முறுவலித்தாள்..

"நீங்க மாறிட்டிங்களோன்னு நினைச்சேன்ம்மா.. அப்படியில்லை.. நீங்க எப்பவும் எங்க பக்கம்தான்னு நிருபிச்சிட்டிங்க.. நாங்க சௌகரியமா இருந்தப்ப.. நீங்க அமைதியா இருந்தீங்க.. அதுவே எங்களுக்கு ஒரு பிரச்னைன்னு வருகிறப்ப.. எங்க பக்கம் நின்று உங்க குடும்பத்தையே எதிர்த்து நியாயம் கேட்கறிங்க.. நீங்க மாறவே இல்லைம்மா.." ரங்கதுரை நெகிழ்ந்தான்..

"நீங்களும் எங்க குடும்பம்தான் ரங்கதுரை..."

"உங்களைப் போல எல்லா முதலாளிகளும் இருந்துட்டா... தொழிலாளிகளும்.. முதலாளிகளோட குடும்பம்தான்ம்மா.."

"நன்றி ரங்கதுரை.. இனியாவது வேலையை ஆரம்பிக்கலாமில்லையா..?"

"இதோ போறோம்மா..."

தொழிலாளர்கள் அவரவர் வேலைகளைப் பார்க்கப் போய்விட்டார்கள்.. புயலுக்குப் பின்னால் நிலவும் அமைதி அங்கே நிலவியது.. வித்யா சோர்வுடன் நடந்து அவள் கேபினுக்குள் நுழைந்தாள்.. சுழல் நாற்காலியில் அமர்ந்தாள்.. சுழன்றாள்.. சற்று முன்னால் அவள்மீது பழி போட்டு சுரேந்திரன் பேசிய பேச்சுக்களும் மனதில் சுழன்றது..



'எப்படிப் பேசிவிட்டான்..' அவள் மனம் பொருமியது...

அவன் மனைவி சொன்னாள் என்பதற்காக வித்யாவை அவன் அப்படிக் கேட்டு விடுவதா..?

'எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும்-அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு..'

என்று சொன்னாரே வள்ளுவப் பெருந்தகை..! அதை சுரேந்திரன் மறந்தானா..? அவனுக்கு நிவேதிதாவின் குணம் தெரிந்திருக்கும்தானே.. தெரிந்தும் அப்படிப் பேசலாமா...?

'நன்றிம்மா..' ரங்கதுரை சொன்னதை நினைத்துக் கொண்டாள்... அவள் விழிகளில் கண்ணீர் பெருகியது...

'எல்லோரும் நலம் வாழ
நான் பாடுவேன்..
நான் வாழ யார் பாடுவார்..?
என் பாடல் நான் பாட
பலர் ஆடுவார் - இனி
என்னோடு யார் ஆடுவார்..?'

அவள் மனதில் பாடல் ஒலித்தது.. எவ்வளவு பிரயத்தனப் பட்டாலும் தடுக்க முடியாமல் மனதில் தோன்றி விட்ட பாடலில் அவள் விழிகளில் கண்ணீர் சுரந்தது...

'கண்ணீரை நானெங்கு
கடன் வாங்குவேன்..?
அது கடலாக வந்தாலும்
தடை போடுவேன்..
நியாயங்கள் தெளிவாக நாளாகலாம்
நான் யாரென்று அப்போது நீகாணலாம்..'

இமைசிமிட்டி கண்ணீரை தடுத்தபடி மௌனமாக வேலையில் மூழ்கி விட்டவளை அனுதாபத்துடன் பார்த்தான் குகன்.. அந்த நல்ல மனம் படைத்த பெண்ணின் மனதில் அமைதியில்லாமல் இருப்பது அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியைப் போல தெள்ளத் தெளிவாக தெரிந்தது.. அவனது செல் போன் ஒலித்தது.. எடுத்து அதன் சின்னத்திரையைப் பார்த்தான்.. ஒளிர்ந்த எண்களில் அவன் கண்களும் ஒளிர.. அதை காதுக்கு கொடுத்து...

"குட் மார்னிங் சார்..." என்றான்..

"வாட் ஹேப்பன் குகன்..?" மறுமுனையில் நரேந்திரன் கேட்டான்..

"சார்..." என்று ஆரம்பித்த குகன் அனைத்தையும் ஒப்பித்து முடித்து விட்டு செல்போனை அணைத்தான்.. அவன் மனதில் திருப்தி நிலவியது...



'இனி சார் பார்த்துக்குவார்...'

சற்று முன் இருந்த மனநிலை மாறியவனாக அவன் விசிலடித்தபடி நடந்தான்..

மதிய உணவு நேரத்தின் போது சுரேந்திரன் வித்யாவின் கேபினுக்கு வந்தான்.. வேலையாக இருந்த வித்யா தலை நிமிர்ந்து பார்த்துவிட்டு வேலையைத் தொடர்ந்தாள்..

"ஐ ஆம் ஸாரி அண்ணி.." என்றான் சுரேந்திரன்..

வித்யா பதில் சொல்லவில்லை...

"உங்க கோபம் எனக்கும் புரியுது.. பட்.. உங்களுக்கும் நிவிக்கும் டெர்ம்ஸ் சரியில்லைங்கிறது உண்மைதானே.."

இதற்கு மேலும் பதில் பேசாமலிருக்க வித்யாவினால் முடியவில்லை.. அவள் வேலையை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தாள்..

"அதுக்குக் காரணம் நானில்லை சுரேன்.." என்றாள்.

"யார் காரணம்ங்கிறது முக்கியமில்லை அண்ணி.."

"நோ சுரேன்.. அதுதான் முக்கியம்.."

"நிவிக்கு உங்க மேல பெரிதா பகையேதும் இல்லை அண்ணி.."

"ஓ.."

சுரேந்திரன் எதையோ சொல்லத் தயங்கியவனாக பேசாமல் இருந்தான்.. வித்யா.. மேஜையின் மீதிருந்த ஃபைல்களை ஆராய்ந்தபடி அவன் பேசட்டும் என்று காத்திருந்தாள்...

"மீனா அண்ணி எதையோ சொல்லி நிவியின் மனதைக் கலைத்திருக்காங்க.." மறைமுகமாக கூறினான் சுரேந்திரன்...

'போடா.. நீயும் உன் ஆராய்ச்சியும்..' என்று தோன்றியது வித்யாவிற்கு..

நிவேதிதா ஊருக்கெல்லாம் பாடம் எடுப்பாள்.. அவளுக்கு மீனலோசனி பாடம் எடுத்தாளா..? என்ற நினைவில் வித்யாவின் இதழோரமாக குறுஞ்சிரிப்பு தோன்றியது...

மீனலோசனியின் குணம் சரியில்லைதான்.. ஆனால் நிவேதிதாவின் குணம் அவளைவிட சரியில்லாதது.. அவள் நரேந்திரனை பழிவாங்குவதற்காகவே சுரேந்திரனைத் தேடிப் பிடித்துக் காதலித்தவள்...

புத்திசாலியான சுரேந்திரன் இத்தனை நாள்களாக அதை உணராமல் இருக்கிறானென்றால் நிவேதிதா எப்பேர்பட்ட கெட்டிக்காரியாக இருக்க வேண்டும்..?



அப்படிப்பட்டவளின் மனதை மீனலோசனி கலைத்தாளாம்..

"இதையெல்லாம் என்னிடம் எதுக்காக சொல்கிறிங்க சுரேன்..."

"உங்களுக்கும்.. நிவிக்கும் மத்தியிலே இருக்கிற மிஸ் அன்டர்ஸ்டாண்ட் சரியாகனும்..."

"மிஸ் அண்டர்ஸ்டாண்ட்டா..?"

வித்யாவிக்கு சிரிப்பு வந்தது.. நிவேதிதாவின் அண்டர்ஸ்டாண்டிங் எப்பேற்பட்டது என்று தெரிய வரும்போது இவன் என்ன சொல்வான் என்ற நினைவில் அவள் மெலிதான சிரிப்புடன் அவனை ஏறிட்டாள்...

அவனோ அவளின் சிரிப்பைக் கண்டு முகம் சுருங்கினான்...

"இதில சிரிக்க என்ன இருக்கு அண்ணி...?"

"நிறைய இருக்கு சுரேன்.. உங்களுக்கு அது இப்போது புரியாது.. ஒருநாள் உங்களுக்கு எல்லாம் புரிய வரும் போது இந்த சிரிப்புக்கான அர்த்தமும் புரியவரும்.. நிவேதிதாவைப் பொறுத்தவரையில் என்பக்கமிருந்து எதுவும் ஆரம்பிக்காது.."

"எனக்கும் அது தெரியும்.."

"தெரிந்தும் ஏன் அதைப் பத்திப் பேசனும்.. அவங்க எதையாவது ஏடா கூடாமா செய்து வைத்தா நான் பொறுத்துப் போகனும்னு சொல்ல வந்தீங்களா..?"

அதற்காகத்தான் சுரேந்திரன் வந்திருந்தான்.. அதை கண்டு கொண்ட வித்யாவின் மீது அவனுக்குள் மதிப்பு பெருகியது...

## 29



நதியோரம் நடந்த போது..
நீ பேச நான் கேட்டேன்..
நான் பேச வந்த போது..
கேட்காமல் எங்கே போனாய்..?
-நதியோரம் நான் நடந்த போது-

"என்னால அது முடியாது சுரேந்திரன்.. உங்க வொய்ப் எனக்கெதிரா எதையாவது செய்தால் நான் பொறுத்துப் போகலாம்.. ஆனா தொழிலாளர்களுக்கு எதிரா எதைச் செய்தாலும் நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்.."



வித்யா உறுதியாகச் சொல்லி விட்டாள்.. அவள் அதைத்தான் சொல்லுவாள் என்பதை அறிந்து வைத்திருந்த சுரேந்திரன் மௌனமாக வெளியேறி விட்டான்...

வித்யாவின் மனதில் எரிச்சல் சூழ்ந்தது.. என்ன மனிதர்கள் இவர்கள் என்ற எண்ணத்தோடு.. அரையும்.. குறையுமாய் சாப்பிட்டு முடித்தாள்.. மாலையில் வீடு திரும்பிய போது அவளை 'வா'வென்று அழைக்க யாருமில்லாததைப் போல உணர்ந்தாள்.. சௌதாமினியும்.. பூர்ணிமாவும் தென்படவில்லை.. ஹாலில் குழுமியிருந்த மற்றவர்கள் அவளை வழியில் போகிற ஒரு பெண்ணைப் பார்ப்பதைப் போல பார்த்துவிட்டு தங்களுக்குள் கூடிப் பேசிச் சிரித்துக் கொண்டார்கள்...

வித்யா இதற்கெல்லாம் பழகியிருந்தாள்.. நரேந்திரன் கூட இருந்திருந்தால் இவர்கள் இப்படிப்பட்ட பார்வையைப் பார்ப்பார்களா என்ற நினைவுடன் வேலையாளை அழைத்து மாடியிலிருந்த அவளுடைய அறைக்கே காபியையும்.. இரவு உணவையும் கொண்டு வரச் சொல்லி விட்டு மாடியேறினாள்.. ஹாலில் குழுமியிருந்தவர்களின் விழிகள் அவள் முதுகைத் துளைப்பதை உணர்ந்தும் அவள் அதைப் பொருட் படுத்தவில்லை...

"இவளுக்கு இருக்கிற தைரியத்தைப் போல யாருக்கும் இருக்காது..." மீனலோசனி பல்லைக் கடித்தாள்..

"உங்களுக்கு இருக்காதா அக்கா..?" வழக்கம் போல சமயம் கிடைத்தும் போட்டுத் தாக்கினாள் பிரபாவதி..

மீனலோசனிக்கு பற்றிக் கொண்டு வந்தது.. இருந்தாலும் அவளால்தான் பிரபாவதியை பகைத்து கொள்ள முடியாதே.. அதனால் பேச்சை வேறு திசையில் திருப்பி விட்டாள்...

"என் தைரியமெல்லாம் இவளிடம் செல்லாது பிரபா.. நம்ம நிவேதாவோட தைரியம்தான் செல்லும்..."

இதைக் கேட்ட நிவேதிதாவின் முகத்தில் வந்த கர்வத்தை பார்த்த மீனலோசனி பிரபாவதியிடம் கண்களால் சமிக்ஞை செய்து அதைச் சுட்டிக்காட்டினாள்.. இருவரும் அர்த்த புஷ்டியுடன் சிரித்துக் கொண்டார்கள்..

"தைரியமிருந்து என்ன செய்ய அக்கா.. அந்த வித்யாவை அடக்கி ஒடுக்கி மூலையில் உட்கார வைக்க நம்ம நிவேதாவால முடியலையே.." பிரபாவதி எடுத்துக் கொடுத்தாள்...

"அதைச் சொல்லு.. ஏன் நிவேதா.. இன்னைக்கும் பேக்டரியில உன்னை லேபர்ஸ் கிட்ட மன்னிப்புக் கேட்க



வைச்சிட்டாளாமே.. உண்மையா..?" மீனலோசனி போலி அனுதாபத்துடன் கேட்டாள்...

அவளுடைய அனுதாபத்தைப் பற்றி நிவேதிதாவிற்கா தெரியாது..? அவள் கோபத்துடன் மீனலோசனியை முறைத்தாள்.. அவளோ

"கூல்டவுன் நிவேதா.. என்னை முறைத்து என்ன செய்ய..? அவளை உன்னாலே அசைக்க முடியலையே.." என்று நமட்டுச் சிரிப்புடன் சொன்னாள்..

"அது பேக்டரி.. எதைச் செய்தாலும் லேபர்ஸ் போராட்டம் வந்து விடுகிறது.." எரிச்சல் பட்டாள் நிவேதிதா..

"அப்ப வீட்டிலே அதை ஆரம்பி..." இலகுவாக சொன்னாள் மீனலோசனி...

"எப்படி..?" புருவங்களை உயர்த்தினாள் நிவேதிதா..

"அதுவா..? அது செம ஈஸி.. காதைக் கொடு சொல்கிறேன்.." நிவேதிதாவின் காதைக் கடித்தாள் மீனலோசனி...

அவள் ரகசியக் குரலில் சொல்லச் சொல்ல.. நிவேதிதாவின் முகத்தில் வெளிச்சம் பரவியது...

"டன்.." என்று கட்டை விரலை உயர்த்திக் காட்டி விட்டு எழுந்து சென்றாள்...

அவர்களின் பேச்சில் தலையிடாமல் தள்ளி அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பிரபாவதி..

"இது நடக்கும்ன்னா நினைக்கறிங்கக்கா..?" என்று கேட்டாள்..

"நடக்குதோ.. நடக்கலையோ.. இன்னும் கொஞ்சம் நேரத்திலே உள் வீட்டு கலவரம் வெடிக்கப் போகுது.. அது நடந்தா சரி.. என்னவோ இந்த அரண்மனை பெரியவருக்கு மட்டும்தான் சொந்தம்ன்னு சொல்லிக்கிறார் இல்லியா.. அதை ஆட்டி வைக்க நம்மாலே முடிந்தா எனக்கு அது போதும்.. இப்ப பெரியவர் ஊரில இல்ல.. அந்த வித்யாவுக்கு சப்போர்ட் பண்ண யாருமில்ல... முதலில் எல்லாம் சுரேந்திரன் சப்போர்ட் பண்ண வருவான்... இப்ப அவன் வொய்பே பஞ்சாயத்தைக் கூட்டும் போது அவன் யார் பக்கம் நிற்பான்..?"

"அதைச் சொல்லுங்க.. பேக்டரியிலேயே நிவேதிதாவின் பக்கம் நின்று விட்ட ஆளாச்சே..."

"அதுவேதான்.. இது வீடு.. இங்கே தொழிலாளர் சப்போர்ட்டும் வித்யாவுக்கு கிடைக்காது.. என்ன ஆகுதுன்னு பார்க்கலாம்.."



இந்த உள்வீட்டு சதியாலோசனை பற்றி அறியாத வித்யா விலகிப் போகும் கணவனைப் பற்றிய யோசனையுடன் கண்மூடிப் படுத்திருந்தாள்... மசக்கையினால் ஏற்பட்ட அயர்வோடு.. ஓய்வெடுத்துக் கொள்ளக் கெஞ்சிய உடலோடு.. மெதுவாக கண் செருக உறங்க ஆரம்பித்தவளை எழுப்பியது அழைப்பு மணி..

அழைப்பு மணியின் ஓசையில் கதவைத் திறந்து பார்த்தாள் வித்யா.. பதட்ட முகத்துடன் நின்று கொண்டிருந்தாள் கனகா...

"என்னாச்சு கனகா..?"

"பெரியம்மா உங்களை கீழே வரச் சொன்னாங்கம்மா.."

"அப்படியா.. இதோ வர்றேன்.."

இதைச் சொல்ல எதற்காக கனகா பதட்டப்பட வேண்டும் என்ற யோசனையுடன் கீழே போனவளுக்கு யுத்தம் காத்திருந்தது...

வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த வேலையாள்கள் சமையலறையை ஒட்டிய நீண்ட வராந்தாவில் தரையில் அமர்ந்துதான் சாப்பிடுவார்கள்.. வித்யா அந்த வீட்டின் மருமகளானவுடன் அந்த வழக்கத்தை மாற்றினாள்.. அவ்வளவு பெரிய அரண்மனையில்

வேலையாள்கள் தரையில் அமர்ந்துதான் சாப்பிட வேண்டுமா என்பது அவளின் எண்ணமாக இருந்தது...

"ஏன் நரேன்.. நீண்ட சாப்பாட்டு மேஜையையும்... உட்கார்ந்து சாப்பிட பெஞ்சையும் போட்டு விட்டா இவங்க சாப்பிட தோதாயிருக்குமில்ல..?"

"சூப்பர் வித்யா..."

மனைவி சொன்னதை உடனே செய்து விட்டான் நரேந்திரன்... அதைப் பற்றித்தான் நிவேதிதாவிடம் சொல்லிக் கிளப்பி விட்டிருந்தாள் மீனலோசனி...

"நாங்க அப்பவே சொன்னோம் நிவேதா.. பெரியவர் எங்க பேச்சை காதில போட்டுக்கலை.. பெண்டாட்டி சொல்கிறதுதான் சரின்னு சொல்லிட்டாரு.. நம்ம வீட்டுக்காரங்க நாம சொல்கிறதை என்னைக்கு சரின்னு சொல்லியிருக்காங்க..? சொல்லு.."

"என் வீட்டுக்காரர் சொல்வார்.."

"அதைத்தான் பேக்டரியில தினம் தினம் பார்க்கிறோமே..."

"அது பேக்டரி.. இது வீடு..."

நிவேதிதா பிரச்னையை கிளப்பி விட்டாள்.. வேலையாள்கள் தரையில்தான் உட்கார்ந்து



சாப்பிட வேண்டும் என்று சொன்னாள்... சாப்பாட்டு மேஜைகளையும்.. பெஞ்சுகளையும் தூக்கச் சொல்லி உத்தரவிட்டுக் கொண்டிருந்தாள்.. சௌதாமினி அதைத் தடுக்க முடியாமல் கைகளைப் பிசைந்தபடி வித்யாவிற்கு தகவல் சொல்லி விட்டிருந்தாள்..

கனகாவின் முகம் எதனால் அத்தனை பதட்டத்துடன் இருந்தது என்று அப்போதுதான் புரிந்து கொண்டாள் வித்யா...

"யாரும் பெஞ்சைத் தூக்கக் கூடாது..."

உறுதியுடன் வித்யா சொல்லி விட்டதில் 'அப்பாடி..' என்ற நிம்மதியுணர்வு சௌதாமினியின் முகத்தில் வந்தது.. 'கடனே' என்று நிவேதிதா சொன்னதை வேண்டா வெறுப்புடன் செய்து கொண்டிருந்த வேலையாள்கள் தொட்டுக் கொண்டிருந்த பெஞ்சுகளை விட்டு விலகி நின்றார்கள்.. அதற்காகவே காத்திருந்த நிவேதிதா கத்த ஆரம்பித்து விட்டாள்...

"என்ன சுரேன் இது..? என் ஆர்டருக்கு மதிப்பில்லையா..? இங்கேயும் உங்க பெரியண்ணி வைத்ததுதான் சட்டமா..? உங்க மனைவிக்குன்னு ஒரு உரிமையைக்கூட உங்களால் தர முடியாதா..?"

இது எந்தக் கணவனையும் சீண்டி விடுகின்ற கேள்வி.. சமீப காலமாக நிவேதிதா இது போன்ற யுக்திகளைக் கடைபிடித்தே சுரேந்திரனை அவளுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கொண்டிருந்தாள்...

"உங்க அம்மா எதுக்கெடுத்தாலும் பெரிய மருமகளுக்கு இது பிடிக்காது.. பெரிய மருமகளுக்கு அது பிடிக்காதுன்னே சொல்கிறாங்களே... மத்த மருமகள்களுக்கு வாயைத்திறந்து பேச உரிமையிருக்கா.. இல்லையா...?"

யுத்தகளத்தில் உடல் சோர்வை காரணம் காட்டி வித்யாவினால் பின்வாங்க முடியவில்லை...

## 30



நதியோரம் நடந்த போது..
களிப்பை மட்டும் நான் உணர்ந்தேன்..
நீவராத பொழுதினிலே..
களைப்பை மட்டும் நான் உணர்ந்தேன்..
-நதியோரம் நான் நடந்த போது-

வித்யா சுரேந்திரனிடம் சொல்லியிருந்ததைப் போல அவளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் நிச்சயமாய்



அவள் பொறுத்துப் போயிருப்பாள்.. ஆனால் பாதிப்பு வருவது வேலையாள்களுக்கு.. அவளால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை..

சௌதாமினி சின்ன மருமகளிடம் தன்மையாக பேசிப் பார்த்தாள்...

"நிவி.. இந்த அரண்மனையில வேலை செய்கிறவங்க.. காலம்.. காலமாய் இங்கேயே வேலை செய்கிறவங்க.. அவங்களை வெளி ஆளா நாங்க பார்க்கலை.. வீட்டு ஆளுகளாத்தான் நாங்க பார்க்கிறோம்.."

"நாங்கன்னா யாரு.. அத்தை..? நீங்களும் உங்க பெரிய மருமகளுமா..?"

பதில் சொல்ல முடியாமல் சௌதாமினி திணறிய போது நிவேதிதா பொரிந்து தள்ள ஆரம்பித்து விட்டாள்..

"ஸ்டுப்பிட்.. இது அரண்மனையா..? இல்லை வெறும் ஓலைக்குடிசையா..? ஒரு ராஜபரம்பரைக்கான எந்த சம்பிரதாயங்களும் இங்கே இல்லை... கேட்டா.. எல்லாம் பெரிய மருமக கொண்டுவந்த சட்டம்ன்னு சொல்கிறிங்க.. அவங்களுக்கு அரண்மனையின் பழக்க வழக்கங்களைப் பற்றி என்ன தெரியும்..? ஓலைக் குடிசையைப் பற்றிக் கூடத் தெரியாதவங்க அவங்க.. அவங்க யாரு அரண்மனையின் சட்ட திட்டத்தை மாற்ற...?"

"நிவேதிதா.."

"ஏன் அத்தை கோபப் படறிங்க..? நான் உண்மையைத் தானே சொன்னேன்..? ஹாஸ்டலில் இருக்கக் கூட வழியில்லாம உங்க மகளின் வீட்டில் ஒட்டிக்கிட்டு படிச்சவங்கதானே அவங்க..?"

"நிவேதிதா..."

"ஒன்று எல்லா மருமகள்களையும் ராஜ பரம்பரையில் இருந்து எடுத்திருக்க வேண்டும்.. இல்லையா.. எல்லோரையுமே இதைப் போல வழியில் போகிறவங்களா பார்த்து எடுத்திருக்கனும்.. இரண்டும் இல்லாம கலந்து எடுத்தா இந்தக் கதைதான்..."

நிவேதிதா பேசிய பேச்சுக்களை சௌதாமினி-யாலேயே தாங்கிக் கொள்ள முடியவில்லை.. இந்த அளவிற்கு வித்யாவைப் பேச வேண்டுமா என்ற எண்ணம் அவளுக்குள் இருந்தது.. ஆனாலும் நிவேதிதாவை கண்டித்து வைக்க அவளால் முடியவில்லை.. அதை சுரேந்திரன்தான் செய்ய வேண்டும்.. அந்த நேரம் பார்த்து சுரேந்திரன் வெளியே போயிருந்தான்...

சின்ன மகன் வெளியே போயிருக்கிறான்.. பெரிய மகனோ ஊரிலேயே இல்லை.. அந்த நேரம்



பார்த்து நிவேதிதா கெட்டிக்காரத்தனமாக வேலையை ஆரம்பித்திருப்பதை சௌதாமினியால் புரிந்து கொள்ள முடிந்தது...

என்ன செய்வது என்ற கவலையுடன் அவள் வித்யாவைப் பார்த்தாள்.. வித்யாவிற்கு எந்த விதமான கவலையும் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை.. அவள் நிவேதிதாவின் அலட்டலையும்.. அதிகாரத்தையும் அலட்சியம் செய்தாள்...

"லுக் நிவேதிதா.. நான் வழியில் போனாலும் உன் வழியில் போகவில்லை.. அதை ஞாபத்தில் வைத்துக் கொண்டு பேசு.. நான் பூர்ணிமாவின் வீட்டில் ஃபேயிங் கெஸ்டாத்தான் தங்கியிருந்தேன்.. அதை இங்கே வேலை செய்கிற கண்ணம்மா ஆண்ட்டியிடம் நீ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்..."

"கண்ணம்மா ஆண்ட்டியா..? உனக்கு வேணும்னா அது ஆண்ட்டியா இருக்கலாம்.. எனக்கு செர்வண்ட்தான்.. வேலையாள்களிடம் ஈக்குவலாப் பேசி எனக்குப் பழக்கமில்லை... உன்னிடம் சரிசமமாய் நின்று பேசுவதே அதிகம்.."

"என்னிடம் பேசச் சொல்லி உன்னை நான் கேட்டேனா..? கண்ணம்மா ஆண்ட்டியை பூர்ணிமா

சித்தின்னுதான் கூப்பிடுவா.. அவளிடம் போய் இப்படிச் சொல்லிப் பாரு தெரியும்..."

"ஹ.. எல்லாக் கதையும் எனக்கும் தெரியும்.. பூர்ணிமாவினாலதானே நீ இந்த வீட்டுக்குள்ள மருமகளாய் நுழைந்திருக்க..?"

"நோ நிவேதிதா.. தப்புக் கணக்குப் போடற.. நீ எப்படி சுரேந்திரனைக் காதலிச்சதாலே இந்த வீட்டுக்குள்ள மருமகளாய் நுழைந்தியோ.. அதைப் போல நான் நரேந்திரனைக் காதலித்ததினாலே இந்த வீட்டுக்குள் மருமகளாய் நுழைந்தேன்..."

"நீயும்.. நானும் ஒன்றா..?"

"நிச்சயமாய்.. நீயும்.. நானும் இந்த வீட்டுக்கு மருமகள்கள்..."

"நான் மதன்பூர் ராஜாவின் மகள்.."

"இருந்துட்டுப் போ.. எனக்கென்ன வந்தது.. நீ யாராய் இருந்தால் எனக்கென்ன..? என்னைப் பொறுத்தவரை நீ சுரேந்திரனின் ஃவொய்ப்... அவ்வளவுதான்.."

"அவ்வளவுதானா..? சுரேந்திரனின் வொய்புக்குன்னு பவர் ஏதும் இல்லையா..? இங்கே நீ வைத்ததுதான் சட்டமா..?"



"மற்றதில் எப்படியோ எனக்குத் தெரியாது.. இந்த விசயத்தில் நான் வைத்ததுதான் சட்டம்.. இந்த அரண்மனையின் வேலைக்காரங்க சாப்பிடறதுக்காக டேபிளும்.. பெஞ்சும் வாங்கிப் போடக்கூட நமக்கு வசதியில்லாமல் போய் விட்டதா...?"

"வசதியைப் பத்தின பிரச்னையில்லை இது..."

"அதைத்தான் நானும் சொல்றேன்.. இது மனித உணர்வுகளைப் பற்றிய பிரச்னை.. இது நாள் வரைக்கும் டேபிள்.. பெஞ்சில் உட்கார்ந்து சாப்பிட்டவங்களை.. உனக்கு அதுக்கான உரிமையும்.. தகுதியும் இல்லைன்னு சொல்லி.. தரையில் உட்கார்ந்து சாப்பிடச் சொன்னா.. அவங்க மனசு என்ன பாடுபடும்..?"

"அதைப்பத்தி எனக்கு கவலையில்லை..."

"எனக்கு கவலையிருக்கு..."

"இது ஊடே வந்த பழக்கம்தான்..."

"ஊடே வந்தாலும்.. வந்து விட்டதுதானே.. அதை மாத்தினா அவங்க மனசு கஷ்டப்படாதா..?"

"இது அரண்மனை..."

"எனக்கு இது என் வீடு..."

"ம்ஹீம்.. இவ்வளவு பெரிய அரண்மனையை வீடுன்னு சொல்லக் கூடிய அதிர்ஷ்டம் உனக்குக் கிடைத்திருக்கு..."

"இருக்கட்டுமே.. அது அதிர்ஷ்டமாவே இருக்கட்டுமே.. இது என் வீடாக மாறிப் போன பின்னால் எப்படிச் சொன்னால்தான் என்ன..? எனக்கு அதைப் பற்றி ஒன்றுமேயில்லை..."

"உனக்கு என் இருக்கப் போகிறது...? அரண்மனையைப் பற்றியும்.. அதன் பழக்க வழக்கங்களைப் பற்றியும் உனக்கு என்ன தெரியும்..? அரண்மனைக்குன்னு சில வழக்க வழக்கங்கள் இருக்கு.. அது மாறக்கூடாது..."

"மாற்றம் ஒன்றுதான் மாற்றமில்லாதது..."

"சோசலிசம் பேசறவங்க அரண்மனைக்கு வெளியே போய் பேசணும் உள்ளேயிருந்தா அரண்மனையின் பழக்க வழக்கங்களை அனுசரிக்கிறவங்களா இருக்கணும்..."

"இல்லைன்னா..?"

இந்தக் கேள்வி வித்யாவிடமிருந்து வரவில்லை.. மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்த பூர்ணிமா-விடமிருந்து வந்தது..



'அப்பாடி...'

தனித்துப் போராடிக் கொண்டிருந்த வித்யாவிற்கு உதவிக்கரம் வந்துவிட்டதில் சௌதாமினி நிம்மதிப் பெருமூச்சை விட்டாள்..

"சொல்லு நிவேதிதா.. அப்படியில்லைன்னா என்ன ஆகும்..?"

பூர்ணிமா கம்பீரமாக நடந்து வந்து வித்யாவின் அருகில் நின்று அவள் தோளைச் சுற்றி கைபோட்டுக் கொண்டாள்...

வித்யாவிடம் மோதியதைப் போல பூர்ணிமா தேவியிடம் மோத நிவேதிதாவினால் முடியவில்லை...

"நான் மணிமுத்தாறு அரண்மனையில் பிறந்து வளர்ந்தவள்.. ராஜா ராஜேந்திர பூபதியின் செல்ல மகள்.. உன்னைப்போலவே ராஜ பரம்பரை.. என் கேள்விக்கு நீ பதில் சொல்லலாமில்லையா..? வித்யா கேள்வி கேட்டால் தானே உன் பரம்பரைப் பெருமையைச் சொல்லிப் பீற்றிக்குவ..? என்னிடம் சொல்லு.. அப்படியில்லைன்னா என்ன ஆகும்...?"

பூர்ணிமாவின் கிடுக்குப்பிடி கேள்விகளில் நிவேதிதா பதில்பேச முடியாமல் திணறினாள்.. அப்போதுதான்

வீட்டிற்குள் வந்த சுரேந்திரன் சூழல் மாற்றத்தை உணர்ந்தவனாய் புருவங்களை உயர்த்தினான்..

"வா அண்ணா.. உனக்கு இப்பத்தான் வீட்டுக்கு வர வழி தெரிஞ்சதா..?"

"ஏன் பூரணி..? எதனால இப்படிக் கேட்கிற..? நான் அம்பாசமுத்திரம் வரைக்கும்தானே போயிருந்தேன்..?"

"அதற்குள் உன் வொய்ப் இங்கே ஒரு யுத்த காண்டத்தையே ஆரம்பிச்சு வைச்சுட்டாங்க.. ஏன் அண்ணா.. இதையெல்லாம் என்னன்னு கேட்டு நீ உன் வொய்பை கண்டித்து வைக்கவே மாட்டியா..?"

அன்று இரவில் நிவேதிதாவை சுரேந்திரன் அதிக அளவில் கடிந்து கொண்டான்...



# 31

நதியோரம் நடந்த போது..
யுத்தமில்லா அமைதி கண்டேன்..
நதியைவிட்டு விலகி நடந்தால்...
யுத்தம் மட்டும் எங்கும் கண்டேன்...
-நதியோரம் நான் நடந்த போது-

நிவேதிதாவிற்கு பூர்ணிமாவின் பலத்தைப் பற்றி அதுவரை சரிவர தெரியாமல் இருந்தது.. பூர்ணிமா மகா சத்தி.. நியாய தேவதை.. அவள் கண்முன் நடக்கும் எந்தவொரு அநியாயத்தையும் பொறுத்துக் கொள்ள மாட்டாள்...

இதையெல்லாம் அறியாமல் அவள் வீட்டிலிருந்த போதே அவளுடைய உயிர் தோழியான வித்யாவுடன் மோதிவிட்டாள் நிவேதிதா...

"உன் வொய்ப் மனசில என்ன நினைத்துக்கிட்டு இருக்காங்க அண்ணா..? அவங்க உன்னைக் காதலித்து கல்யாணம் பண்ணிக்கிட்டது எதுக்காக அண்ணா..? உன்கூட வாழ்கிறதுக்காகவா.. இல்லை வித்யாவுடன் சண்டை போடுகிறதுக்காகவா..?"

பூர்ணிமா தெளிவாகக் கவனித்து கேட்டு விட்டதில் நிவேதிதாவின் முகம் விழுந்து விட்டது...

'இவளுக்கு எப்படித் தெரியும்..?'

இதுதான் நிவேதிதாவின் எண்ணமாக இருந்தது.. வித்யா அதைச் சொல்லியிருக்க மாட்டாள் என்று நிச்சயமாக அவள் நினைத்தாள்.. வித்யா அப்படிப் புறம் பேசி காட்டிக் கொடுக்கும் பெண்ணல்ல என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது.. அப்படிப்பட்டவளுடன் தான் அவள் தினம்தினம் போராட்டம் நடத்தினாள்...

"வித்யா எதைச் செய்தாலும் உன் வொய்ப் அதில் தலையிட்டு பிரச்னையைக் கிளப்புவாங்கன்னா.. அவங்க நோக்கம் என்ன...?"

"பூரணி.. நீ பெரியண்ணி பக்கமே பேசாதே.. நிவியும் உனக்கு அண்ணிதான்.. பெரியண்ணி உனக்கு பிரண்டுங்கிறதுக்காக நீ நிவி பக்கம் இருக்கிற நியாயத்தை கண்டு கொள்ளாமல் இருக்கிறது தப்பு.." மனைவியை விட்டுக் கொடுக்காமல் தான் பேசினான் சுரேந்திரன்...

"வாஹ்ரே வா.. சுரேன் அண்ணா.. நீ இத்தனை நியாயவாதியாய் இருப்பேன்னு நான் கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்கலை.. எப்படிண்ணா இப்படி மாறிப்



போன..? இதைப் போலத்தான் நீ பேக்டரியிலயும் வித்யாகிட்ட பேசி வைச்சிருக்க.. உன் வொய்ப் கூட வித்யாதான் சண்டை போடுகிறாளா..? அவள் சண்டை போடறதா இருந்தா இந்த வீட்டில இருக்கிறவங்க பண்ணுகிற அழிச்சாட்டியத்துக்கு அவ எத்தனை சண்டை போட்டிருக்கனும்..? அவ போடலையே.. இப்ப உன் வொய்ப்கூட அவ சண்டை போடக் கிளம்பியிருக்கிறாளா..? இதிலிருந்து என்ன தெரியுதுன்னா.. மத்தவங்களை-யெல்லாம் உன் வொய்ப் தூக்கி சாப்பிட்டு விட்டாங்கன்னு தெரியுது...."

"ஷட் அப் பூர்ணிமா.. நிவி உன்னோட அண்ணி..."

"வித்யாவும் எனக்கு அண்ணிதான்.. அவகூட பெரியண்ணன் ஊரில் இல்லாத நேரத்தில பேக்டரியிலயும்.. வீட்டிலேயும் உன் வொய்ப் சண்டை வளர்த்துக்கிட்டு இருக்கிறாங்க.. நீ அதை ஏன்னு கேட்காம.. வித்யாவைக் கேள்வி கேட்டிருக்க.. அது போதாதுன்னு என்னிடமும் கேள்வி கேட்கிற.. இப்ப பேசியதையெல்லாம் நீயும் உன் வொய்ப்பும் பெரியண்ணன் முன்னாலே பேசிருவீங்களா..? அவர் முன்னாலே வித்யாவை ஒரு சொல் சொல்லிப் பாருங்க.. அப்புறம் என்ன நடக்குதுன்னு நான் வேடிக்கை பார்க்கிறேன்.."

பூர்ணிமாவின் கோபத்தில் சுரேந்திரன் மனைவியை முறைத்தான்...

"வாட் இஸ் திஸ் நிவி..?"

எல்லோரின் முன்னாலும் அவன் அதட்டியதில் நிவேதிதாவிற்கு என்னவோ போல ஆகிவிட்டது..

"நத்திங் சுரேன்.. மதன்பூர் அரண்மனையில் எல்லாம் சர்வண்ட்ஸ் தரையில் உட்கார்ந்துதான் சாப்பிடுவாங்க.. இங்கே அப்படியில்லை.." நிவேதிதா மென்று விழுங்கினாள்...

"அதனால..?" சுரேந்திரனின் கேள்வி கூர்மையாக வந்தது...

"ப்ளீஸ்.. நம்ம ரூமில் இதைப்பத்திப் பேசலாமே..."

"சண்டையை எல்லோருக்கும் மத்தியில போட்டுட்டு.. விளக்கத்தை தனிமையில சொல்லனும்கிறயா...? அந்தக் கதையே இங்கே வேணாம்.. இங்கேயே உன் விளக்கத்தைச் சொல்லு..."

"நான் டேபிள்.. பெஞ்சைத் தூக்கச் சொன்னேன்..."

"வாட்..?" சுரேந்திரனின் கோபத்தில் நிவேதிதாவின் முகம் கன்றிச் சிவந்து விட்டது...



"நீ யார் அதைச் சொல்ல..? அதனால எங்க வீட்டில் வேலை செய்கிறவங்களின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்னு நீ நினைத்துப் பார்த்தியா..? திஸ் இஸ் டூ மச் நிவேதிதா.. லேபர்ஸ் வெல்ஃபேர் இல்லைன்னா.. எந்த முதலாளியும் தொழிலில் சக்சஸ் பண்ண முடியாது.. அது பேக்டரியாய் இருந்தாலும் சரி.. வீடாக இருந்தாலும் சரி..."

"பட் சுரேன்..."

"பேசாதே.. இப்படித்தான் தினமும் பேக்டரியில் லேபர்ஸ்கூட மோதி ஏதாவது ஒரு பிராப்ளத்தை கிரியேட் பண்ணிக்கிட்டே இருக்கிற.. உன்னை ஜி.எம்மா கண்டினியூ பண்ண வைக்கலாமா.. வேண்டாமான்னு எனக்கு யோசனையாய் இருக்கு.. அம்மா.. நீங்களும் இங்கே தானே இருக்கீங்க.. இவதான் பைத்தியக்காரத்தனமா எதையாவது சொன்னா நீங்க அதைக் கண்டிக்காம வேடிக்கை பார்த்தீங்களா...? நம்ம வீட்டில வேலை செய்கிறவங்க என்னைப் பத்தி என்ன நினைத்துக்குவாங்க...?"

சௌதாமினிக்கு அந்த வார்த்தைகளே போதுமானதாக இருந்தன... அதுவரை மீனலோசனியையும்.. பிரபாவதியையும் கண்டிப்பதைப் போல நிவேதிதாவைக்

கண்டிக்க முடியாமல் இருந்தவளுக்கு சுரேந்திரனின் அனுமதி வயிற்றில் பாலை வார்த்ததைப் போல இருந்தது...

"ஆகட்டும் சுரேன்.. இனிமே இது போல நடக்காம நான் பார்த்துக்கறேன்..." சின்ன மகனுக்கு அவள் உறுதியளித்தாள்..

இதிலிருந்து நீ அறிவது யாதெனில்... இனியும் நான் நீ செய்வதையெல்லாம் மதன்பூர் மகாராஜாவின் மகளாயிற்றே என்று பொறுமையாக பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன்.. ஒரு மாமியாராய் லட்சணமாய் நீ வாய் திறக்க முடியாமல் அடக்கி வைப்பேன் என்ற செய்தியை சுரேந்திரனிடம் சொல்வதைப் போல நிவேதிதாவிடம் அவள் சொல்வதைப் புரிந்து கொண்டாள் நிவேதிதா.. இப்படி ஆகுமென்று அவள் நினைத்துப் பார்த்திருந்தாளா என்ன..? அவளை முடுக்கிவிட்ட மீனலோசனி ஏதும் அறியாதவளைப் போல நின்று விட.. எல்லோரிடமும் நிவேதிதா தான் வாங்கிக் கட்டிக் கொண்டாள்...

போதாக்குறைக்கு அன்று இரவே சுரேந்திரனிடம் அவளுக்குச் சரியான மண்டகப்படி கிடைத்தது...





"பூர்ணிமா கேட்டதை நினைத்துப் பார் நிவி.. நீ எதுக்காக என்னைக் காதலிச்சு கல்யாணம் பண்ணிக் கிட்டே... பெரியண்ணி கூட சண்டை போடறதுக்காகவா..?"

"சுரேன்.. அவளுக்காக நீங்க அக்கறை படறதை நான் விரும்பலை..."

"யார் அக்கறைப் பட்டது..? என் அக்கறை அவங்களைப் பத்தியில்லை.. என்னைப் பற்றித்தான்.."

"ஏன்..? உங்களுக்கென்ன..?"

"எனக்கென்னவா..? நீ எதைச் செய்தாலும்.. அது என் தலையில்தானே வந்து விடியுது...? உன்னாலே என்னோட சின்னத் தங்கையிடம் என்னவெல்லாம் பேச்சுக் கேட்க வேண்டி வந்திருக்கு.. பார்த்தியா...?"

"எல்லாம் நீங்க கொடுக்கிற இடம்.. நம்ம அரண்மனை விவகாரத்தில தலையிடறதுக்கு அவ யாருங்க...?"

இப்படிக் கேட்டவளை சுரேந்திரன் பார்த்த பார்வையில் நடுங்கிப் போனாள் நிவேதிதா...

"அவ யாரா..? என் தங்கைடி அவ.. இந்த அரண்மனையின் செல்லப் பெண்.. மதன்பூர் அரண்மனையில உன்னை யாருன்னு கேட்டா நீ கேட்டுக்குவியா..?"

"அது நான் பிறந்து வளர்ந்த அரண்மனை..."

"இங்கேயும் அப்படித்தான்.. இது பூர்ணிமா பிறந்து... வளர்ந்த அரண்மனை.. இங்கே அவ பேச்சுக்கு மறு பேச்சில்லை.. ஆமாம்.. உன்னை ஒன்று கேட்கனுமே.."

"கேளுங்க..."

"அந்த கார்த்திகாயினி தேவி உன் ஒன்று விட்ட அக்காதானே..."

"அதுக்கென்ன...?"

"உனக்கு அவங்களை ரொம்பப் பிடிக்குமாமே.."

"யார் சொன்னது...?"

"உன் குடும்பமே சொல்லுது.. அவங்க நினைப்பிலதான் நீ பெரியண்ணி கூட சண்டை போடறயா..?"

சுரேந்திரன் தான் புத்திசாலி என்பதை நிருபித்தான்.. நிவேதிதாவின் முகம் மாறியது.. உண்மையை ஒப்புக் கொள்ளாமல் அவள் பேச்சை திசை திருப்பிவிட முயன்றாள்...

"இப்படி நினைத்துப் பாருங்க.. அப்படி நினைக்காதீங்க..."

"எப்படி நினைக்கச் சொல்கிற...?"



"நீங்க அந்த வித்யாவைக் காதலிச்சீங்களாமே.. அவதான் உங்களை வேண்டாம்னு சொல்லிட்டு உங்க அண்ணனை மேரேஜ் பண்ணிக்கிட்டாளாம்.. அதனால தான் நான் அவகூட சண்டைக்குப் போகிறேன்.. போதுமா.."

"ச்சீ..."

சுரேந்திரன் வெறுப்புடன் நிவேதிதாவை விட்டு விலகிப் படுத்துவிட்டான்..

## 32



நதியோரம் நடந்த போது..
பூங்காற்றாய் வந்த தோழி...
நான்சாய தோள் கொடுத்தாள்..
தாயாகி அவள் மடிசாய்த்தாள்...
-நதியோரம் நான் நடந்த போது-

மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்தாள் வித்யா.. அவள் பின்னால் மெதுவாக நடந்து வந்த பூர்ணிமா வித்யாவின் தோளைத் தட்டினாள்.. திரும்பிய வித்யா வெறுமையாகப் புன்னகைத்தாள்...

'பெரியண்ணன் முன்னாலே வித்யாவை நீ ஒரு சொல் சொல்லிவிட முடியுமா...?'

பூர்ணிமா சுரேந்திரனைப் பார்த்துக் கேட்ட கேள்வி அவள் நினைவுக்கு வந்தது.. அவள் மனம் புண்ணாக வலித்தது...

'இவளுக்குத் தெரியுமா..? இவளுடைய பெரியண்ணன் முன்போல இல்லையென்பது...' மன ரணத்துடன் அவள் வானத்தைப் பார்த்தாள்...

'என்னால் காத்திகாயினியை விடமுடியாதுன்னு அவர் சொல்லிட்டாருன்னு இவளுக்குத் தெரியுமா..? அவரை எப்படி விடறதுன்னு நான் மருகிக்கிட்டு இருக்கிறதைப் பத்தி இவளுக்குத் தெரியுமா..?' வித்யாவின் கண்களில் நீர் மல்கியது..

"என்னடி... பலமான யோசனையில் இருக்க..?"

"ம்ப்ச்.. சும்மா.. ஒன்னுமில்லை பூர்ணி..."

வித்யாவின் மனதும் ஒன்றுமேயில்லைதான் என்று எண்ணிக் கொண்டது.. அவளுக்கென்று யார் இருக்கிறார்கள் என்ற நினைவு வந்தபோது வயிற்றில் நரேந்திரனின் குழந்தை அசைந்து...



'உனக்கு நானில்லையா..?' என்று கேட்டது...

"ஒன்றுமேயில்லாததுக்கா இவ்வளவு பெரிய யோசனை..? அதுதான் மணிமுத்தாறு அரண்மனையில் கோட்டையைப் பிடித்து கொடியை நாட்டி விட்டாயே.. இனிமேலும் என்னடி யோசனை வேண்டிக்கிடக்கு..?"

"கோட்டையைப் பிடித்திருக்கிறது என்னவோ உண்மைதான் பூர்ணி.. ஆனால் கொடியை நாட்டலை.." விரக்தியுடன் பேசினாள் வித்யா...

"இன்றைக்கு இந்த நிவி பண்ணின கலாட்டாவைச் சொல்றியா..? போடி பைத்தியம்... நீ கொடியை நாட்டலைன்னா என் பெரியண்ணா சும்மா விட்டு விடுவாரா..? எல்லோரையும் ஒருவழி பண்ணி விட மாட்டாரா..? நீதானே அவரின் கைகளைக் கட்டிப் போட்டிருக்கிற..? இல்லைன்னா இந்த அரண்மனையில உன் மன அமைதியைக் கெடுக்கிறவங்களுக்கு இடமிருக்குமா..?"

"நான் யாரையும் வெளியேற்ற நினைக்கலை பூர்ணி..." கண்கலங்கின வித்யா..

'நான்தான் வெளியேறனும்னு நினைக்கிறேன்..' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்..

அவளின் தலை தன்னிச்சையாக தோழியின் தோள்மீது சாய்ந்தது.. இதைப் போலத்தானே அன்று கார்த்திகாயினி நரேந்திரனின் தோள்மீது சாய்ந்திருந்தாள் என்ற நினைவு வர அவள் மனம் துடிக்க நிமிர்ந்தாள்..

"வித்யா.." பூரணி தோழியின் கவலையில் துணுக்குற்றாள்...

"எனக்கு அரண்மனை தேவையில்லை பூர்ணி.. உன் அண்ணனின் மனதில் எனக்கான இடம் நிலைத்திருந்தால் போதும்..."

"அது உனக்குத்தானே வித்யா.. உன் ஒருத்திக்கு மட்டும்தானே அது சொந்தம்..."

பூர்ணிமா ஆறுதல் படுத்த முனைந்தாள்.. வித்யாவின் மனம் அமைதியடைய மறுத்தது.. அவளது மனம் அலைகடலாய் கொந்தளித்தது அடங்காமல் அலைபாய்ந்தது...

தோழியின் விழிகளில் தெரிந்த கலக்கத்தில் பூர்ணிமாவின் மனம் பதறியது.. அவள் வித்யாவை தன் தோளில் சாய்த்துக் கொண்டாள்.. அமைதியில்லாமல் அலைபாய்ந்த தோழியின் தலைமுடியைக் கோதி விட்டபடி மெதுவான குரலில் பாடினாள்...



"பேசுகிறேன்.. பேசுகிறேன்..
உன் இதயம் பேசுகிறேன்...
புயலடித்தால் கலங்காதே-நான்..
பூக்கள் நீட்டுகிறேன்..
எதை நீ தொலைத்தாலும்..
மனதை தொலைக்காதே..
அடங்காமலே.. உள்ளம்..
அலை பாய்வதேன்..?"

"பூர்ணி..." வித்யா உடைந்து போய் அழுதாள்...

"அழுதுவிடு வித்யா.. உன் மனதிலிருப்பதை என்னிடம் சொல்ல முடியாவிட்டால் அழுது தீர்த்துவிடு.. மனதில் வைத்துக் கொண்டு குமுறாதே.. ஆனா.. ஒன்னைமட்டும் நினைவில் வைத்துக்க.. உனக்கு நானும்.. பெரியண்ணனும் இருக்கிறோம்..."

"நீ இருக்கிற பூர்ணி.. என்னைக்கும் என் தோழியா என்கூடவே இருப்ப.. எனக்கே எனக்காக இருப்ப... உன் பெரியண்ணன் இருப்பாரா..?"

வித்யாவின் பரிதவிப்பில் திறக்காத அவளின் இதயக் கதவு மெல்லத்திறந்து விட.. பூர்ணிமாவின் புருவங்கள் சுருங்கின...

அன்று இரவு... பிரகாஷ் படுக்கையில் சாய்ந்து புத்தகத்தில் மூழ்கியிருக்க.. பூர்ணி செல்போனை எடுத்துக் கொண்டு பால்கனிக்குப் போனாள்...

"அண்ணா..." என்ற அவளின் அழைப்பிற்கு..

"சொல்லு பூரணி..." என்றான் மறுமுனையிலிருந்த நரேந்திரன்... வெகுநேரம் பேசிக் கொண்டிருந்த பூரணி நிம்மதியுடன் போனை அணைத்துவிட்டுத் தூங்கப் போனாள்...

சுரேந்திரன் நிவேதிதாவைப் புறக்கணிக்க ஆரம்பித்தான்.. தொடர்ந்து ஒரு முழுநாள் முழுவதும் அவன் பேசாமல் இருந்ததில் நிவேதிதா கொதித்து விட்டாள்.. பேக்டரியில் அவள் பேசப் போனபோது சுரேந்திரன் ஏதோ வேலையிருப்பதைப் போல நகர்ந்துவிட.. வீட்டுக்கு திரும்பியதும் தனியறையில் அவனை ஒரு கைபார்த்து விட வேண்டம் என்ற வன்மத்துடன் வீடு திரும்பினாள் நிவேதிதா..

மதன்பூர் மகாராஜாவின் மகளை அவள் கணவன் உதாசீனம் செய்வதா..? அவளென்ன கிள்ளுக்கீரையா..? யாரென்று நினைத்து விட்டான்..? அவள் நிவேதிதா.. சும்மா விடமாட்டாள்...



வீட்டுக்கு வந்ததும்.. சுரேந்திரன் தோட்டத்தில் தனிமையை நாடிப் போய்விட.. பொறுக்க முடியாத நிவேதிதா தோட்டத்திற்கு அவனைத் தொடர்ந்து போனாள்...

"ஐ வான்ட் டு டாக் வித் யு சுரேன்..."

"பட்.. ஐ டோன்ட் வாட் இட்.. எனக்கு தலையை வலிக்குது.. தனியாய் இருக்க விடு.. ப்ளீஸ் கோ இன்சைடு தி ஹவுஸ்..."

"ஓ.. அந்த அளவுக்கு வந்தாகி விட்டதா..? தனியே இருக்கனும்னு நினைக்கிறவர் எதுக்காக மேரேஜ் பண்ணிக்கனுமாம்..?"

"நான் உன்னை மேரேஜ் பண்ணிக்கனும்னு நினைக்கவேயில்லை... நீதான் துரத்தித் துரத்தி என்னைக் காதலிச்சு மேரேஜ் பண்ணிக்கச் சொல்லிக் கெஞ்சின.. நான் உன்னைத் தேடி வரலை.. நீதான் என்னைத் தேடிவந்த.."

சுரேந்திரன் கோபத்துடன் நிவேதிதாவின் மனதைக் காயப்படுத்திக் கொண்டிருந்த அந்த நேரத்தில் தெரியாத்தனமாக தோட்டத்துப் பக்கம் வந்து விட்டாள் வித்யா..

அவளைக் கண்டதும் வெகுண்டு போன நிவேதிதா.. கொதிப்புடன் அவள் பக்கம் கை நீட்டி...

"யெஸ்.. நானும் அதைத்தான் சொல்றேன்.. நான்தான் உங்களைத் தேடி வந்தேன்.. நீங்க என்னைத் தேடி வரலை.. இவளைத் தேடி வந்தீங்க.." என்று வித்யாவின் பக்கமாக கை காட்டினாள்...

வித்யா திகைத்துப் போய் நின்று விட்டாள்.. அவளை வைத்துக் கொண்டு நிவேதிதா இப்படிப் பேசிவிடுவாள் என்று அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை...

"ஷட் அப்.." சுரேந்திரன் நிவேதிதாவிடம் சீறிவிட்டு..

"ஸாரி அண்ணி..." என்று வித்யாவிடம் சொன்னான்..

"திட்டறது இங்கே.. ஸாரி அங்கேயா..? என்னடா.. வொய்பை எது சொன்னாலும் இவர் பொறுத்துக்கிட்டுப் போகிறாரே.. அவ்வ்வ்வளவு நல்லவரா இவர்ன்னு யோசிச்சேன்.. கதை இப்படிப் போகுதா..?" நிவேதிதா விடுவதாக இல்லை..

"உன்னை வாயை மூடச் சொன்னேன்..."

"நான் ஏன் வாயை மூடனும்.. காதல் அங்கே.. மேரேஜ் இங்கேயா..? எனக்கு இரண்டில் ஒன்று தெரிஞ்சாகனும்..."



பொறுக்க முடியாமல் சுரேந்திரன் கையை ஓங்கியபோது...

"பொறு சுரேன்.." என்ற குரல் கேட்டது...

அந்தக்குரலை அடையாளம் கண்டு கொண்ட வித்யாவும்.. சுரேந்திரனும் திரும்பிப் பார்த்தார்கள்.. நரேந்திரன் வந்து கொண்டிருந்தான்..

"நீ தெரிந்துக்க வேண்டியது நிறைய இருக்கு சுரேன்.. அதுக்குள்ளே கையை ஓங்கினா எப்படி..?" என்று சுரேந்திரனிடம் சொல்லிவிட்டு நிவேதிதாவின் பக்கம் திரும்பினான் நரேந்திரன்..

"உனக்கு என்ன தெரியனும் நிவேதிதா..?"

நரேந்திரனின் நேரடியான இந்தக் கேள்விக்கு நிவேதிவினால் பதில் சொல்ல முடியவில்லை.. அவளையு மறியாமல் அவள் சுரேந்திரனின் முதுகுக்குப் பின்னால் மறைந்து நின்றாள்.. மனைவியின் அந்தச் செய்கையில் மனதை மயிலிறகு வருடுவதைப் போல உணர்ந்தான் சுரேந்திரன்.. ஒரு கணவனாக.. மனைவியின் சார்பாக அண்ணனிடம் பேசினான்..

"என்ன விசயம் அண்ணா..?"

"அதை உன் வொய்ப்தான் சொல்லனும் சுரேன்.. உனக்கு நிவேதிதாவின் மனதில் என்ன இருக்குன்னு தெரியுமா...?"

"கொஞ்சம் தெரியும் அண்ணா.. இவ கார்த்திகாயினி தேவியின் ஒன்றுவிட்ட தங்கைங்கிறதாலே அண்ணி மேல கோபமாய் இருக்கிறான்னு தெரியும்..."

"அங்கேதான் உன் கணக்கு தப்புது சுரேன்.. உன் வொய்ப் கோபமாய் இருக்கிறது.. என் மேலேயும்தான்.. நிவேதிதா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்கு காரணம் உன்மேல இருந்த காதலினால் இல்லை.. என்மேலே இருந்த பகையால் உன்னைத் தேடிப் பிடித்துக் காதலித்து கல்யாணம் பண்ணியிருக்கா.."

"அண்ணா..."

"நிவேதிதாவின் நோக்கம் எது தெரியுமா..? எந்தக் குடும்பத்தைக் காரணமாக வைத்து நான் கார்த்திகாயினியை வேண்டாம்ன்னு சொன்னேனோ.. அந்தக் குடும்பத்தை விட்டு என்னைப் பிரிக்கனும்.. அந்தக் குடும்பம் என்னைத் தூக்கி எறியனும்.. அதுதானே நிவேதிதா...?"

சுரேந்திரன் அதிர்ச்சியுடன் நிவேதிதாவின் கையைப் பிடித்து முன்னால் இழுத்தான்....



## 33

நதியோரம் நடந்த போது..
மெல்லத் தொட்ட தென்றல்காற்று..
என்னை விட்டுப் போகாமல்..
மனதை வருடும் பூங்காற்று...
-நதியோரம் நான் நடந்த போது-

நரேந்திரன் பார்வையைச் சந்திக்க முடியாமல் தலை குனிந்தாள் நிவேதிதா.. புருவங்கள் முடிச்சிட.. துளைக்கும் பார்வையுடன் தம்பி மனைவியை கேள்வி கேட்டான் நரேந்திரன்...

"உன் அக்காவின் வாழ்க்கையிலே கஷ்டம் வந்தா அதை சரி செய்யப் பார்க்கனும்.. அதை விட்டு விட்டு மத்தவங்க மேலே பழி போட்டு அவங்களைப் பழிவாங்கக் கிளம்பக்கூடாது.. நீ என் குடும்பத்தை பிரிக்கப் போகிறயா..?"

"இத்தனை நாளா இது எனக்குத் தெரியாமல் போச்சேண்ணா..."

"எனக்கு ஆரம்பத்திலேயே தெரியும்.. கார்த்திகாயினி மதன்பூரில் என்னைச் சந்தித்தாள்.. அப்போதே நிவேதிதாவின் நோக்கத்தைச் சொல்லிட்டா..."

இதைச் சொல்லிய நரேந்திரனின் கண்களைச் சந்தித்த வித்யாவின் விழிகளில் வேதனை இருந்தது.. மனைவியின் கண்ணோடு கண் கலந்த நரேந்திரன் வித்யாவைப் பார்த்தபடியே சுரேந்திரனிடம் பேசினான்...

"அவ என் காதலியாய் என்னைச் சந்திக்கலை சுரேன்.. ஒரு தோழியாகத்தான் என்னைச் சந்திச்சா.. அவளோட வாழ்க்கையைச் சொல்லி அழுதா... என்னால் அதைக் கேட்டுட்டு சும்மா இருக்க முடியலை சுரேன்.. அவளோட கணவனைப் போய் பார்த்தேன்.. அவங்க சேர்கிறதுக்கான முயற்சிகளை எடுத்துக்கிட்டேன்.. அவ கஷ்டப் படறதைப் பார்த்த பின்னாலே அவளை அப்படியே விட்டுவிட என்னாலே முடியலை சுரேன்.. என் மனசில இதுக்குக் காரணம் நான் தானோன்னு குற்ற உணர்வு வந்துருச்சு.."

'இதுக்காகத்தான் அடிக்கடி வெளியூர் போனானோ..' வித்யா லேசாக மனம் தெளிந்தாள்...

"இப்ப அவங்க ஒற்றுமையாய் ஆகிட்டாங்க சுரேன்.. கார்த்திகாயினி அவ கணவனோட சேர்ந்துட்டா.. இங்கே வந்து பார்த்தா உன் வொய்ப் நம்ம வீட்டிலே வேற்றுமையை உண்டு பண்ணிக்கிட்டு இருக்கா.. கார்த்திகாயினி தேவிக்காக இவதான் வித்யாவை பழி வாங்கிக்கிட்டு இருக்கா..."



"நான் பார்த்துக்கிறேன் அண்ணா..."

"இதை முதலிலேயே நீ செய்திருக்கனும்.. பேக்டரியில நீ வித்யாவிடம் பட்டுன்னு பேசிட்டயே.. நீ பேசின வார்த்தைகளை உன்னாலே திருப்பி வாங்கிக்க முடியுமா...?"

நரேந்திரனுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது என்ற நினைவில் தலை குனிந்தான் சுரேந்திரன்...

"ஐ ஆம் ஸாரி அண்ணா..."

"ஸாரி சொல்லி சரி பண்ண முடியாத விசயங்களும் நம் வாழ்வில் இருக்கு சுரேன்.. உன் வொய்ப் புத்திசாலி.. நம்ம குடும்பத்திலே மகியும் யுகேயும் என்னோட ஒற்றுமையாய் இல்லைங்கிறதை தெரிஞ்சு வைத்துக் கிட்டா.. மிச்சம் இருக்கிறது நீ மட்டும்தான்.. உன்னையும் என்னையும் பிரிக்க திட்டம் போட்டு செயல் படுத்திக்கிட்டு இருக்கா..."

"இனி இது போல நடக்காதுண்ணா.. இவ நினைச்சா உங்களையும்.. என்னையும் பிரிச்சுர முடியுமா..? அண்ணா.. நான் நம்ம அம்மாவைக் கூட விட்டுப் பிரிவேன்.. உங்களை விட்டு ஓர் நாளும் பிரிய மாட்டேன்.."

இதை நிவேதிதாவைப் பார்த்தபடி சொன்னான் சுரேந்திரன்.. அவன் குரலில் தொனித்த உறுதியில்

நிவேதிதா.. உதட்டைக் கடித்தபடி தலை குனிந்தாள்.. எதையோ செய்யப்போக.. எதுவாகவோ ஆகிவிட்டதில் அவளுக்குள் கணவனின் காதலையும்.. அன்பையும் இழந்து விடுவோமோ என்ற பயம் வந்துவிட்டது...

நரேந்திரனுடன் பேசியபடி சுரேந்திரன் வீட்டுக்குள் சென்று விட்டான்.. போகும்போதே நரேந்திரன் திரும்பி வித்யாவை கண்ணசைவில் அழைக்க.. அவளும் நரேந்திரனைத் தொடர்ந்து விட்டாள்.. சுரேந்திரன் நிவேதிதாவைத் திரும்பியும் பார்க்கவில்லை...

நிவேதிதா தனிமையாக உணர்ந்தாள்.. தன்னை நொந்தபடி வீட்டுக்குள் போனாள்.. அங்கே எல்லோரும் கூடி நிற்க.. நரேந்திரன் அவர்களையெல்லாம் ஒரு பார்வை பார்த்துவிட்டு.. சுரேந்திரனின் பக்கம் திரும்பினான்...

"இந்த அரண்மனை நம்ம அப்பா.. அம்மா வாழ்ந்த அரண்மனை சுரேன்.. இங்கே அவங்க பெற்ற பிள்ளைகளான நாம ஒற்றுமையாய் வாழனும்.. அப்படி வாழ முடியலைன்னா அவரவர் வழியில் வாழப் போயிடனும்.. அதுக்காகத்தான் உங்களுக்கெல்லாம் சொத்தைப் பிரித்துக் கொடுத்தேன்.. கடைசி வரை அம்மா என் பாதுகாப்பில் இருக்கனும்கிறதுக்காக இந்த அரண்மனையை நான் எடுத்துக்கிட்டேன்.. தாய்க்குப் பின் தாரம்.. அம்மாவைக் காப்பாற்ற நினைக்கிறவன் மனைவியை விட்டு விடுவேனா..? இது வித்யாவின் வீடு.. அவ யாரையும் உதாசீனம்



செய்ய மாட்டா.. அப்படி அவ செய்தா அதை நான் கண்டிப்பேன்.. ஆனா அவ பாட்டுக்கு அவளோட வேலைகளைப் பார்த்துக்கிட்டு இருக்கும் போது அவளிடம் மத்தவங்க வம்பு பண்ணினா பார்த்துக்கிட்டு சும்மா இருக்கமாட்டேன்.."

நரேந்திரன் அங்கிருந்த எல்லோரையும் பார்த்தபடி பேசினான்.. அனைவரும் உதட்டைக் கடித்தபடி நிலம் பார்த்தார்கள்.. நரேந்திரனின் கோபத்தில் அவர்கள் ஆடிப் போயிருந்தார்கள்..

"எல்லோரும் ஒன்றாய் இருக்கனும்னு அம்மா ஆசைப்பட்டாங்க.. மனசில வேற்றுமை வைத்துக்கிட்டு ஒற்றுமையாய் ஒரே வீட்டில் இருக்கிறது கஷ்டம்னு அவங்களுக்குப் புரியலை.. சுரேந்திரனின் கல்யாணத்தை சாக்காக வைத்துத்தானே எல்லோரும் இந்த வீட்டில் இருந்தீங்க..? அதுதான் அவனின் கல்யாணம் முடிந்துருச்சே.. இனி எல்லோரும் அவங்கவங்க வீட்டுக்குப் போய் விடலாமே..."

மீனலோசனி மகேந்திரனின் முழங்கையை சுரண்டினாள்...

"என்னடி.." என்றான் அவன்...

"தணிஞ்சு பேசுங்க.. பெரியவர் ரொம்ப கோபமாய் இருக்கிறார்..."

"கோபப்படாம கொஞ்சவா செய்வாங்க..? எல்லா வேலைகளையும் நீங்க பண்ணித் தொலைங்க..

உங்களைக் கட்டிக்கிட்ட பாவத்துக்கு.. நாங்க எங்க அண்ணனிடம் பேச்சு வாங்கறோம்..."

அழுத்துக் கொண்ட மகேந்திரன்.. நரேந்திரனைப் பார்த்து...

"எங்களாலே எந்தப் பிரச்னையும் வரலையே அண்ணா..." என்றான்...

"உனக்கு எல்லாம் தெரியனும் மகி.. பிரச்னையை உண்டு பண்றது யாருன்னு உனக்குத் தெரியாமலிருந்தா எப்படி..? இந்த வீட்டுக்குள்ளே நிவேதிதா பிரச்னையை உண்டு பண்ணியிருக்கலாம்.. அதை தூண்டி விட்டது யாரு..?" கண்டிப்புடன் கேட்டான் நரேந்திரன்...

"அண்ணா..." மகேந்திரன் மென்று விழுங்கினான்..

"இது வித்யாவின் வீடு மகி.. இங்கே அவ வைத்தது தான் சட்டம்.. அதை மாத்த யாராலேயும் முடியாது.. அவ விருப்பப்படிதான் இந்த வீடு இருக்கும்.. அதை ஏத்துக்கிட்டு இருக்கிறவங்க எங்க கூட இருக்கலாம்.. அப்படி இருக்கிறவங்க மட்டும் எங்க கூட இருந்தால் போதும்.. மத்தவங்க அவங்கவங்க வீட்டுக்குப் போகலாம்.."

யாரும் அங்கிருந்து வெளியேறப் போவதாக அறிவிக்கவில்லை.. நரேந்திரன் சொன்னதை ஏற்றுக் கொள்வதைப் போல அமைதியாக இருந்தார்கள்..



நிவேதிதா வித்யாவின் அருகில் நெருங்கி சன்னமான குரலில்...

"ஸாரி.." என்றாள்...

"இட்ஸ் ஆல் ரைட்.." பெருந்தன்மையாகப் பதில் சொன்னாள் வித்யா...

"என்ன பிரபா இது.. ஆனானப்பட்ட மதன்பூர் மகாராஜாவின் மகளாலேயே இந்த வித்யாவை ஒன்னும் பண்ண முடியலைன்னா நாம எம்மாத்திரம்..?" பிரபாவதியின் காதை ரகசியமாக கடித்தாள் மீனலோசனி...

"நாமன்னு என்னையும் கூட்டுச் சேர்க்காதீங்க அக்கா.. ஏற்கனெவே என் அண்ணனும் அண்ணியும் உங்க கூடப் பேசக்கூடாதுன்னு வார்ன் பண்ணியிருக்காங்க.. இப்ப என்னடான்னா பெரியவரு உத்தரவே போட்டுட்டாரு.. எனக்கெதுக்கு இந்த வேலை..? அரண்மனையிலே இருக்கனும்னா அந்த வித்யாவின் வம்புக்கு போகாமலிருந்தாத்தான் முடியும்ன்னா அது வம்புக்கு நான் ஏன் போகனும்..?" பிரபாவதி கழண்டு கொண்டு விட்டாள்..

"உனக்கே இவ்வளவு விவரம் இருக்கும்போது எனக்கு இருக்காதா...? நீ மட்டும் அரண்மனையிலே குடியிருக்க நான் வெளியேறனுமா..? அவ வம்புக்கு நானும் போகப் போறதில்லை.." மீனலோசனி தான் கெட்டிக்காரி என்பதை உறுதிசெய்தாள்...

"வா.. வித்யா..."

நரேந்திரன் மாடியேறினான்.. வித்யா பின் தொடர்ந்தாள்.. அறைக்குள் போனதும் கதவை அடைத்தவன்.. அவளைப் புயல் வேகத்தில் ஆக்ரமித்தான்.. இத்தனை நாளாய் இந்தக் காதலை எங்கே ஒளித்து வைத்திருந்தான் என்று வித்யா திணறிப் போனாள்...

"என்ன தைரியம்டி உனக்கு.. என் காதல் மேலேயா சந்தேகப் படற..? பூர்ணி மட்டும் உன் கூடவே இருப்பா.. நான்கூட இருக்க மாட்டேனா..? கொன்று விடுவேண்டி.."

"ஆனா நரேன்.. மதன்பூரில் கார்த்திகாயினி உங்க தோள் மேலே சாய்ந்திருந்தா... அதைப் பார்த்த எனக்கு எப்படியிருந்திருக்கும்..?"

"ஏண்டி.. என்னிடம் அதைக் கேட்கலை..?"

"எப்படிக் கேட்பேன்..?" வித்யா விம்மினாள்...

அவளின் கண்ணீரில் நரேந்திரனின் சட்டை நனைந்தது...

"போடி பைத்தியம்..." மனைவியின் கண்ணீர் துளிகளைத் துடைத்து விட்டபடி மிருதுவாகப் பேசினான் நரேந்திரன்...

"நான் பைத்தியம்தான் நரேன்.. உங்க மேலே காதல் வைச்ச பைத்தியமா நானிருக்கேன்.. உங்க மனசு



மட்டும்தான் எனக்கு வேணும் மத்தபடி இந்த அரண்மனை.. பேக்டரின்னு எதுவும் வேணாம்.."

"முட்டாள் போலப் பேசாதே.. இதையெல்லாம் நீ சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கனுமாடி..? அவதான் என் தோளில் சாய்ந்தா.. நான் உடனே விலக்கி விட்டுட்டேன்.."

"விலகி வரவில்லை..."

"எப்படி வர முடியும்..? அவ என்னிடம் காதல் சொன்னவங்கிறதுக்காக நான் இதைச் சொல்லலை.. பழகின ஒரு தோழி... தன் துயரத்தைச் சொல்லி அழுகிறப்ப அதைக் காது கொடுத்துக் கேட்காம விலகி வரலாமா..?"

"அவ தோழி மட்டும்தானா..?"

"இப்ப யோசித்துப் பார்க்கிறப்ப நிச்சயமாய் அது மட்டும்தான்னு எனக்குத் தோணுது.. எப்போதும் அவ நினைவாய் நான் இருந்ததில்லை.. அவ விட்டுவிட்டுப் போனவுடன் வேற பெண்ணை கல்யாணம் பண்ணிக்க தயாரானவன்தான் நான்.. ஆனா வித்யா உன்னைப் பார்த்த பின்னாலே உன் நினைவாவே நான் எப்போதும் இருந்திருக்கேன்.. நீ விட்டுவிட்டுப் போயிருந்தா உன்னைத் தேடிப் பிடிச்சுக் கொன்றுவிட்டு நானும் செத்திருப்பேனே தவிர உன்னைத்தவிர வேற ஒருத்தியை நினைத்தும் பார்த்திருக்க மாட்டேன்..."

"நரேன்..."

வித்யா பதறிப் போனவளாக நரேந்திரனின் வாயை மூடினாள் மூடிய அவளது உள்ளங்கையில் முத்தம் பதித்தான் நரேந்திரன்.. அவளின் கையை விலக்கி தன் கன்னத்தில் அழுந்தப் பதித்துக் கொண்டவன்.. வித்யாவை ஊன்றிப் பார்த்தபடி சொன்னான்..

"கார்த்திகாயினி என்னைக் காதலித்தது எனக்காக இல்லை வித்யா.. என் ராஜ பரம்பரைக்காக.. அவளுக்குப் பொருத்தமான மணமகனா.. ராஜ பரம்பரையில் பிறந்தவனா.. வெளிநாட்டில் படித்தவனா நானிருந்தேன்.. நான் மட்டும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவனா இருந்திருந்தா அவ என்னைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டா... நீ அப்படியில்லைடி.. என்னை எனக்காகவே காதலிச்ச.. அவ அப்படி இல்லைடி..."

"வேண்டாம் நரேன்..."

என்னதான் கார்த்திகாயினி தேவி இன்னொருவனின் மனைவியாக இருந்தாலும்.. ஒரு காலத்தில் நரேந்திரனைக் காதலித்தவள் என்ற எண்ணத்தில் அவளைப் பற்றிய பேச்சைத் தவிர்த்தாள் வித்யா...

ஆனால் நரேந்திரன் அந்தப் பேச்சை அப்படியே விடுவதாக இல்லை...

"எதுடி வேண்டாம்..? நான் உனக்கு வேண்டாமா...?" என்று வம்புக்கு இழுத்தான்...



"ஐயோ..." துடித்துப் போனாள் வித்யா...

"துடிக்குதில்ல.. கேட்கிறப்பவே உனக்கு துடிக்குதில்ல.. இந்தத் துடிப்பு அவளிடம் இருக்காது.. ஏன்னா அவ என் அந்தஸ்தைப் பார்த்து என் கூடப் பழகினவ.. எனக்காக என்னைக் காதலித்தவ இல்லை..."

"என் நரேன்..."

கைப்பொருள் என்றுமே களவு போகாது என்ற நிச்சயத்தைப் பெற்று விட்ட நிம்மதியுடன் நரேந்திரனின் மார்பில் சாய்ந்தாள் வித்யா...

"உன்னுடைய நரேந்திரன் தாண்டி.. என் உடம்பும்.. மனசும் உனக்கு மட்டும்தான் சொந்தம்.. மத்தவங்களை என்னோட சம்பந்தப் படுத்தி நினைச்சேன்னு வை.. நான் மனுசனா இருக்க மாட்டேன்..."

வித்யாவை இறுக்கி அணைத்துக் கொண்டான் நரேந்திரன்.. அந்த இறுக்கமும்.. நெருக்கமும் உணர்த்திய சொந்தத்தில் வித்யாவின் மனதிலிருந்த சஞ்சலங்கள் விலகி ஓடின.. ஆனாலும் அவள் மனதில் சில கேள்விகள் பாக்கியிருந்தன.. அதை எப்படிக் கேட்பது என்று புரியாமல் அவன் தலை முடியில் விரல் விட்டு அளைந்து கொண்டிருந்தவளிடம்..

"கேட்டுவிடு.." என்றான் நரேந்திரன்...

வித்யா திகைத்துப் போனவளாக கணவனைப் பார்த்தாள்..

"எதை..?"

"உன் தலைக்குள் குடாய்ந்து கொண்டிருக்கும் கேள்விகளை.."

'கண்டு பிடித்து விட்டான்..' ரகசியப் புன்னகை வித்யாவிடட்ம மலர்ந்தது..

"நீங்க என்னிடம் கலகலப்பா பேசலை..." மனக்குறையுடன் சொன்னாள்..

"நிவேதிதா இந்த வீட்டின் அமைதியைக் குலைத்திருவாளோன்னு கவலை.. அவளால் நானும் சுரேனும் மோதிக்க வேண்டி வந்திருமோன்னு கவலை.. இத்தனைக்கும் மேலா.." அவன் இடைவெளி விட...

"கார்த்திகாயினியைப் பற்றிய கவலை..." வித்யா எடுத்துக்கொடுத்தாள்..

"நீ அவளை விடவே மாட்டியா..? ஆனா வித்யா.. நீ சொன்னதுதான் உண்மை.. அவளைப் பத்தின கவலையும் என் மனசில் இருந்தது.. ஒரு குற்ற உணர்வு.. உன் கூடச் சிரிச்சுப் பேச முடியாம அவ துயரம் ஊடே வந்தது டி..."

"புரியுது..."



"நீ புரிஞ்சுக்குவேன்னு எனக்குத் தெரியும்டி..."

"ஆனா.. அவ போனை நான் அட்டெண்ட் பண்ணினதுக்காக என்னை நீங்க கண்டிச்சிங்க..." வருத்தத்துடன் சொன்னாள் வித்யா...

"போனை எடுத்துப் பேசினவ சகஜமா பேசியிருக்க வேணாமா..? அது முடியலைன்னா பேசியிருக்கவே கூடாது.. யார் போனை எடுத்ததுன்னு அவகேட்டா.. அவ பேசினதும் கட் பண்ணிட்டாங்கன்னு சொன்னா.. அவ நம்மைப் பத்தி என்ன நினைச்சுக்குவா..? அந்தக் கோபம்தான்..."

"அவ போனில் பேசின பேச்சில் நான் அதிர்ந்துட்டேன் நரேன்..."

"என்ன சொன்னா...?"

"இந்த நேரத்தில் நீங்க என்கூட இருந்திருக்கனும் நரேந்தர்.. ஏன் வரலைன்னு கேட்டா..." வித்யாவின் முகம் கன்றிச் சிவந்தது...

"என்மேல் உனக்கு நம்பிக்கையே வராதாடி..? அவளோட கணவனும் அவளும் ஒன்றாய் சேர்ந்துட்டாங்க.. என்னை விருந்துக்கு கூப்பிட்டிருந்தாங்க.. அதைத்தான் அவ அந்த லட்சணத்தில் சொல்லியிருக்கா.. நீ இந்த லட்சணத்தில் புரிந்துக்கிட்டு இருக்க.."

"அவ கொடுத்த விருந்து எப்படியிருந்தது..?"

“நான்தான் போகலையே...”

“இப்ப நீங்க போயிருந்தது..?”

“சென்னையில் ஒரு கம்யூட்டர் கம்பெனியை ஆரம்பிக்கலாம்கிற எண்ணம்டி.. சுரேந்திரனை அங்கே அனுப்பி வைத்து விடலாம்கிற திட்டமிருக்கு.. பேக்டரி நமக்கு.. கம்யூட்டர் கம்பெனி அவனுக்குன்னு ரெஜிஸ்டர் பண்ணிரப் போறேன்.. அவன் சிட்டி லைப்பை விரும்புகிறவன்.. நிவேதிதாவின் குணத்துக்கு மணிமுத்தாறு அவனுக்கு சரிப்பட்டு வராது.. அவனுக்குத்தான் அங்கே அவன் பங்குக்கு வந்த வீடு இருக்கே...”

“பேக்டரியில் அவருக்கும் பங்கிருக்கே..”

“அதை விலை போட்டு வாங்கிக்கிட்டதாய் கணக்குக் காட்டித்தான் ரெஜிஸ்ட்ரேசன் நடக்கப் போகுது.. இதைப்பற்றி ஏற்கனெவே சுரேன்கிட்டப் பேசிட்டேன்.. அவனும் ஒப்புக்கிட்டான்..”

“கம்யூட்டர் கம்பெனி ஆரம்பிக்க கோடிக் கணக்கில் பணம் தேவைப்படுமே.. இப்பத்தானே பாகம் பிரிச்சிருக்கீங்க..”

“அந்தக் கவலை உனக்கெதுக்கு..? நான் கடனுக்குப் பழகினவன்.. அவ்வளவு கடனை அடைத்தவன்.. இந்தக் கம்யூட்டர் கம்பெனி ஆரம்பிக்கிறதுக்காக வாங்கும் கடனை அடைக்க மாட்டேனா..?”



“ஆனா.. இது ஏன் நரேன்..?”

வித்யா தவிப்புடன் கேட்டபோது.. அவள் முகத்தை கைகளில் ஏந்தி காதலுடன் சொன்னான் நரேந்திரன்..

“உனக்காகடி.. பேக்டரிக்குள்ளே உன்னைக் கேள்வி கேட்க யாரும் வரக்கூடாது.. அது உன் புருசனுக்கு மட்டும் சொந்தமானதாக.. உனக்கு மட்டும் உரிமையானதாக இருக்கனும்.. நான் இல்லாதப்ப நீ பட்ட பாட்டை குகன் போனில் சொன்னான்டி.. அப்பவே முடிவு பண்ணிட்டேன்.. இனி அங்கே உனக்கு இணையா யாரும் இருக்கக் கூடாதுன்னு...”

“எனக்காகவா நரேன்..?” வித்யா கண்கலங்கிவிட்டாள்..

அப்போதுதான் பாரம் இறக்கி வைத்திருந்த அவளுடைய கணவன் அவளுக்காக மீண்டும் பாரம் சுமக்க ஆயத்தமாகி விட்டானா..?

“அழாதே கண்ணம்மா.. உன் மனது ஈர மனதுடி.. உன் நிழலில் வாழ்கிறவங்களுக்கு நல்லது செய்யனும்னு நினைக்கிறவ நீ.. அதைக் கேள்வி கேட்க யாரும் வரக் கூடாது...”

“கார்த்திகாயினி வீட்டு விருந்து..?”

“இன்னொரு நாள் வருகிறோம்ன்னு சொல்லியிருக்கேன்...”

“வருகிறோமா...”

"ம்ம்ம்.. வருகிறோம்தான்.. அவ உன்னையும் சேர்த்துத்தான் விருந்துக்கு கூப்பிட்டா.. இப்ப முடியாது அடுத்த வாரம் வர்றோம்ன்னு சொல்லியிருந்தேன்.. இனிமேத்தான் போன பண்ணி என் பெண்டாட்டி வாந்தியும்.. மசக்கையுமா இருக்கிறா.. அவ என் பிள்ளையை பெத்துக் கொடுத்த பின்னாலே நாங்க மூணு பேருமா வர்றோம்ன்னு சொல்லனும்..."

நரேந்திரன் குனிந்து வித்யாவின் வயிற்றில் முத்தமிட வித்யா சிலிர்த்துப் போனாள்...

"எப்படித்தெரியும் நரேன்..? நான் சொல்லலையே.."

"நான் நரேந்திரன்டி.. நீ நரேந்திரனின் பெண்டாட்டி.. உன் சம்பந்தப்பட்ட எல்லாமே எனக்குத் தெரிந்துவிடும்.. டாக்டர் நம்ம பேமிலி டாக்டர்.." நரேந்திரன் கண் சிமிட்டினான்...

"நரேன்.." வித்யா அவன் மார்பில் ஒன்றிக் கொண்டாள்...

அவளுடைய நரேந்திரன் அவளை விட்டு எங்கும் போய்விடவில்லை.. அவன் அவளுக்கு மட்டுமே சொந்தமானவன் என்ற உறுதியில் அவள் மனம் அமைதியடைந்தது...

"நான் ரொம்ப பயந்து போயிருந்தேன் தெரியுமா..?"



"தெரியுமே.. என் பெண்டாட்டி முகத்தில சின்ன மாறுதல் வந்தாக்கூட எனக்குத் தெரிஞ்சுரும்.. இது தெரியாம போயிருமா..? ஆனாலும் உன்னைச் சமாதானப் படுத்தனும்னு எனக்குத் தோணலை..."

"ஏன்..?" வியப்புடன் கேட்டாள் வித்யா...

"ஏனா..? கன்னம் வீங்கி விடும்..."

"எதற்காம்..?"

"ஒங்கி ஒரு அப்பு அப்பினா கன்னம் வீங்காதா..?"

"ஓ.. அடிப்பீங்களோ.."

"அடிக்க மாட்டேனா..? உன் மனசில பயம் வரலாமாடி..? அந்த மாதிரியா நீயும் நானும் காதலிச்சோம்..? நீ இல்லைன்னா நான் இல்லைடி.. இது தெரியாம பினாத்தியிருக்கியே... உன்னை என்ன செய்தால் தேவலாம்..?"

எதுவும் செய்து கொள் என்று அவன் கையில் முழுமனதாய் தன்னை ஒப்படைத்தாள் வித்யா.. கூடிக் களித்தவனின் ஆவேசம் அடங்கியதும் திருப்தியுடன் அவள் கன்னத்தில் முத்தமிட்டான்...

"இது போல நீயும்.. நானும் சந்தோசமாய் இருக்கிறப்ப கார்த்திகாயினி மட்டும் அவ கணவனை விட்டு விலகி நிற்கிறாளேங்கிற எண்ணம்தாண்டி எனக்கு.. அந்த நினைப்பு என் மனசில நெருஞ்சி முள்ளாய் குத்திக்கிட்டு

இருந்ததுடி.. உன்னோடு சிரிச்சு பேச முடியாம என் மனசு வலிச்சது..."

"அவ பாவம்தான் நரேன்.. அவளோட ஹஸ்பெண்டுக்கு ஏன் அப்படிப் புத்தி போனது..?"

"ஆம்பளைத்திமிர்.. உன் புருசனுக்கும் ஒரு காலத்தில அந்தத் திமிர் இருந்ததுதானே...?"

நரேந்திரனின் பேச்சில் வித்யாவின் முகம் மாறிவிட்டது... மனச் சுணக்கத்துடன் விலக முயன்றாள்.. அவள் கைபிடித்து தடுத்தான் நரேந்திரன்...

"இப்ப எதுக்காக விலகப் பார்க்கிற..?"

"பின்னே..? இப்படிப் பேசினா விலகாம என்ன செய்வாங்களாம்.."

"போடி.. நீயும்.. உன் கோபமும்.. நிலைதடுமாறின என்னை சரியான வழியில இழுக்க உன்னால முடிந்திருக்கிறப்ப.. கார்த்திகாயினியால அது முடிய வேணாமா...?"

"ஆக.. ஐயா அவளுக்குத்தான் அட்வைஸ் பண்ணியிருக்கீங்க... அவ ஹஸ்பெண்டுக்கு பண்ணலை.. நினைச்சேன்.. உங்க ஆம்பளைப் புத்தி இப்படித்தான் யோசிக்குன்னு..."

வித்யா படபடவென்று பொரிந்தாள்.. அவள் கோபத்தை அவன் புன்னகையுடன் ரசித்தான்...



"அடியே.. என் நியாயக்கார பெண்டாட்டியே.. கார்த்திகாயினியின் புருசன் பலதடவை மனம் திருந்தி வந்திருக்கிறான்.. வந்தவனிடம் இவ இணக்கமா பேசி குடும்பம் நடத்தாம பழசையே சொல்லிக் காட்டியிருக்கா.. அவன் பொறுக்க முடியாம பழைய வாழ்க்கைக்கே திரும்பி ஓடிப் போயிட்டான்.."

"அவ ஹஸ்பெண்ட் அநியாயம் செய்தால் அவ அதைச் சொல்லிக் காட்டக் கூடாதா..?"

"குத்திக் காட்டக் கூடாது.. தப்பு பண்ணிட்டேன்.. மன்னிச்சுடுன்னுதானே அவன் வந்திருக்கான்..? இவ அதையே திரும்பத் திரும்ப குத்திக் காட்டிக்கிட்டு இருந்தா.. திருந்தினாத்தானே இந்த வம்புன்னு அவனுக்குத் தோணிப் போயிருமா.. இல்லையா...?"

"ஓ.. இதில இவ்வளவு இருக்கா...?"

"இதுக்கு மேலயும் இருக்கு.. அது எதுக்கு நமக்கு..? இப்ப அவ தன் தப்பை உணர்ந்துக்கிட்டா.. அவளோட புருசனும் இதுக்காகவே காத்திருந்திருக்கான்.. இரண்டு பேரும் பசை போடாமலேயே ஒட்டிக்கிட்டாங்க..."

சந்தோசமாக சிரித்தவனைக் கனிவுடன் பார்த்தாள் வித்யா...

'இவனுக்குத்தான் கார்த்திகாயினியின் வாழ்க்கை சரியாகி விட்டதில் எத்தனை சந்தோசம்...!'

ஒரு காலத்தில் அவனைப் புறக்கணித்தவள் கார்த்திகாயினிதேவி.. அவனுடைய திருமணம் தடைபட்டுக் கொண்டிருந்ததிற்கு அவளே முதல் காரணமாக அமைந்தாள்..

அப்படிப்பட்டவளின் இல்லற வாழ்வு இனிமையானதாக அமையாமல் போனதில் வியப்பேதும் இல்லை.. அது கடவுள் கொடுத்த தீர்ப்பு...

ஆனால்.. அதைக் கேட்டதும் மனம் பதறிப் போனவனாக அவள் வாழ்வை சரி செய்தானே.. நரேந்திரன்.. அவனின் மனம் வானத்தை விடப் பரந்து விரிந்த பெரிய மனமல்லவா..?

வித்யாவின் மனதில் குளிர்காற்று படிந்ததைப் போல இருந்தது.. அவளின் மனக்குளிர்ச்சியில் அவளும் குளிர்ந்தாள்..

நதியோரம் நடக்கும் போது ஈரக் காற்றுதானே உடலைத் தழுவும்...?



- முற்றும் -